தமிழரசு

மலர் 18 இதழ் 23 & 24

1988 June

2493


# தமிழரசு




8 ஜூன் 1988
10490




ஈத் பெருவிழாவையொட்டி 20.5.88-இல் சென்னையில் நடைபெற்ற விழாவிற்கு ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் திரு எஸ். எஸ். சித்து அவர்கள் தலைமை தாங்கினார். ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி. இராமகிருஷ்ணா, இ.ஆ.ப. அவர்கள், இவ்விழாவில் பங்கேற்று விழா மலரை வெளியிட்டார்.




# ஆக்கப் பணிகளுக்கு அறிவியல்

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர்

**திரு ஆர். வெங்கட்ராமன்**



விஞ்ஞானம் பல வகைகளில் உதவுகிறது. உணவு உற்பத்தி, தகவல் தொடர்பு போன்றவற்றிற்கு அத்தியாவசியத் தேவையாக இருக்கிறது. அறிவியலை ஆக்கத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். அழிவுக்குப் பயன்படுத்தக் கூடாது. இப்போது அணு ஆயுதத்தால் உலகம் அழியும் நிலை ஏற்பட்டு இருப்பது வேதனைக்குரியது. நாம் அனைவரும் ஒருமித்த குரலில் நின்று இதை எதிர்க்க வேண்டும்.

இப்போது இங்கு-சென்னையில் அமைக்கப்பட்டிருக்கும் "கோள் அரங்கம்" மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பூகோளத்தில் - நமது அறிவாற்றலைப் பற்றி "ரிக் வேதத்தில்" ஒரு பாடலே எழுதப்பட்டுள்ளது.

பாஸ்கரா, ஆரியப்பட்டா போன்ற வானஇயல் வல்லுநர்கள் இங்கு தோன்றி இருக்கிறார்கள். மறைந்த பிரதமர் நேரு காலத்தில் மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு பல விண்வெளி ஏவுகணைகள் தயாரிக்கப்பட்டன.

நான் தமிழ்நாட்டின் தொழிலமைச்சராக இருந்தபோது விண்கோளரங்கம் அமைக்க வேண்டும் என்று விரும்பினேன். அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டேன், அப்போதெல்லாம் அத்தகைய அரங்குகளை நிர்மாணிக்கும் சூழ்நிலை நாட்டில் இல்லை. தமிழ்நாட்டில்,சென்னையில் விண்கோள் அரங்கத்தை அமைத்திருக்கும் சி. கே. பிர்லா மற்றும் அவரது குடும்பத்தினரின் பணி பாராட்டத்தக்கது. அவர்கள் இதற்காக ரூ. 2 கோடி நன்கொடையளித்திருக்கிறார்கள்.

நமது நாட்டில் அறிவியல் உணர்வுகள் உருவாவதற்குக் காரணமாக இருந்தவர் பண்டித ஜவஹர்லால் நேருதான்.

விண்கோள்கள் ஆராய்ச்சியில் கலிலியோ,கோபர்நிக்கஸ், அரிஸ்டாட்டில், பிளாட்டோ, நியூட்டன், கெப்லர், ஐன்ஸ்டைன் ஆகியோருக்கு இணையாக ஆரிய பட்டரும், பாஸ்கராவும் வரலாறு படைத்திருக்கின்றனர். எனவே, நட்சத்திர மண்டலம் குறித்து இந்தியர்களுக்கு உள்ள ஆர்வம் மிகப் பழமையானது. நமது முன்னோர்கள் சூரிய கிரகணம், சந்திர கிரகணம் ஆகியவற்றைத் துல்லியமாக மதிப்பீடு செய்திருக்கின்றனர். அண்டவெளி குறித்து ஆராய்வதில் நெடிய வரலாறு நமக்கு உண்டு. எழுதிவைக்கும் பழக்கம் வருவதற்கு முன்னர், நமது முன்னோர்கள் கண்டு பிடித்த அறிவியல் உண்மைகள் நமக்குப் பயன்பட்டு வருகின்றன.

சந்திர மண்டலத்தில் மனிதன் அடியெடுத்து வைத்த பின்னர், அறிவியல் வளர்ச்சி வேகம் அதிகரித்திருக்கிறது. இந்த அறிவியல் முன்னேற்றம் சாதாரண மனிதனையும் சென்றடைய வேண்டும். வானவெளி ஆராய்ச்சியில் பொதுவாக அனைவருக்கும் ஆர்வம் இருக்கிறது. அத்தகைய ஆர்வத்தை வளர்க்கவும் மற்றவர்களிடம் அத்தகைய ஆர்வத்தைக் கிளறி விடவும் இந்த விண்கோள் அரங்கு பயன்படும்.

குழந்தைகள் அடிக்கடி இந்த விண்கோள் அரங்கத்தைக் கண்டு அவர்களது அறிவியல் ஆர்வத்தைப் பெருக்கிக் கொள்ள வகை செய்ய வேண்டும். ஆசிரியர்களுடன் காணவரும் ஐம்பதுக்குக் குறையாத பள்ளி மாணவர்களுக்கான நுழைவுக் கட்டணம் மூன்று ரூபாய் என்று குறிப்பிட்டுள்ளனர். இது அதிகம் என்று கருதுகிறேன்.

இந்த விண்கோள் அரங்கம் தவிர, பெரியார் ஈ.வெ.ரா. வின் பொன்மொழிகளின் அடிப்படையில் அறிவியல், தொழில்நுட்ப அரங்கு கட்டப்பட்டு வருவது அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். கண்காட்சி வசதியுடன் அறிவியல் பூங்காவும் உருவாக்கப்பட்டு வருகிறது. இவை அறிவியல் உணர்வை வளர்க்க உதவும்.

அறிவியல் தந்திருக்கும் ஆற்றலை, மனித இனத்தை அழிக்கும் கருவிகளை உருவாக்கும் காரியத்தில் மனிதன் ஈடுபடுத்துகிறான். தற்போது, அணு ஆயுதக் குவிப்பு பெருகியுள்ளது. இதை எதிர்த்து நாம் அனைவரும் குரல் கொடுக்க வேண்டும்.

[11.5.88 அன்று, பி.எம். பிர்லா கோளரங்கத் திறப்பு விழாவில் பேசியதிலிருந்து.]

**தமிழரசு**


**திருவள்ளுவர் ஆண்டு 2019**

**விபவ - வைகாசி 19**

**மலர் : 18** **இதழ் : 23**

**1-6-1988**

# அல்லிக்குளம் வளாகம்:
# மேதகு ஆளுநர் அடிக்கல் நாட்டினார்



சென்னை மாநகரில், மாநகராட்சிக்குச் சொந்தமான மூர் அங்காடி, 1985 மே 29ல் தீக்கிரையானதல்லவா? அப்பகுதியில் பலமாடிக் கட்டடம் ஒன்றைக் கட்டித்தந்து மூர் அங்காடி கடைக்காரர்களுக்கு உதவ முன்னாள் முதல்வர் அமரர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் முடிவெடுத்தார். அதன்படி, மூர் அங்காடி வியாபாரிகள் 857 பேர்களின் புனர்வாழ்வுக்காகக் கட்டப்படவிருக்கும் 'அல்லிக்குளம் வளாகம்' பலமாடிக் கட்டடத்திற்கு, மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் 14.5.88 அன்று அடிக்கல் நாட்டினார்.

பலமாடிக் கட்டடம் அமையவிருக்கும் 'அல்லிக்குளம்' பகுதியில் சிறப்புற நடைபெற்ற இவ்விழாவிற்குத் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஜி.வி. ராமகிருஷ்ணா இ.ஆ.ப., தலைமை தாங்கினார்.

சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் திரு.எல்.எம்.மெனெசெஸ் இ.ஆ.ப., வரவேற்புரையாற்றினார். சென்னை மாநகராட்சி ஆணையர் திருமதி சாந்தாஷீலா நாயர் இ.ஆ.ப., விழாவில் பங்கேற்ற பிரமுகர்களுக்கு மலர்ச்செண்டு வழங்கி வரவேற்றார். மூர் அங்காடி வியாபாரிகள், அனைவருக்கும் மாலையணிவித்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை மற்றும் அரசு கட்டுமானக் கழகத்தின் ஆணையர் மற்றும் செயலர் திரு.எஸ்.சிவசுப்பிரமணியம் இ.ஆ.ப., புதிய கட்டடம் பற்றிய திட்ட அறிக்கை படித்தார். ஒன்பது தளங்களோடு இந்தக் கட்டடம் அமையும் என்றும் 857 வியாபாரிகளுக்குக் கடைகள் ஒதுக்கப்படும் என்றும் 30 மாதங்களில் கட்டடப் பணி முடியும் என்றும் அப்போது அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் அ.கலாநிதி பேசுகையில், ''தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மூர் அங்காடி வியாபாரிகளுக்கு உதவப் பிரதமர் வழங்கிய தொகை பத்துலட்சம் ரூபாயில் கடந்த இரண்டாண்டு காலமாகச் சுமார் 83 ஆயிரம் ரூபாய் வழங்கப்படாமல் இருக்கிறது; அதை இன்னலுற்ற வியாபாரிகளுக்கு விரைவில் வழங்க ஆளுநர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்

தமிழ்நாடு அரசு உள்ளாட்சி மற்றும் நீர்வழங்குதுறை ஆணையர் மற்றும் செயலர் திரு ஆர்.ஏ. சீதாராமதாஸ் இ.ஆ.ப., பேசுகையில் முந்நூறாண்டுக் காலம் வாழ்ந்த நகரமான சென்னையை அழகுபடுத்த ஆளுநர் அவர்கள் முப்பது கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகவும், கிராமப்புறங்களில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கப் பத்துக் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசு தலைமைச்செயலாளர் திரு.எம்.எம்.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தமது சிறப்புரையின்போது கூறியதாவது;

'சென்னை மாநகராட்சியின் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை காட்டிவரும் மேதகு ஆளுநர் அவர்கள் 'அல்லிக்குளம் வளாகத்'திற்கு அடிக்கல் நாட்டுவதற்காகப் பெரிதும் மகிழ்கின்றேன். சென்னை நகரைத் தூய்மையாக்க வேண்டும் என்பதில் ஆளுநர் அவர்கள் கவனம் செலுத்தி வருகிறார். இதற்குப் பொதுமக்கள் நல்லமுறையில் ஒத்துழைப்புத் தரவேண்டும். பெருகி வரும் பணவீக்கம், வளர்ந்துவரும் சென்னை மாநகராட்சியின் எல்லை ஆகியவற்றோடு ஒப்பிடுகையில் சென்னை மாநகராட்சியின் வருவாய் அந்த அளவுக்கு உயரவில்லை. மாநகராட்சி அதிகாரிகள் அந்த வருவாயை அதிகமாக்கப் பாடுபட வேண்டும். இங்கே கட்டப்படவிருக்கும் அங்காடி மூலம் வரும் வாடகை மூலமும் மாநகராட்சி வருவாய் பெருகக்கூடும்''.

**ஆளுநர் உரை**

'அல்லிக்குளம் வளாகத்திற்கு அடிக்கல் நாட்டிய மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி.அலெக்சாண்டர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:

'சென்னைக்கு வருகைதரும் ஒவ்வொருவரும் ஒரு புத்தகம் வாங்குவதற்காகவோ அல்லது வேறு ஏதேனும் வாங்குவதற்காகவோ மூர் மார்க்கெட்டைத் தேடி வரும் நிலைமை இருந்தது. அப்படிப்பட்ட மூர் அங்காடி எரிந்து போன செய்தியை அறிந்தபோது, ஏதோ எனக்குச் சொந்தமான கட்டடத்தின் ஒரு பகுதியே தீக்கிரையாகி விட்டது போல நான் அதிர்ந்து போனேன். மூர் அங்காடி இருந்த இடத்தில் பலமாடி அங்காடி வளாகம் ஒன்று கட்டப்படவிருப்பதும், அதற்கு அடிக்கல் நாட்டுவதும் எனக்கு மிகவும் மகிழ்ச்சிதருவதாக இருக்கிறது.

''22 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் அமையவிருக்கும் இந்த அல்லிக்குளம் அங்காடி வளாகம் தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகம் மூலம் கட்டப்படும். 32 மாதங்களில் இதைக் கட்டி முடிக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. மூர்மார்க்கெட் வியாபாரிகளின் நலன் கருதி இந்தக் கட்டடத்தை 24 மாதங்களில் கட்டி முடிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

''இப்பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு உதவ இந்தியப் பிரதமர் அளித்த நிதியில், இன்னும் 83 ஆயிரம் ரூபாய் வழங்கப்படாதிருப்பதாகத் திரு. கலாநிதி இங்கே குறிப்பிட்டார். அந்தத் தொகையை உரியவர்களுக்கு வழங்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.''

—இவ்வாறு மேதகு ஆளுநர் அவர்கள் உரைநிகழ்த்தினார்.

மாநகராட்சி ஆணையர் திருமதி சாந்தாஷீலாநாயர் இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரையாற்றினார். ''அல்லிக்குளம் வளாகக் கட்டடத்திற்கான வரைவு, மாநகராட்சிப் பொறியாளர்களால் தயாரிக்கப்பட்டது'' என்று பெருமையோடு குறிப்பிட்ட அவர், ''இக்கட்டடத்தை 22 மாதங்களிலேயே கட்டி முடிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்'' என்றும் தெரிவித்தார்.

—நமது செய்தியாளர்


## தேசிய தகவல் கொள்கை
## டில்லி மாநாட்டில் டாக்டர் சித்து வேண்டுகோள்!

'தேசிய தகவல் கொள்கை ஒன்று உருவாக்கப்பட வேண்டும்' என்று தமிழக ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் எஸ். எஸ். சித்து, வேண்டுகோள் விடுத்தார்.

மாநில செய்தித் துறை அமைச்சர்களின் மாநாடு 25-5-88 அன்று டில்லியில் நடைபெற்றது. மத்திய செய்தி மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் எச்.கே.எல். பகத், மாநாட்டிற்குத் தலைமை வகித்தார்.

மாநில செய்தித் துறை அமைச்சர்கள் மாநாட்டில் தமிழக ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் சித்து பேசுகையில், ''செய்தித்துறை அலுவலர்க்குப் பயிற்சி அளிக்க தமிழ்நாடு அரசு விரைவில் மக்கள் தொடர்புப் பயிற்சி மையம் ஒன்றை அமைக்க இருப்பதாகத்'' தெரிவித்தார். செய்தித்துறை தொடர்பாக தமிழக அரசின் நடவடிக்கைகளையும், தமிழக அரசின் கோரிக்கைகளையும் அவர் இம் மாநாட்டின் வாயிலாக எடுத்துரைத்தார்.

முன்னதாக 23, 24 தேதிகளில் டில்லியில் மாநில செய்தித்துறைச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் செய்தித்துறை சிறப்பு ஆணையர் மற்றும் செயலர் திரு செ..ராம்தாஸ், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா.கிருஷ்ணபாரதி இருவரும் பங்கேற்றனர்.



● நமது நாட்டு மக்கள் பலர் அயல் நாடுகளுக்குப் பயணம் போகிறார்கள். அப்படிப் பதினாயிரக் கணக்கான மைல்கள் பயணம் போவோர், ஆயிரம் இரண்டாயிரம் மைல்கள் மட்டுமே பயணம் சென்று இந்தியா பற்றித் தெரிந்து கொள்ள விரும்புவதில்லை; இது சரியல்ல!

* * *

● உண்மையான நம்பிக்கை மட்டுமே ஒருவனுக்கு இருக்குமானால், அந்த நம்பிக்கையை வைத்தே மலைகளைக் கூட அசைத்துவிடலாம்!

## அல்லிக்குளம் கட்டட வளாகம்:
## சில விவரங்கள்

00 இது, அடித்தளம், தரை மற்றும் ஒன்பது தளங்களைக் கொண்ட ஒரு பன்மாடிக் கட்டடமாகும்; நேரு விளையாட்டு அரங்கிற்கு எதிரில் 11,600 சதுரமீட்டர் பரப்பளவுடைய அல்லிக்குளம் பகுதியில் கட்டப்படுகிறது. அடித்தளம், வாகனங்கள் நிறுத்தவும் இதர வசதிகளுக்கும் பயன்படுத்தப்படும்.

00 தரைத்தளம் மற்றும் மூன்று தளங்கள், 976 கடைகள் கொண்ட அங்காடிப் பகுதியாகும்.

00 இது, தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட முன்னாள் மூர் அங்காடி 857 வியாபாரிகள் மற்றும் சிறு கடைக்காரர்கள் ஆகியவர்க்கு வாடகைக்கு விடப்படும். மீதியிடம் விற்கப்படும்.

00 சிற்றுண்டிச்சாலை, கழிப்பறை வசதிகளும் இங்கே அமைக்கப்படவுள்ளன.

00 நான்கு முதல் ஒன்பதாவது தளங்கள் ஒவ்வொன்றும் 4,200 சதுர மீட்டர் பரப்பளவுடையது. அலுவலகங்கள் நடத்த இவை விற்கப்படும். கட்டடத்தின் அனைத்துப் பக்கங்களிலிருந்தும் எளிதாக அணுக ஆறு மாடிப்படிகளும், ஆறு ஆள் தூக்கிப் பொறிகளும் (Lift) அமைக்கப்படும். இவை தவிர அவசரத் தேவைக்கு இரண்டு படிக்கட்டுகள் அமைக்கப்படும்.

00 அலுவலகப் பகுதிக்குக் குளிர் சாதன வசதி, வாங்குபவர் விரும்பினால் கூடுதல் செலவில் அமைத்துத் தரப்படும்.

00 தரைத் தளத்தில் தனியாகத் துணை மின் நிலையம் மற்றும் குளிர்சாதனப் பொறிகள் அமைக்கப்படும்.

00 பிரதானக் கட்டடத்தின் வடிவமைப்பு சென்னை மாநகராட்சியாலும், நிர்மாண அமைப்பு அடையாறு இந்தியப் பொறியியல் கழகத்தாலும் வரையப்பட்டது.

00 தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகம் இக்கட்டடத்தை நிர்மாணிக்கும்.

## பச்சையப்பன் அறக்கட்டளை

# புதிய சாதனை

பச்சையப்பன் அறக்கட்டளையைச் சேர்ந்த 'கோவிந்து மாளிகை' என்னும் புதிய மூன்றடுக்குக் கட்டடம் மே 13ஆம் நாளன்று மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வாகக் குழுத்தலைவர் திரு எஸ். டி.காசிராஜன் இ.ஆ.ப. தமது வரவேற்புரையில் குறிப்பிட்டார்:

''இந்தக் கட்டடம் நமது மேதகு ஆளுநர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்படுவது பொருத்தமானதாகும். புகழ்பெற்ற சரித்திர நிபுணராக விளங்குகிறார் நமது ஆளுநர்.

''பச்சையப்பர், எல்லாரையும் வாழ வைக்கும் மனப்பான்மை பெற்றிருந்தார்.

அறக்கட்டளை நிர்வாகக்குழு உறுப்பினர் திரு எஸ்.ஆர். கருப்பண்ணன் இ.ஆ.ப. ஆண்டுஅறிக்கை வாசித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது:

''இங்கு திறக்கப்பட்டுள்ள கோவிந்து மாளிகை 90.75 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியன் வங்கியிலிருந்து ரூ. 64 இலட்சம் கடனாகவும் மற்ற வகையில் ரூ. 26.75 இலட்சம் நிதியாகவும் பெறப்பட்டது. இந்தக் கட்டடத்தின் மூலம் மாதத்திற்கு ரூ. 2 இலட்சம் அதாவது ஆண்டுக்கு ரூ. 20 இலட்சத்திற்கு மேல் வருமானம் வருகிறது. இதனால் இதுவரை ஆண்டுக்கு 40 இலட்சம் ரூபாயாக இருந்த பச்சையப்பன் அறக்கட்டளையின் வருமானம் 60 இலட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது.''

நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்ற ஆளுநரின் ஆலோசகர் திரு ஏ.பத்மநாபன் இ.ஆ.ப. குறிப்பிட்டார்:

''சமுதாயத்தில் இரண்டு விதமான மக்கள் வாழ்கிறார்கள். உதவி செய்ய மனம் இருக்கும்; ஆனால் அவர்களிடம் பணம் இருக்காது. இப்படிப்பட்டவர் ஒருவகை. பணம் இருக்கும்; ஆனால் பிறருக்கு உதவுவதற்கு மனமிருக்காது. இப்படிப்பட்டவர் இன்னொரு வகை.

''ஆனால் பச்சையப்பர் பொருளும் மனமும் ஒன்றாகச் சேர்ந்தவர். அதை மக்களுக்கு அப்படியே அர்ப்பணித்தவர். ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்று செயல்பட்டார். ஏழை எளிய மக்கள் வாழ வழி வகுத்தவர். அவர்களின் கண்ணீரைத் துடைத்தார். தாழ்த்தப்பட்ட - ஏழை, எளிய மாணவர்களுக்கு - கிராம மக்களுக்கு இடவசதி செய்து கொடுத்த கல்லூரி பச்சையப்பன் கல்லூரியாகும்.''

கோவிந்து மாளிகையைத் திறந்து வைத்த மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் தமது உரையில் தெரிவித்ததாவது:

''தர்ம உணர்வு கொண்ட ஒருவரால் உருவாக்கப்பட்டது இந்த அறநிலையம்.

''கி.பி. 18வது -19வது நூற்றாண்டுகள் சரித்திரத்தில் இருண்ட காலம் எனக் கருதப்படுகின்றன.

''நமது கலாச்சாரம், மொழி, நாகரிகம் ஆகியவற்றை அறிந்து கொள்ளாதவர்கள் நம்மை ஆட்சி செய்தார்கள். இதனால்தான் அந்தக் காலத்தை இருண்ட காலம் என நான் குறிப்பிடுகிறேன்.

''பச்சையப்பர், கோவிந்துநாயக்கர் செங்கல்வராய நாயக்கர், செல்லம்மாள் இவர்கள் எல்லாம் சிறந்த பெருமக்கள்; நமது கலாசாரத்தைப் பிரதிபலிப்பவர்கள். தாங்கள் சம்பாதித்ததை எல்லாம் மக்களுக்கு வாரி வழங்க அவர்கள் சிந்தித்தனர். அவர்கள் தான் நமது இருண்ட கால வரலாற்றின் புகழ்பெற்ற கதாநாயகர்கள்-மாவீரர்கள்.

''கல்விப்பணி-இந்த அறக்கட்டளையின் முக்கியமான குறிக்கோளாகக் கருதப்படுகிறது இன்றுகூட 36% மக்கள் தான் நமது நாட்டில் படித்தவர்களாக இருக்கிறார்கள் என்பது வெட்கப்படவேண்டிய செய்தி. 70% பெண்கள் இன்னும் படிப்பறிவு இல்லாதவர்களாக இருக்கிறார்கள். இந்த நிலை மாறவேண்டும்.

''நமது வளர்ச்சிப் பணியில் கல்வியை ஒரு மையமாக நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். கல்வியறிவில் மட்டுமல்ல; ஒழுக்க நெறியிலும் பச்சையப்பன் அறக்கட்டளை உயர்ந்து விளங்குகிறது.

''பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் ஒழுக்கநெறி பற்றிக் கவனிக்காதவர்களாக இருக்கிறார்கள்.

''கல்வியின் தரம், ஒழுக்கம் ஆகியவற்றை நாம் மேன்மைப்படுத்த வேண்டும்.

''ஒழுக்க நெறியை வீட்டில் கற்காத பேராசிரியர்களால் மாணவர்களுக்கு எப்படி ஒழுக்கத்தைக் கற்றுத்தர முடியும்? வகுப்பிலே ரௌடி மாணவர்கள் இருந்தால்கூட, பேராசிரியர் ஒழுக்க நெறியுடன் விளங்கினால் சமாளிக்க முடியும்.

''நல்லதரமான மாணவர்களையும் ஆசிரியர்களையும் உருவாக்கப் பாடுபடுவோமாக.''

அறக்கட்டளை நிர்வாகக்குழு உறுப்பினர் திரு ஜி.கே. பிச்சாண்டி நன்றி கூறினார்.

—நமது செய்தியாளர்









## கொடைக்கானல் மலர்க் கண்காட்சி

அண்ணா மாவட்டத்தில் கொடைக்கானலில் துவக்கப்பட்ட கோடை விழாவையொட்டி 14-5-88 அன்று, மேதகு தமிழக ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் எஸ். எஸ். சித்து மலர்க் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

மலர்க் கண்காட்சி நிறைவு விழாவில் மேதகு தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி. வி. இராமகிருஷ்ணா மலர்க் கண்காட்சிப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

விழா முடிவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மிருத்யுஞ்சய் சாரங்கி நன்றி கூறினார்.





## பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில்

அட்டை சொல்லும் செய்தி:

# பிர்லா கோளரங்கம்

'வானத்து மீனினும் நின் வாழ் நாள் சிறப்பதாக' எனப் புலவர் பெருமக்கள், மன்னர்களைப் போற்றிப் புகழ்ந்ததை நாம் பழந்தமிழ் ஏடுகளிலே படித்திருக்கிறோம். ஆனால் விண்மீன்களின் வகை எத்தனை, அவற்றின் இயல்புகள் என்ன என்றெல்லாம் தெரிந்துவைத்துக் கொண்டிருக்கிறோமா?

வானம் என்றால் சந்திரன், சூரியன், விண்மீன் என்று மட்டும் நாம் அறிந்துகொண்டிருக்கிறோமே தவிர வான்படு பொருட்கள் இவைமட்டும் தானா?-என்பதை அறிந்து கொள்வதில் அவ்வளவாக அக்கறை செலுத்தியதே இல்லை.

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல' என்கிறோம். இதனால்தானோ என்னவோ அரிய பல பழந்தன்மைகளையெல்லாம் நாம் இழந்துகொண்டிருக்கிறோம். சூரியன் நகர்வதை வைத்துப் பகலிலும், நட்சத்திரக் கூட்டங்களை வைத்து இரவிலும் 'இப்போது இத்தனை மணி' என்று சொல்லும் மூதாதையர்கள் வரலாறு நமக்குத் தெரியும். அவர்கள் வழியில் மணி பார்க்க, அவர்களுடைய வழித் தோன்றல்களான நமக்குத் தெரியவில்லை.

வானியல் அறிவு நமக்கு அத்தனை வறட்சியாகிவிட்டது.

அறிவியலின் பல்வேறு துறைகளில், முதன் முதலாகத் தோன்றியது வானியலாகத்தான் இருக்கக் கூடும். அவ்வளவு தொன்மைமிக்க ஒன்றில் நாம் வளர்ச்சிபெற உதவுவதாக இருக்கிறது, அண்மையில் சென்னை அடையாறில் நம் குடியரசுத் தலைவர் அவர்கள் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் துவக்கிவைத்த 'பி.எம்.பிர்லா கோளரங்கம்.'

வானில் என்னவெல்லாம் இருக்கின்றது, எவையெல்லாம் இடம் பெயர்கின்றன, எவை எவை நிலையாக இருக்கின்றன, எதெல்லாம் மறைகின்றது - எவை மறைந்தும் திரும்பத் தோன்றுகின்றன என்றெல்லாம் வான்படு பொருட்களைப்பற்றி இந்தக் கோளரங்கத்தின் உதவியால் நாம் தெரிந்துகொள்ளலாம். வானியல் பற்றி அறிந்தவர்கள் மட்டுமல்ல; அறியாதவர்களும் தெரிந்துகொள்ளும் விதத்தில் இந்த கோளரங்கம் பேருதவி புரிகிறது.


வானில் தெரியும் விண்மீன்கள், கோள்கள் ஆகியவற்றின் தோற்றம் இக்கூடாரத் திரையில் தோற்றுவிக்கப்படுகிறது. அந்தக் காட்சிக்கான விளக்க உரையும் ஒலிபரப்பாகிறது.

மேனாடுகளில் இது போன்ற கோளரங்கங்கள் பல உண்டு. இந்தியாவில் டில்லி, பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களிலும் இருக்கின்றன. இப்போது நம் தமிழ்நாட்டிலும் அமைக்கப்பட்டுள்ளது.

கோளரங்கம் என்பது வானவியல் பற்றிய கருத்துக்களை நுண்ணிய ஒளி, ஒலி சாதனங்களைக் கொண்டு மக்களுக்கு, குறிப்பாக மாணவர்களுக்கு எளிய முறையில் கற்பிப்பதே ஆகும். நாம் அன்றாடம் வானத்தில் காண்பது அங்கே அன்றைய விண்மீன் நிலைகளைக் காண்பதாகும். ஆனால், கோளரங்கத்தில் உலகில் எந்த இடத்திலும், எந்த நாளிலும் ஏற்படக்கூடிய கோள்-விண்மீன்களின் நிலைகளைக் கண் முன் எடுத்துக்காட்ட முடியும்.

அரைக்கோள வடிவத்தைத் திரையாகக் கொண்ட இம்மையத்தின் நடுவே, கோளரங்கப் புரஜக்டர் உள்ளது. பல்வகையான லென்ஸ் அமைப்புகளையும், கீயர் முறைகளையும் ஈர்ப்பு மறைப்புகளையும் உயர்திறனையும் கொண்ட பல்புகளையும் உள்ளடங்கிய, இத்தகைய புரஜக்டர், இரவு வானத்தைக் கோளத்திரையில் காட்டுகிறது. 'பி.எம்.பிர்லா கோளரங்கம்' என்று அழைக்கப்படும் இக்கோளரங்கம் 15 மீட்டர் விட்டத்தை உடைய அலுமினிய நுண்துகளால் ஆன வான் திரையைக் கொண்டது. மேலும், தென், வட அரைக்கோளப் பகுதிகளிலிருந்து தெரியும் எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட விண்மீன்களைக் காட்டுவதற்கு இக்கருவியால் இயலும். இதைத் தவிர, இதர வான்பொருள்களான கோள்கள், வால் நட்சத்திரங்கள், எரிகற்கள், மற்றும் இதர நிகழ்ச்சிகள் அவைகளுக்குரிய அழகோடும், எழிலோடும் விண்திரையில் காட்டலாம்.

இந்த புரஜக்டர் 'கோட்டோ ஆப்டிகல் தயாரிப்பு நிறுவனம்' என்ற ஜப்பானிய அமைப்பால் உருவாக்கப்பட்டGM II வகையைச் சார்ந்ததாகும். இது கம்ப்யூட்டர் உதவி கொண்டு, தானாக இயங்க வல்லது. தேவைப்படும்போது, தாமாகவே அதனை இயக்கவும் இயலும். ஜப்பான் வல்லுநர்களால் உருவாக்கப்பட்ட இப் புரஜக்டர் சமீபத்தில் தான் ஜப்பான் தொழில் நுட்ப வல்லுநர்களால் அமைக்கப்பட்டது. மேலும், ஒளிப்பதிவு செய்யக்கூடிய கருவிகளும் உள்ளடக்கிய ஒரு அரங்கும் உள்ளது. இக்கோளரங்கைச் சுற்றி வட்டவடிவில் ஓர் அரங்கு உள்ளது. இங்கு வானியல் பற்றிய காட்சிப்பொருள்கள் பார்வைக்கு வைக்கப்படும். இக்கோளரங்கத்தில் 236 நபர்கள் வசதியாக ஒரே நேரத்தில் அமர்ந்து பார்க்க இருக்கைகள் உள்ளன.



இக்கோளரங்கத்தை நாட்டிற்கு அர்ப்பணித்த நன்னாளில், ஞாயிறு குடும்பத்தைப்பற்றிய ஓர் காட்சி திரையிடப்பட்டது. புத்தாண்டு நாளில் பார்வையாளர்கள் சென்னை வானத்தையும், அதனுடன் தொடர்புள்ள முக்கியமான விண்மீன் தொகுப்புகளையும், ஒளி மிக்க விண்மீன்களையும் இதன் மூலம் கண்டு மகிழ்ந்தனர். செவ்வாய், வியாழன் மற்றும் சனி கோள்களுக்குச் சென்று வந்த விண்வெளிப் பயணங்களையும் நாம் இங்கே காணலாம். இறுதியாக, விடிவானத்தில் உள்ள விண்மீன் அமைப்புகளையும் மற்றும் முக்கியமான வான்வெளிப் பொருள்களையும் பார்க்கலாம். தற்போது நிகழ்ச்சிகள் தமிழ், மற்றும் ஆங்கில மொழிகளில் மட்டும் நடைபெறுகிறது.

இந்த 'பி.எம்.பிர்லா கோளரங்கம்' கல்கத்தாவைச் சேர்ந்த கோத்தாரி அசோசியேட்ஸ் என்பவர்களால் வடிவமைக்கப்பட்டது. திரு சி.கே. பிர்லா நிறுவனங்களில் மனமுவந்து வழங்கப்பட்ட நிதி உதவியான ரூபாய் இரண்டு கோடியினைக் கொண்டு இது நிறுவப்பட்டுள்ளது.

1400 சதுரமீட்டர் மொத்தப் பரப்பினை இக்கோளரங்கம்கொண்டுள்ளது. இதில் 268 சதுரமீட்டர் பரப்பினைக் கொண்டுள்ளது வான் திரை. புரஜக்டர் முதலான சாதனங்களுக்காக 1.5 மீட்டர் அகலம் கொண்ட இடம் இதனுள்ளே ஒதுக்கப்பட்டுள்ளது.

இக்கோளரங்கத்தில், நிர்வாக அலுவலகம், மாநாடு அறை, திரையரங்கம், நூலகம், மற்றும் இதர வசதிகளுக்குத் தேவையான இடமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்தில், அடித்தளத்தில் குளிர் மின் சாதனக் கருவிகளும்அமைக்கப்பட்டுள்ளன. இக்கட்டடம் முழுவதும் குளிர்சாதன வசதியுடையதாகும். இக்கட்டடத்தின் தரை, பளிங்குக் கற்களால் ஆனது. இதன் நுழைவு வாயில் மற்றும் வெளி வாயில் கதவுகள் தேக்கு மரத்தில் நுண்வேலைப்பாடுகளால் அமைக்கப்பட்டுள்ளன.

நுழைவுச் சீட்டினைப் பெறுவதற்குத் தனியாக இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

நாள்தோறும் பி.எம்.பிர்லா கோளரங்கம் அளிக்கும் முதல் நிகழ்ச்சியின் சுருக்கம் வருமாறு:

ஞாயிற்றுக்கு மிக அண்மையில் உள்ள கோள் புதன்; மற்ற கோள்களான வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, நிருதி (URANUS) வருணன் (NEPTUNE) மற்றும் குபேரன் (PLUTO)என்பவை ஞாயிற்றிலிருந்து முறையே வெவ்வேறு தூரங்களில் வெகு தொலைவில் உள்ளன.

ஞாயிற்றில் உள்ள ஹைட்ரஜன் அணுக்கள் ஹீலியம் அணுக்களாக, அணுக்கருவினையால்தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கின்றன. இதனால்பலமில்லியன் ஆண்டுகளுக்குத் தேவையான ஒளியையும், வெப்பத்தையும் ஞாயிறு, கதிர்வீச்சால் அளிக்கிறது. ஞாயிறு பொழிகின்ற ஒளியினால் இதன் கோள்களும், துணைக்கோள்களும் ஒளிர்கின்றன.

ஞாயிற்றுக்கு வெகு அருகில் உள்ள புதன் கோளில் ஒரு பாதி என்றும் பகல், மறு பாதி என்றும் இரவு. இதில் பகல் பொழுது மிக வெப்பமாகவும், இரவுப்பொழுது

## தமிழகத்தில் இந்தியக் குடியரசுத் தலைவர்



மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள், மே மாதம் முற்பகுதியில் தமிழ்நாட்டிற்கு வருகை தந்து பல்வேறு விழாக்களில் பங்கேற்றார்; அவர்தம் துணைவியாரும் உடன் வந்திருந்தார். மூன்று நாட்கள் அவர்கள் சென்னையில் தங்கினார்கள்.

விமானப்படை விமானம் மூலம், 10-5-88 அன்று நண்பகலில் சென்னை வந்து சேர்ந்த அவர்கள், மாலை 6 மணியளவில் அடையாறு ஸ்ரீசங்கரா சீனியர் செகண்டரி பள்ளி விழாவில் கலந்து கொண்டார்கள். அங்கு புதிதாகக் கட்டப்பட்டிருந்த மதுரம் நாராயணன் கட்டடத்தை மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் திறந்து வைத்தார். பின்பு, திருவான்மியூரில் உள்ள கலா சேத்திரா விழாவில் பங்கேற்று, திருமதி ருக்மணி அருண்டேல் சிலையைத் திறந்து வைத்தார்.

11-5-88 அன்று காலையில், மேதகு குடியரசுத் தலைவரும் அவர் தம் துணைவியாரும்-மயிலாப்பூரில் உள்ள அருள்மிகு கற்பகாம்பாள் உடனுறை கபாலீசுவரர் திருக்கோயில், திருவல்லிக்கேணியில் உள்ள அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயில் ஆகிய தலங்களுக்குச் சென்று இறை வழிபாடு நடத்தினார்கள். பின்னர், 12 மணியளவில் அடையாறில்-பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மையத்தில் அமைந்துள்ள பி.எம். பிர்லா கோளரங்கத்தை மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் திறந்து வைத்தார். பிறகு, அறிஞர் அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த சுவாமி விவேகானந்தா சங்கத்தின் கலந்துரையாடலில் அவர் கலந்து கொண்டு சிறப்பித்தார். அன்று மாலை 6 மணியளவில், கிரீன் வேஸ் சாலை நிகழ்ச்சியில் பங்கேற்று தத்துவமேதை ஜே. கிருஷ்ணமூர்த்தி நினைவுச் சொற்பொழிவாற்றினார்.

12-5-88 அன்று காலையில், அண்ணா சாலையில் அமைந்துள்ள விக்டோரியா தொழில் நுட்ப மையத்தின் நூற்றாண்டு விழாவில் மேதகு இந்தியக்குடியரசுத்தலைவர் அவர்கள் கலந்து கொண்டார். அதன் பிறகு, அம்பத்தூர் தொழில்பேட்டை உற்பத்தியாளர் சங்க வெள்ளி விழாவில் பங்கேற்ற அவர், அன்று மாலையில் சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் ஈ.ஐ.டி. பாரி நிறுவனத்தின் 200வது ஆண்டு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

அன்று மாலை, மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரும் அவர்தம் துணைவியாரும் டில்லிக்குப் பயணமாயினர். விமான நிலையத்தில்-வரவேற்பு விழாவிலும், வழியனுப்பு விழாவிலும் மேதகு தமிழக ஆளுநர் அவர்களும், ஆளுநரின் ஆலோசகர்களும், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளரும் வந்திருந்து சிறப்பித்தனர்.

கடுங்குளிராகவும் இருக்கும். இக் கோளில் வாயு மண்டலம் இல்லை. ஆகவே புதனில் உயிர் வாழ முடியாது.

வெள்ளிக் கோள் பூமிக்கு மிக அருகில் அமைந்துள்ளது. இங்கு இரவு பகல் சராசரி வெப்பநிலை 480 டிகிரி செல்சியஸ் ஆகும். இங்குள்ள அழகான மேகங்கள் கந்தக அமில வாயுவினால் உருவானவை.

வெள்ளியும், புதனும் சந்திரனைப் போல மாறுபட்ட பிறைகளைத் தோற்றுவிக்கின்றன.

நாம் வசிக்கும் பூமி, வெள்ளி, செவ்வாய் கோள்களுக்கிடையில் உள்ளது. பூமி ஞாயிறிடமிருந்து சுமாராக 150 மில்லியன் கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இந்த தொலைவான 150 மில்லியன் கிலோ மீட்டர் ஒரு வானியல் அலகு. 'one astronomical unit' என வரையறுக்கப்படுகிறது. ஞாயிற்றை ஒரு முறை சுற்றி வர பூமி எடுத்துக் கொள்ளும் காலம் 365 நாட்களாகும். இக்காலமே பூமிக்குரிய ஓர் ஆண்டாகும்.

இந்நாள் வரை பன்னிரண்டு மனிதர்கள் சந்திரனில் காலடி வைத்துள்ளனர். சந்திரனிலிருந்து 400 கிலோ கிராம் கற்களும் மண்ணும் பூமிக்கு ஆய்வுக்காகக் எடுத்துவரப்பட்டுள்ளன. சந்திரன் பூமியிலிருந்து சராசரியாக 3,84,400 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இங்கு மேகக் கூட்டமும் கிடையாது. வாயு மண்டலமும் இல்லை. இதன் மேல் தளத்தில் குழிகளும், பள்ளத்தாக்குகளும், குன்றுகளும் உள்ளன. இவை எரி கற்கள் மோதலால் உண்டானவை.

செவ்வாய்க் கோள் பொதுவாக சிவப்பு நிறத்தைக் கொண்டுள்ளது. இங்கு உயிரினங்கள் இருக்கலாம் என நினைக்கப்பட்டது. ஆனால் உயிரியல் அடிப்படையில் இங்கு உயிரினங்கள் வாழ இயலாது. தெற்கு, வடக்கு துருவப் பரப்புக்கள் செவ்வாய்க்கும் உண்டு. செவ்வாய்க் கோளத்தின் வாயு மண்டல அழுத்தம், புவி வாயுமண்டல அழுத்தத்தைப் போல் நூற்றில் ஒரு பங்காகும். செவ்வாய்க்கு ஃபோபஸ் மற்றும் டீமாஸ் என்ற இரண்டு துணைக் கோள்கள் உள்ளன.

ஞாயிற்றுக் குடும்பத்தில் மிகவும் அதிக எடையுள்ளது வியாழனே. வியாழன் கோளின் எடை மற்றைய கோள்களின் மொத்த எடையை விட அதிகம். உருவத்தில் மட்டும் வியாழன் சற்றுப் பெரிதாக இருந்திருக்குமேயானால் ஞாயிற்றைப் போல் இதுவும் ஒளிரும்.

ஞாயிற்றுக் குடும்பத்தில் மிக அழகாக அமைந்துள்ளது சனிக்கோள். தொலைநோக்கியால் இதனைக் காணும்போது இது வளையங்களின் உள்ளே வீற்றிருப்பதைக் காணலாம். இவ்வளையங்கள் நுண் துகள்களால் ஆன ஆயிரக்கணக்கான வளையங்களைக் கொண்டவை. இக்கோளுக்கும் வியாழனைப்போல் பல துணைக்கோள்கள் உள்ளன.

நிருதியில் நிலவும் வெப்பநிலை 200 டிகிரி செல்சியஸ். 1977-ல் ஏற்பட்ட விண்மீன் மறைவினால் நிருதியில் மெல்லிய வளையங்கள் சுற்றியிருப்பதைத் தெரிந்து கொண்டோம். வருணன் கோளை ஜான் ஆடம்ஸ் மற்றும் அரபியன் லெவரியர் 1846-ல் கண்டுபிடித்ததிலிருந்து இது ஒருமுறைகூட ஞாயிறைச் சுற்றியதில்லை. ஒருமுறை இது ஞாயிறைச் சுற்றிவர எடுத்துக்கொள்ளும் காலம் 164 ஆண்டுகளாகும்.

ஞாயிற்றுக் குடும்பத்தின் ஒன்பதாவது கோள் குபேரன்.

''பி.எம்.பிர்லா கோளரங்கத்தின் முதல்காட்சி நாள்தோறும் காலை 11.30க்குத் தொடங்கும். ஒவ்வொரு காட்சியும் 40 நிமிடங்கள் காட்டப்படுகின்றன. 11.30, 13.30, 15.30, 16.30 மணிக் காட்சிகளுக்கான விளக்கங்கள் தமிழில் சொல்லப்படுகின்றன. 12.30, 14.30, 17.30 மணிக் காட்சிகளுக்கான விளக்கங்கள் ஆங்கிலத்தில் சொல்லப்படுகின்றன. கடைசிக் காட்சி 5.30 மணியுடன் முடிவடைகிறது. காட்சி நேரத்தில் ஏதேனும் மாற்றமெனில் செய்தித்தாள்கள் மூலம் அறிவிக்கப்படும்'' என்று விவரமாக நமக்குத் தெரிவித்தார் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தின் செயல் இயக்குநரான திரு ஆர். பெரியசாமி அவர்கள்.

''பொதுமக்களுக்கு நுழைவுக் கட்டணமாக ஐந்து ரூபாய் வசூலிக்கப்படுகிறது. குடியரசுத் தலைவர் அவர்கள், கட்டண விகிதத்தைக் குறைக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க பன்னிரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஒரே ஒரு ரூபாய் கட்டணம் என்று குறைத்துவிட்டோம். சுமார் ஐம்பது மாணவர்கள், ஆசிரியர்களுடன் முன்னேற்பாட்டுடன் வந்தால்கூட, அவர்களுக்கு நுழைவுக் கட்டணம் தலைக்கு ஒரு ரூபாய் எனச் சலுகையளித்திருக்கிறோம்.'' என்றார் கோளரங்கத்தின் இயக்குநர் டாக்டர் சி.பி. கோபாலராமன்.

கோளரங்கத்தில் காட்டப்படும் 'ஞாயிறு குடும்பம்' பற்றிய ஓர் ஆய்வு படத்திற்கான தமிழ் விளக்கத்தை டாக்டர் வி.சி.குழந்தைசாமி, திரு எச்.இராமகிருஷ்ணன், செல்வி எம். ஃபாத்திமா ஆகியோர் தெரிவிக்கின்றனர். திரு.சு.கோபிநாத் ஆங்கில விளக்கம் அளிக்கிறார். இக்காட்சிகளின்போது இழையும் இசையை மெல்லிசை மன்னர் திரு எம்.எஸ்.விஸ்வநாதன் அமைத்திருக்கிறார்.

கோளரங்கத்தின் வார விடுமுறை நாள் திங்கட்கிழமையாகும்.

டாக்டர் சற்குணமூர்த்தி, திரு ஏ. இராமசாமி, திரு ஆர். மாதவன் ஆகியோர் இக் கோளரங்கத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் செய்யப்படவிருக்கும் பணிகள் பற்றி நமக்கு விளக்கினர்.

''21.5 ஏக்கர்பரப்பளவில் இங்கே அமையவிருக்கும் 'பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மைய'த்தின் ஓர் அங்கமே பி.எம்.பிர்லா கோளரங்கம். அதேபோலப் பதினாறு அரங்கங்கள், ஒவ்வொன்றும் ஐநூறு சதுரமீட்டரில் இங்கே அமைக்கவிருக்கிறோம். நுழை வாயிலையொட்டி பெரியாருக்குத் தனி அரங்கம் அமைக்கப்படவிருக்கிறது. அதில் பெரியாரின் சிலை வைக்கப்படும். பெரியாரின் அறிவியல், தொழில் நுணுக்கம் தொடர்பான கருத்துரைகள், மற்ற பெருந்தலைவர்களோடு பெரியார் உள்ள படங்கள் அந்த அரங்கில் அணிசெய்யும். அதேபோல போக்குவரத்துத் தொடர்பான அரங்கம், பௌதிக இயல் தொடர்பான அரங்கம், எலக்ட்ரானிக்ஸ் தகவல் தொடர்பான அரங்கம் ஆகியவைகளும் இந்த ஆண்டு இறுதிக்குள் இங்கே உருவாக்கப்பட்டு, நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டுவிடும். இன்னும் இரண்டு மாதத்தில் இங்கே குழந்தைகள் அறிவியல் பூங்கா ஒன்று அமையவிருக்கிறது'' என்றெல்லாம் நமக்குத் தெரிவித்த அவர்கள் 'இவைகளின் மூலம் குழந்தைகள் மட்டுமல்ல; பெரியவர்களும் அறிவியலால் ஆக்கம் பெறலாம்'' என்றும் தெரிவித்தனர்.

—பி.எல். இராஜேந்திரன்

## பல்லவனுக்காக ஐவர் குழு

**பல்லவன் போக்குவரத்துக் கழக நிதி நிலைமை, கட்டுக் கோப்பு, பொருளாதார ரீதியில் அதன் செயல் திறனை உயர்த்துவது ஆகியவை பற்றி ஆராய ஐவர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.**

**தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை ஆணையர் மற்றும் செயலாளராக இருந்து ஓய்வு பெற்ற திரு எம். எஸ். ராம், பல்லவன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநராகப் பணியாற்றிய பொறியாளர் திரு தில்லை நாயகம், இக் கழகத்தின் தலைவராகப் பணியாற்றிய திரு எம். பி. பிரானேஷ், போக்குவரத்துத் துறை ஆணையர் மற்றும் செயலர் திரு எஸ். சிவசுப்பிரமணியம், பல்லவன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் திரு கே. சுப்பிரமணியம் ஆகிய ஐவரும் இக் குழுவில் அங்கம் வகிக்கிறார்கள்.**





# தொழில் வளம் பெருக்குவோம்



இந்தியாவில் தொழில் வளர்ச்சியில் மிகவும் முன்னேறிய மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு 30 ஆண்டுகளுக்கு முன்னர் சிறந்து விளங்கியது. ஆனால், அந்தத்தொழில் வளர்ச்சி மெல்ல மெல்லக் குறைந்து, பெரும்பாலான தொழிற்சாலைகள் மூடப்படும் நிலையும், மாநிலத்தில் வேலையில்லாத் திண்டாட்டமும் பெருகிவிட்டன.

மின்சக்திப் பற்றாக்குறை, தொழிற்சாலைகளுக்கு ஊக்கம் அளிக்காதது, வணிக வரிகள் விதிப்பதில் ஒருபோக்கு இன்மை, தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்குவதில் பல்வேறு துன்பம் தரும் நடைமுறைகள், நிறுவனங்கள், வாரியங்கள் முதலிய பல்வேறு தொழில் அமைப்புகளுக்குப் போதிய அதிகாரம் வழங்காதது ஆகியவையே தொழில் வளம் தமிழ்நாட்டில் பெருகாததற்கு முக்கிய காரணங்களாகும்.

இந்த நிலையினைப் போக்க அரசு உடனடி நடவடிக்கைகள் எடுக்கவில்லையென்றால், தமிழ்நாட்டிலுள்ள சிறிய, பெரிய தொழிற்சாலைகள் மூடப்படுவதோடு அவ்வாலைகளால் உருவாக்கப்படும் பொருட்களும் அவற்றிற்கான தொழிற்சாலைகளும் பிற மாநிலங்களில் அமைந்துவிடும் வாய்ப்பும் உள்ளது. அதனால், தமிழ்நாட்டின் பொருளாதாரம் படுமோசமாகப் போவதோடு, வேலையில்லாமையும் பெருகிவிடும் ஆபத்தும் உள்ளது.

இம்மாநிலத்தில் தொழில்வளம் பெருகுவதற்கான நல்ல சூழ்நிலையைக் கண்டறிந்து அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்காகத் தமிழ்நாடு அரசு, சிறுதொழில் தொடர்பான சார்பாளர்களோடும், தொழில் அமைப்புகள், வணிகவியல் வாரியம், பொருளியல் குழுமம், வணிகநிறுவன அமைப்பு, இந்திய வணிகவியல் தொழிற் சங்கம், துணிஆலை இயந்திரங்களின் உற்பத்தியாளர் மற்றும் புகழ்மிக்க தொழில் அதிபர்கள் ஆகியோருடன் விரிவான பேச்சு வார்த்தையினை நடத்தி உள்ளது.

தமிழகத்தின் நிதிநிலை உட்பட அனைத்துப் பிரச்சினைகளும் விரிவாக ஆராயப்பட்டு, நலிவுற்ற தொழிற்சாலைகளுக்குப் புத்துயிர் ஊட்டவும், தற்போது இயங்கிவரும் ஆலைகளின் தரத்தை மேம்படுத்தவும், வாணிகத்தையும் தொழில் வளத்தையும் முனைப்பாகப் பெருக்கவும் பின்வரும் நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது. இதுகுறித்து ஏனைய பிற கருத்துக்களும் அரசின் ஆய்வில் உள்ளன. மேற்கொண்டு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள்பற்றி விரைவில் அறிவிக்கப்படும்.

1. தன்னியக்க ஆவி மின்சார நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் தற்போது நடைமுறையிலுள்ள நுகர்வோர் மின்கட்டணவரி, மின்சக்திக் கட்டணம் ஆகியவை நீக்கப்படும். இவை சுய தேவைக்காகவும் ஏனைய தொழிற்சாலைகளுக்காகவும் வழங்கப்பட வேண்டும். இதுகுறித்துச் சர்க்கரை ஆலை, துணி ஆலை, ரசாயனத் தொழிற்சாலை முதலிய தொழிற்சாலைகளின் குழுக்களோடு கலந்துபேசி நடைமுறைப்படுத்துவது பற்றிப் பின்னர் முடிவு செய்யப்படும்.

2. குறைந்தழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்துவோர், விரிவுபடுத்துவதற்காக / பல்முனைப்படுத்துவதற்காக உயர்அழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்துபவராக இருப்பாரேயானால் அவருக்கு, ஐந்தாண்டுகளுக்கு மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படமாட்டாது.

3. சிறு புனல்மின் நிலையத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைப் பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களுக்கு மிகவும் சீக்கிரமாக அனுமதி வழங்கப்படும்.

4. பரிந்துரைக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் தேர்ந்தெடுக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு ரூ. 20,000 வரை மானியத்தொகை வழங்கப்படும்.

5. மின்காப்புக் கருவிகளுக்கு 1988 ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்படும்.

6. உயர்அழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் ஆலைகளுக்கும், விரிவாக்கம் செய்யும் ஆலைகளுக்கும் அவர்களுக்குத் தேவைப்படும் மின்சக்தித் தேவையில் குறைந்தபட்சம் 20 சதவிகிதம் சேர்த்துப்பெறும் வசதி அளிக்கப்படும். இதற்கான முதலீட்டுச் செலவு, திட்டச்செலவாகக் கருதப்படும்.

1. வட்டியில்லா விற்பனைவரிக் கடன் திட்டத்தை மாற்றவும், உற்பத்தி தொடங்கி மூன்றாண்டுகள்வரை விற்பனைவரி தள்ளி

வைப்பு வசதி அளிக்கப்படவும் கருதப்பட்டுள்ளது. அதன்பிறகு தற்போதுள்ள வரன்முறையின்படி அடுத்த மூன்றாண்டுகளுக்கு வட்டியில்லா விற்பனைவரிக் கடன் வழங்கப்படும்.

2. தற்போதைய தொழில் முனைவர் அல்லது தொழிற்சாலைக் குழுக்கள் புதிதாகத் தொழிற்பிரிவுகளை அமைப்பார்களேயானால் அவர்களுக்கும் மூலதன மானியத் திட்டத்தின் மூலம்பயன் கிட்டும். ஆனால் அந்தத் தொழில் அமைப்புகள் பின்தங்கிய பகுதிகள் என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட வேண்டும். பின்தங்கிய பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் மின்வெட்டு விலக்கு போன்ற ஏனைய பிற சலுகைகளையும் இவர்கள் பெறத் தகுதியுடையவர்களாவார்கள்.

3. (அ) மின்னணுவியல் தொழிற்சாலைகள் தமிழகத்தில் பெருகுவதற்கு விற்பனைவரிக் குறைப்பு அளிப்பதோடு, மூலதன மானியம் பின்வரும் வீதத்தில் வழங்கப்படும்:

i. மெல்லியல் பொருட்களின் R & D செலவு உட்பட மூலதன முதலீடுகளுக்காக ரூபாய் ஒருகோடி வரை (மொத்தத் திட்டச் செலவு 20 சதவிகிதம் வரை)—இதற்கு 15 இலட்சம் வரை 15 சதவிகிதம் மானியம் வழங்கப்படும்.

ii. ஒரு கோடியிலிருந்து இரண்டு கோடி வரையிலான மூலதன முதலீட்டிற்கு 30 இலட்சம்வரை 18 சதவிகிதம் மானியம் வழங்கப்படும்.

iii. இரண்டு கோடிக்கு மேற்பட்ட மூலதன முதலீட்டிற்கு 35 இலட்சம்வரை 15 சதவிகிதம் மானியம் வழங்கப்படும்.

(ஆ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ஆகியவை மின்னணுவியல் தொழிற்சாலைகளுக்கு அளித்த கடனுக்கான வட்டியில் இரண்டு சதவிகிதம் தள்ளுபடி வழங்கப்படும்.

4. உள்ளூர் உற்பத்தியாளர்கள், சிறு தொழிற்சாலைகள், ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றின் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக அவர்களின் பொருட்களைத் தமிழக அரசும், தமிழ்நாடு அரசு நிறுவனங்களும் வாங்குவதற்கான திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

5. தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் தனக்கு நேரடியாக, பொறுப்பல்லாத தவறுகள், சட்டமீறல்கள் ஆகியவை காரணமாக இயக்குநர்களுக்கு ஏற்படும் இடையூறுகளையும் இன்னல்களையும் தடுப்பதற்காக அச்சட்டத்தில் ''பொறுப்பில் இருப்பவர்'' என்பதற்கான விளக்கம் தக்கவாறு திருத்தப்பட்டுள்ளது.

## விற்பனை வரிச் சலுகைகள்

1. இரு சக்கர வண்டிகளின் கொள்ளளவைக் கருத்தில் கொள்ளாது தற்போதுள்ள வரிவீதத்தை 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைத்தல்.

2. அனைத்துவகை மின்னணுப்பொருட்கள் மீதான வரிவீதத்தைத் தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின்கீழ் 10 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகவும், மத்திய விற்பனை வரிச்சட்டப்படி 4 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாகவும் குறைத்தல்.

3. எல்லாவகையான காகிதங்களின்மீதும் உள்ள வரிவீதத்தை 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைத்தல்.

4. துணி ஆலை இயந்திரங்களின்மீதான வரிவீதத்தை 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைத்தல்.

5. சோடியம் ஹைட்ரோ சல்பேட் மீதான விற்பனைவரி வீதத்தை 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைத்தல்.


6. நேரடியாக ஏற்றுமதி செய்கின்றவர்களுக்கு விற்பனை செய்யப்படும் சிப்பம் கட்டும் பொருட்களுக்கு வரிவிலக்கு அளித்தல்.

7. உயிர்காக்கும் 33 வகையான கூடுதல் மருந்து வகைகளுக்கு விற்பனை வரியை 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைத்தல்.

8. ரூபாய் 2 இலட்சம் வரை விற்பனையாகும் காலணிகளுக்கு விற்பனை வரியிலிருந்து வரிவிலக்கு அளித்தல்.

9. ஐ.எஸ்.ஐ. குறியீடு இடப்பட்ட காற்று அழுத்த மண்ணெண்ணெய் ஸ்டவ்களுக்கு விற்பனை வரிகளிலிருந்து விலக்கு அளித்தல்.

10. பதிவு செய்யப்படாத, விற்பனைக் குறியீடு இல்லாத ரொட்டி முதலிய பொருட்கள் ஓர் ஆண்டிற்கு ரூபாய் 2 இலட்-




சத்திற்கு மேல் ஐந்து இலட்சத்திற்குட்பட்டு விற்றால் அவைகளுக்கு விற்பனை வரி வீதத்தை 5 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகக் குறைத்தல். (இது இப்பொழுதுள்ள ஆண்டிற்கு 2 இலட்சத்திற்கு விற்றால் கொடுக்கப்படும் வரிவிலக்கோடு கூடுதலாக அளிக்கப்படுகிறது.)

11. கருத்தடைச் சாதனங்களுக்கு வரி விலக்கு அளித்தல்.

12. சாம்பிராணி விற்பனைக்கு வரி விலக்கு அளித்தல்.

13. சுவர்க்கடிகாரங்கள், கைக்கடிகாரங்கள், மேசைக்கடிகாரங்கள் முதலியவற்றிற்கு விற்பனைவரி வீதத்தை 15சதவீதத்திலிருந்து 10 சதவீதமாகக் குறைத்தல்.

14. குதிரை லாட ஆணிகளுக்கும் குதிரை லாடங்களுக்கும் விற்பனை வரி விலக்கு அளித்தல்.

15. சாக்கட்டிகளுக்கு விற்பனை வரி விலக்கு அளித்தல்.

16. கைவினைப் பொருட்களுக்கு இப்பொழுது ரூபாய் 500 வரை விற்றால் விற்பனை வரி விலக்கு அளிக்கப்படுகிறது. ஆனால் இனி ரூபாய் 1000வரை விற்பனை வரி விலக்கு அளிக்கப்படும்.

17. பதப்படுத்தப்பட்ட தோல்களுக்கும் உரிவைகளுக்குமான விற்பனை வரி வீதத்தை 2 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாகக் குறைத்தல்.

18. தீக்குச்சிகளைக் கைத்தொழிலாகக் கொள்பவர்களுக்கு விற்பனை வரி விகிதம் இரண்டு வகையில் குறைக்கப்பட்டுள்ளது. (1) ஆண்டிற்கு ரூபாய் 1 இலட்சம் விற்றால் வரிவிலக்கு அளிக்கப்படுகிறது. ஆண்டிற்கு ரூபாய் 1 இலட்சத்திலிருந்து ரூபாய் 2·5 இலட்சம் வரை விற்றால் 1 சதவீதமாக்கப்படுகிறது. (2) ஆண்டிற்கு ரூபாய் 2·5 இலட்சத்திற்குமேல் விற்றால் 2 சதவீதமாக்கப்படுகிறது.

## ஆதரவு அளிக்கும் திட்டங்கள்

1. கீழ்க்காணும் வகைகளில் தமிழ்நாடு அரசு நிறுவனங்களில் பொறுப்புகளும் அதிகாரங்களும் மிகுதியாகப் பகிர்ந்து அளிக்கப்படும் முறை அறிமுகப்படுத்தப்படுகிறது. அந்த நிறுவனங்களின் செயல்களின் அளவுகளுக்கு ஏற்றபடி இரண்டு வகையாக இந்த அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்படுகின்றன. ''ஏ'' வகைப் பிரிவுகளுக்கு ரூபாய் 50 இலட்சம்வரை முதலீடு செய்யப்படும் செயல்முறைகளுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் வழங்கப்படுகிறது. ''பி'' வகையில் ரூபாய் 25 இலட்சம் வரை முதலீடு செய்யப்படும் செயல்முறைகளுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் வழங்கப்படுகிறது. தொழில் முன்னேற்ற நிறுவனங்கள் முதலீடு செய்துள்ள கூட்டு நிறுவனங்களிலிருந்து முதலீட்டைத் திரும்பப் பெறுவதற்கும் இந்த வரம்பு பொருந்தும். கூட்டு நிறுவனங்கள் அமைக்கும்போதே முதலீட்டைத் திரும்பப் பெறுவதற்கு வகை செய்யப்பட்டிருப்பின் இந்த வரம்பு பொருந்தாது. அந்த நிறுவனங்களைப் பொறுத்தவரையில் ஒப்பந்தப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2. இந்த வரன்முறை எல்லைகளுக்கு மேற்பட்ட முதலீடுகளுக்கும், முதலீடுகளைத் திரும்பப் பெறுவதற்கும் உரிய கருத்துருக்களைத் தெளிவுபடுத்த, ''திட்ட முதலீட்டுக் குழு'' ஒன்று அமைக்கப்படும். இது தமிழக அரசின் தலைமைச் செயலாளரைத் தலைவராகவும், நிதித்துறைச் செயலாளர், நிர்வாகச் செயலாளர், அரசு நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகள் ஆகியோர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு விளங்கும். இந்த ஏற்பாடு அரசாங்க அளவில் திட்டங்களை விரைவுபடுத்தும்.

3. தமிழக அரசில் உள்ள வாரியங்களுக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த அதிகாரத்தின்படி வாரியத்திற்குக் கீழ்ப்பட்ட மாதம் ரூபாய் 4050 சம்பளம் பெறும் அலுவலர்களை நியமிக்கவும் அவர்களைத் தெரிவு செய்யவும் அதிகாரம் வழங்கப்படுகிறது.

## சிறு தொழில்களுக்கான சிறப்பு நடவடிக்கைகள்

1. மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமையில், மாவட்டங்களில் நிறுவப்பட்ட உடனடிகுறைதீர்குழு (Single Window Committee) சிறுதொழில் முனைவர்கள் உரிமம் வேண்டிப் பல்வேறு துறைகளிடமிருந்து வந்த உரிமங்கள் தொடர்பாக விண்ணப்பங்களுக்கு இசைவு அளிப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை ஆய்வு செய்கிறது. தலைமைச் செயலாளரின் தலைமையில் செயல்படும் ஒரு குழு, இசைவுகள் அளிப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் காலாண்டுக்கு ஒருமுறை ஆய்வு செய்யும்.

2. மாவட்டத் தொழில் மையங்கள், அரசுத்துறைகளிடமிருந்தும் ஏனைய முகவர் அமைப்புகளிடமிருந்தும் பல்வேறு இசைவுகளைப் பெறுவதில் சிறுதொழில் அதிபர்களுக்கு உதவும் பயனுள்ள அமைப்பாகச் செயல்படும். மாவட்டத் தொழில் மையங்கள் இதற்காக எல்லா விண்ணப்பங்களையும் தொழில் முனைவர்களிடமிருந்து பெற்று அவற்றிற்கு இசைவுகள் பெறத் தாங்களே ஏற்பாடுகளைச் செய்யும். அத்தகைய இசைவுகள் வராத இனங்களை, இந்த உடனடிகுறைதீர் குழு Single Window Committee ஒவ்வொரு திங்களிலும் மறு ஆய்வு செய்யும்.


3. சிட்கோவிலுள்ள தொழிற்பேட்டைகளின் பராமரிப்பை மேம்படுத்தும் விரைவுத் திட்டம் (Crash Programme) ஒன்று, ரூபாய் ஐம்பத்துமூன்று லட்சம் (53 லட்சம்) செலவில் வகுக்கப்பட்டுள்ளது. அது இந்த ஆண்டில் முடிவுறும்.

4. தாமதங்களை நீக்கவும் முதலீடு முடங்கிக்கிடக்கும் கால அளவைக் குறைக்கவும் வேண்டி, மின்சார இணைப்புகள் தொடர்பான நடைமுறைகள் எளிதாக்கப்பட்டு வருகின்றன. தொழில் முனைவர்கள் தமது தொழிற்சாலைக்குரிய இயந்திரங்களை நிறுவ ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ள இனங்கள் அனைத்திலும், மின்சாரவாரியம் மின்சக்தியை வழங்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளும். மின்னிணைப்பு வழங்கப்படாமல் உள்ள சுமார் ஆயிரத்து ஐந்நூறு இனங்களைப் பொறுத்தவரையில் அவற்றிற்கு மின்னிணைப்பு வழங்கப்படும். இப்பணியை மேற்கொண்டு மூன்று திங்களுக்குள் முடிப்பதற்காக மின்சார வாரியத்துக்குத் தேவையான நிதிகள் வழங்கப்படும்.

5 புதிய தொழிற்பிரிவுகளுக்கு மின்வெட்டு விலக்கு, எல்லாப் பகுதிகளிலும் ஐந்தாண்டுக்கால அளவிற்குத் தற்போது ஒரே சீராக வழங்கப்படும்.

6. நலிந்த சிறுதொழிற் பிரிவுகளுக்குப் புத்துயிர் ஊட்டும் திட்டம், வணிக வங்கிகள் மற்றும் நிதியுதவி நிறுவனங்கள் ஆகியவற்றுடன் நெருங்கி இணைந்து செயல்படுவதன் மூலம் தீவிரமாக நிறைவேற்றப்படும். கடன்களைத் திருப்பிச் செலுத்தும் தவணைக் காலத்தை நீட்டித்தல், தண்ட வட்டியைத் தள்ளுபடி செய்தல், காலங்கடந்த நிலுவையாக உள்ள வட்டி குறித்து நிதி வழங்கல், கூடுதல் நடைமுதல் மூலதனம், காலமுறைக் கடன்கள் ஆகிய முறைகளில் இத்திட்டத்தின் கீழ் தொள்ளாயிரத்து எண்பத்தேழு (987) தொழிற்பிரிவுகளுக்கு ஏற்கனவே உதவி வழங்கப்பட்டு வருகிறது.

7. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், சிறுதொழிற் பிரிவுகளுக்குப் புத்துயிர் ஊட்டுவதற்காக, ரூபாய் ஐந்து லட்சம் வரையில் தொடக்க முதலீட்டுத் தொகை உதவியை வழங்குவதற்கான ஒரு திட்டத்தைச் செயல்படுத்தும்:



8. நடைமுதல் மூலதனம் பெறுவதில் உள்ள இடர்ப்பாடுகள் காரணமாகச் சிறு தொழிற் பிரிவுகள் பல நலிந்த நிலையினில் உள்ளதால், காலமுறைக்கடன் ஒப்புதல்களுக்கான எல்லா இனங்களையும் கண்காணிப்பதற்காக, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் வங்கிகளுடன் திங்கள்தோறும் விவாதங்கள் நடத்தும். மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித்தலைவர்களின் கீழ் செயல்படும் உடனடி குறைதீர் குழுக்கள் Single Window Committees இந்தப் பணியையும் கண்காணிக்கும்.

9. மூலதன உதவித்தொகை, மின்கட்டண இணைப்பு, வட்டியில்லா விற்பனை வரிக் கடன்கள் போன்ற உதவிகளை வழங்குவதற்கான நடைமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன. முடிவுறாமல் உள்ள விண்ணப்பங்கள் அனைத்தையும் பொறுத்தவரையில் அவற்றின்மீது முடிவு எடுத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப் போதிய அளவுக்கு வரவு செலவுத் திட்டத்தில் நிதிகள் ஒதுக்கப்படுகின்றன.

10. நலிவுற்ற தொழிற்பிரிவுகளுக்குப் புத்துயிர் ஊட்டுவதற்காக, தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் இம்மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றின் தீவிர ஈடுபாடும் உதவியும் கோரிப் பெறப்படும்.

### தூய்மைக்கேடு கட்டுப்பாடு

1. தூய்மைக் கேடு கட்டுப்பாட்டுச் சாதனத்துக்குச் சலுகை வீதத்தில் விற்பனை வரி விதிக்கப்படும்.

2. தூய்மைக் கேடு கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து, குறிப்பிட்ட ஒரு கால வரம்புக்குள் இசைவுகள் வழங்கப்படும்.




3. சுற்றுப்புறத் தூய்மையைப் பேணுவதற்குரிய சான்றிதழ்களை வழங்குவதற்கான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு எளிதாக்கப்படும்.

### துணி ஆலைத் தொழில்


நலிவுற்ற, ஆனால் மீண்டும் தொடங்கப்பட்டால் தனித்து இயங்கவல்ல துணி ஆலைத் தொழிற் பிரிவுகளைப் பொறுத்தவரையில், அவற்றை மீண்டும் தொடங்கத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக, தொழிலாளர்களுடனும் நிருவாகத்துடனும், நிதியுதவி நிறுவனங்களுடனும் கலந்தாலோசித்து, ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் அதே சமயத்தில், தற்போது தனித்து இயங்கும் தொழிற்பிரிவுகள் நலிவடைவதைத் தடுக்கச் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதற்காக, தொழிலாளர்களுடனும் நிருவாகத்துடனும் கலந்தாலோசித்து, தொழிற் பிரிவுகள் நலிவுறுவதை முன்கூட்டியே அறிந்து எச்சரிப்பதற்கான அமைப்பு ஒன்று நிறுவப்படும்.

### தோல் உற்பத்தித் தொழில்

தோல் உற்பத்தித் தொழில் ஏராளமான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதால் தோல் உற்பத்தித் தொழிலை மேம்படுத்துவதற்குச் சிறப்புமுக்கியத்துவம் வழங்கப்படும். தோல் உற்பத்தித் தொழிலைப் பொறுத்தவரையில் இம்மாநிலம் முதன்மை இடத்தை வகிக்கிறது. காலணிகள், ஷூ மேற்பகுதிகள், தோலணிகள் மற்றும் வேலை நிறைவுற்ற தோல் தொடங்கித் துணைப் பாகங்கள் வரை ஆகியவற்றைத் தயாரிப்பது போன்ற, தூய்மைக்கேடு விளைவிக்காத தோல் தொழில் மீதான தடை, இம்மாநிலத்தின் சில பகுதிகளில் நீக்கப்படும். வட ஆர்க்காடு மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்பிரிவுகள் அனைத்துக்கும் பொதுவாகக் கழிவு சுத்திகரிப்பு நிலையம் ஒன்று விரைவில் அமைக்கப்படும்.

### சர்க்கரைத் தொழில்

இம்மாநிலத்தில் தொழிற்சாலைகளில் பயன்படுத்தும் சாராவி மற்றும் சாராவியை அடிப்படையாகக்கொண்ட ரசாயனத் தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படும். இதற்கிடையில், சர்க்கரைத் தொழிற்சாலைகளிலிருந்து வெளிப்படும் உபரியான கருப்பஞ்சாற்றுக் கசண்டை இம்மாநிலத்திற்குள்ளும் இம்மாநிலத்திற்கு வெளியேயும் விற்பதற்கு அனுமதிக்கப்படும்.





### வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் முதலீடு செய்தல்

வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் இம்மாநிலத் தொழில் வளர்ச்சியில் முதலீடு செய்வதற்கு ஊக்கமளிக்க, அரசு சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் இம்மாநிலத் தொழில் வளர்ச்சியில் முதலீடு செய்வதற்கு வசதி அளிப்பதற்காக சிப்காட்டிலுள்ள சிறப்புப்பிரிவு வலுப்படுத்தப்பட்டு வெளிநாடுகளில் வசிக்கும் இந்திய முதலீட்டாளர்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் முடுக்கிவிடப்படும். வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களின் கருத்துருக்கள் குறித்து அரசு இசைவுகள், குறிப்பிட்ட ஒருகால வரையறைக்குள் வழங்கப்படும்.

**(மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் 8-5-1988 அன்று சென்னையில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி)**

# இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்



## ஆளுநரின் ஆலோசகர் ஆய்வு

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராமேசுவரத்திற்கு (29.4.88) வருகை தந்த தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு ஏ. பத்மநாபன், இ.ஆ.ப., அவர்கள் மாவட்டத்தின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்தார்.

இலங்கையில் ஏற்பட்ட கலவரத்தையொட்டி, இந்தியாவுக்கு வந்து தங்கிய இலங்கைத் தமிழர்கள், கடந்த 1987-டிசம்பர்த் திங்களிலிருந்து இலங்கைக்குத் திரும்பிக்கொண்டிருககிறார்கள். இவர்கள் அனைவரும், இராமேசுவரம் துறைமுகத்திலிருந்து திருப்பியனுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் திருப்பியனுப்பப்படும் இலங்கைத்தமிழர்கள் இராமேசுவரத்திற்குக் கொண்டுவரப்படுவதற்கு வேண்டிய வசதிகள் தரப்படுகின்றனவா, துறைமுக அலுவலகத்தில் அவர்கள் பயணம் மேற்கொள்வதற்கு முன் தங்குவதற்குரிய கூடங்கள் நல்லமுறையில் இருக்கின்றனவா, என்பதைப்பற்றியும், கடலோரக் காவற்படையை விரிவுபடுத்துவது பற்றியும் ஆலோசகர் அவர்கள் அலுவலர்களுடன் கலந்துரையாடினார்.

இராமேசுவரம், கந்தமான பர்வதத்தில் உள்ள நேரு நூற்றாண்டு நினைவுப் பூங்காவில், ஆளுநரின் ஆலோசகர் திரு ஏ.பத்மநாபன் இ.ஆ.ப., அவர்கள் மரக்கன்றுகள் நட்டார். இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு அஜய்பட்டாச்சார்யா, இ.ஆ.ப., அவர்களும் மரக்கன்றுகள் நட்டார். ஏற்கெனவே, சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் நடப்பட்ட மரக்கன்றுகள் உள்ள பகுதிகளை அப்போது அவர் சுற்றிப்பார்த்தார். அதனருகில், இன்னும் மீதமுள்ள இடங்களில் மரக்கன்றுகள் நடுவதற்கான விரைவான பணிகளை மேற்கொள்ள வேண்டுமென வனத்துறை அலுவலர்களுக்கு அவர் குறிப்பு நல்கினார்.

பல்வேறு அரசுத்துறைகளும் செயல்படும் நிலைபற்றி ஆலோசகர் அவர்கள், அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார். பொது மக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார். அவற்றின் மீது உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று அந்தந்தத் துறை அலுவலர்களுக்கு ஆணையிட்டார்.

பின்னர், கதர், கிராமத்தொழில் துறையின் மூலமாகக் காலணி வழங்கும் தொழிலாளர்களுக்குக் கூடம் அமைத்துக்கொள்ள மூன்று பேருக்குத் தலா ரூ. 8,500 மானிய அடிப்படையிலான நிதியுதவியினை ஆளுநரின் ஆலோசகர் வழங்கினார்.

**உல. இரவீந்திரன்,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**இராமநாதபுரம்.**

இலங்கைக் கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டினால் இராமேசுவரம் பகுதியிலுள்ள மீனவர்கள் சிலர் உயிரிழந்தனர். சிலர் காயமுற்றனர். இறந்துபோனவர்கள் இருவர். இதில் ராஜு என்பவரின் மனைவி திருமதி சித்திரவள்ளி அம்மாளுக்கு ரூ. 2,500- திரு ஸ்டீபன் என்பவரின் தந்தை திரு ஜபமாலை பிச்சை என்பவருக்கு ரூ. 2,500 பாரதப்பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தமிழக ஆளுநரின் ஆலோசகர் வழங்கினார். மற்றும் துப்பாக்கி சூட்டினால்காயமடைந்தவர்களுக்கு ரூ.1,000 . இந்தியப் பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து ஆளுநரின் ஆலோசகர் வழங்கினார்.

பாம்பன் பாலத்தின் கட்டுமானப் பணி வேலைகளைப் பார்வையிட்ட அவர், ஜூலை மாத இறுதிக்குள் பாலத்தின் வேலைகள் முடிவடைந்துவிடும்என்றார். மாவட்டத்தின் பல்வேறு அரசுத்துறைகளின் பணிகளும் திருப்தியளிக்கக்கூடியதாக உள்ளதென அப்போது அவர் தெரிவித்தார்.


இராமேசுவரம் நகருக்குத் தேவையான அதிக அளவு குடிநீர் கிடைக்க விரைந்து ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

வளர்ச்சிப்பணிகளுக்கென கடந்த ஆண்டில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டினை விட இந்த ஆண்டு 10 சதவிகிதம் அதிக அளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஏப்ரல் திங்கள் துவக்கத்திலேயே பணிகள் விரைந்து செயல்படத் துவங்கிவிட்டன என்பதையும் ஆலோசகர் அவர்கள் குறிப்பிட்டார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில், அரசுத்துறைகளின் பணிகள் நிறைவளிக்கக்கூடியதாயிருக்கிறதெனப் பாராட்டுக்களைத் தெரிவித்த அவர், இராமேசுவரம் வளர்ச்சிக்கான திட்டங்களைப் பற்றித் தீவிரமாக ஆராய்ந்து அரசுக்கு வழங்கும்படி மாவட்ட ஆட்சித்தலைவர், நகரமைப்பு இயக்குநர், இந்து அறநிலையத்துறைச் செயலர், சுற்றுலா துறை அலுவலர் ஆகியோருக்குக் கருத்துத் தெரிவித்தார்.

# மின் மோட்டார் சோதனைக் கருவி






தமிழ்நாட்டில் மின்நுகர்வோரில் விவசாய மற்றும் சிறுதொழில் நடத்துபவர்கள் மின் மோட்டார்களை உபயோகப்படுத்துகின்றனர். பல்வேறு காரணங்களால் இவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்ட திறனுக்கும் அதிகமாகச் சில சமயங்களில் மோட்டாரினை உபயோகப்படுத்த வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இதற்காக இவர்கள் மோட்டாரின் குதிரைச் சக்தியை அதிகப்படுத்த மோட்டாரையே மாற்றி அதிலுள்ள பெயர்ப் பலகையை வேறொன்றால் பதிலமர்த்தீடு செய்தல் போன்ற செயல்களில் ஈடுபடுவதாகவும் இதனால் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு மின் வினியோகத்தில் இழப்புகள் ஏற்படுவதாகவும் அரசால் உணரப்பட்டது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின்திருட்டுத்தடுப்புப் படையினால் கண்டுபிடிக்கப்பட்ட, இதுபோன்ற அனுமதி பெறாமல் மின் இணைப்பில் உபயோகப்படுத்தப்படும் மோட்டார்களை, சோதனை செய்து சரியான திறனைக் கணக்கிட்டுச்சான்றிதழ் வழங்கி பயனீட்டாளர்களுக்கும் மின் வாரியத்திற்கும் பயன்படும் வகையில் சோதனை வசதிகளை ஏற்படுத்துவது அவசியம் என அரசால் உணரப்பட்டது.

எனவே, மோட்டாரின் திறன் (குதிரை சக்தி) சம்பந்தமாக மின் வாரியத்திற்கும் பயனீட்டார்களுக்கும் இடையே ஏற்படும் பிரச்சினைகளுக்கு முடிவு காணும் பொருட்டு 'எடி கரண்ட் டைனமோமீட்டர்' (Eddy Current Dynamometer) எனப்படும் நவீன சாதனத்தினைத் தமிழ்நாடு மின் ஆய்வுத் துறையை சார்ந்த அரசு மின் தர நிர்ணய ஆய்வுக்கூடத்தில் அமைத்து மோட்டாரின் சரியான குதிரைச் சக்தி அறியும் வசதிகளைத் தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சாதனம் பொதுப் பணித்துறை ஆணையர் மற்றும் செயலாளர் திரு.வி.சங்கர சுப்பையன், இ.ஆ.ப.



அவர்களால் (14.4.88) துவக்கிவைக்கப்பட்டது.

இதனால் மின் பயனீட்டாளரால் உபயோகப்படுத்தப்படுகின்ற 30 எச்.பி. வரையிலுள்ள மோட்டாரின் குதிரைச் சக்தியைத் துல்லியமாகக் கணக்கிடுவதன் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்தினரால் கொண்டுவரப்படும் குதிரைச்சக்தி சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இயலுமெனவும் நேர்மையான பயனீட்டாளர்கள் பாதுகாக்கப்படுவர் எனவும் மின் ஆய்வுத் துறையின் தலைவர் திரு.இல.அ.சீனிவாசன் தெரிவிக்கிறார்.

இந்த சோதனை வசதிகள் மோட்டார் தயாரிப்பாளருக்கும் பெருமளவில் உதவும் எனவும். மாதிரி சோதனைகளில் (Type test) தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே இந்த ஆய்வுக்கூடத்தில் மின் விநியோகத்தினரின் சோதனைக் கருவிகளைப் பரிசோதனை செய்வதன் மூலம் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் மின் கருவிகள் பெறப்படுவதாகவும், நவீன சோதனை வசதிகளை ஏற்படுத்தத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, புதிதாக அமைக்கப்படவிருக்கும் கட்டடத்தில் கொண்டுவரப்பட செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பவிருப்பதாகவும் இத்துறையின் தலைமை மின் ஆய்வாளர் திரு. இல.அ.சீனிவாசன் தெரிவித்துள்ளார்.



# நலவாழ்வு குறித்து செய்தித் திரைப்படங்கள்



சென்னை மாநகராட்சியும் - தமிழ்நாடு திரைப்படப்பிரிவும் இணைந்து நலவாழ்வு தொடர்பாக உருவாக்கிய 'நலவாழ்வு' -'சிந்தித்துப்பார்' என்ற இரண்டு செய்தி விளக்கத் துண்டுப்படங்களின் யுமேட்டிக் வீடியோ டேப்புகளை சென்னைத் தொலைக்காட்சிக்கு வழங்கும் நிகழ்ச்சி, கலைவாணர் அரங்கத்தில் 10.5.'88 அன்று மாலையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் இரு படங்களும் திரையிடப்பட்டன.

வருகை புரிந்திருந்தோரை சென்னை மாநகராட்சியின் நிதி நிலை ஆலோசகர் மற்றும் ஆணையர் திரு ஆர். செல்லமுத்து, இ.ஆ.ப வரவேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''சென்னை மாநகராட்சி தனது 300வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, சென்னை நகரில் பற்பல தொண்டுகளைச் செய்துவருகிறது. பொதுமக்களின் நலனுக்காக ஆற்றிவரும் பணிகளில் இந்தத் திரைப்படத் தயாரிப்பும் குறிப்பிடத்தக்கதாகும். இந்தப் படங்களின் வாயிலாக, சுகாதாரமாக இருப்பது எப்படி என்பதைப் பொதுமக்களுக்கு எடுத்துக் கூற முடிகிறது.

''எந்த ஒரு திட்டத்திற்கும் பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் தேவைப்படுகிறது. அவர்களது ஒத்துழைப்பு இல்லை என்றால் எந்தத்திட்டமும் வெற்றிபெற முடியாது.''

யுமேட்டிக் வீடியோ டேப்புகளைத் தொலைக்காட்சி இயக்குநர் திருமதி அகிலா சிவராமனிடம் வழங்கிய சிறப்பு ஆணையர் மற்றும் செய்தி சுற்றுலாத்துறைச் செயலர் திரு செ.ராம்தாஸ், இ.ஆ.ப., தமது உரையில் தெரிவித்தார்:

''தொலைக்காட்சி என்பது பொதுமக்களைக் கவர்கின்ற ஒரு கருவியாக விளங்குகிறது. கிராமங்களைக் கூட அண்மைக் காலத்தில் தொலைக்காட்சி சென்றடைகின்றது.

''இங்கே திரையிடப்பட்ட இந்தப் படங்கள் தொலைக்காட்சியிலும், ஒளிபரப்பப்பட உள்ளன. நாம் மக்களுக்கு என்ன சொல்ல நினைக்கிறோமோ அதனை தொலைக்காட்சியின் மூலமாக மிகவும் உன்னதமான முறையிலே தெரிவிக்க இயலும்.

''இந்தப் படங்கள், மாநிலம் முழுதும் திரையிடப்பட உள்ளன. தமிழகத்தில் 2,000 திரை அரங்குகள் உள்ளன. இவற்றின் மூலமாக நலவாழ்வு தொடர்பாகவும் மற்றும் பல துறைகளைப்பற்றியும் பல்வேறு கருத்துக்களை நாம் நல்ல முறையில் பிரச்சாரம் செய்ய இயலும்''.

யுமேட்டிக் டேப்புகளைப் பெற்றுக்கொண்ட தொலைக்காட்சி இயக்குநர் திருமதி அகிலா சிவராமன் தமது உரையில் கூறினார்:

''சென்னை மாநகராட்சி ஏற்கனவே ஒரு படத்தைத் தயாரித்துள்ளது. இப்போது 2-வது முறையாக இரு படங்களைத் தயாரித்துத் தொலைக்காட்சிக்கு அளித்துள்ளது.

''மக்களைச் சென்றடையும் ஆற்றல் வாய்ந்த சாதனம் தொலைக்காட்சியைவிட வேறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. தொலைக்காட்சியின் மூலமாக நாம் பல செய்திகளை எடுத்துச் சொல்லி வருகிறோம். இங்கு திரையிடப்பட்ட இந்த 2 படங்களும் எங்களது தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும்.

''இந்தியாவில் உள்ள மிகப்பெரிய 4 நகரங்களில் சென்னை நகரமும் ஒன்றாகும். இதனை எழில்மிகு நகரமாக்குவது பொதுமக்களிடத்தில் தான் இருக்கிறது.

''நமது நகரத்திற்குத் தனிப்பெருமையையும் - சிறப்பையும் நாம் தான் தேடித்தரவேண்டும். ஒவ்

வொருவரும் ஒவ்வொரு விதத்தில் முனைப்புக் காட்ட வேண்டும்.

''தமிழக ஆளுநர் அவர்கள் சென்னை நகரைச் சுத்தப்படுத்துவதற்கு-மேன்மைப்படுத்துவதற்குப் பல்வேறு வகையிலும் முயன்று வருகிறார். அவரது கரத்தை வலிமைப் படுத்துவது நமது கடமை.

''இந்தப் படங்கள் எங்கள் தொலைக்காட்சிக்கு ஏற்ற வகையில் உள்ளன. எங்களது நோக்கம் தகவல் அறிவிப்பு ஆகும்.

"செய்திகளைச் சொல்லல், பொழுதுபோக்கு, கலை நயம் உள்ள நிகழ்ச்சிகளை அமைத்தல் ஆகியவை எங்களது குறிக்கோள்.

இந்தக் குறிக்கோள்கள் இந்தப் படங்களில் இருக்கின்றன. இவற்றின் கருத்துக்கள் பாராட்டத்தக்கவை-வரவேற்கத் தக்கவை-அனைவரிடமும் எடுத்துச் சொல்லத் தக்கவை.

"தொலைக்காட்சியின் வாயிலாக, அது இடம்பெற்றுள்ள குடும்பத்தினர் மட்டுமல்ல, அவர்களைச் சுற்றி வாழ்கின்ற மக்களும் பயன் பெறுகிறார்கள்.

''ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்லப்படுவதுண்டு நீர்நிலைக்குக் குதிரையை அழைத்துச் செல்லலாமே தவிர, நீரை அருந்தச் செய்ய முடியாது என்று! அதைப் போல மக்களுக்கு நாம் எடுத்துச் சொல்லலாமே தவிர, பின்பற்றுவது அவர்களிடம்தானிருக்கிறது.

''குடிமைப் பயிற்சிகுறித்து உரிய நபர்களுக்கு நாம் அடிக்கடி சொல்லிக்கொண்டுதான் வருகிறோம். சென்னை மாநகரம் அன்றும் இன்றும் என்ற தலைப்பில் தொலைக்காட்சியில் ஒரு தொடர் நிகழ்ச்சியை நாங்கள் ஒளிபரப்பி வருகிறோம்.

''மக்களுக்கு உணர்த்துவதற்குச் செம்மையான செய்திப்படம்-கருத்துப்படம் தேவை.

"இந்தப்படத்தில் காட்சி தந்த 'எல்லாம் தெரிந்த ஏகாம்பரம்' போன்ற ஆட்கள் சமூகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களை இனம் கண்டு, காவல் துறையினருக்கும் மற்றவர்களுக்கும் பொதுமக்கள் தகவல் கொடுக்க வேண்டும். அனைவரின் முயற்சியினால் மாநகராட்சியின் சேவை வெற்றிபெறும்-மாநிலப் பெருமை உயரும். இதற்காக நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம்''.

நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்ற சென்னை மாநகராட்சி தனி அதிகாரி திரு எல்.எம்.மெனெசெஸ், இ.ஆ.ப., தெரிவித்தார்.

''மக்கள் நல்வாழ்வு குறித்துச் சில செய்திகள் மக்களுக்கு நல்ல முறையில் எட்ட வேண்டும் என்ற முறையில் சென்னை மாநகராட்சி சிறு துண்டுத் திரைப்படங்களைத் தயாரித்துள்ளது. உரிய முயற்சிகள் தக்கவகையிலே இந்தத் துண்டுப் படங்களில் கையாளப்பட்டிருக்கின்றன.

''படிக்காத மக்களுக்கு மட்டுமல்ல-படிப்பறிவு உள்ள மக்களுக்கும் இந்தப்படம் தேவையானது. ஏழை, எளியவர்களுக்கு மட்டுமல்ல பணக்காரர்களுக்கும் இந்தப்படம் தேவையானது.

''பொதுமக்கள் சுகாதாரமான முறையிலே வாழ்க்கை நடத்துவதற்கு மாநகராட்சி தேவையான வசதிகளைச் செய்து வருகிறது. பொதுக் கழிப்பறைகள் நல்ல முறையில்-தண்ணீர் வசதியுடன் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பொதுமக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்தக் கருத்துக்கள், இந்தத் துண்டுத் திரைப்படங்களின் வாயிலாக, பொதுமக்களை எட்டுவது உறுதி.''

செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் திரு நா.கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப தமது நன்றியுரையில் தெரிவித்ததாவது:

''ஓர் ஆண்டுக்கு 10 சிறப்புத் திரைப்படங்களையும் மாதத்திற்கு 2 செய்திப்படங்களையும் தமிழ்நாடு செய்தித்துறை தயாரித்து வருகிறது.

''தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுவதற்குச் சில விதிகள் உள்ளன என்று சொல்லப்படுகிறது. நிச்சயமாக அந்த விதிமுறைகளைப் பின்பற்றி, தொலைக்காட்சிக்கு ஏற்ற வகையில் செய்தித்துறை படங்களைத் தயாரிக்கும்.

''தமிழ்நாட்டில் 2000 திரை அரங்குகள் உள்ளன. அவற்றில் இந்தத் துண்டுப் படங்கள் திரையிடப்படும்.

''தொலைக்காட்சி மூலம் காட்டப்படும் துண்டுத் திரைப்படங்களின் மூலம் பொதுமக்களுக்கு விழிப்பு உணர்வை ஏற்படுத்த முடியும். பொதுச்சொத்தை நாம் பாதுகாப்பதற்கு அரசு எந்த அளவு பணியாற்ற வேண்டும் என்பதை இந்தத் திரைப்படங்களின் மூலமாக நாம் உணரலாம்.

—நமது செய்தியாளர்

## நலவாழ்வு

பொதுக்கழிப்பறைகள் தக்கவிதத்தில் பயன் படுத்தப்பட வேண்டும் என்பதையும் அவை எவ்வாறு பாதுகாக்கப்படவேண்டும் என்பதையும் குப்பைகூளங்கள், குப்பைத்தொட்டிகளில் போடப் படவேண்டும் அல்லது தீயிட்டுக் கொளுத்தப்பட வேண்டும் என்பதையும் இப்படம் விளக்குகிறது.

158 மீட்டர் நீளமுள்ள இந்தப்படம் சுமார் 7 நிமிடம் வுரை ஓடுகிறது. ஸ்ரீலேகா, இராஜேஸ்வரி, தாம்பரம் ஆண்டாள் ஆகியோர் நடித்துள்ள இந்தப் படத்தை திரு ஜி.கே. சாமி தக்கவகையிலே இயக்கியிருக்கிறார். சொல்ல வந்த கருத்தை, காட்சிகளின் மூலம் தெளிவாக்கியிருக்கிறார்.


## சிந்தித்துப்பார்

சென்னை மாநகராட்சி, பொது மக்களின் நன்மைக்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல் படுத்தி வருகிறது. அதன்பயன்கள் பொதுமக்களுக்கு முழுதும் கிடைக்காத வகையில், சில சமூக விரோதிகள், அவற்றைத் தங்களின் சுயநலத்திற்கும் லாப நோக்கத்திற்கும் பயன்படுத்திப் பாழ் படுத்துகின்றனர்.

'பொதுமக்கள் மாநகராட்சிச் சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டும்; அவற்றிற்குக் கெடுதலை உண்டாக்கும் சமூக விரோதிகளைக் காவல் துறையினரிடம் ஒப்படைக்கவேண்டும்' என்ற கருத்தை இப்படம் வலியுறுத்துகிறது.

154 மீட்டர் நீளமுள்ள இந்தத் துண்டுப்படம் சுமார் 6 நிமிடம் வரை ஓடுகிறது. லூஸ்மோகன், ஒருவிரல் கிருஷ்ணாராவ், தனலட்சுமி முதலியோர் நடித்துள்ள இந்தப்படத்தை திரு எம். கே. இராமு, பார்ப்பவர் மனத்தில் பதியும் விதத்தில் இயக்கியிருக்கிறார்.






# குற்றாலக் காட்சிகள்!

எச். என். மீரான்

எண்ண எண்ண மனமினிக்கும்
இதமான இயற்கை எழில்!
வண்ண வண்ணப் பூக்களிலே
பண்ணிசைக்கும் வண்டினங்கள்!
உண்ண உண்ணத் தெவிட்டாத
உயர்வான பலாக்கனிகள்!

தின்னத் தின்னத் தீஞ்சுவையைச்
சிந்துகின்ற மாங்கனிகள்!
சின்னச் சின்ன மொட்டுகளால்
சிந்தை தொடும் முல்லை இனம்!
பின்னிப் பின்னி மரங்களையே
பிணைந்து நிற்கும் மலர்க்கொடிகள்!

அள்ளி அள்ளி மணம் கொடுக்கும்
அழகு மல்லிப் பூம் புதர்கள்!
கொள்ளை கொள்ளைப் பயன் ஈனும்
குளுமை மிகு தென்னை வனம்!
துள்ளித் துள்ளி மரமரமாய்த்
தூளியாடும் வானரங்கள்!
வெள்ளை வெள்ளை நிறத்துடனே
வெருண்டோடும் முயற் கூட்டம்!

நெட்டை நெட்டை உருவத்திலே
நிமிர்ந்து நிற்கும் வான்மரங்கள்!
வட்ட வட்ட வடிவமைப்பில்
வான் மரத்தில் தேனடைகள்!
பட்டுப் பட்டாய் விளங்குகின்ற
பசுமை மிகு வயல் வெளிகள்
திட்டுத் திட்டாய் வானின் மீது
திரிந்து பாடும் புள்ளினங்கள்!

கொட்டிக் கொட்டிச் 'சீசன்' காலம்
கொடை வழங்கும் அருவிப்பெருக்கு
கூடிக்கூடி அருவி நீரில்
குளித்து நிற்கும் மாந்தரினம்
இன்னும் இதுபோல்
எத்தனை எத்தனையோ
சொல்லச் சொல்ல அலுக்காத
குற்றாலக் காட்சிகளாம்!

# தருமபுரி மாவட்டத்தில் ஆளுநரின் ஆலோசகர்



மேதகு தமிழக ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் எஸ்.எஸ். சித்து அவர்கள் தர்மபுரி மாவட்டத்தில் ஒரு நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வளர்ச்சித் திட்டப்பணிகளைப் பார்வையிட்டார்(3.5.88). தின்னூரில் உள்ள அரசு பட்டு வளர்ச்சிப் பண்ணையை அவர் பார்வையிட்டார். பின்னர், சூளகிரி ஊராட்சி ஒன்றியம் சென்னைபுரம் கிராமத்தில் ரூ. 1.80 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 20 ஆதிதிராவிடர் குடியிருப்புகளைத் திறந்து வைத்தார். அக்குடியிருப்பில் ரூ. 65 ஆயிரம் செலவில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள சமுதாயக்கூடத்தையும் ஆலோசகர் அவர்கள் திறந்து வைத்தார்.

சூளகிரியில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.80 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள 10 கடைகள் பர்கூர் ஊராட்சி ஒன்றியம் சின்னஓர்ப்பம் கிராமத்தில் ரூ.2.14 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் ரூபாய் செலவில் காரிமங்களத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள உணவுக் கிடங்கு ஆகியவைகளையும் திறந்து வைத்தார்.

அப்போது அவர் 500க்கும் மேற்பட்ட மனுக்களைப் பெற்றுக் கொண்டார். பின்னர் அனைத்துத் துறை அலுவலர்களின் ஆலோசனைக் கூட்டத்தை நடத்திய ஆலோசகர் அவர்கள், செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கையில் "ரூபாய் 166 கோடி செலவில் ஒகேனக்கல் கூட்டு குடிநீர்த்திட்டப் பணிக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுவிட்டன. இதன் முதற்கட்டப் பணிகள் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும். ரூ.12 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் கெலவரப்பள்ளி அணைக்கட்டுத் திட்டப்பணிகளில் ரூ. 2 கோடி செலவிலான பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள பணிகள் 1990 மார்ச் மாதத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும். தர்மபுரி மாவட்டத்திற்கு ஒரு பெண்கள் கல்லூரியும், ஒரு தொழில் நுட்பக்கல்லூரியும், ஒரு வேளாண்மைக் கல்லூரியும் வேண்டி என்னிடம் இங்கே சில மனுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பின்தங்கிய இந்த மாவட்டத்திற்கு இவையனைத்தும் தேவைதான்; எனவே இதன் மீது தனிக்கவனம் செலுத்தி பரிசீலிக்கப்படும்" என்று கூறினார்.

**மு. பிச்சையா**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**

## 17 வயதில் டாக்டர்

பதினோராவது வயதிலேயே மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படித்துக் கொண்டிருக்கிறாள் ஓர் இந்தியச் சிறுமி. அவளது பெயர் கிறிஸ்டின் பானர்ஜி.

கிறிஸ்டின் பானர்ஜி தனது பெற்றோர்களுடன் அமெரிக்காவில், டெக்ஸஸ் மாநிலத்திலுள்ள பேடவுன் நகரில் வசிக்கிறாள். பிறவி மேதையாகத் திகழும் கிறிஸ்டின், இளமையிலேயே படிப்பில் மிகுந்த திறமை காட்டினாள். எனவே, திறமை மிக்க குழந்தைகளுக்கான சிறப்புக் கல்வித் திட்டத்தின் கீழ், இவள் பத்து வயதுக்குள்ளேயே உயர்நிலைக் கல்வியை முடித்து விட்டாள். கல்லூரி மட்டப் பாடங்கள் சிலவற்றிலும்தேறினாள். இப்போது மருத்துவக கல்லூரியிலேயே இடம் பிடித்துவிட்டாள். பள்ளியில் அவள் பெற்றிருந்த உயர் மதிப்பெண்களும், மருத்துவக் கல்லூரி நுழைவுத் தேர்வில் அவள் எடுத்த உயர் மதிப்பெண்களும், அவளது வயது குறைவாக இருந்த போதிலும், மருத்துவக் கல்லூரியில் இடம்பெற்றுத் தர உதவின.

இந்தச் சிறுமி எப்போது டாக்டராவாள்? தனது 17-வது வயதில்!

— அமெரிக்கத் தகவல் நிலையம்



# வீட்டுவசதி வாரியப் பணிகள்

## ஆளுநர் ஆலோசகர் கலந்துரை



மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு ஏ. பத்மநாபன், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் குடிசைமாற்று வாரிய அலுவலர்களுடன் (28.4.88) ஆலோசனை நடத்தினார். அனைத்துப் பிரிவு மக்களுக்கும் வீட்டு வசதி கிடைக்கும் வகையில் பொறுப்புடனும் கண்காணிப்புடனும், செயல்படவும் நல்ல முடிவுகள் கிடைக்குமாறும், துரித நடவடிக்கை எடுக்குமாறும் ஆலோசகர் அவர்கள் அப்போது அறிவுறுத்தினார்.

இவ்வாண்டு கட்டி முடிக்கப்பட வேண்டியவைகள், இந்த ஆண்டு 1988 இறுதிக்குள் கட்டி முடிக்கப் பெற்றும் மேலும் குடிபுகத் தயாராக இருக்கும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் (Flats) ஏப்ரல் '88 இறுதிக்குள் ஒதுக்கப்பட வேண்டும் என்றும், குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் முடிக்கப்பெற வேண்டிய திட்டங்கள் போன்றவை சிறந்த தரத்துடன் கட்டப்பட்டவையாகவும், வீடுகள் குறித்த காலத்திற்குள் ஒதுக்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்த அவர், வீட்டு வசதி வாரியக்கணக்குகள் சரிவர முறைப்படுத்தப்பட, தனி அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

வீட்டு வசதி வாரியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து நந்தனத்தில் கடைகள் கட்டுதல், டெய்லர்ஸ் சாலையில் குடியிருப்புகள் கட்டுதல் போன்ற பெரும் கட்டுமானப் பணிகளை முடிக்குமாறும் ஆணையிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கான வாடகைக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் உள்ள குடியிருப்புகளைப் பராமரிப்பதற்காக ஒதுக்கீடுதாரர்களின் கோரிக்கைக்கு ஏற்ப கூடுதலாகத் தொகை ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் நிர்வாகத்தை மேலும் செம்மைப்படுத்த தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் விதிகள் "1961-ஐ" தக்கவாறு மாற்றவும் அப்போது விவாதிக்கப்பட்டு உத்திரவிடப்பட்டுள்ளது. முறைகேடாக சில சமயங்களில் நிலங்களைக் கையகப்படுத்த வீட்டு வசதி வாரியம் எடுத்துள்ள முயற்சிகள் குறித்தும் விரிவான விவாதம் நடைபெற்றது. வீட்டு வசதி வாரியத் [illegible]ருடன் ஆலோசித்து இதுபோன்ற முறையான திட்டத்தின் கீழ் வாங்கு[illegible]தும், தகுந்த நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெறாததுமான நிலம் கையகப்படுத்தும் திட்டங்கள் முக்கியமான நிதி ஒதுக்கீடு பெறப்பட்ட திட்டங்களிலிருந்தும் தனித்துவிடப்படும் என்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறத்துறை ஆணையர் மற்றும் செயலர் அவர்கள் ஆலோசகர் அவர்களுக்கு உறுதியளித்தார்.


தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கையகப்படுத்தப்பட்ட நிலத்தைக் காலியாக வைக்காமல் மூன்று ஆண்டுகளுக்குள் பயன்படுத்தும் வகையில் ஒரு உடன்பாடு செய்து கொள்ளப்பட்டுள்ளது. மேலும் தற்போதைய முறைப்படி வீட்டு வசதி வாரியத்திற்குக் குத்தகை அடிப்படையில் விடப்பட்டுள்ள நிலங்கள் திரும்பப் பெறப்பட்டு, அரசு நிலங்களை நீண்டகாலக் குத்தகைக்குப் பதில் வீட்டு வசதி வாரியத்திற்கே மாற்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் நல்ல முடிவுகள் கிடைக்க மனுக்கள் கொண்டுவரும் பொது மக்கள் குறைகள் - மற்றும் வேண்டு கோள்களைக் கேட்க, திரு. மு[illegible] மொய்தீன் துணைக் கணக்கு [illegible] வளர், தமிழ்நாடு வீட்டு வசதி [illegible]யம், சென்னை-35 அவர்களுக்கு (தொலைபேசி எண் 455005). பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது.




# பல் மருத்துவத்துறைக்கு ஒரு வழிகாட்டி

**சென்னை நகரில் பல் மருத்துவக் கல்லூரி உருவாகிய வரலாறும் தமிழகத்தில் பல் மருத்துவம் வளர்ச்சியுற்ற வரலாறும், இந்த வரலாறுகளுக்கு வழிவகுத்துத் தந்த மேதையின் வரலாறும் வாசகர்களுக்குச் சுவைதரும் செய்திகள்.**



பல்மருத்துவம், தொடக்கக் காலத்தில்நோய்தீர்க்கும்பிரச்சினை இல்லாத ஒன்றாக-வெறும் பல் கட்டுதல் என்ற அளவிலேயே இருந்து வந்தது. அதுவும் ஒரு சிலரின் குடும்பத் தொழிலாக நடந்து வந்தது. இன்றைய அறிவியல் முன்னேற்றத்தின் விளைவால், பல் மருத்துவம் நவீன மயமாக்கப் பெற்றதுடன் உயர் அறிவியல் நுணுக்கங்களுடன் வளர்ச்சி பெற்றுள்ளது.

மிக அண்மைக்காலத்தில் ஏற்பட்ட தொழில் நுணுக்கங்களையும் இந்தத்துறை பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. இவ்வகையில் பல் மருத்துவம் ஒருதொழில் என்ற அளவில் சிறப்புப்பெற்று விளங்குவதுடன், சமூகத்தொண்டாற்றியும் வருகிறது.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் பல்மருத்துவம் மிக மிகப் பின் தங்கிய நிலையில்தான் இருந்தது. மிகச் சிலர்தான் பரம்பரை பரம்பரையாகப் பல்மருத்துவத்தைச் செய்து வந்தனர். அவர்களிலும் ஒரு சிலர்தான் முறையாகப் பல்மருத்துவக் கல்வியைக் கற்றுத் தங்களைத் தகுதியுள்ளவர்களாக்கிக் கொண்டனர்.

1948ஆம் ஆண்டில் இந்திய நாடாளுமன்றத்தில் பல்மருத்துவச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டம், பல்மருத்துவத் தொழிலில் காணப்பட்ட சீரற்ற நிலைமைகளை நெறிப்படுத்தியது. பல்மருத்துவச் சட்டம், காலப்போக்கில் பல மாறுதல்கள் பெற்றது.

பல்மருத்துவத் தொழிலில் ஈடுபட்டிருந்த சிலரது சிந்தனையாலும் தொண்டின் காரணமாகவும், பல் மருத்துவத்துறை நவீனமயமாயிற்று.

பல் மருத்துவத்துறையின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட மேதைகளில் டாக்டர் சி.எஸ்.ராமன் குறிப்பிடத்தக்கவர் ஆவார். இன்றும் நம்மிடையே வாழ்ந்துவரும் இந்தப் பெருமகனார்-பல்மருத்துவத் துறையின் ஒளிமிக்க எதிர்காலத்தைத் தனது தீர்க்க தரிசனத்தால் கணித்தவர். பல்வேறு சூழ்நிலைகள் -நம்பிக்கையற்ற தன்மை நிலவி வந்தபோது, அவற்றைக் களைந்து பல்மருத்துவத்திற்குத் தனிச்சிறப்பு தமிழகத்தில் உண்டு என்பதை மெய்ப்பித்த மேதை அவர். **தமிழகப் பல் மருத்துவத்தின் தந்தை** என்றுகூட அவரை அழைக்கலாம்.

1904 பிப்ரவரி 12ஆம் நாளன்று பிறந்த சி.எஸ்.ராமன் 1930ஆம் வருடத்தில் மருத்துவத தொழில் புரிவதற்கு அனுமதி பெற்றார். பல் மருத்துவத்தையே முதன்மையாகச் செய்து வந்தார்.

1948இல் பல் மருத்துவச் சட்டம் நிறைவேற்றப்பட்டதும் சென்னையில் மருத்துவக்குழு அமைக்கப்பட்டது. இந்த அமைப்பின் முதல் பதிவாளராகவும் துணைத்தலைவராகவும் டாக்டர் சி.எஸ்.ராமன் அவர்களை அரசு நியமித்தது.

1951ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட சென்னை பல் மருத்துவக் குழுவிலும்டாக்டர்சி.எஸ். ராமனே அரசினால் தொடர்ந்து பதிவாளராக நியமிக்கப் பெற்றார்.

1956 ஜூன் 18 அன்று, பல் மருத்துவ் சங்கத் தலைவராக அவர் ஏகமனதாகத்தேர்ந்தெடுக்கப் பெற்றார். ஏறக்குறைய 28 ஆண்டுகள் அந்தப் பதவியை வகித்த ராமன், பல்மருத்துவத் தொழிலில் உன்னதமான நிலையை உருவாக்கினார்.


அகில இந்திய பல் மருத்துவக் கழகத்தின் சென்னைக் கிளை, டாக்டர் சி.எஸ். ராமன் அவர்களைக் கௌரவ செயலாளராகக் கொண்டு 1946ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.

சென்னையில் பல்மருத்துவக் கல்லூரி தொடங்கப்படவேண்டும் என்றும், மாவட்டம் மற்றும் வட்டத் தலைமையகங்களில் உள்ள மருத்துவமனைகளில் பல் மருத்துவப் பிரிவு நிறுவப்படவேண்டும் என்றும் டாக்டர் ராமன், தமிழக அரசின் சுகாதாரத்துறை அலுவலரிடம் வலியுறுத்தி வந்தார். பி.டி.எஸ்.பட்டப் படிப்பு தொடங்கப்படவேண்டிய தன் இன்றியமையாமை குறித்துப் பத்திரிகைகள் வாயிலாகவும் வலியுறுத்தினார். அரசின் மருத்துவத் துறை உயர் அலுவலர்களிடம் தொடர்ந்து முறையிட்டு வந்தார்.

அவரது தொடர்ந்த வேண்டுகோள்களின் காரணமாக, மருத்துவச் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்வது பற்றி ஆய்வு நடத்தி அறிக்கை தருவதற்காக ஒரு நிபுணர் குழுவை 22.8.'47 அன்று, அரசு நியமித்தது. டாக்டர்கள் பலர் கொண்ட அந்தக்குழுவில், டாக்டர் ராமனும் ஓர் உறுப்பினராக இடம் பெற்றார்.

டாக்டர் சி.எஸ். ராமனின் தொண்டு வெற்றி பெற்றது. சென்னை மருத்துவக் கல்லூரியில் 15 மாணவர்கள் கொண்ட பல்மருத்துவப்பிரிவு ஒன்று 19.8.1953இல் உருவாகியது. இதற்காக அரசு ரூ $3\frac{1}{2}$ இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தது.

மாணவர்கள் பி.டி.எஸ். பட்டப் படிப்பில் சேர்ந்தனர்; பல் அறுவை மருத்துவத்தில் பட்டம் பெற்றனர். பின்னர் 1966இல், பட்ட மேற் படிப்பும் தொடங்கப்பட்டது.





**டாக்டர் சி.எஸ், ராமன்**



**1979 முதல், தனித்தியங்கும் பல் மருத்துவக் கல்லூரி அமைந்ததற்குக்** காரணமானவர் டாக்டர் சி.எஸ். ராமன் என்பது குறிப்பிடத்தக்கது. பல் மருத்துவக் கல்வியின் இன்றைய சிறப்பம்சங்களுக்கெல்லாம் டாக்டர் சி.எஸ். ராமன்தான் அடித்தளம் வகுத்தவர்.

பல் மருத்துவத்துறையில் பட்டம் பெற்ற மாணவர்களில் சிலர் ,பட்ட மேற்படிப்புக்காக, வளர்ச்சி பெற்ற நாடுகளுக்குச் செல்வதற்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதற்குக் காரணமானவரும் டாக்டர் சி.எஸ்.ராமன்தான். இதன் விளைவாக ஆசிரியர்களும் அனுபவம் பெறுவதற்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டனர்.

27வது இந்தியப் பல்மருத்துவ மாநாடு ஆமதாபாத்தில் 1971இல் நடந்தபோது மிக உயரிய பதவியான இந்திய பல்மருத்துவ சங்கத் தலைவர் பொறுப்பை டாக்டர் சி.எஸ் ராமன் ஏற்றார். 1972இல் உலகப் பல்மருத்துவக் கல்லூரியின் இந்தியப் பிரிவுக்கான தலைவர் பதவியில் நியமிக்கப் பெற்றார்.

கல்லூரி, மற்றும் பள்ளி மாணவர்களின் பல் சீர்கேடு மற்றும் பல் சம்பந்தமான நோய்களை விரைவில் கண்டறிந்து, குணப்படுத்துவதற்காகக் கட்டாய சோதனைகள் செய்வதற்கு அரசை ஒப்புக்கொள்ள வைத்தது டாக்டர் சி.எஸ் ராமனின் அருந்தொண்டுக்குச் சான்று பகர்வதாகும்.

பல்நல விளம்பர அமைப்பு ஒன்றை உருவாக்கி, பத்திரிகை, வானொலி ஆகியவற்றின் வாயிலாகப் பிரச்சாரம் செய்ய வைத்த பெருமையும் அவருக்கு உண்டு.

மாவட்ட, வட்டத் தலைமை மருத்துவமனைகளில், பல் மருத்துவப் பிரிவு இவரது முயற்சியால் தான் அமைக்கப்பட்டது.

இந்தியப் பல் மருத்துவக் குழு அமைப்பு வலுவுறும் வண்ணம் அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை உயர்வதற்கும் அவர் பாடுபட்டார்.

அவரிடம் குடிகொண்டிருந்த மாசற்ற தொண்டு மனப்பான்மை, கடமையின் காரணமாக அவர் செய்த தியாகம், உடனிருப்போரை சகோதர பாசத்துடன் அரவணைத்துச் செல்லும் பண்பு ஆகியவை பிறர் பின்பற்றத் தகுந்தவையாக விளங்குகின்றன.

அவரது தொண்டு இல்லாவிட்டால் இன்றைய இளைய தலைமுறையினர் பல் அறுவைச் சிகிச்சை நிபுணர்களாகவோ, பேராற்றல் படைத்த நிபுணர்களாகவோ உருவாகியிருக்க முடியாது. மருத்துவ உலகத்தின் மாபெரும் வெற்றியாளராகத் திகழ்ந்துவரும் டாக்டர் சி.எஸ்.ராமன், தமது 85வது வயதில் அடி எடுத்து வைத்திருக்கிறார். பல்மருத்துவத்துறைக்குக் கிடைத்த இந்தவழிகாட்டியை மருத்துவ உலகம் நித்தமும் வாழ்த்தி வணங்கிக் கொண்டிருக்கிறது.

**—எஸ். எஸ். சுந்தரம்**



# திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட நற்பணிகள்

**எம். அண்ணாமலை,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.**

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் (22-4-88) சங்கரன் கோவில், வாசுதேவ நல்லூர் பகுதிகளில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடந்து முடிந்த பணிகள் குறித்தும், நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற பணிகள் குறித்தும் நிலச்சீர்திருத்த ஆணையர் திரு. பி.வி. வெங்கடகிருஷ்ணன் இ.ஆ.ப. அவர்கள் நேரில் வந்து பார்வையிட்டார்.

கோவில்பட்டியிலிருந்து நடுவப்பட்டி கிராமத்திற்குச் சென்று தொடக்கக் கூட்டுறவு வங்கி நியாய விலைக் கடையைப் பார்வையிட்டார். அங்கு பெயர்ப் பலகைகள் மற்றும் எடைக் கற்கள் சரியாக உள்ளனவா எனவும்அவர் சோதனையிட்டார்.

பின்னர் மைப்பாறை கிராமத்தில் ரூ. 32 ஆயிரம் செலவில் கட்டப்படவுள்ள சமூக நலக் கூடத்திற்கு அடிக்கல் நாட்டினார். அந்நிகழ்ச்சியில் 38 பேருக்கு ஒரு லட்சத்து 73ஆயிரத்து 500 ரூபாய் அளவில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கடன் வழங்கப்பட்டது.

சீவலராயனேந்தல் கிராமத்தில் ரூ. 30 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட சாக்கடை நீர் வடிகால் திட்டத்தை அப்போது அவர் பார்வையிட்டார். வீரியிருப்பு கிராமத்தில் ரூ.2 இலட்சத்து 4 ஆயிரம் செலவில் கட்டப்படவுள்ள ஆதி திராவிடர்களுக்கான 20 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டினார். அந்நிகழ்ச்சியில் 66 ஏழைகளுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபாய் 3 லட்சத்து 58 ஆயிரத்து 488 அளவுக்கு கடன்களை வழங்கினார்.

பின்பு, கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் சுமார் 3 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள காய்கறித் தோட்டத்தை நிலச்சீர்திருத்த ஆணையர் பார்வையிட்டார். இதில் விளையும் காய்கறிகள் சத்துணவுக் கூடங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இந்த 3 ஏக்கர் நிலப்பரப்பு 3 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு ஒரு ஏழை விவசாயிக்குக் கொடுக்கப்பட்டு, அவருக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் கொடுக்கப்பட்டு காய்கறி பயிரிடப்பட்டுள்ளது எனக்கூறினார்

நிலச்சீர்திருத்த ஆணையாளர், சுற்றுப்பயண முடிவில் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது : 'திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திற்கு 50 நலிவடைந்த தொழிற்சாலைகளைக் கண்டுபிடித்து அந்தத் தொழில்கள் இயங்குவதற்குக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் 30 சிறு தொழிற்சாலைகள் கண்டுபிடிக்கப்பட்டு 9 சிறு தொழிற்சாலைகளுக்கு இன்னும் ஒரு மாதத்தில் நிதி வழங்கப்படும்.''

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள சத்துணவுக் கூடங்களுக்குத் தினமும் பறிக்கப்பட்ட காய்கறிகள் வழங்கப்பட வேண்டும் என்ற நல்ல நோக்குடன் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கா. பொன்னுசாமி, இ.ஆ.ப., அவர்கள் எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவுக்கு ஒரு முன்னோடித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.



அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், ஊராட்சி ஒன்றிய நிலமோ அல்லது புறம்போக்கு நிலமோ இரண்டு அல்லது மூன்று ஏக்கர் நிலம் ஏழை விவசாயிக்குக் கொடுத்து, அவருக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் கடன் கொடுத்து சத்துணவுக் கூடங்களுக்கு நியாயமான முறையில் காய்கறிகள் விநியோகம் செய்யப்படும். ஒவ்வொரு சத்துணவுக் கூடத்திற்கும் தேவைப்படும் காய்கறிகள் பிளாஸ்டிக் கூடைகளில் சீல் வைக்கப்பட்டு விநியோகிக்கப்படும். இதற்காக, வேலையில்லாத ஏழை இளைஞர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சைக்கிள் வாங்கிக் கொடுத்து, அவர்கள் குறிப்பிட்ட சத்துணவு மையங்களுக்கு அதிகாலையில் காய்கறிகள் விநியோகிப்பார்கள். பகல் நேரங்களில் அவர்கள் வேறு தொழிலிலும் ஈடுபடலாம்.

இத்திட்டத்தை முதன் முதலில் இம்மாவட்டத்தில் மாவட்டஆட்சித் தலைவர் திரு. கா. பொன்னுசாமி அவர்கள் கொண்டு வந்துள்ளார். இது நல்ல முறையில் இயங்கினால் மற்ற பகுதிகளுக்கும் மட்டுமல்லாது - மற்ற மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படும் எனவும் நிலச்சீர்திருத்த ஆணையர் கூறினார்.

# நெஞ்சையள்ளும் தஞ்சைக் கோயில்

**செ**ந்தமிழ்த் திருநாட்டில் கலை வளர் தொட்டிலாக விளங்கும் தஞ்சைத் தரணியில், சோழர்களின் பொற்காலத்தையும் கலைச் சிறப்பையும் எட்டுத் திக்கும் கொட்டி முழக்கி எழிலான தோற்றத்தில் வானளாவ உயர்ந்தோங்கி நிற்கும் கலைப் பெட்டகம்தான் இராசராசேச்சுரம். இந்திய நாட்டின் வட எல்லையாகத் தலை நிமிர்ந்து நிற்கும் இமயத்தை வடநூலார் மேரு என அழைப்பர். தென்திசை மேரு எனக் கல்வெட்டுக்களில் காணப்பெறுவதுஇராசராசேச்சரம். இக்கோயிலைப் பெருவுடையார் கோயில் என்று கல்வெட்டுக்கள் பெருமையோடு பேசும். அதையே பிரகதீச்வரர் கோயில் என்று வடமொழியில் கூறுவர். பெருவேந்தன் முதலாம் இராசராசன் தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி ஓங்கு புகழ் பெற்று எவ்வாறு விளங்கினானோ, அதேபோன்று இந்தியத் திருநாட்டிலேயே ஈடு இணையில்லாத ஒரு கோயிலை எடுப்பிக்க எண்ணினான். தன் தலைநகரிலேயே அதைக் கட்டி முடித்தான். பெருமன்னனாகத் தான் எவ்வாறு விளங்கினானோ அதே போன்று பெரும் உடையாரைக்(இலிங்கத்தை) கோயிலில் அமைத்திடச் செய்தான். அதனாலல்லவோ இக்கோயில் பெருவுடையார் கோயிலென்று இன்றும் அழைக்கப் பெறுகிறது!


இக்கோயிலை இராசராசன் தன் பத்தொன்பதாவது ஆட்சியாண்டில் கட்ட ஆரம்பித்து, இருபத்தைந்தாவது ஆட்சியாண்டில் முடித்தான் என்று கல்வெட்டுக்கள் புலப்படுத்துகின்றன.

இவ்வரிய கோயிலை முழுவதும் கருங்கற்களாலேயே கட்டியிருக்கிறான். பொன்னி நாடான சோழ நாடு மருதநிலப் பகுதியைத் தன்னகத்தே கொண்டுள்ளது. குறிஞ்சி நிலப் பகுதியைக் காண மேற்குத் திசையில் உள்ள திருச்சிப் பகுதிக்குத்தான் செல்ல வேண்டும். அப்பகுதியிலிருந்துதான் இவ்வளவு கற்களையும் கொண்டு வந்திருக்கவேண்டும்.

நடன. காசிநாதன்
**துணை இயக்குநர்,**
**தொல்பொருள் ஆய்வுத்துறை.**

தஞ்சையிலிருந்து மூன்று கல் தொலைவிலுள்ள சாரப்பள்ளம் என்ற ஊரிலிருந்து கோயில் கட்டும் இடம் வரை சாரம் அமைத்துக் கற்களை உருட்டி மேலே ஏற்றினார்கள் என்று கதை வழங்குகிறதே உண்மையா? இருக்க முடியாது என்கின்றனர் சிலர். கோயில் விமானத்தை எடுக்கையில் கோயிலைச் சுற்றி மண்மேடு அமைத்துக் கொண்டு கற்களை மேலே கொண்டு செல்வர் என்றும், கட்டுமானப் பணி முடிந்ததும் மண்ணை அகற்றி விடுவர் என்றும் கூறுகின்றனர். அவ்வாறு கோயிலைச் சுற்றி மண்மேடு அமைத்திருந்தாலும் கற்களை மேலே எடுத்துச் செல்லுகையில் கழிகளால் சாரம் அமைத்துக் கொண்டு அதன் துணையோடு தான் கற்களை ஏற்றினர் என்பது தில்லையிலுள்ள அம்மன் கோயில் முகமண்டப விதானத்தில் காணப் பெறும் விசயநகர கால ஓவியம் மூலம் தெரிய வருகிறது.

உபபீடத்திலிருந்து தூபி வரை 216 அடி உயரமுடைய இப்பெருங் கோயிலை அமைக்க எவ்வளவு ஆழத்துக்கு அடித்தளம் அமைத்திருப்பான்! இவ்வாறு நினைத்துப் பார்ப்பது இயல்பே. ஆனால் உண்மையில் நீண்ட ஆழத்தில் அடித்தளம் அமைத்ததாகத் தெரியவில்லை. குறைந்த அளவு ஆழத்திற்கே அடித்தளம் அமைக்கப் பட்டுள்ளது. இயற்கையான கற்பாறையின் மீது அடித்தளம் அமைத்திருப்பதால்தான் இவ்வளவு பெரும் பாரத்தைத் தாங்கும் சக்தி அதற்கு உள்ளது.



கிழக்குத் திசை நோக்கி நிற்கும் இப்பெருங்கோயில் இரண்டு பெரும் சுற்றுச் சுவர்களை உடையதாக இருந்திருக்க வேண்டும். இன்று ஒரு சுற்றுச்சுவர்தான் உள்ளது. இத் திருச்சுற்றின் கீழ்த்திசையில் அமைந்திருக்கும் கோபுரம் 'இராசராசன் திருவாசல்' என்று கல்வெட்டுக்களில் அழைக்கப்படுகிறது. இதற்கு முன்புள்ள கோபுரம் 'கேரளாந்தகன் திருவாசல்' என்று கூறப்படுகிறது.

**மதிலும் நந்தியும்**

கீழ்த்திசையில் காணப்பெறும் முதற்கோபுரத்தின் (கேரளாந்தகன் திருவாசல்) வழியே உள்ளே சென்றால் இரண்டாம் கோபுரத்தை (இராசராசன் திருவாசல்) அடையலாம். இக்கோபுரத்தின் இரு பக்கங்களிலும் இருபெரும் துவாரபாலகர்கள் அணி செய்கின்றனர். வடக்குப் பக்கம் உள்ள துவாரபாலகரை அடுத்துக் காணப்பெறும் மதிற்சுவரில் 'வள்ளி திருமணம்' 'கிராதார்ச்சுன கதை' 'காமதகனம்' ஆகியவை புடைப்புச் சிற்பங்களாக செதுக்கப்பட்டுக் காணப்படுகின்றன. தெற்குப் பக்கத்தில் துவாரபாலகரை அடுத்துள்ள சுவர்ப்பகுதியிலும் மார்க்கண்டேயர் புராணக் கதை, பார்வதி பரமசிவன் திருமணம் ஆகியவை புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

இக்கோபுரத்தை உள்ளடக்கிய சுற்று மதில், இரு மாளிகைகளை உடையதாகக் காணப்படுகின்றன. ஆதலால் கல்வெட்டில் 'இரட்டைத் திருமாளிகை' என்று வழங்கப்பெறுகிறது. இத் திருமதில், கிழக்கு மேற்கில் 800 அடி நீளமும் தெற்கு வடக்கில் 400 அடி அகலமும் உடையதாக விளங்குகிறது. இத்திருச் சுற்று மாளிகையில் திசைக் காவலர்களுக்கான ஆலயங்களும், பரிவார தேவதைகளின் ஆலயங்களும் காணப்படுகின்றன. நான்கு மூலைகளில் நான்கு திசைக் காவலர்களுக்கான சிற்றாலயங்களும் அமைக்கப் பெற்றுள்ளன. இவையன்றிப் பரிவார தேவதைகளுக்கான சிற்றாலயங்களும் மாளிகையைச் சுற்றிக் காணப்படுகின்றன. திசைக் காவலர்களுக்கான சிற்றாலயங்கள் இருதள விமானம் உடையதாகத் தோற்றமளிக்கின்றன. 'இஞ்சி சூழ் தஞ்சை' என்ற சிறப்பு இதனாலேயே வாய்த்தது.

இத் திருச்சுற்று மாளிகையின் வழியே உள்ளே சென்றால், நாயக்கர் கால மண்டபத்துள்ளே இருக்கும் எழிலான நந்தியைக் காணலாம். இம்மண்டபத்தின் இருதூண்களில் நாயக்க மன்னர் இருவர் உருவச்சிலைகள் காணப்படுகின்றன. கால்களை மடக்கிப் படுத்த நிலையில் தன் தலைவனையே எப்போதும் பார்த்துக்கொண்டிருக்கும் நந்தி சோழர் காலத்தில் அமைக்கப் பெற்ற மேடையில் காணப்படுகிறது. பெருவுடையாருக்கேற்ற பெருநந்தி ஒரே கல்லால் ஆக்கப் பெற்று உன்னதத் தோற்றத்தோடு விளங்குகிறது. பத்தொன்பது அடி நீளமும் பன்னிரண்டு அடி உயரமும் உடையதாகக் காணப்படுகிறது. இந்நந்தி பிற்காலத்தில் அமைக்கப் பெற்றது. சோழர் காலத்தில் அமைக்கப்பெற்ற நந்தி தற்பொழுது திருச்சுற்று மாளிகையில் உள்ளது.

நந்தி மண்டபத்தைக் கடந்து உள்ளே கிழக்குத் திசையில் உள்ள படிக்கட்டுக்களின் மூலமாகவோ, தெற்குப்பக்கப் படிக்கட்டுகள் மூலமாகவோ அல்லது வடக்குப் பக்கப் படிக்கட்டுகள் மூலமாகவோ மகா மண்டபத்தை அடையலாம். கிழக்குத் திசையில் உள்ள படிக்கட்டுகள் பிற்காலத்தில் அமைக்கப்பெற்றவை.


மகாமண்டபத்தின் நுழைவாயிலில் இரு பக்கங்களிலும் துவாரபாலர்கள் நிற்கின்றனர். நுழைவாயிலின் வழியே உள்ளே சென்றால், இருபத்து நான்கு தூண்கள் தாங்கிக் கொண்டிருக்கும் மகா மண்டபத்தின் வனப்பைக் காணலாம். இம்மண்டபத்தின் மேற்குப் பக்கச் சுவரும் தெற்குப் பக்கச் சுவரும் இணையும் இடத்தில் மண்டபத்தின் மேல் பகுதிக்குச் செல்லும் மாடிப்படி உள்ளது.

**நெஞ்சையள்ளும் தஞ்சைக்கோயில்**

மகாமண்டபத்தின் மேற்புற வாயில் வழியாக உள்ளே சென்றால் அர்த்த மண்டபம் காணப்பெறும். இம்மண்டபம் மூன்று தளங்களை உடையது. அர்த்த மண்டபத்தின் அகலமும் விமானத்தின் ஆதி தளத்தின் அகலமும் சமமாக இருக்கிறது. அர்த்த மண்டபத்தின் தெற்குப் பக்கத்திலுள்ள மாடங்களில் விநாயகர் தம் தேவியருடனும், திருமால் தம் தேவியர்களுடனும் உள்ள சிற்பங்கள் காணப்படுகின்றன. வடக்குப் பக்கத்தில் உள்ள மாடங்களில் துர்க்கை, வீரபத்திரர் ஆகியோரது சிற்பங்கள் உள்ளன. இச்சிற்பங்கள் முழுதும் முற்றுப் பெற்ற நிலையில் வடிக்கப் பட்டவைகளாகத் தோன்றவில்லை.

மேற்குப் பக்கச் சுவரில் வெளிப்புற மாடங்களில் தெற்குத் திசையில் கஜலட்சுமி சிற்பமும், வடக்குத்





திசையில் நாமகள் சிற்பமும் காணப்படுகின்றன. நாமகள் சிற்பத்தின் கீழே கருவூர்த்தேவரும் இராசராசனும் அமர்ந்திருக்கும் வகையில் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

அடுத்து இடைநாழி அல்லது இடைக்கட்டு உள்ளது. இதன் கூரையானது தூண்களால் தாங்கப்பெற்றிருக்கின்றன. இவ்விடைநாழியின் நுழைவாயில் இருதுவாரபாலர்களால் அணி செய்யப்படுகிறது. இப்பகுதியின் மேலுள்ள இரண்டாம் தளத்தின் வழியாக விமானத்தின் உட்பகுதியை அடையலாம். அத்தளத்தில் உள்ள சாந்தார நாழியில் இறைவன் ஆடிய 108 வகைத் தாண்டவ கரணங்களைப் புடைப்புச் சிற்பமாகச் செதுக்க முற்பட்டு பெரும் பகுதி முடிக்கப்பட்டும், சிறுபகுதி முடிக்கப்படாமலும் இருப்பதைக் காணலாம்.

இடை நாழியைக் கடந்து உள்ளே சென்றால் எவ்வுயிர்க்கும் அருள் பாலிக்கும் இறைவனை -ஈசனை- இலிங்க வடிவில் பார்க்கலாம். மும்முடிச் சோழனாகிய இராசராசன் முப்புரமெரித்த விரிசடைக் கடவுளுக்கு அமைத்த பெருங்கோயிலில் மூலவராக அமர்ந்திருக்கும் காட்சியைக் காணலாம்.

## பெருவுடையார்

உண்ணாழிகையின் உள்ளே காணப்பெறும் பெருவுடையார். இந்தியாவில் காணப்படும் அனைத்து இலிங்கங்களிலும் மிகப் பெரியதாக உள்ளது. இதற்கடுத்துப் பெரிய இலிங்கம் கங்கைகொண்ட சோழபுரத்துப் பிரகதீசுவரர் கோயிலில் காணப்படுவதாகும். தந்தையான முதலாம் இராசராசனும் மகனான முதலாம் இராசேந்திரனும் தங்களது ஆற்றலுக்கும், வீரத்துக்கும் பெருஞ்சிறப்புக்கும் எடுத்துக்காட்டாகப் பெரிய அளவில் பெருவுடையாரை எழுந்தருளச் செய்து வழிபட்டிருக்கின்றனர். இலிங்கத்தின் உச்சியில் நீராட்ட வேண்டுமெனில் அர்ச்சகர் ஒரு மேடை மீது நின்றுதான் நீராட்ட வேண்டும். அந்த அளவுக்கு உயரமுடையதாகக் காணப்படுகிறது.

இலிங்கத்துக்கேற்ற ஆவுடையார். இதுவும் அளவில் மிகப் பெரியது. இலிங்கத்தின் அளவுக்கேற்ப, கோயிலின் விமானம் அமைக்கப்பட்டிருக்கிறது. விமானத்தின் உட்புற அழகைப் பார்க்க வேண்டுமானால் விமானத்தின் இரண்டாம் தளத்திலிருந்து பார்த்தல்வேண்டும். விமானத்தின் அளவு சிறுகச் சிறுகக் குறைந்து மேலே செல்லும் எழிலைக் காணும் போது சோழர் காலத்திய கட்டடக்கலை வல்லுநர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

உண்ணாழியைச் சுற்றி உட்திருச்சுற்று உள்ளது. இங்கு செல்ல வேண்டுமானால் இடை நாழியில் உள்ள தெற்குப் பக்கப் படிக்கட்டு வழியாகக் கீழே இறங்கிச் சிறிது தூரம் மேற்கே நடந்தால் ஏணிப் படிகள் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இப் படிகள் வழியே ஏறி உயரே சென்றால் உண்ணாழித் திருச்சுற்றின் தெற்குப் பக்கத்தை அடையலாம்.

மேற்குப் பக்கம் திரும்பினால் முதலில் கண்ணில் படுவது உண்ணாழியில் மூலை அரைத்தூணில் தீட்டப்பட்டிருக்கும் நடன மங்கையின் உருவமாகும். இடைக்காலை ஊன்றி வலக்காலைத் தூக்கிச் சதுர தாண்டவ அமைப்பில் வைத்து இடக்கையை மடக்கி, வலக்கையை நீட்டி, முகத்தை இடது தோள் பக்கம் வளைத்துக் தன்னை மறந்து ஆடுபவளாகத் தீட்டப்பட்டிருக்கும் ஓவியம் இங்குக் காணப்பெறும் எல்லா ஓவியங்களிலும் சிறந்த ஓவியமாகும். அவளது முன்னங்கைகளில் செருகிய வளையல்களும், மேல்கைகளில் தோள் வளைகளும், கால்களில் பாதச் சங்கிலி மற்றும் தண்டைகளும், கழுத்தில் அட்டிகையும் அணிந்தவளாய்க் காணப்படுகிறாள். தலையிலே பெருங்கொண்டை அலங்காரம் அதில் மலர் சூட்டபபட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

அவள் அதிர வீசி ஆடும் ஆட்டத்திலே இடையிலே அணிந்திருக்கும் ஆடை நான்கு திக்கும் பறக்கிற தன்மையில் காட்டப்பட்டுள்ளது. அவளது வலப்பக்க மார்பகம் தீட்டப்பட்டிருக்கும் பாங்கும், உடல் வளைந்திருக்கும் கோலமும் இடக்காலின் பாதம் ஊன்றப்பட்டிருக்கும் தன்மையும் அவள் ஒரு சுற்றுச்சுற்றிவிட்டு அடுத்த சுற்றின் தொடக்கத்தில் இருப்பது போன்ற அமைப்பில் உள்ளது. சோழர்கால ஓவியனின் திறமைக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

## சுந்தரரும் சேரமானும்

மேற் பக்கச் சுவரில் சுந்தரர் யானை மீதும் சேரமான் பெருமான் நாயனார் குதிரை மீதும் கைலாய மலைக்குச் செல்லும் காட்சி காணப்படுகிறது. இவர்களது வருகையை மகிழ்ச்சி ஆரவாரத்தோடு தேவ மகளிர் வரவேற்கும் காட்சியும், ஒரு பக்கத்தில் நடராஜர் சன்னதி முன் சுந்தரர் அமர்ந்து இறைவனை வழிபடும் காட்சியும் தீட்டப்பட்டுள்ளன.

இவைகளுக்கும் மேல் பகுதியில் உலக நாயகன் உமையோடு கைலாய மலையில் அமர்ந்திருக்கும் கோலம்; அம்மையப்பர்க்கு முன் பாக சுந்தரர் வழிபடல் ஆகியவை காணப்படுகின்றன.

ஒரு பக்கத்தில் சிற்றம்பலத்தில் ஆடவல்லானின் உருவம் தீட்டப்பட்டுள்ளது. ஆடவல்லானின் அருகில் காளி தாண்டவமாடும் நிலையில் காணப்படுகிறது. எதிர் அம்பலத்தில் நின்று பேரரசன் இராசராசனும் அவனது தேவியாகளும் ஆடல்வல்லானை வழிபடும் காட்சியும் வரையப்பட்டுள்ளது. தில்லை நடராசர் ஆலயத்தின் நான்கு பக்க வாயில்களும் ஓவியமாகத் தீட்டப் பட்டுள்ளன. இவ்வாயில்கள் சாலை விமானத்தைக்கொண்டு சேரநாட்டு கலை அழகில் தோற்றமளிக்கின்றன. இராசராசனின் தேவியர் மெல்லிய ஆடை (மேலாடை உட்பட) அணிந்து காணப்படுகின்றனர். கைகளில் செருகு வளையல்கள், கழுத்திலும் இடுப்பிலும் முத்து மாலை, கால்களில் தண்டை, கொலுசு ஆகியவை அணிந்து அழகே உருவாகக் காட்சியளிக்கின்றனர். காவலர்கள் சிலர் இரு கழுத்துப்பட்டியுள்ள திறந்த சட்டையும், சிலர் ஒரு கழுத்துப் பட்டியுள்ள திறந்த சட்டையும், இடுப்பில் தொடை வரை கீழ்ஆடையும் அணிந்து காணப்படுகின்றனர். கைகளில் நீண்ட கம்பு வைத்துள்ளனர்.

## இராசராசனும் கருவூராரும்

இவைகளைப் பார்த்துவிட்டு கிழ்ப்பக்கம் திரும்பினால் உண்ணாழியின் மூலைத் தூணில் இராசராசனும் கருவூர்த்தேவரும் பேசிக்கொண்டிருப்பதைப் போன்ற ஒரு காட்சி தீட்டப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இவ்வரும் பெருங்கோயிலை எழுப்பிய மாமன்னன் இறைவன் உறையும் உண்ணாழியின் புறச் சுவரில் தன் உருவைத் தீட்டி இறைவனின் அணுக்கத் தொண்டன் என்பதை மெய்ப்பித்திருக்கிறான். இரு மகளிர் ஒருவரோடொருவர் உரையாடிக்கொண்டிருக்கும் காட்சி, மற்றும் இரு மகளிர் அமர்ந்த நிலையில் உரையாடும் தோற்றம் இப்படிப் பல காட்சிகளைக் காணமுடிகின்றது.

சோழர்கால ஓவியக் கலைத் திறனைப் பார்த்தோம் என்ற மகிழ்ச்சியில் திரும்பவும் அதே படிக்கட்டுக்களின் வழியாகக் கீழே இறங்கி வந்து மேலே பார்த்தால் உபபீடம் முதல் தூபி வரை உள்ள விமானப் பகுதிகளைக் காணலாம். நூறு அடி சதுரத்தில் உபபீடம் அமைந்துள்ளது. இதன் உயரம் ஆறு அடியாகும்.

இவ்வுபபீடத்தின் மேலுள்ள பீடப்பகுதி எட்டு அடி மூன்று அங்குலம் உயரமுடையதாகக் காணப்படுகிறது. இது தொண்ணூறு அடி ஒன்பது அங்குல சதுர அமைப்பைக் கொண்டிருக்கிறது. இப்பீடம் பத்ம பந்த அதிட்டான வகையைச் சார்ந்ததாகும். இது பத்மஉபானம் ஜகதி, விருத்த குமுதம், கண்டம் (கழுத்து) ஆகிய பகுதிகளைக் கொண்டதாகத் தோற்றமளிக்கிறது. இப்பீடத்தின் மேல்பகுதி யாளி உருவங்களால் அணி செய்யப்பட்டுள்ளது. இக்கூரை தூண்களால் தாங்கப்படுவது போன்று காட்டப் பட்டுள்ளது.

வடபுறம் பீடத்தின் யாளிவரியில் பெருவுடையாருக்கு நீராட்டப்

# சென்னையை அழகு படுத்த...

சென்னை நகரை அழகுபடுத்துவதற்கான திட்டங்கள் ரூ. 29.5 கோடி செலவில் செயல்படுத்தப்படும் என்று ஆளுநரின் ஆலோசகர் ராமகிருஷ்ணா தெரிவித்தார்.

தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு ராமகிருஷ்ணா 28-4-88 அன்று சென்னை கோட்டையில் செய்தியாளர்களிடம் இது பற்றிக் கூறியதாவது:

"சென்னை நகரைச் சுத்தப்படுத்தும் வேலை தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது.

"சாலைகளை அபிவிருத்தி செய்தல், தெருவிளக்கு, மின்சாரக் கம்பிகளை மாற்றி அமைத்தல், ஆயிரம் சோடியம் ஆவி விளக்குகள் போடுதல், குப்பைகளை அகற்றும் லாரிகள் அதிகம் வாங்குதல், பொது மக்கள் பயன்படுத்தும் கழிப்பிடங்களை அபிவிருத்தி செய்தல், சுடுகாட்டில் வசதி செய்து சுத்தமான சூழ்நிலை உருவாக்குதல், பூங்காக்கள் போன்றவற்றை அபிவிருத்தி செய்தல் இப்படிப் பல வகைப் பணிகளுக்கு நடப்பு மாநகராட்சி வரவு-செலவுத் திட்டத்தில் 14.5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. மாநகராட்சியின் மொத்த வருமானமே 40 கோடி ரூபாய்தான்.

"ஆகவே, அரசு மேலும் 15 கோடி ரூபாயைக் கொடுத்து 29.5 கோடி ரூபாய் செலவில் அந்த அபிவிருத்தி வேலைகள் நிறைவேற்றப்படும்.

"அதன் மூலமாக 50 லாரிகள், 70 கொட்டும் லாரிகள் (டம்பர்) 2 புல்டோசர்' போன்ற பல இயந்திரங்கள், கருவிகள் வாங்கப்படும். கூடுதலாக 1,000 நகர சுத்திதொழிலாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

"திருவான்மியூரில் மின்சாரச் சுடுகாடு அமைக்கப்பட்டு வருகிறது. நுங்கம்பாக்கத்தில் கூடுதலாக ஒரு மின்சாரச் சுடுகாடு அமைக்கப்படும்.

"சென்னையில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட ஆடு, மாடுகள் இருக்கின்றன. சில மாட்டுக் கொட்டகைகளுக்கு லைசென்சு இருக்கிறது. சில வற்றுக்கு லைசென்சு கிடையாது. மாட்டுக் கொட்டகைகளுக்கு லைசென்சு வழங்குவது, சாலைகளில் ஆடு, மாடுகளைத் திரிய விடாதபடி தடுப்பது போன்றவை தொடர்பாக மாநகராட்சி விதிகள் கடுமையாக்கப்படும்.

"அதே நேரத்தில் பால்காரர்களுக்கும் சிரமம் இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படும். சென்னையில் 16,000 மாட்டுக் கொட்டகைகளுக்கு லைசென்சு வழங்கப்பட்டிருக்கின்றது.

"சென்னை நகரில் விழக்கூடிய கழிவு, குப்பைகள் போன்றவற்றை உடனுக்குடன் நீக்குவதற்காக தனியார் நிறுவனங்களை இணைத்து புதிய கழிவு அகற்றும் திட்டம் கொண்டு வரப்பட்டு உள்ளது.

"எங்கெங்கு அதிக அளவில் குப்பைகள் விழுமோ, குறிப்பாக மருத்துவமனைகள், மாட்டுக் கொட்டகைகள் போன்ற இடங்களில் அதிக அளவில் குப்பைகள் விழும் ஆதலால் அப்படி சென்னை நகரில் 900 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றன.

"அங்கு இருந்து அகற்றப்படும் கழிவுப் பொருட்களுக்கு முன்பு ஒரு மாட்டு வண்டி அளவு, லாரிஅளவில் அகற்ற முன்பு விதிக்கப்பட்ட கட்டணங்களை விட 2 அல்லது 3மடங்கு விதிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

பெறும் நீர் வெளியே செல்லத்தக்க வகையில் கோமுகம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோமுகத்தை ஒரு பூதகணம் தாங்கி நிற்பது போன்று தோற்றமளிக்கிறது.

### சுவர்-தளங்கள்

இக்கோயிலில் உண்ணாழிச் சுவருக்குப்புறத்தே உள்ள பிரகாரத்தின் சுவரைத்தான் சுவர் என்று அழைத்தல் வேண்டும். ஆனால் பீடத்தின் மேற்பகுதியைச் சுவர் என்று அழைப்பர். உண்ணாழிச் சுவருக்கும் உட்பிரகாரத்தின் சுவருக்கும் இடையில் உள்ள வழியாகத்தான் உண்ணாழியைச் சுற்றி வலம் வர முடிகிறது. இவ்விரு சுவர்களும் ஒரு குறிப்பிட்ட அளவு உயரம் சென்று அங்கு ஒன்று சேர்கின்றன. அவ்வாறு இரு சுவர்கள் சென்று சேர்வதால் பதின்மூன்று தளம் உள்ள பெரும் விமானத்தைத் தாங்க முடிகிறது.

சுவர்ப்பகுதியும், கூரைப் பகுதியும் சேர்ந்து இருபத்தைந்து அடி உள்ளடங்கி இரண்டாம் தளத்துக்குச் செல்கிறது. இரண்டாம் தளம் ஆதிதளத்தின் அளவில் ஆறில் ஐந்து பகுதியாகக் குறைந்து காணப்படுகிறது.

இரண்டாம் தளமும் ஆதி தளத்தைப் போன்றே உட்பிரகாரத்தைப் பெற்றிருக்கிறது. ஆனால் இங்கு மூன்று பெரிய மாடங்கள் இல்லை. அதற்குப் பதிலாக உண்ணாழிச் சுவரில் இரண்டு அடிக்கு இரண்டு அடி சதுரத்தில் புடைப்புச் சிற்பங்களைக் காணமுடிகிறது. இச்சிற்பங்கள் கிழக்குப் பக்க வாயிலின் தென் பக்கத்திலிருந்து தொடங்கி அதே வாயிலின் வடக்குப் பக்கத்தில் முடிவடைகிறது. இவை சிவபெருமானின் ஆடற்கலையின் 108 வகைத் தாண்டவங்களையும் ஆடிக் காட்டுவதாகச் செதுக்கப்பட்டுள்ளன. அதனால்தானோ என்னவோ இங்குள்ள கல்வெட்டுக்கள் நடராசரை 'ஆடல் வல்லான்' என்று போற்றிப் புகழ்கின்றன போலும்! இங்குள்ள சிற்பங்களில் 81 சிற்பங்கள்தான் முழுமையாகச் செதுக்கப்பெற்றுள்ளன. மற்றவை பூர்த்தி அடையாமல் உள்ளன.

இத்தளத்தில் உண்ணாழியின் உள்ளே செல்லலாம். நாயக்கர் காலத்தில் உண்ணாழியில் முதல் தள உட்பகுதியில் மரங்கள் பாவப் பெற்றதால் இரண்டாம் தள உண்ணாழியின் நுழைவாயில் வழியாகவே உள்ளே சென்று நிற்க முடிகிறது. இவ்விடத்தில் நின்று அண்ணாந்து பார்த்தால் முழுவிமானத்தின் உட்பகுதியையும் காணமுடியும். விமானத்தின் உட்பகுதியைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் சோழர் கால கட்டடக் கலைஞர்களின் அளப்பரிய ஆற்றலை எண்ணி வியக்காமலிருக்க முடியாது.

மூன்றாம் தளத்திலிருந்து விமானம் சிறிது சிறிதாகக் குறுகி மேலே செல்கிறது. மொத்தம் பதின்மூன்று தளங்களைக் கொண்டதாக இவ்விமானம் காட்சி தருகிறது. இத்தகைய விமானங்களுக்கு 'ஆதி விமானம்' என்று பெயர். விமானத்தின் மேல் பகுதியில் எண்பட்டை வடிவில் கிரீவம் (கழுத்து) காணப்படுகிறது. கிரீவத்தின் நான்கு மூலைகளிலும் காளை படுத்த நிலையில் உள்ளன. கிரீவத்துக்கு மேலே எண்பட்டைச் சிகரம் (திராவிட பாணி) வைக்கப்பட்டுள்ளது. கிரீவத்தின் நான்கு முக்கிய திசைகளிலும் மகாநாசி அலங்காரம் காணப்பெறுகிறது. இவற்றில் கிழக்குத் திசையில் சிவன், தெற்குத் திசையில் ஆலமர் செல்வன், மேற்குத் திசையில் திருமால், வடக்குத் திசையில் பிரமன் ஆகியோர் அணி செய்கின்றனர்.

சிகரத்துக்கு மேல் 12 அடி உயரமுள்ள தூபி வைக்கப்பட்டுள்ளது. சோழர் காலத்துத் தூபி, செம்பால் செய்யப்பெற்று பொன் முலாம் பூசப்பட்டது. ஆனால் தற்போதுள்ள தூபி செம்பால் மட்டும் செய்யப்பெற்றது. இதைப் பிற்கால மராத்திய அரசர் புதுப்பித்துள்ளார். இதற்குச் சான்றாக அதன் மீது கல்வெட்டொன்று பொறிக்கப்பட்டுள்ளது.

உபபீடத்திலிருந்து தூபி வரையுள்ள விமானத்தின் மொத்த உயரம் 216 அடியாகும். உபபீடத்தையும் தூபியையும் நீக்கிப் பார்த்தால் மொத்தம் 198 அடியாகும். இது உண்ணாழியின் அகலத்தைப்போல் எட்டு மடங்காகும்.

உண்ணாழிக்கு வடக்குப் பக்கத்தில் சண்டிகேசுவரர்கோயில் அமைந்துள்ளது. இதுவும் இராசராசன் காலத்திலேயே எழுப்பப் பெற்றதாகும். இக்கோயிலில் நான்கு பக்க மாடங்களிலும் சண்டியின் சிற்பம் நின்ற நிலையில் காணப்படுகின்றன.

### கணபதி, முருகன் கோயில்கள்

உண்ணாழியின் தென்மேற்கு மூலையில் கணபதி கோயிலும், வடமேற்கு மூலையில் சுப்பிரமணியர் கோயிலும் பிரகாரத்தில் அமைந்துள்ளன. விநாயகர் கோயில் மராட்டியர் காலத்திலும், சுப்பிரமணியர் கோயில் நாயக்கர் காலத்திலும் கட்டப்பெற்றவை. நாயக்கர் காலக் கலைப்பணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக சுப்பிரமணியர் கோயில் விளங்குகிறது.



வடகிழக்குத் திருச்சுற்றாலையில் அம்மன் ஆலயம் அமைந்திருக்கிறது. இக்கோயில் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் அமைக்கப்பட்டது என்கின்றனர். இக்கோயில் பீடப் பகுதியில் காணப்பெறும் கல்வெட்டு பிற்காலத்தைச் சார்ந்ததாக உள்ளது. இவ்வாலயத்து மகா மண்டப விதானத்தில் தேவி மகாத்மியம், நாயக்கர் கால ஓவியத்தில் தீட்டப்பட்டிருப்பது பார்த்துப் பரவசமடையத்தக்கதாகும். அம்மன் கோயில் எதிரில் வழக்கமாகக் காணப்பெறும் சிம்மத்துக்குப் பதிலாக நந்தி காணப்படுகிறது. தெற்குப் பக்கத் திருச்சுற்றாலையில் தாய்மார் எழுவரில் ஒருவரான வாராகிக்குச் சிறு கோயில் காணப்படுகிறது.

### கல்வெட்டு

இக்கோயில் பீடப்பகுதியிலும் திருச்சுற்றாலைத் தூண்களிலும், திருவாசல் சுவர்களிலும் கல்வெட்டுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இக்கோயிலை, 'நாம் எடுப்பித்த திருக்கற்றளி' என்று இராசராசன் தன் கல்வெட்டில் பொறித்திருப்பது இங்கு காண முடிகிறது. 'நாம் கொடுத்தனவும் நம் அக்கன் குடுத்தனவும் மற்றும் குடுத்தார் குடுத்தனவும் கல்லில் வெட்டுக' என்று மன்னன் ஆணையிட்டிருப்பதையும் கல்வெட்டில் காண முடிகிறது. இக்கோயிற்பணி எந்த ஆண்டு துவங்கப்பெற்றது என்பதும் எந்த ஆண்டு முடிக்கப்பெற்றது என்பதும் இங்குள்ள கல்வெட்டாலேயே அறிய முடிகிறது.

இற்றைக்குச் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழர்கள் கட்டடக்கலையில் எவ்வளவு தேர்ச்சி பெற்றுவிளங்கியிருக்கிறார்கள் என்பதற்கும், ஒருநாயக உணர்வோடு மன்னனும் மக்களும் எவ்வாறு இணைந்து பணியாற்றிச் செயற்கரிய சாதனைகளைச் செய்து முடித்தார்கள் என்பதற்கும், நிழல்கூட கீழே விழாத நேர்த்தியுடன் கட்டப்பட்ட இந்தத் திருக்கோயில் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.



# பாதிக்கப்பட்ட மகளிருக்கு நல்வாழ்வு

திருமதி எம். பி. நிர்மலா,
இயக்குநர்,
சீர்திருத்தப்பள்ளி,
மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறை,
சென்னை-10.

**பாதிக்கப்பட்ட மகளிருக்குப் பாதுகாப்பளித்து அவர்களை உயர்த்துவதற்காக மகளிர் காப்பகம் ஆற்றுகின்ற பணிகள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன**



பிறந்த மண்ணையும், பேசும் மொழியையும் பெற்ற தாய்க்கு நிகராக மதிப்பது பெண்மைக்குச் சிறப்புச்சேர்ப்பதாகும். பொதுவாக ஒரு குடும்பத்தில் பெண்களுக்கு அளிக்கப்படும் மதிப்பு, மரியாதை ஆகியவை சமூகத்தில் அக்குடும்பத்தினரின் உயர்வுக்கு ஏணிப்படிகளாக அமைகின்றன.

இருப்பினும்—

இயற்கையிலேயே பலவீனப் படுத்தப்பட்ட பெண்ணினம், பல சந்தர்ப்பங்களில், அவமானத்திற்கும் ஆதரவற்ற ஒரு நிலைக்கும் தள்ளப்படுகிறது.

பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து, ஆதரித்து, மீண்டும் அவர்களை இந்தச் சமூகம் மதிக்கத்தக்க அளவுக்கு உயர்த்துவதே, நாகரிகமான - பண்புடைய நடவடிக்கையாகும்.

அவ்வாறான சீரிய பணிகள், பாரதத்தில், குறிப்பாக தமிழ் நாட்டில், சமூகத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கென 1948ஆம் ஆண்டில், அரசினரால் ஆரம்பிக்கப்பட்ட 'மகளிர் காப்பகத்தின் மூலம் ஆரம்பமாயின.

இன்றைக்கு, சென்னை, மயிலாப்பூர் கச்சேரி சாலையில் அமைந்துள்ள 'அரசினர் மகளிர் காப்பகம்' என்ற நிறுவனம் தமிழக அரசின், சீர்திருத்தப்பள்ளிகள் மகளிர் ஒழுக்கக்கண்காணிப்புத்துறையின் கீழ், கடந்த சுமார் 40 ஆண்டுகளாக, இயங்கிவருகிறது. இந்த நிறுவனம், பாதிக்கப்பட்ட பெண்களுக்கும், கணவனால் கைவிடப்பட்டவர்கள், பாதுகாப்பு இல்லாதவர்கள், சந்தர்ப்ப, சூழ்நிலைகளினால் தவறியவர்கள், வறுமைக்குத் தங்கள் பெண்மையைப் பலியாக்கியவர்கள் போன்ற அபலைகளுக்கு உணவு, உறைவிடம் ஆகியவைகளை வழங்கி, முழுப் பாதுகாப்பு அளித்து வருகிறது. அவ்வாறான பெண்களுக்கு முறையான கல்வி தொழிற் கல்வியையும் அளித்து, மீண்டும் அவர்கள் சமூகத்தில் இணைந்து வாழ, எல்லா நலப்பணிகளையும் செய்து வருகிறது.

இங்குள்ள பெண்களை நான்கு பிரிவினராக வகைப்படுத்தலாம்.

முதலாவதாக, கற்பு நெறிமுறைகளுக்கெதிரான குற்றங்களின் காரணமாக, நீதிமன்றங்களினால், சட்டப்படி தண்டிக்கப்பட்டவர்கள்.

இரண்டாவதாக, பொறுப்பற்ற பெற்றோர்; பிரிந்து வாழும் கணவன்-மனைவி ஆகியோரால் முறையான பாதுகாப்பு இல்லாமல், கைவிடப்பட்டு, தங்கள் பெண்மையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அடைக்கலம் தேடி வரும் இளம் பெண்கள், தகப்பன் பொறுப்பில்லாமல் இருக்கும் நிலையில் வயது வந்த பெண்ணைத் தனித்து நின்று காப்பாற்ற இயலாத தாயினால், பாதுகாப்பிற்காக அழைத்து வரப்படும் பெண்கள், சமூக விரோதிகளால் கடத்திச் செல்லப்பட்டு, காவல்துறையினரால் மீட்கப்பட்டு நீதிமன்றம் மூலம் அனுப்பிவைக்கப்படும் பெண்கள்,

மூன்றாவதாக, சட்டப்படியான திருமண பந்தங்கள் இல்லாமல், தகாத உறவின் மூலம் கர்ப்பமுறும் பெண்கள், முறையான திருமணம் நடைபெற்றும் பின்னர் வழிதவறி நடந்து அதன் மூலம் கர்ப்பமுறும் பெண்கள்.

நான்காவதாக, தண்டிக்கப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்டபயிற்சிக் காலம் இக்காப்பகத்தில் முடிந்த பின்னரும் வெளியே ஆதரிக்க எவரும் இல்லாமல், இதுகாறும் பெற்று வந்த பாதுகாப்பு, பயிற்சி ஆகியவற்றில் பின்னடைவு ஏற்படக்கூடாது என்பதற்காக, மறு வாழ்வினை எதிர்பார்த்து, பிற்காப்பாகத் தொடர்ந்து சிலகாலம் தங்கியிருக்கும் பெண்கள்.

மேற்சொன்ன நான்கு வகைப் பெண்களுக்கும், ஒரே சீரான, அரசு நிர்ணயித்துள்ள அளவீடுகளின்படி உணவு, உடை ஆகிய வசதிகள் இங்கு அளிக்கப்படுகின்றன.

அவசர சிகிச்சைக்காகவும், முறையான மருத்துவப் பரிசோதனைகளுக்காகவும் இங்கு மருத்துவப் பிரிவும் செயல்படுகிறது.

கல்வியில் நாட்டமுள்ளவர்களுக்காகக் கல்வித்துறை அங்கீகாரம்

பெற்ற, எட்டாவது வகுப்பு வரையி லான பள்ளியும் இங்கு செயல்படு கிறது. பள்ளி வயதைக் கடந்து விட்ட பின்னரும் படிப்பில் ஆர்வ முள்ள பெண்களுக்காக, முறை சாராக்கல்வி மூலம் கல்வி கற்பிக்க வும் இப்போது இங்கு வகை செய் யப்பட்டுள்ளது.

ஆர்வமுள்ள பெண்கள், உயர் நிலைப்பள்ளியிலும், கல்லூரியிலும் அவர்கள் கல்வியினைத் தொடர வும் தனிப்பட்ட வசதிகள் செய்து தரப்படுகின்றன. மற்றும் தகுதி யுள்ள பெண்களுக்கு மகப்பேறு உதவியாளர், செவிலிப் பணியாளர் ஆகிய பயிற்சிகள் அளிக்கப் படுகின்றன.

சமுதாயத்தில் தங்களை கௌரவ மான நிலைக்கு உயர்த்திக் கொள்ள உரிய பணி வாய்ப்பினைப் பெறுவ தற்கு அப்பயிற்சியும் உயரிய கல்வி யும் அவர்களுக்கு மிகவும் பயனுள்ள தாக அமைந்து வருகின்றன.

உரிய காலம் முடிந்து வெளி யேறிய பின்னர் கௌரவமான ஒரு வாழ்க்கையை அமைந்துக் கொள்ள

மேற்சொன்ன வாய்ப்புகள் மட்டு மன்றி எளிய பொருளாதார உதவி யினைப் பெறத்தக்க வகையில், தையல், பூத்தையல், நெசவு, பாய் நெசவு ஆகிய தொழிற்கல்வி முறை களும் முறையாகப் பயிற்சி பெற்ற ஆசிரியைகளால் சிறப்பாகக் கற்றுத் தரப்படுகின்றன.

அவ்வாறான பயிற்சிக்குப் பின், மேற்கொள்ளும் பணிகளின் மூலம் கிடைக்கும் சொற்ப வருமானம்கூட அவர்களின் முறையான வாழ்க்கைச் செலவுகளுக்குப் பேருதவியாக அமைகின்றன.

நவீன உத்திகளின்படி செயல்பட வும், கற்கவும், மின் சலவைக்கூடம் ஒன்றும் இங்கு இயங்கி வருகிறது. இதற்கென முறையாகப் பயிற்சி பெற்றவர்கள் இதில் பணியிலமர்த் தப்பட்டிருக்கின்றனர். இதன்மூலம் இல்லவாசிகள் பயிற்சி பெறுவதோடு வெளியிலிருந்தும் பணிகளை மேற் கொள்ளுவதன் மூலம் அரசுக்கு வருவாயும் கிடைக்கிறது.

ஓய்வு நேரங்களைப் பயனுள்ள வகைகளில் கழிக்க இல்லவாசி களுக்கு விளையாட்டு வசதிகள், நூல் நிலையம் மற்றும் வானொலி, தொலைக்காட்சி வசதிகள் உள்ளன.



இறைவழிபாட்டிலும் இவர்கள் அதிகமாக ஈடுபடுத்தப்படுகின்றனர். இங்கு எல்லா மதங்களுக்கும் சம நிலை அளிக்கப்படுகின்றன. மத சம்பந்தமான பண்டிகைகள் வெகு உற்சாகமாக இங்கு கொண்டாடப் படுகின்றன.

தண்டிக்கப்பட்ட காலம் அல்லது பயிற்சிக் காலம் முடித்த பெண் களுக்கு மறுவாழ்வு அளிப்பது என் பது சிரமமான பணியாகும்.

மீண்டும் மகளை ஏற்க மறுக்கும் பெற்றோர், வீடு செல்ல விரும்பாத பெண்கள், மனைவியை ஏற்க மறுக் கும் கணவன், உறவை உதறித்தள் ளும் உறவினர்கள், அவ்வாறானவர் களின் பாதுப்பிற்குள்ளான பெண் கள் பிற்காப்புப் பிரிவில் அனுமதிக் கப்பட்டு, தொடர்ந்து மறுவாழ் விற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படுகின்றன.

மாநிலத்தில் சென்னை நகரம் தவிர, திருச்சி, மதுரை, கோயம்புத் தூர், சேலம் ஆகிய இடங்களிலும் பெண்களின் நலன் பேணும் இவ் வாறான அரசு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

வேலூரில், நலிவுற்ற பெண் களின் மறுவாழ்வுப் பயிற்சிக்கென இத்துறையினரால் நடத்தப்படும் அரசினர் ஆடைகள் ஹோல்டால் கள் செய்தல் மற்றும் பயிற்சி நிலை யமும் அருகாமையில் அமைந்துள்ள அரசினர் மகளிர் காப்பகமும் குறிப் பிடத்தக்கவையாகும்.

ஏற்கனவே திருமணமாகாத பெண்களாய் இருந்தால், அவர் களுக்கு உரிய விதிமுறைகளைப் பின்பற்றித் திருமணம் செய்து வைப் பது; வேலை வாய்ப்புகளைப் பெற் றுத்தருவது, வீட்டு வேலைகளில் ஆர்வமுள்ள பெண்களை, உரிய உத்திரவாதம் அளிக்கும் தகுதி வாய்ந்த குடும்பங்களில் பணிக்கு அமர்த்துவது ஆகியவற்றின் மூலம் இந்த இல்லங்களின் பெண்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படுகிறது.

மேற்சொன்ன பலவாறான மறு வாழ்வு நடைமுறைகளைச் செயல் படுத்திய பின்னரும், நிலையான ஒரு வருவாயில்லாமையால் அவர் கள் வாழ்வில் பின்னடைவு ஏற் பட்டு, மறுபடியும் தவறக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுமானால், ஏற்கனவே செய்த முயற்சிகள் அனைத்தும் வீணாவது வேதனை தரக்கூடியது.

எனவே, பொருளாதார நெருக் கடிக்குள்ளாகும் அபலைப் பெண் களுக்கு உதவும் வகையில் அரசு, ''வாழ்க்கையில் ஒதுக்கப்பட்ட, வழி தவறிய மகளிர் மற்றும் பெண்கள் நலவாழ்வு நிதி'' என்ற திட்டத்தை உருவாக்கியது.

இத்திட்டத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து இரண்டரை இலட்சம் ரூபாயும், அரசு செலவின நிதியிலிருந்து இரண்டரை லட்ச ரூபாயும் ஆக, ஐந்து இலட்ச ரூபாய் நிதி உதவியாக வழங்கப்பட்டது. இதிலிருந்து அளிக்கப்படும் நிதி உதவிக்குப் பின்னர் அதே தொகை யினை மீண்டும் மேற்சொன்ன நிவா ரண நடைமுறைகளின் மூலம் பெற்று, இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளவகை செய்யப்பட்டுள்ளது.

இந்நிதி உதவி பெறுவதற்கான தகுதி உடைய பெண்கள் பற்றிய முழு விவரங்களும் அந்தந்தப் பகுதி யிலுள்ள இத்துறையின் நன் னடத்தை அலுவலர் மூலமாகப் பெறப்படுகின்றன. பின்னர் இத் துறை இயக்குநர் அவற்றைத் தீவிர மாகப் பரிசீலித்து, பரிந்துரை அறிக்கை அளிக்கிறார். அரசின் நிதி சமூக நலத்துறைச் செயலாளர் உட் படப் பிரமுகர்களைக்கொண்ட உயர் நிலைக் குழுவின் தேர்வுக்குப் பின்னர், உதவி பெறத்தகுதியான வர்களின் பட்டியல் இறுதி செய்யப் படுகிறது.

முதற்கட்டமாக, இந்நிதித் திட் டத்தின் மூலம் பலன் பெறும் பெண் களுக்காகப் பொருள் மற்றும் நிதி உதவி அளிக்கும் விழா, கடந்த 4.3.88 அன்று இவ்வில்லத்தின் 37-வது ஆண்டு விழாவின் போது, இணைத்து நடத்தப்பட்டது.

அவ்வாறான உதவி பெற்றவர் கள் விவரம் வருமாறு:

1. ரூ. 2,500க்கு, இரண்டு தையல் இயந்திரங்கள் வீதம் மூன்று பெண்கள்.

2. தேனீர்க் கடை வைக்க ரூ.5,000 வீதம் இரண்டு பெண்கள்.

3. மளிகைக் கடை வைக்க ரூ. 5,000 வீதம் ஒரு பெண்.

4. மாவு அரைக்கும் இயந்திரம் ரூ. 5,000 வீதம் ஒரு பெண்.

5. கறவை மாடுகள் வாங்குவதற் காக, ரூ. 2,500 வீதம் எட்டுப் பெண்கள்.

6. பாய் நெசவுத் தொழில் செய்ய ரூ.2,500 வீதம் ஒருபெண்.

தமிழக அரசின் சமுதாய நெடு நோக்குப் பலன் திட்டத்தின்படி பெண்களின் பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகளில், இத்துறை தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.



மாணவர் பக்கம்

# அறிவுச் சுடர்

வெண்பாஸ்வரம் பொதுவாகப் பாதுகாக்கப்படுவது எதில்?

—நீரில்.

ஜவ்வாது மலை உள்ள மாவட்டம் எது?

—வட ஆர்க்காடு.

கோணத்தை அளக்கும்அளவுக்கு என்ன பெயர்?

—டிகிரிகள் அல்லது பாகைகள்.

புளூட்டோ சூரியனைச் சுற்றி வர எத்தனை ஆண்டுகள்ஆகும்?

—248 ஆண்டுகள்.

நீராவியானது பிஸ்டனின் இரு புறமும் மாறி மாறித் தாக்கி இயங்கும் எந்திரத்தைக் கண்டு பிடித்தவர் யார்?

—ஜேம்ஸ்வாட்

சில தாவரங்களின் இலைகள் சுருண்டு காணப்படுவது ஏன்?

—கால்சியம் சத்துக் குறை வால் இலைகள் சுருண்டு காணப்படுகின்றன.

சாதாரண வானொலிப் பெட்டி இயங்கத் தேவையான மின்சக்தி என்ன?—

—9 வோல்டு மின்சாரம் தேவை.

நீரில் கரையாத திண்மைப் பொருட்கள் இரண்டைக் கூறு:

—மணல், ரப்பர்.

நம் வீடுகளில் பயன்படும் மின் சக்தியின் அளவு என்ன?

—200 வோல்ட்டுகள்.

உலர்ந்த பனிக்கட்டி என்பது யாது?

—திடநிலை கார்பன் டைஆக்ஸைடு.

முதன் முதலில் நீராவி இயந் ரத்தைக் கண்டறிந்தவர் யார்.

—நியூகோமன்.

வில்வத்தின் காய்கனிகளிலிருந்து எந்த மருந்து-தயாரிக்கப்படு கிறது?—அது எந்த நோயைக் குணப்படுத்த உதவும்?

பேல், வயிற்றுக்கழிவு நோய்.

1986-ஆம் ஆண்டு இந்தியா விற்கு வந்த போப்பாண்டவர் யார்?

—போப்பாண்டவர் ஜான்பால்.

மில்லிசெகண்டு என்றால் என்ன?

—ஒரு செகண்டில் ஆயி ரத்தில் 1 பங்கு.

மின்னல் எவ்வளவு நேரம் மின்னுகிறது?

—மின்னல் குறைந்த பட்சம் 0.1 வினாடி முதல் அதிகபட்சம் 1.6 வினாடி வரை மின்னுகிறது.

வெறிநாய்க்கடிக்கு (ஹைட் ரேஃபோபியா) மருந்து கண்ட றிந்தவர் யார்?

—லூயிபாஸ்டர்.

தண்டு நார்கள் கொண்ட தாவ ரங்களுக்கு எடுத்துக்காட்டுகள் கொடு!

—சணல், ஹெம்ப், சணல் பை.

பட்டுப்பூச்சியின் உணவு யாது?

—முசுக்கொட்டை இலை.

கோழி முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிவர எத்தனை நாட்களாகும்?

—21 நாட்களாகும்.

மீன்களிலேயே அதிவேகமாக நீந்தும் மீன் எது?

—சுறாமீன்.

'இன்குபேட்டர்' என்பது என்ன?

—முட்டைகளை அடை காக்க உதவும் கருவி.

பாலைப் பதப்படுத்தும் முறை யாது?

—''பாஸ்டியர் முறை.

எவர்சில்வரில் அடங்கியுள்ள உலோகங்கள் யாவை?

—துருப்பிடிக்காத எஃகு 70 சதம். குரோமியம் 20 சதம் நிக்கல் 10 சதம் கலந்த கலவையே.

## புகழ்ச் சரிதம் படைப்பீர்!

—எம். ஆர். குகன்

பள்ளியிலே படித்துவரும்
கிள்ளைமொழிச் செல்வங்களே — பெற்றோர்
அள்ளித்தரும் செல்வத்தின்
அருமையுணர்ந்து பயில்வீரே—ஆசான்
சொல்லித்தரும் பாடங்களைச்
சோர்வின்றிக் கற்பீரே — வாழ்வில்
வெல்லும்வழி அறிவீரே
வேதனையைக் களைவீரே!

கல்விநீங்கள் கற்கும்போது
கசப்பாக வேதோன்றும் — நாட்டில்
கல்விகற்று ஞானமுற்றால்
வாழ்நாளே மிகஇனிக்கும் — உயர்ந்த
அறிவியலும் புவியியலும்
அள்ளித்தரும் தகவல்கள் — அவற்றைப்
பொறுப்புடனே பயின்றிடுவீர் !
புகழ்ச்சரிதம் படைத்திடுவீர் !





# புலி

**பு**லி என்றாலே அனல் பறக்கும் கண்களும், செம்பழுப்பு நிற உடல் முழுதும் பெரிய வரிகளும் கொண்ட கம்பீரமான வரிப்புலி தான் நம் மனக்கண்ணில் தோன்றும்.

இந்தியர்கள் புலி பற்றி, சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்னரே அறிந்திருந்தனர். மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட ஓர் இலச்சினையில் பொறிக்கப்பட்டுள்ள விலங்கு புலிதான் என்று அகழ்வாராய்ச்சியாளர்கள் நிர்ணயித்துள்ளனர். இந்தியாவின் மிகப் பழமையான நூலான ரிக் வேதத்திலும், பின்னர் மகாபாரதத்திலும் புலி பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

ஆஸ்திரேலியாவிலும், ஆப்பிரிக்காவையடுத்த மடகாஸ்கர் தீவிலும் புலியினம் இல்லை. எத்தனையோ அதிசய விலங்குகளைத் தன்னகத்தே கொண்ட ஆப்பிரிக்கக் கண்டத்தில் வரிப் புலிகள் கிடையாது. வட, தென் அமெரிக்காவிலும் வரிப் புலிகள் இல்லை. ஸ்ரீலங்காவில் புலிகள் இல்லாததால், அத்தீவு இந்தியாவினின்றும் தனியே பிரிந்து பின்னரே புலிகள் இந்தியாவில் வியாபித்திருக்கக்கூடும் என்று கருதப்படுகின்றது.

புலியினம் சோவியத்து யூனியனின் வடபகுதியில் சைபீரியாவில் உருப்பெற்று, கீழ்த்திசை நோக்கிப் பரவியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. மஞ்சூரியா, கொரியா, சைனா, பர்மா முதலிய இடங்களில் பரவிப் பின்னர் பர்மா வழியே இந்தியாவில் புலிகள் நுழைந்திருக்கக் கூடும். அதிக வெப்பத்திற்கு ஆற்றாது புலிகள் மர நிழல்களில் தஞ்சம் அடைகின்றன; அல்லது நீரிலும் அமிழ்ந்து கிடக்கின்றன. புலிகளின் இச்செயல், அவற்றின் முன்னோடிகள் குளிர்ப் பகுதிகளிலிருந்து குடிபெயர்ந்தவை என்பதைப் பறைசாற்றும் சான்றாக அமைந்துள்ளது.

இந்தியப் புலிகள் பஞ்சாப், ராஜஸ்தான் ஆகிய இரு மாநிலங்கள் தவிர பிற இடங்களில் இயற்கைச் சூழலில் பரவலாகக் காணப்படும் ஒரு அழகிய வனவிலங்காகத் திகழ்கிறது. இமயமலைச் சாரலில் 7000 முதல் 5000 அடி உயரத்திலுங்கூட புலிகள் தென்பட்டுள்ளன. 1889 இல் 10,000 அடி உயரத்தில் மண்டலி என்ற இடத்தில் ஒரு புலி கொல்லப்பட்டது.

இந்தியப் புலிகளின் சராசரி நீளம் 9 அடியும், உயரம் 3 அடியும் ஆகும். சராசரி எடை 190 கிலோ. பெண் புலிகள் 8 அடி நீளமும், 135 கிலோ எடையும் உடையனவாக இருக்கின்றன. இந்தியாவில் 1967இல் உத்திரப்பிரதேச மாநிலத்தில் 388 கிலோ எடையுள்ள பெரிய புலி ஒன்று சுட்டுக்கொல்லப்பட்டது. வால் நீங்கலாக அதன் நீளம் 9அடி. வால் மட்டும் 3 அடி 8 அங்குலம் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

புலியினத்தில் மிகப் பெரிதான சைபீரியப் புலியின் சராசரி நீளம் 10 அடி 3 அங்குலமாகும். அது 265 கிலோ எடை கொண்ட ஒரு இராட்சத மிருகமாகத் திகழ்ந்தது.

புலி, வேட்டையாடுவது இரவில் தான். இரவில் புலியின் கண் பார்வை மிகவும் கூரியது. பகலில் அதன் கண்கள் பாதி மூடியபடியே இருக்கின்றன. புலிகளின் நுகரும் திறன் குறைவானதே. நன்கு நுகரவும் அவற்றால் முடிந்தால் உலகத்தில் புலிகள் மட்டுமே எஞ்சியிருக்கும் என்று பழங்குடி மக்கள் கூறுவதுண்டு. பெரும்பாலும் மான்களைத் தாக்கும் புலிகள், காட்டுப் பன்றிகள், காட்டெருமைகள் ஆகியவற்றையும் விட்டுவைப்பதில்லை. எதுவும் கிடைக்காவிடில் பிற விலங்குகளால் ஒதுக்கித் தள்ளப்பட்ட இரையையும்கூட, புலி உண்பது உண்டு. வெள்ளத்தின்போது வெளிப்படும் தவளை, மலைப் பாம்பு போன்றவற்றையும் புலிகள் உண்ணத் தயங்குவதில்லை. முள்ளம் பன்றியைப்புலி விரும்பி உண்கிறது. முகத்திலும் உடலிலும் முள்ளம் பன்றியின் முட்களையும், அதனால் ஏற்பட்ட காயத்தையும் தாங்கியவாறே திரியும் காட்டுப் புலிகளும் உண்டு! ஆண் புலிகள் தன் குட்டிகளையும்கூட உண்ண முற்படுகின்றன. அவற்றை அண்டாவண்ணம் தாய்ப் புலிகள் குட்டிகளை அரவணைத்துக் காக்கின்றன. 'புலி பசித்தாலும் புல் தின்னாது' என்பது பழமொழி. ஆயினும் பல சந்தர்ப்பங்களில், உண்ட உணவு செரிக்கும் பொருட்டு, பசும்புல்லைப் புலிகள் விரும்பி உண்கின்றன!

புலிகள் பகலில் பெரும்பொழுதை மர நிழல்களில் உறங்கியே கழிக்கின்றன. உறக்கத்திலும் அவை எச்சரிக்கையுடனேயே இருப்பதற்கு அங்குமிங்கும் அசைந்து கொண்டிருக்கும் புலியின் வாலே சான்றாகும்.

பெரிய ஆண்புலி 65 முதல் 600க்கும் மேற்பட்ட சதுர கிலோ மீட்டர் பரந்து விரிந்த ஒரு பகுதியைத் தனது ஆதிக்கத்திற்குட்படுத்திக் கொண்டு அந்த எல்லைக்குள் பிற புலிகள் நுழையாவண்ணம் பாதுகாக்கிறது. சிறு நீர் மூலமாகவும், வாலின் அடிப்பகுதியில் உள்ள சுரப்பிகளில் வெளிப்படும் திரவங்கள் மூலமாகவும் புலி தன் எல்லையை வரையறுத்து வைக்கிறது. புலியின் உறுமல் 3 கிலோமீட்டர் தொலைவுகூடக் கேட்கும் அளவிற்கு இருக்கிறது. சில நேரங்களில் புலி தன் இரையான மிளா (Sambar deer) மான்போன்றே கனைக்கிறது.

புலிகள் தங்கள் உடலை மிகவும் சுத்தமாக வைத்துக்கொள்வதில் அக்கறை காட்டுகின்றன. நகங்களை அடிக்கடி மரங்களில் தேய்த்துக் கூராக்கிக் கொள்கின்றன. புலிகளால் நீரில் நன்றாக நீந்த முடியும். நீரில் நீந்தியபடியே அவை இரையை வீழ்த்துகிறது. தற்போது இந்தியா முழுதும் 4000 புலிகள் உள்ளன.

—நன்றி: 'கலைக்கதிர்'



# திருச்சி கேந்திர கிராமத் திட்டம்

**சி.க. கல்யாணசுந்தரம்,**
**இயக்குநர்,**
**கால்நடைப் பராமரிப்புத் துறை.**

**ந**ம்முடைய நாட்டின் பொருளாதாரத்தில் கால்நடைப்பராமரிப்புத் துறை குறிப்பிடத் தக்கதொரு அங்கம் வகிக்கிறது. நம் நாட்டு மக்களின் உணவில் கால்நடைகளிலிருந்து கிடைக்கும் பால், இறைச்சி, முட்டை போன்றவை முக்கியப் பங்கு வகிக்கின்றன. இந்த வகையில், கால்நடைகளிலிருந்து கிடைக்கும் உணவு வகைகளின் தரத்தையும் அளவையும் உயர்த்த, கால்நடைகளின் தரத்தை உயர்த்துவது கால்நடைப் பராமரிப்புத்துறையின் பொறுப்பாகிறது. இந்நோக்கத்திற்காக இத்துறை, கேந்திர கிராமத்திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

அடுத்தடுத்து உள்ள பல கிராமங்களின் திரட்சியான ஒரு பகுதியில் கருவூட்டலுக்குத் தகுதியுள்ள 1000 எண்ணிக்கைப் பசு அல்லது எருமைகள் உள்ளடங்கிய கால்நடை அபிவிருத்திப்பகுதி என்பதே ஒரு கேந்திர கிராமம் ஆகும்.

இத்திட்டம் முதன்முதலாக மத்திய அரசுத் திட்டமாக 1952-53ல் கோயம்புத்தூர் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு, பின்னர், இதர இடங்களுக்கும் விரிவாக்கப்பட்டது. 1969ஆம் ஆண்டு இறுதியில் இத்துறை புனரமைப்பு செய்யப்பட்டது வரை இத்திட்டம் செயல்பட்டு வந்தது.

துறை புனரமைப்புக்கு முன்பு மாநிலத்தில் 75 கேந்திர கிராம நிலையங்கள் செயல்பட்டு வந்தன. இந்நிலையங்கள் செயல்பட்டு வந்த பகுதிகளில் சிறப்பாகச் செயல்பட்டு குறிப்பிடத்தக்க அளவு கால்நடைச் செல்வத்தை உயர்த்தின. துறையின் நடவடிக்கைகள் புனரமைப்பு செய்யப்பட்டதன் காரணமாக, இத்திட்டம் தன் தனித்தன்மையை இழந்தது.

இவ்வாறான துறையின் நடவடிக்கைகள் எதிர்பார்த்த முன்னேற்றத்தை ஏற்படுத்தவில்லை. மேற்குறிப்பிட்ட காரணத்திற்காகவும், இப்பலனை கிராமப் பகுதிகளுக்கு விரிவாக்கும் நோக்குடன்



மீண்டும் இத்திட்டம் 1974ல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இவ்வாறு மீண்டும் நடைமுறைப்படுத்தப் பட்டபோது 1975ல் கீழ்க் குறிப்பிட்ட இடங்களில்கேந்திர கிராமத் திட்ட மைய நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

1. திருச்சிராப்பள்ளி, 2. லால்குடி, 3. மணப்பாறை, 4. தென்னிலை, 5. அரவக்குறிச்சி, 6. சின்னதாராபுரம், 7. ஆலங்குடி, 8. பொன்னமராவதி.

1978ல் திருச்சிராப்பள்ளி கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட போது, திருச்சிராப்பள்ளி மற்றும் லால்குடியில் செயல்பட்டு வந்த கேந்திர கிராம நிலையங்கள் அரசு ஆணை பெற்று 10.4.81 முதல் முறையே குளித்தலை, மற்றும் கிருஷ்ணராயபுரம் ஆகிய இடங்களுக்கு மாற்றி நிறுவப்பட்டன

கேந்திர கிராமத் திட்டம் கீழ்க் குறிப்பிட்ட நோக்கங்களை தன்னுள் இணைத்துள்ளது:

1. தேர்ந்தெடுக்கப்பட்ட ஜெர்சி பிரீசியன் மற்றும் மூர்ரா ஆண் இனங்களின் மூலம் முறைப்படுத்தப் பட்ட செயற்கைமுறை கருவூட்டல்.
2. கருவூட்டலைத் தொடர்ந்து கருவுறுதல் மற்றும் கன்று ஈனுதலைக் கண்காணித்து வருதல் மற்றும் பதிவுகள் பராமரித்தல்.
3. தேவையற்ற காளைகளைக் காயடித்தல் மூலம் சுத்தமான இனவிருத்தியைப் பராமரித்தல்.



4.. கால்நடைகளுக்கு ஏற்படும் வியாதிகளுக்கு எதிராகத் தடுப்பு நடவடிக்கை எடுத்தல், கால்நடைகளுக்கு ஏற்படும் கொள்ளை மற்றும் இதர நோய்களிலிருந்து காப்பாற்றுதல்.

5. கால்நடைக் கண்காட்சி மற்றும் கன்றுகள் பேரணி நடத்துதல், அவற்றின் மூலம் கால்நடை வளர்ப்போரிடையே ஒரு போட்டி மனப்பான்மையை ஏற்படுத்துதல், கருத்துப் பரிமாற்றத்திற்கு ஓர் இடமாக அமைத்தல் மற்றும் கால்நடை வளர்ப்பில் தங்களுக்குள்ள இடர்ப்பாடுகளை வெளிப்படுத்துவதற்கான ஓர் வாய்ப்பை ஏற்படுத்தித் தருதல்.

மேலும் இத்திட்டத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட நல்ல கன்றுகளுக்கு ரூ. 15 மாதந்தோறும் மானியம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் கால்நடை வளர்ப்போர் கால்நடைகள் பருவம் எய்தி,பால் தரும் நிலை வரை கன்றுகளை நல்ல முறையில் பராமரிப்பது உறுதி செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், கன்று சொந்தக்காரருடன் உத்தரவாதம் செய்து கொள்ளப்படுகிறது. ஆறு மாதம் முடிந்த பின் தெரிந்தெடுக்கப்பட்ட கன்று சொந்தக்காரர் மானியத்தைப் பெறத் தகுதியுடையவர். இம் மானியம் 2 ஆண்டுகள் அனுமதிக்கப்படத் தக்கது. அதாவது மூன்று வயது அடையும் வரை அல்லது பருவத்திற்கு வரும் வரை இதில் எது முதலில் வருகின்றதோ அது வரை முதலில் ரூ.10 பிரதி மாதம் வழங்கப்பட்டு வந்து, தெரிந்தெடுக்கப்பட்ட கன்று, கன்று ஈனும்போது மீதம் ரூ. 5 வழங்கப்படுகிறது.

1977 வரை கேந்திர கிராம நிலையங்களில், தேவையான எண்ணிக்கையில் காளைகள் பேணப்பட்டு, விந்து சேகரிக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கலவை செய்யப்பட்டு, குளிர்பதனப்பெட்டிகளில் வைத்து, பின்னர் ஊர்திகள் மூலம் விரைவாகக்கிளைநிலையங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு வந்தன.

1977ல் கேந்திர கிராம நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வந்த காளைகள் திரும்பப் பெறப்பட்டு, கிளை நிலையங்களுக்கு ஊர்தி மூலம் விந்து விநியோகம் நிறுத்தப்பட்டது. மாறாக, தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் காளைகள் நிறுத்தப்பட்டு, அங்கிருந்து கேந்திர கிராம மைய நிலையத்திற்கு விந்து வழங்கப்பட்டு வருகின்றது. துவிச்சக்கர வண்டி இன்னபிறவற்றின் மூலம், தனிநபர்கள் மூலம் மைய நிலையங்களிலிருந்து கிளை நிலையங்களுக்கு விந்து விநியோகம் நடைபெற்று வருகிறது.

திருச்சி நகர் மற்றும் நகரைச் சுற்றியுள்ள இடங்களில் பெரும்பாலும் கலப்பினங்கள் காணப்படுகின்றன. பால் உற்பத்தியை அதிகரிக்க • ஜெர்சி, ஜெர்சி கிராஸ் காளைகள் மண்டலச் செயற்கை முறை இனவிருத்தி நிலையங்களில் பராமரிக்கப்பட்டு, விந்து எடுக்கப்பட்டு வருகிறது. திருச்சி மண்டலச் செயற்கைமுறை இனவிருத்தி நிலையத்திலிருந்து மணப்பாறை கேந்திர கிராம நிலையத்திற்கு விந்து வழங்கப்பட்டு வருகிறது.

சின்னதாராபுரம், அரவக்குறிச்சி மற்றும் தென்னிலை கேந்திர கிராம நிலையத்தின் ஒரு பகுதி ஆகியவை காங்கேயம் இனவிருத்திப் பாதைகளாகும். எனவே கரூர் பொலி காளை நிலையத்தில் காங்கேயம் விந்து சேகரிக்கப்பட்டு, இந்நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

கரூர் காளை நிலையம் 13.3.86 முதல் தற்காலிகமாக அரவக்குறிச்சிக்கு மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது. எனவே மேற்குறிப்பிட்ட மூன்று நிலையங்கள் விந்து தேவையை அரவக்குறிச்சி கேந்திர கிராம நிலையத்திலிருந்து பெற்று வருகின்றன.

குளித்தலை மற்றும் கிருஷ்ணராயபுரம் கேந்திர கிராம நிலையங்களைப் பொறுத்தவரை முசிறி பொலிகாளை நிலையத்திலிருந்து விந்து பெறப்பட்டு வருகிறது.

ஆலங்குடி, பொன்னமராவதி கேந்திர கிராம நிலையங்களைப் பொறுத்தவரை புதுக்கோட்டை பொலிகாளை நிலையத்திலிருந்து விந்து பெறப்பட்டு வருகிறது.

எருமைகளின் தேவைக்கு மேற்குறிப்பிட்ட நிலையங்களில் எருமையினக் காளைகள் பராமரிக்கப்பட்டு விந்து சேகரிக்கப்பட்டு அனுப்பப்பட்டு வருகிறது.

தீவன அபிவிருத்தி கேந்திர கிராமத் திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகும். முறையான வளர்ச்சிக்கும், பருவம் எய்துவதற்கும் விஞ்ஞான ரீதியாக உணவு வழக்கங்கள் முக்கியம். தேவையான அளவில் கால்நடைகளுக்கு உணவு வழங்குவதற்கு உத்வேகமளிக்கப்படுகிறது. சாதாரணமாக அரிசித் தவிடு, பருத்திக் கொட்டை, புண்ணாக்கு வழங்கப்படுகிறது. பெரும்பாலான கால்நடை வளர்ப்போர், தற்போது வியாபார நிறுவனங்களில் தயாரித்து வழங்கப்படும் கலப்புக் கால்நடைத் தீவனத்தைக் கால்நடைகளுக்கு வழங்கத் துவங்கியுள்ளனர். இந்தக் கலப்பு கால்நடைத் தீவனம் நீங்கலாகப் பெரும்பாலும் வைக்கோல் வழங்கப்படுகிறது. இருப்பினும், பசும்புல் பலன் தரும் கால்நடைகளுக்கு மிக முக்கியம். எனவே பசும்புல் மான்யம் 1978-79ல் விளக்கப்பாத்திகள் அமைப்பதற்கு வழங்கப்பட்டன.

கடந்த ஆண்டுகளில் கூபாபுல், என்.பி.21, பி.என்.2 மற்றும்



ஹாமில் விளைச்சல் செய்வதில் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. உதவிகளும் செய்யப்பட்டன.

தொற்று நோய்களைத் தடுத்தல் இத்திட்டத்தின் ஓர் முக்கியக் குறிக்கோளாகும். எதிர்பாராத கால்நடை இறப்பு, ஒரு சிறு குறு நிலமற்ற விவசாயக் கூலியைப் பெரிதும் பாதிக்கும். நோய்த் தடுப்பு ஊசிகள் முறையாகப் போடப்படுகின்றன. அடிமட்டத்தில் கால்நடைகளுக்கு ஆடுகள் மற்றும் கோழிகள் உட்படத் தடுப்பூசிகள் போடக் கேந்திர கிராமக் கிளை நிலையங்களே உள்ளன. ஆதி திராவிட மக்கள் பெரும்பாலும் கோழிகளையே முக்கியமாக வளர்த்து வருவதால், அவைகளுக்கு முறையான கோழிகளுக்கேற்படும் வெள்ளைக் கழிச்சல் தடுப்பூசி போடப்படுகிறது. எனவே ஒரு பறவையைக் காப்பாற்றுவது ஒரு பறவையை உற்பத்தி செய்வதற்குச் சமமாகும்.

பெருவாரியான மக்கள் தங்களுடைய கால்நடைகளுக்குச் செயற்கைமுறை கருவூட்டல் செய்ய முன்வர வேண்டுமானால், தேவையற்ற கால்நடைகள் தவிர்க்கப்பட வேண்டும். எனவே, தேவையற்ற காளைகளை ஆண்மை நீக்கம் செய்வது, கேந்திர கிராமத் திட்டத்தின்



முக்கியப் பணிகளில் ஒன்று ஆகும். பெரிய அளவில் ஆண்மை நீக்க முகாம்கள், மக்கள் தொடர்பு முகாம்கள் தனிப்பட்ட முறையிலும் நடத்தப்படுகின்றன. இது பொங்கல் சமயத்தில் ஜனவரி மாதம் நடத்தப்படுகிறது.

செயறகைமுறைக் கருவூட்ட தொடர்ந்த பணிகள் - அதாவது சிகிச்சை மற்றும் முதலுதவி, தேவையற்ற கால்நடைகளுக்கு ஆண்மைநீக்கம், நோய்த்தடுப்பு ஊசி போடுதல், குடற்புழு மருந்து கொடுத்தல், இவற்றோடு கால் நடைகளுக்குக் காது எண் இடும் பணியும் நடைபெறுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு கேந்திர கிராம நிலையத்திலும் கன்றுகள் பேரணி நடத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட கன்றுகளுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. துறைப்பணிகளும், கேந்திர கிராமத் திட்டப் பணிகளும் விரிவாக விளம்பரப்படுத்தப்படுகின்றன. மக்கள் தொடர்பு முகாம்களும் முறையாக அனைத்துக் கேந்திரக் கிராம நிலையங்களிலும் நடத்தப்படுகின்றன. அப்போது, சிகிச்சை, நோய்த் தடுப்பூசிப்பணி, ஆண்மை நீக்கம், செயற்கைமுறைக் கருவூட்டல் ஆகியவை நடத்தப்படுகின்றன. அப்போது கூடும் மக்களுக்கு கேந்திரக் கிராமத் திட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் இத்துறை நடவடிக்கைகள் விரிவான முறையில் கூறப்படுகின்றன.

# தஞ்சை மாவட்ட வேளாண்மைப் பணிகள் வளர....

**—ஜி: டி. மோகன்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**

முதற்கட்டமாக 100 பண்ணைக் குட்டைகள் இந்த ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைக்கப்படும். இத்திட்டத்தின்படி 10 ஏக்கர் நிலத்திற்கு ஒரு ஏக்கர் அளவில் ஒரு பண்ணைக்குட்டை அமைக்கப்படும். பாசனத்தின்போது இக் குட்டைகளில் நீர் நிரப்பி வைக்கப்படும். இந்தத் தண்ணீரைக் கொண்டு நீர்த் தட்டுப்பாட்டுச் சமயங்களில் இரண்டு அல்லது மூன்று முறை தண்ணீர் பாய்ச்சி நல்ல மகசூல் பெறமுடியும். ஒரு பண்ணைக் குட்டை வெட்டுவதற்கு ரூ. 48,000 செலவு ஆகும். இந்தத் திட்டம் நிறைவேற்றுவதில் குறிப்பாகக் கடைமடைப் பகுதிகளில் உள்ள சிறு விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்; சிறு விவசாயிகளுக்கு 5 ஏக்கர் நிலப்பகுதியில் ½ ஏக்கர் அளவில் கூட பண்ணைக்குட்டை அமைக்க ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. இதுவரை பண்ணைக்குட்டை அமைக்கக் கோரி 200 மனுக்கள் வந்துள்ளன; அவைகள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. இதற்காக அரசு வங்கிகளில் கடன் வசதி செய்துதர ஏற்பாடு செய்யப்படும் என்று-தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.மா.இராமு, இ.ஆ.ப., செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

இவ்வாண்டு அரிசி உற்பத்தி சிறப்புத் திட்டத்தின் கீழ் 6 இலட்சம் எக்டேர் நிலத்தில் நெல் சாகுபடி செய்திடவும், இவ்வாண்டு உணவு உற்பத்தியை 13.50 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்த்திடவும், அடுத்த ஆண்டில் 14.55 இலட்சம் மெட்ரிக்டன்னாக உயர்த்திடவும் திட்டம்தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காகக் கால்வாய்களைத் தூர் எடுப்பதுடன் கரைகளைப் பலப்படுத்துவது, காவேரி கால்வாய்ப் பகுதிகளை நவீனப்படுத்துவதுடன் குறுகிய காலப் பயிர்க்கடனாக ரூ. 16 கோடி கடனும் வழங்கப்படும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

5000 ஆழ்குழாய்க் கிணறுகள் இந்த ஆண்டில் அமைக்கப்படும். மேலும் விவசாயத்திற்காக இவ்வாண்டு 8500 மின் இணைப்புகளும் கொடுக்கப்படும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் இந்த ஆண்டு ஒரு இலட்சத்து 20,000 எக்டேர் நிலப்பரப்பில் கோடைஉழவு செய்யப்பட்டுள்ளது. 42,000எக்டேர்நிலத்தில் எள் சாகுபடி செய்யப்பட்டு,பயிர் திருப்திகரமாக உள்ளதாகவும், இதனால் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு சுமார் ரூ. 2500 லாபம் கிடைக்க வழியேற்பட்டுள்ளது என்றும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார். இதனால் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குச் சுமார் 2 கோடி ரூபாய் வருமானம் ஏற்பட்டுள்ளது.

சென்ற ஆண்டைவிடஇவ்வாண்டு தஞ்சை மாவட்டத்தில் 4 மடங்கு பரப்பளவு எள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது என்றும் அவர் கூறினார்.

# ஆறாண்டுகளில் 70 ஆயிரம் வீடுகள்

"தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் சென்னை நகரில் கட்டப்பட்ட வீடுகளில் சுமார் 16,000 வீடுகளின் தவணைமுறை முடிவடைந்தும் கிரயப்பத்திரம் கொடுக்கப்படாமல் இருந்தது; ஆகவே சென்னை நகரக் கோட்டங்களை, கிரயப்பத்திரம் கொடுக்கத் துரித நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டது. இப்படிப்பட்ட சுமார் 4000 ஒதுக்கீடுதாரர்களின் கணக்குகள் சரிபார்த்து எவ்வளவு தொகை இன்னும் கட்ட வேண்டும் என்பது ஒதுக்கீடுதாரர்கள் கேட்காமலே அவர்களுக்கு அனுப்பப்பட்டுவிட்டது. ஒதுக்கீடுதாரர்கள் கிரயப்பத்திரம் கேட்டுப் பலமுறை வருவதைத் தவிர்க்க, நிலுவைத்தொகை எவ்வளவு என்று அறிவிக்கும்போதே, கிரயப்பத்திரம் பெற ஒதுக்கீடுதாரர் என்னென்ன சான்றிதழ்கள் கொடுக்கவேண்டும் என்பதும் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிபந்தனைகளை நிறைவேற்றிய இரண்டு வாரத்திற்குள் கிரயப்பத்திரம் கொடுக்கஇயலும்'' என்று 16.5.'88 அன்று நடந்த செய்தியாளர்கள் கூட்டத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவரும் நிர்வாக இயக்குநருமான செல்வி. எம்.எஸ்.ரமேஷ், இ.ஆ.ப., தெரிவித்தார்.

''கிரயப்பத்திரம் பெறுவதில் ஏதாவது சிரமம் ஏற்பட்டால், அதை உடனே சரிசெய்ய உதவ, திங்கள் மற்றும் புதன் கிழமைகளில் செயற்பொறியாளர்கள் கட்டாயம் அலுவலகத்தில் காலை முதல் மாலை வரை இருக்கவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. இருப்பினும் எதிர்பார்த்த வரவேற்புகள் ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து வரவில்லை. சுமார் 300 பேர்கள் மட்டுமே கிரயப்பத்திரம் பெற மனுச் செய்து, பெற்றிருக்கிறார்கள். ஆக இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, கிரயப்பத்திரங்களைப் பெறுவதற்குச் சம்பந்தப்பட்ட செயற்பொறியாளரை அணுகலாம் என்றும் வாரியத்தலைவர் கூறினார்.

மேலும், வீட்டுவசதி வாரியம் ஆற்றிவரும் பல்வேறு பணிகள் குறித்தும் செல்வி எம்.எஸ்.ரமேஷ், இ.ஆ.ப., கூறியதாவது:

''வீடு ஒதுக்கீடுதாரர்களின் கணக்குகளைக் கம்ப்யூட்டரில் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முதல் கட்டமாக கே.கே.நகர் ஒதுக்கீடுதாரர்களின் கணக்குகளைகம்ப்யூட்டரில்கொண்டு வர, தீவிர நடவடிககை எடுக்கப்பட்டு வருகிறது. இது முடிவடைந்ததும் இந்தத் திட்டம் மற்ற கோட்டங்களுக்கும் நீட்டிக்கப்படும்.

''மதுரவாயல் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு வேண்டி மனுச் செய்த 60,000க்கு மேற்பட்ட மனுக்களை கம்ப்யூட்டர் மூலம் ஆராய்ந்து ஒழுங்குபடுத்தி, குலுக்கள் நடத்தி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பல நிதி நிறுவனங்களிடமிருந்து வாரியம் பெற்ற கடன், அந்நிறுவனங்களுக்குத் திருப்பி அளித்தல் போன்றவை கம்ப்யூட்டரில் கொண்டுவரப்பட்டுள்ளன.

''வாரியத்தின் நிதி நிலை, வாரிய ஊழியர்களின் சம்பளப்பட்டியல், வாரிய ஊழியர்களின் வருங்கால வைப்புநிதி முதலியன கம்ப்யூட்டரில் கொண்டுவரப்பட்டுள்ளது.

''நடப்பு நிதியாண்டில் (1988-1989) 21,000 வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை நகர்ப்புறத் திட்டம் II ன் கீழ் மனைகள் மற்றும் பணிப் (Sites and Services) பிரிவில் மணலி மதுரவாயல், மொகப்பேர் (மேற்கு) ஆகிய இடங்களில் நடப்பு ஆண்டில் திட்டம் முடிவடைகிறது;

''மணலி-II திட்டத்தின் மதிப்பு 385.64 இலட்சம்; கட்டப்பட்ட வீடுகள் 2757, ஒதுக்கீடு செய்ய சில நாட்களில் மனுக்கள் வரவேற்கப்படும்.

''மதுரவாயல் திட்டத்தின் மதிப்பு ரூ330.00 லட்சம்; கட்டப்பட்ட வீடுகள்-1569; 493 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 1076 வீடுகளுக்கு 59,200 மனுக்கள் பெறப்பட்டுள்ளன.

''மொகப்பேர் (மேற்கு) திட்டத்தின் மதிப்பு ரூ. 829.66, லட்சம். கட்டப்பட்ட வீடுகள்-5188.எல்லாம் ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டன.

''மேலும், மொகப்பேர் (மேற்கு) திட்டப்பகுதியில் பின்வரும் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. குறைந்த வருவாய்ப் பிரிவு 100இரட்டை வீடுகள், மத்திய வருவாய்ப் பிரிவு 100 இரட்டைவீடுகள், உயர்வருவாய் 'சி' பிரிவு 150 வீடுகள், உயர்வருவாய் 'பி' பிரிவு 108 வீடுகள், ஆக மொத்தம் 458 வீடுகள். இந்த 458 வீடுகளுக்கு 10,875 மனுக்கள் பெறப்பட்டு, 20.5.88இல் குலுக்கல் நடத்த இருக்கிறோம்.







''தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் உலக வங்கி நிதி உதவியுடன் 246.41 கோடி செலவில், தமிழ்நாடு முழுவதும் 2400 ஏக்கர் நிலப்பரப்பில், 5முதல் 6 ஆண்டுகளில் 70,000 வீடுகள் கட்டும் மாபெரும் திட்டம் வீட்டுவசதி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு, இந்த ஆண்டிலிருந்து செயல்படத் தொடங்கியிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ்,

''சென்னையில் 35,000 வீடுகளும்,
மதுரையில் 8,000 வீடுகளும்,
கோவையில் 7,500 வீடுகளும்,
திருச்சியில் 7,000 வீடுகளும்,
சேலத்தில் 4,500 வீடுகளும்,
வேலூரில் 1,600 வீடுகளும்,
ஈரோட்டில் 1,600 வீடுகளும், திருப்பூரில் 1,600 வீடுகளும், திருநெல்வேலியில் 1,600 வீடுகளும், தூத்துக்குடியில்1600, வீடுகளும் கட்டப்படும்.

''இத்திட்டத்தின் முதல் கட்டமாக அம்பத்தூரில் 6,336 வீடுகளும், திருச்சியில் நாவல்பட்டியில் 4,334 வீடுகளும் கட்ட உலகவங்கி ஒப்புதல் வழங்கியுள்ளது.

''சென்னை அருகே உள்ள திருநின்றவூரை அடுத்த திரூரில் 2,395 வீடுகளும், மதுரை அனுப்பானடியில் 4,330 வீடுகளும் கட்டுவதற்கான திட்டங்கள் உலக வங்கி ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது.

''நடப்பு நிதியாண்டில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 33 கோடிசெலவிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது.


''நடப்பு நிதியாண்டில் சென்னையில் டெயிலர்ஸ் ரோட்டிலும், நந்தனத்திலும் இரண்டு பெரிய டவர் பிளாக்குகள்' கட்டும் வேலைகள் தொடங்கவிருக்கின்றன. டெயிலர்ஸ் ரோட்டில் கட்ட இருக்கும் டவர் .பிளாக்' நவீன வசதிகளுடன் 3 படுக்கையறைகள் கொண்டன் 36 வீடுகளும் (ஒவ்வொன்றும் 1485 ச.அ.) 2 படுக்கையறைகள் கொண்ட 38 வீடுகளும் (ஒவ்வொன்றும் 1130 ச.அ) இருக்கும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.4.50 கோடி.

"நந்தனத்தில் கட்டப்படும் 'டவர் 'பிளாக்' 13 மாடிகள் கொண்டதாக இருக்கும். இது முழுக்க முழுக்க வர்த்தக ரீதியிலா... களுடன் கட்டப்படு...மாகும். இதில் 19892 ச...அடி பரப்பளவு உள்ள இடம் ... களுக்கும், அலுவலகங்களு... ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தின் மதிப்பீடு 9.27 கோடியாகும். இக்கட்டடத்தில் சுமார் 200 கார்கள் நிறுத்துவதற்கான வசதி செய்யப்படும்.

''இப்போது நடைமுறையிலிருக்கும் 'காண்ட்ராக்ட்' முறையைத் தவிர்த்து, சென்னை நகரில் 30 கி.மீட்டர் சுற்றெல்லையில் நடக்க இருக்கும் எல்லாக் கட்டுமான வேலையையும் 'என்ஜினியரிங் பிராஜக்ட் ஆப் இந்தியா' நிறுவனத்திடம் ஒப்படைக்க வாரியம் முடிவு செய்திருக்கிறது. இது ஒரு இந்திய அரசு நிறுவனம். இந்த நிறுவனத்திடம் நவீன கட்டடக் கலைக் கருவிகளும், யுக்திகளும் உள்ளன. இந்நிறுவனத்திடம் கட்டடம் கட்டும் வேலைகளை ஒப்படைப்பதால், கட்டடங்கள் தரமானதாக இருக்கும். கட்டும் பணி குறிப்பிட்ட காலவரையறைக்குள் முடிவடையும்

''வாரியத்தில், மக்கள் குறைகளைக் கேட்டு உடனடியாக ஆவன செய்ய, மக்கள் குறைகேட்கும் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர், நந்தனம் தலைமை அலுவலகத்தில் செயல்படுகிறார். பொது மக்கள் தங்கள் முறைகளை அவரிடம் கூறி நிவாரணம் பெறலாம்."

—நமது செய்தியாளர்



# மேம்படுத்தப்பட்ட அடுப்பும் பயனும்

இருபது அம்சத் திட்டத்தின் ஒரு பகுதியாக ஊர்ப் பகுதிகளில் ஏழை மக்களின் வறுமை போக்கும் முகத்தான், எரிசக்தித்தேவையைப்பூர்த்தி செய்யும் பொருட்டு, மத்திய அரசு நேரடியாகவும் மாநில அரசு மூலமாகவும் கோடிக்கணக்காக நிதி ஒதுக்கி, செலவு செய்து வருகிறது. சுய தேவைப் பூர்த்தி மற்றும் தேசியக் கண்ணோட்டத்தில் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இருவழிகளில் இத்திட்டம் செயலாக்கப்படுகிறது.

**இயற்கை வளம்**

இயற்கையாக வீணாகும் 'பயாகேஸ்' எனப்படும் சாண எரி வாயுவைச் சேகரித்துப் பயன்படுத்துதல், சூரிய அடுப்பு, சூரிய ஒளி சக்தி நீரிறைக்கும் இயந்திரம் மற்றும் காற்றாலை நீரிறைக்கும் இயந்திரம் போன்றவைகளை ஊக்குவித்தலாகும் இது.

**சேமிப்பும், சீர்மிகு வாழ்வும்**

எண்ணெய், விறகு போன்ற எரி பொருளைக் குறைவாகப் பயன்படுத்துவதோடு புகையை வெளியேற்றி, கண் மற்றும் உடல் உறுப்புகளைக் கேடில்லாமல் இருக்கச் செய்வதோடு வீட்டையும் வீட்டிலுள்ள பொருட்களையும் கரி பிடிக்காதபடி செய்து, வீடும் அழகு கெடாதபடி பாதுகாக்கிறது இம்முறை அடுப்பு.

தமிழ்நாட்டில் தமிழ்நாடு எரி சக்தி வளர்ச்சி நிறுவனம் இதனைச் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு அரசு மேம்படுத்தப்பட்ட அடுப்பின் மூலம் ஏழைமக்கள் பயன்பெறுமாறு பயிற்சிகள் நடத்துகிறது. ஆண்டுதோறும் 80 பயிற்சி முகாம்களில் 1600 பேர் வரை பயிற்சி பெறுகிறார்கள்.

இதன் அமைப்பு மற்றும் பயன்களைக் காண்போம் :—

**நோக்கம்**

ஊரகப் பெண்கள் அனைவரும் சமையலுக்கு விறகையே எரி பொருளாகப் பயன்படுத்தி வருகின்றனர். பலவித விறகு அடுப்புக்களையும் பயன்படுத்தி வருகின்றனர். பயன்படுத்தப்பட்டு வரும் விறகு அடுப்புகள் அனைத்திலும் புகை வெளியே செல்லுவதற்கு எவ்வித அமைப்பும் கிடையாது. புகை வீட்டிற்குள்ளேயே இருப்பதனால், சமையல் செய்யும் பெண்களுக்கும் மற்றும் குடும்பத்தார்களுக்கும் கண்ணெரிச்சல் போன்ற பல தொல்லைகளும் நோய்களும் உண்டாகின்றன.



இந்தத் தொல்லைகளை நிவர்த்தி செய்வதற்காக நமது அரசாங்கம் எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவுதான் இந்த மேம்படுத்தப்பட்ட அடுப்பு அமைக்கும் திட்டம், இந்த மேம்படுத்தப்பட்ட அடுப்பை ஊரகப் பகுதிகளில் அமைப்பதனால், வீட்டிற்குள் புகை தங்காமல் குழாய் வழியாகப் புகை வெளியே செல்கிறது. இதனால், பெண்கள் எந்தவித இடையூறோ, சங்கடமோ இல்லாமல் சமையல் செய்ய முடிகிறது. மேலும் இந்த மேம்படுத்தப்பட்ட அடுப்பை எல்லா கிராமப் பகுதிகளிலும் அமைக்க அரசு திட்டமிட்டிருப்பதால், இதில் ஊரகப் பெண்களுக்கும், ஆண்களுக்கும் பயிற்சி கொடுத்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வழிவகை செய்கிறது. இந்த அடுப்பைப் பயன்படுத்துவதனால், விறகுச் செலவும் மிச்சமாகிறது.

கிராமப் பகுதிகளில் இந்த அடுப்பு அமைக்க முன் வருபவர்களுக்கு அரசு இலவசமாகவே அடுப்பு அமைத்துக் கொடுப்பதுடன் அதற்கு தேவையான தொழில் நுணுக்கங்களையும் பெற வழி வகைகள் செய்கிறது. ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் ஆண்டுதோறும் ஒரு லட்சம் அடுப்புகள் அமைக்கப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியத்தில், ஒன்றுக்குக் குறையாமல் ஒவ்வொரு ஆண்டும் புகையில்லாக் கிராமங்களும் உருவாக்கப்படுகிறது.

மேம்படுத்தப்பட்ட அடுப்பு அமைக்கும் பயிற்சியில் மண்பாண்டத் தொழில் தெரிந்த 20 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் ஆண், பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம். இந்தப் பயிற்சியில் அடுப்பு அமைக்கத் தேவையான பொருட்களைக் கலக்கும் விதம், அடுப்புகளின் அளவுகள், பைப் மாட்டும் விதம் போன்றவைகளைப் பற்றிக் கற்பிக்கப்படுகிறது. பயிற்சிக் காலம் 10 நாட்கள். இந்தப் பயிற்சிக் காலத்தில் ஒரு பயிற்சியாளர், 3 அடுப்புக்களுக்குக் குறையாமல் அமைக்க வேண்டும். பயிற்சி முடிவில் பயிற்சி பெற்றதற்காகச் சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சிக் காலத்தில் நாள் ஒன்றுக்கு ரூ. 20 வீதம் உதவித்தொகையும் வழங்கப்படுகிறது.

இரண்டு விதமான அடுப்புக்கள் உள்ளன. அவை—1. சுட்டடுப்பு 2. மண் அடுப்பு.

**சுட்டடுப்பு**

மண் பாண்டங்கள் செய்வது மாதிரி, அடுப்பும் புகைக் குழாய்களும் செய்து சுட்டெடுப்பது. இதில் 'மகன்சூழா' எனப்படும் கல்லுப்பட்டி அடுப்புகள் பெரும் அளவில் கடைகளில்கூட விற்கப்படுகின்றன. அதை வாங்கி வீட்டில் பொருத்திக் கொள்ளலாம்.

**மண் அடுப்பு**

மண் அடுப்பு அமைப்பதற்குமுன் தேவையான கீழ்க்கண்ட கச்சாப் பொருட்களைச்சேகரித்துக்கொள்ள வேண்டும்.

ஒரு அடுப்பு அமைப்பதற்குத் தேவையான கச்சாப் பொருட்கள் விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| வண்டல் கலந்த மண் | 15 சட்டி |
| மாட்டுச் சாணம் | 3 சட்டி |
| வைக்கோல் கூளம் | 2 சட்டி |
| மரத் தூள் | 2 சட்டி |
| 3½'' விட்டமுள்ள 1 அடி உயரமுள்ள மண்குழாய் | 10 |
| கூடார அமைப்புள்ள புகை போக்கி | 1 |
| 7½'' விட்டமுள்ள இரும்புச் சாம்பல் தட்டு | 1 |

மேலே கண்ட விகிதப்படிஅடுப்புகளின் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு கச்சாப் பொருட்கள் சேகரித்துக் கொள்ள வேண்டும். பின்னர் வண்டல் கலந்த மண்ணைச் சிறி


மு. லஜபதி

**ஊரக வளர்ச்சி இணை இயக்குநர்-முதல்வர்**

**ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையம்**

**தே.கல்லுப்பட்டி.**


## வாடும் கலைஞர்கள் வளமபெற உதவி

**கலை இலக்கியத் துறைகளுக்கு (சாஸ்திரீய சங்கீதம், நாட்டியம், நாடகம், வாத்தியக் கருவிகள், கிராமியக் கலைகள், திரைப்படம், ஓவியர்கள், சிற்பிகள்) குறிப்பிடத் தக்க சிறப்புப் பணியாற்றிய 58 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்கள், தற்போது வருமானம் இன்றி வறுமையால் வாடும் நிலையில் இருந்தால் மாநில அரசு உதவி மானியத் திட்டத்தின்கீழ், மானிய உதவிக்கு விண்ணப்பிக்கலாம். அதற்கான விண்ணப்பங்களைக் கீழ்கண்ட முகவரிக்கு விரைவில் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்:-**

செயலாளர்,
தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்,
'தென்றல்', கிரீன்வேஸ் சாலை,
சென்னை-600 028.

**பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், மன்றத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசித் தேதி 30-6-1988. இந்தத் தேதிக்குமேல் வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டா. ஏற்கெனவே உதவி மானியம் பெற்று வருபவர்கள் விண்ணப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. 1984, 1985 ஆகிய ஆண்டுகளில் விண்ணப்பித்துள்ள கலைஞர்கள் புதிதாக விண்ணப்பிக்க வேண்டியதில்லை.**

**குறிப்பு : ஓவியர், சிற்பிக் கலைஞர்கள் மாத்திரம்**

செயலாளர்,
தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு,
கவர்ன்மெண்ட் மியூசியம் காம்பஸ்,
பாந்தியன் ரோடு,
எழும்பூர்,
சென்னை-600 008.

**என்ற முகவரிக்கு மேற்படி திட்டத்திற்கான விண்ணப்பங்களை விரைவில் எழுதிப் பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 30-6-1988 தேதிக்குள் 'தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுவிற்கே' அனுப்பி வைக்க வேண்டும்.**

...ட்டு, கட்டி ஏதுமில்லா ...ாகக் குழைக்க வேண்டும். ...ர், மாட்டுச்சாணம், வைக் ...ல், கூளம், மரத்தூள் போன்ற ...றை அத்துடன் கலந்து வைக்க ...வண்டும். குழைத்து வைக்கப்பட்ட கலவையானது பூசும் அளவுக்குக் கட்டியாக இருக்க வேண்டும். இந்தக் கலவையை ஒருநாள் அப்படியே விட்டு வைத்திருந்தால் வைக்கோல், கூளம், மரத்தூள் போன்றவைகள் அழுகி, கலவையுடன் கலந்து நல்ல கெட்டிப்புத் தன்மையை உண்டாக்கும். ஒரு நாள் கழிந்த பின்னர் இந்தக் கலவையை அடுப்பு அமைக்கப் பயன்படுத்தலாம்.

முதலில் இந்தக் கலவையைக் கொண்டு சமையலறையில் அடுப்பு அமைக்க வசதியான இடத்தில் $2\frac{3}{4}$'' X $1\frac{3}{4}$'' X $10\frac{1}{2}$'' அளவில் ஒரு மேடையமைக்க வேண்டும். பின்னர் இந்த மேடையை ஒருநாள் முழுவதும் நன்கு காயவிட்டு, பின்னர் பானைகள் வைக்கும் துவாரம், விறகு வைக்கும் துவாரம், காற்றுச் செல்லும் துவாரம் போன்றவைகளைப் படத்திலுள்ளபடி, அளவுப்படி கம்பி கொண்டு தோண்டிச் சரி செய்ய வேண்டும்.

பின்னர் புகை செல்லும் துவாரத்திலிருந்து மண் குழாய் பதித்து அதன் மேல் ஒன்றன் மீது ஒன்றாக வீட்டில் கூரைக்கு மேல் ஒரு குழாய் வரும்வரை அடுக்கிக் கொண்டு செல்ல வேண்டும். பின்னர் இந்த 1' மண் குழாயின் மேல் கூடார அமைப்புள்ள மண் குழாயை வைக்க வேண்டும். இதை அமைப்பதனால் மழை நீர் அடுப்புக்குள் படாமல் தடுக்கும். இவ்வாறு அமைக்கப்பட்ட அடுப்பைப் பயன்படுத்துவதனால், புகை, குழாய் வழியே வெளியே செல்கிறது.

மேம்படுத்தப்பட்ட அடுப்பைப் பயன்படுத்துவதனால் உண்டாகும் நன்மைகள் :

புகை குழாய் வழியே உயரே போய் வெளியே செல்கிறது.

தீ எரிய வைப்பதும், பற்ற வைப்பதும் எளிது; சாம்பல் தட்டிற்கு அடியில் இருந்து காற்று உள்ளே வருவதால், தீ நல்லமுறையில் எரிய முடிகிறது. ஊதுகுழல் வைத்து ஊத வேண்டிய அவசியமில்லை.

விறகு எரிவதனால் கிடைக்கக் கூடிய உஷ்ணமானது முழுவதும் பயன்படுத்தப்படுகிறது. மற்ற விறகு அடுப்புக்களைக் காட்டிலும் இந்த அடுப்பில் மூன்றில் ஒரு பங்கு விறகே செலவாகிறது.

விறகுக்குப் பதில் நிலக்கரி கொண்டு எரிப்பதற்கும் ஏற்றவாறு இந்த அடுப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

சமையலறை மற்றும் பாத்திரங்கள் அதிகமாகக் கரிபிடிக்காமல் இருக்க உதவுகிறது.

ஒரே சமயத்தில் இரண்டு மூன்று பானைகள் வைத்துச்சமையல் செய்வதனால் சமையல் சீக்கிரம் முடிவடைவதுடன் விறகும் மிச்சப்படுகிறது.

சமையல் செய்பவரை உஷ்ணம் தாக்காது. சமையல் செய்வதற்குக் காற்று உட்செல்லுவதால், சமையலறைக்குள் புதிய காற்று நுழைகிறது.

இரண்டாவது மற்றும் மூன்றாவது பானைக்கு வரும் உஷ்ணத்தைக் கொண்டு வறுத்தல் மற்றும் காய வைத்தல் போன்ற வேலைகளைச் செய்து கொள்ளலாம். இது தவிர, ஈரமான விறகு சுள்ளி போன்றவைகளைக் காய வைத்துக் கொள்ளலாம்.

சமையல் சீக்கிரமே முடித்து விடுகிறபடியால் மீதமுள்ள நேரத்தை வேறு வேலைகளுக்குப் பயன்படுத்தலாம்.

மேம்படுத்தப்பட்ட அடுப்பின் தனித் தன்மைகள் விவரம் வருமாறு:

உள்ளூரிலேயே எந்தத் தனி உபகரணங்களும் இல்லாமல் கையினாலேயே செய்யக் கூடியது.

இந்த அடுப்பை உருவாக்குவதும் இதில் ஏற்படும் பழுதுகளை நிவாரணம் செய்வதும் மிகவும் எளிது.

மேம்படுத்தப்பட்ட அடுப்பானது நீண்டநாள் உழைக்கக் கூடியது. வலுவான கனமான பாத்திரங்கள் கொண்டு சமையல் செய்தாலும் அடுப்புக்குச் சேதம் உண்டாகாது.

தீ செல்லும் பாதை மற்றும் அதனுடைய திசை போன்றவைகள் நல்லமுறையில் இருப்பதனால், உஷ்ணம் இரண்டாவது பானைக்குச் செல்கிறது. இதனால், எரிபொருள் மிச்சப்படுகிறது.

வீட்டின் அமைப்புக்கு ஏற்ப, அடுப்பின் புகைபோக்கியை வலது புறமோ அல்லது இடது புறமோ அமைக்கலாம்.

மதுரை மாவட்டம், தி. குன்னத்தூர் கிராமத்தில் நடந்த பயிற்சியின் காரணமாக, குடியிருப்பு வீடுகள் முழுதும் புகையில்லாமல் செய்யப்பட்டது. இது போல் எல்லாக் கிராமங்களும் இந்த அடுப்பினை அமைத்துப் பயன் பெறலாம்.

# பரிசுபெற்ற தமிழ்நாடு கனிம நிறுவனம்



தமிழகக் கனிம நிறுவனம் 1986-87-ஆம் ஆண்டிற்கான இந்தியா-ஜெர்மன் பொருளாதார உறவு வளர்ச்சிக்கான, மெச்சத்தக்க ஈடுபாட்டிற்கான, பரிசு பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இதற்கான பாராட்டு மற்றும் பரிசளிப்பு விழா 22-4-88 அன்று பம்பாயில் உள்ள 'எக்ஸ்பிரிமென்டல் தியேட்டர்' அரங்கத்தில் நடைபெற்றது.

இந்த வர்த்தகக் கழகத்தின் தலைவரான திரு ஹோசர், இந்தியா - ஜெர்மன் வர்த்தகக் கழகத்தில் 1986-ஆம் ஆண்டு செயல்பாட்டினைக் குறிப்பிட்டு, ஜெர்மனிக்கு வெளியே நடந்த மிகப்பெரிய தொழிற் கண்காட்சி இவ்வாண்டு மார்ச் மாதம் புதுடில்லியில் நடைபெற்றதற்காகத் தமது மகிழ்ச்சியினைத் தெரிவித்தார். விழாவில் கலந்து கொண்ட முக்கியமானவர்களில் இந்தியா - ஜெர்மன் வர்த்தகக் கழகத்தின் செயல் திறன் இயக்குநரான திரு. குருகரும், பன்னாட்டு சக்தி ஸ்தாபனத்தின் செயல்பாட்டு இயக்குநரான திருமதி ஸ்டீக் என்பவரும் குறிப்பிடத்தக்கோர் ஆவர்.

தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் சார்பாக இந்நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் டாக்டர் ச. சரவணன், சிறந்த ஏற்றுமதிக்கான விருதினைப் பெற்றுக் கொண்டார்.



## பாஞ்சாலங்குறிச்சி
# கட்டபொம்மன் விழா



வரலாறு சில வீரர்களைப்படைக்கிறது. வீரர்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய வெகு சிலரே வரலாறுகளைப் படைக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சிலருள் ஓங்கி உயர்ந்து நிற்பவன் வீரபாண்டிய கட்டபொம்மன்.

தமிழ்நாடு அரசின் சார்பில் வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவு நாள் விழா, சிதம்பரனார் மாவட்டம் பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் கோட்டையில் 13, 14-5-'88 ஆகிய நாட்களில் மிகச் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

கட்டபொம்மன் காலத்திற்கே சென்றுவிட்டதுபோலவும், அவனது கோட்டை கொத்தளங்களிலிருந்து அவனோடு உறவாடி மகிழ்ந்து, அவனது அருமை பெருமைகளை உணர்ந்து இதயம் இறும்பூது எய்தியதுபோலவும் மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்ததைப் பார்க்க முடிந்தது.

நோக்கும் இடமெங்கும் நீக்கமற மக்கள் கூட்டம்; அவர்களது முகங்களில் ஆனந்தக் களிப்பு; செயல்களில் சுறுசுறுப்பு; சேர்ந்து போவது சேர்ந்து உண்பது, சேர்ந்து உரையாடுவது என்று ஒற்றுமையின் பிரதிபலிப்பு, ஒரே ஆவேச எழுச்சி, ஆக்கபூர்வ நடவடிக்கைகள் !

நமக்குத் தெரியாத நம்முடைய பெருமைகள் எவ்வளவு குவிந்து கிடக்கின்றன! அவற்றைப் பற்றிப் பெருமிதம் கொள்வதைவிட்டு, நம்முடைய சிறுமைகளைப் பெரிதுபடுத்திப் பேசியே சிலர் சீரழிந்து போகிறார்களே என்று எண்ணிய போது சிந்தை நோகாமல் இருக்க முடியவில்லை! சிலிர்த்தெழும் புதிய பாரதத்தைப் பாஞ்சாலங்குறிச்சியில் நம்மால் பார்க்க முடிந்தது.

உருவும் திருவுமிக்க வீர இளைஞர்கள், 300 பேர், வெள்ளைப் பனியனும் வெள்ளை அரைக்கால் சட்டையும் சீருடையாகக் கொண்டு கொளுத்தும் வெயிலைப் புன்னகையோடு தாங்கிக்கொண்டு, திருச்செந்தூரிலிருந்து பாஞ்சாலங்குறிச்சிக்கு 65 கி.மீ. தூரம், கொளுத்திய வீரபாண்டிய கட்டபொம்மன் ஜோதியை எடுத்துக் கொண்டு தொடர் ஓட்டமாக ஓடி வந்தார்கள். தலையில் மஞ்சள் ரிப்பன், வாயில் ''வீரவேல்! வெற்றிவேல்!'' முழக்கம். உருவிய வாளுடன் உருண்ட தோளுடன் அவர்கள் மேடைக்கு வந்த காட்சி, வீரம் கொப்பளிக்கச் செய்தது. வீர சக்கம்மாவைப் பணியும் நோன்பினர் - புனித உணர்வினைப் பேணும் பண்பினர்.

சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து மக்கள் பாஞ்சாலங்குறிச்சி நோக்கி வந்தவண்ணம் இருந்தனர். மாட்டு வண்டிகளில் குடும்பம் குடும்பமாக வந்தவர் ஏராளம்! வீர சக்கம்மாவுக்குப் பொங்கலிட்டு, கட்டபொம்மன் கோட்டையில் இளைப்பாறி, அவனது வரலாற்றுப் பெருமைகளைத் தங்களது உள்ளத்தில் மீண்டும் பதித்துப் புத்துணர்ச்சி பெற்றவர் பல்லாயிரக் கணக்கில்! மண் உருகும் வெயிலிலும் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தது யார் மனதையும் உருக வைக்கும். மாலை தவழ்ந்து, இருள்சூழ ஆரம்பித்த போது, மின்விளக்கு அலங்காரங்கள் கண்ணைப் பறித்தன. கட்டபொம்மன் கோட்டை மதில்கள் கந்தர்வலோகமாகக் காட்சியளித்தன.

விழாப்பந்தல் வழிந்தது. வெற்றிலை பாக்கு வைத்து வருந்தி அழைத்திருந்தால்கூட, பிற இடங்களில் இப்படிப்பட்ட கூட்டத்தைப் பார்த்திருக்க முடியாது. அப்படிக் கூட்டம்—ஆடவர், மகளிர், குழந்தைகள் ! 'மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவியழைப்பார் இங்கு யாருண்டு?' என்ற பாட்டே நினைவுக்குவந்தது.

விழாவுக்கு வந்திருந்தவர்களை, விழாக்குழுவின் சார்பில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. க. சுப்பு வரவேற்றுச் சிறப்பாகப் பேசினார்.



திரு சீனி கந்தசாமி பேசுகையில்
ட்டபொம்மன் பெயரில் ஒரு
ல்லூரி வேண்டும் என்று கேட்டார்.
ந காலத்தில் ஜமீன்தார்களாக
ருந்தவர்கள் இன்று ஜாமீன்தார்
ாக இருக்கின்றார்கள் என்றார்.

முன்னாள் சட்டமன்ற உறுப்
னர் திரு ஆர். எஸ். ஆறுமுகம்
பசுகையில், எங்கள் தொகுதி
ட்டப்பிடாரம்) வீரபாண்டிய
ட்டபொம்மனைப் பெற்றெடுத்த
தாகுதியென்று, பெருமைப்பட்
ார்.''கட்டபொம்மனைத் தெய்வ
கக் கொண்டாடினார்கள்இந்தப்
தியில் உள்ள 96 கிராம மக்கள்;
ஞ்சாலங்குறிச்சிப் போரில் ஒரு
ய் தன் மகன் குண்டடிபட்டுக்
ப்பதைப் பார்க்கிறாள். அருகில்
ன்று அவனைக் காப்பாற்றப்
ாகிறாள். அப்பொழுது அந்த
ன் சொல்கிறான். 'ஊமைத்
ரை சாமி குற்றுயிராய்க் கிடக்கி
ர்; அவரைப் போய்க் காப்
ற்று' என்று. அந்தத் தாய்,
மகனை விட்டுச் சென்றுஅதனை
றவேற்றுகிறாள். ஜாதி பேத
ல்லாமல் கட்டபொம்மன்
லைமையின் கீழ் மக்கள் உயிர்த்
ாகம் செய்திருக்கிறார்கள்'' என்
ர்.

வ.உ.சி. யின் பேரர் திரு வ.உ.சி
சண்முகசுந்தரம்: "வாழ்நாளில்
க்க முடியாத பொன்னாள் இது.
திருமண நாளைவிட மேலான நாள். ஒரு நாடு, அரசு, தலைவன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவன் கட்டபொம்மன். மக்களுக்கு அவன் நினைவு வந்தாலே சுதந்தர ஆவேசம் வந்துவிடும் என்று வெள்ளைக்காரர்கள் பயந்தார்கள். வ.உ.சிக்கே சுதந்தர உணர்வூட்டியவன் கட்டபொம்மன்.''

திருமதி நாகபூஷணம்: ''அந்நியர்கள் கட்டபொம்மனை அழிக்கச் சூழ்ச்சி செய்து அவன் மேல் இல்லாத, பொல்லாத குற்றச்சாட்டுகளையெல்லாம் சுமத்தினார்கள். அவை குற்றங்களே அல்ல. இன்றைக்கும் சில அந்நிய உணர்வுகள் நம்மிடையே சிலருக்கு இருக்கின்றன. அவை போக வேண்டும். கட்டபொம்மன் சிறந்த பக்திமானாகவும் விளங்கினான்''.

டாக்டர் கே. பி. கிருஷ்ண செட்டி: ''பல நூற்றாண்டுகளுக்கு ஒரு தடவைதான் கட்டபொம்மனைப் போன்ற மாவீரர்கள் தோன்றுவார்கள். அவனது வீரம், மனவுறுதி, கண்ணியம், சுதந்தர வேட்கை இவையெல்லாம் என்றும் அழியாதவை''.

திரு பி.டி. ஆர். பழனிவேல் ராஜன்: ''வீரம் விளைந்த இந்த மண்ணிலே வீரத்துக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவன் வீரபாண்டிய கட்டபொம்மன். ராஜகம்பளத்தார் இனத்துக்கும் எங்கள் மூதாதையருக்கும் 4 தலைமுறையாகத் தொடர்பு உண்டு. கட்டபொம்மன் கோட்டை இன்றைக்கு இந்திர லோகமாகக் காட்சியளிக்கிறது.''

வீரபாண்டிய கட்டபொம்மன் கலைக்கூடத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு தமிழ் வளர்ச்சி உயர் நிலைக் குழுத்தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. உணர்ச்சிப் பேருரையாற்றினார். அதன் சுருக்கம்:

''கட்டபொம்மன் புகழ் பரப்புவது தமிழகத்தில் ஒரு பேரியக்கமாக உருவாக்கப்பட்டது. ஆங்கிலேயர் எழுதி வைத்துவிட்டுப்போன அபாண்டங்களைப் பிடித்துக் கொண்டு, எனக்குச் சரித்திரம் தெரியாது, கட்டபொம்மன் சுதந்தர வீரன் அல்ல என்றெல்லாம் சிலர் தூற்றினார்கள்.

"கால்டுவெல் பாளையக்காரர் போர் என்றே மூன்று சண்டைகளைக் குறிப்பிட்டு எழுதியிருக்கிறார். முதல் போர் கட்டபொம்மன் நடத்தியது, இரண்டாவது, ஊமைத்துரை நடத்தியது, மூன்றாவது, மருது பாண்டியர் நடத்தியது.

''என்னடா என்னடா கட்டபொம்மா, எப்போது பார்த்தாலும் கத்திச் சண்டை என்று சிறுவனாக இருந்த என் பையன் பாடினான். திருநெல்வேலிப் பகுதியில் கம்பளத்தார் நடத்திய தெருக்கூத்துகள் பலவற்றைப் பார்த்தேன். இவையெல்லாம் கட்டபொம்மன் பற்றிய விழிப்பை எனக்கு ஏற்படுத்தின.

''ஆங்கிலேயர்கள் கட்டபொம்மன் கட்டிய கோட்டையை இருந்த இடம் தெரியாமல் தரைமட்டமாக்கியது போல வேறு கோட்டைகளைச் செய்யவில்லை. அந்த அளவுக்கு அவர்களுக்கு அவன் மேல் ஆத்திரம் இருந்தது. அவனது சந்ததியாரை மிருகத்தனமாக வேட்டையாடினார்கள்.

''ஒரு வீரன் தப்பிக்க மரத்தின் மேல் ஏறினான். அவனை வெள்ளைக்காரர்கள் கீழேயிருந்து சுட்டார்கள். அந்தக் குண்டு ஆசன வழியாகப் போய், மண்டை வழியாக வெளி வந்தது.

"அடி வயிற்றிலிருந்து நெஞ்சு வரை உணர்ச்சி மேலிட்டு ஆயிரங் கூட்டங்களில் பேசியதன் விளைவாக வீரபாண்டிய கட்டபொம்மன் இன்றைக்குத் தமிழ்நாட்டில் விடுதலைக்கு வித்திட்ட வீரனாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறான்.

''1857 சிப்பாய்க் கலகம், முதல் சுதந்தரப் போராட்டமாகச் சொல்லப்படுகிறது. அதற்கும் முன்னால் வெள்ளையரை எதிர்த்த விடுதலை வீரன் வீரபாண்டிய கட்டபொம்மன்; 1792-இல் ஆட்சிக்கு வருகிறான், 1799-இல் தூக்கிலிடப்படுகிறான்.

''இந்தியாவின் சுதந்தரப் போராட்ட சகாப்தத்தை மூன்று கட்டமாகச் சொல்லலாம். மன்னர்கள் சகாப்தம், திலகர்-வ.உ.சி. சகாப்தம், காந்திஜி, ராஜாஜி சகாப்தம். மன்னர்கள் சகாப்தத்துக்கு முன்னோடி கட்டபொம்மன், இப்படிப்பட்ட மாவீரன் இந்தியாவில் இல்லை.

''நாட்டுக்குச் சுதந்தரம் தேடிக் கொடுத்தவர்களை நாட்டு மக்கள் மறக்கக்கூடாது. தேசத்திற்காகக் கட்சி, கட்சிக்காக நான் என்ற உணர்வுதான் இருக்க வேண்டுமே தவிர, எனக்காகக் கட்சி, கட்சிக்காக நாடு என்ற உணர்வு கூடாது''

மாண்புமிகு உயர்நீதி மன்ற நீதிபதி திரு பி.கே. சேதுராமன் அவர்கள் தமது தலைமையுரையில்:

''திருநெல்வேலி மாவட்டம்என்று இருந்ததை இரண்டாகப் பிரித்து நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், வ.உ.சி. மாவட்டம் என்று இரண்டாகப் பெயர் வைத்திருக்கிறார்கள். இந்தப் பெயர்கள் சரித்திரத்தில் இடம் பெற்ற பெயர்கள். 40 ஆண்டுகளுக்கு முன்னால் என்னைப் போன்றவர்கள் பள்ளியில் படித்தபோது, கட்டபொம்மனைப் பற்றிப் பள்ளிப் பாடப் புத்தகத்தில் பாடம் கிடையாது. பின்னால் வெளியில் படித்துத்தான் தெரிந்துகொண்டோம். ஆனால் இன்று அப்படியில்லை. பள்ளிகளில், பாட நூல்களில் இந்தச் சரித்திரங்களைச் சொல்லித் தருகிறார்கள். நாட்டுக்குச் சுதந்தரம் கிடைத்ததால் ஏற்பட்ட பலன் இது. பெரும் தியாகங்கள் செய்து பெற்ற சுதந்தரத்தை நாம் அனைவரும் பேணிக் காக்க வேண்டும்.

'வீரபாண்டிய கட்டபொம்மன் படையில் இருந்த இப்ராகிம் என்ற வீரன் போரில் காயமடைந்து இறக்கும் தறுவாயில், தன்னை வெள்ளைக்காரத் தளபதியிடம் கொண்டு போகச் சொன்னானாம். 'நான் சாகும்போது எப்படி வீரமாகச் சாகிறேன் பார்' என்று அவன் அந்த வெள்ளைக்காரத் தளபதியைப் பார்த்துச் சொன்னதாக வரலாற்றிலே நாம் பார்க்கிறோம். தேசபக்தியில் ஜாதி இல்லை.''

'வீரபாண்டியன்' இதழாசிரியர் திரு. மு. சங்கரவேலு நன்றி நவின்றார்.

இதன் பிறகு, கட்டபொம்மன் புகழுக்குக் காரணம் அவனது வீர நெஞ்சமா, ஈர நெஞ்சமா என்பது பற்றிப் பட்டிமன்றம், டாக்டர் பூ. சொல் விளங்கும் பெருமாள் தலைமையில் நடைபெற்றது.

'வீர நெஞ்சமே' என்ற அணியில் திரு வி. இராசாராம், திரு அ.மு.இ. காந்தி ராசன், திரு ந.தேவசகாயம், திரு சீனிசாமி ஆகியவர்களும், 'ஈர நெஞ்சமே' என்ற அணியில் திரு த.கு. சுப்பிரமணியன், திரு சி. பால்ராசா, திரு சிவ நித்தியானந்தம், திரு ஜெயராம் காந்தி ஆகியவர்களும் வாதாடினர்.

கிராமியக் கலை நிகழ்ச்சிகள், மற்றும் வீரபாண்டிய கட்டபொம்மன் நாடகம் நடைபெற்றன.

முதல் நாள் நிகழ்ச்சிகள் முடுக்கி விட்ட உற்சாகத்திற்கு முத்தாய்ப்பாய் அமைந்தன, இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்.

முந்திய நாளைப் போலவே அன்றும் சிறப்புமிகு வரவேற்புரை நிகழ்த்தினார் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் திரு. க. சுப்பு.

''வீர சக்கதேவிக்கு உருவம் கிடையாது. வீரத்தைத்தான் வணங்கினார்கள். பூசித்தார்கள். வாளை வைத்துத்தான் வணங்குவார்கள். வாள்தான் உருவம். வீர பொம்மு, வீர சின்னு, வீர சக்கம்மா என்று வாளை வைத்துத் தான் பெயர் வந்தது.

'பாஞ்சாலங்குறிச்சிப் போருக்குப் பிறகு வெள்ளையர்கள் பாஞ்சாலங் குறிச்சி என்ற பெயரையே சொல்



லக்கூடாது என்று உத்தரவு போட்டார்கள். கோட்டைமேடு என்றுதான் சொன்னார்கள். மக்கள் பயந்துகொண்டு நடு நிசியில் வந்து சாமிகும்பிட்டுவிட்டுப்போவார்கள். அப்படி நள்ளிரவில் வழிபாடு செய்யும் வழக்கம் ஏற்பட்டது.

'இந்தியாவுக்குக்கூட நள்ளிரவில்தான் சுதந்தரம் கிடைத்தது. அதனால்தான் இன்னும் விடியவில்லையென்று சில பேர் சொல்வார்கள். அவர்கள் இன்னும் இருளிலிருந்து வெளிச்சத்துக்கு வராதவர்கள்.''

மாவட்ட வருவாய் அலுவலர் திரு பி. சௌந்தரராசன் பேசுகையில், ''வீரபாண்டிய கட்டபொம்மன் ஒரு சுதந்தர வீரன். அவனுக்குப் பெருமை சேர்க்கும் விழா இது. அன்னை ஜக்கம்மா அனைவரையும் காக்க வேண்டும்'' என்றார்.

திரு வி.எஸ். ராஜா: ''தெய்வ பக்தியும் தேசபக்தியும் நிறைந்த விழா.''

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கடலூர் திரு முத்தையா: ''இந்த மண் வீரத்தின் விளைநிலம். 'வீரபாண்டிய கட்டபொம்மன் இந்திய சுதந்தரத்துக்கு வீர முழக்கமிட்டவர்.''

திரு கே.எஸ். குட்டி: 'கட்டபொம்மன் தேசீயத் தலைவர். இந்த விழா வருடா வருடம் கொண்டாடப்பட்டாலும் இப்பொழுது ஆளுநர் ஆட்சியில் கொண்டாடப்படுவதால், மைய அரசே விழா எடுப்பதாகத்தான் கொள்ள வேண்டும். கட்டபொம்மன் சரித்திரத்தை வருங்காலச் சந்ததியினர் தெரிந்து கொள்ள வேண்டும். வாகைக்குளம் விமான தளத்திற்குக் கட்டபொம்மன் பெயர் வைக்க வேண்டும்.''

ஓட்டப்பிடாரம் ஊராட்சிஒன்றியப் பெருந்தலைவர் திரு தருமராஜ்: ''இந்த விழா கொண்டாடப்பட வேண்டிய ஒன்று; வீரத்தையும் தீரத்தையும் மதிப்பதற்கு எடுத்துக்காட்டு ''

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு கே. ராமன்: ''பிரிட்டிஷ்காரனை எதிர்த்து நாட்டின் சுதந்தரத்திற்கு வித்திட்டவன் வீரபாண்டிய கட்டபொம்மன். அவனுக்கு இருந்த தியாக உணர்வில் கொஞ்சமாவது நமக்கு இருக்க வேண்டும்; இன்று நம்மை நாமே எதிர்த்துப் போராடுகிறோம், எதிரிகளையல்ல ''

**சீனியர் பள்ளித் தேர்வில் சென்னைக்குச் சிறப்பு**

**மத்திய செகண்டரி கல்வி போர்டு நடத்திய, அகில இந்திய சீனியர் பள்ளித் தேர்வு முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன.**

**பல்வேறு பாடங்களில் உயரிடத்தைப் பெற்றுள்ள 81 பேரில் 24 பேர் சென்னையைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் ஆவர்.**

**மொத்தத்தில் இந்த ஆண்டு 53,456 பேர் தேர்வெழுதினர். இதில் 83.2 சதவிகிதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். பல்வேறு பாடங்களில் மாணவிகளே அதிக அளவில் தேர்ச்சி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.**

திரு பீட்டர் அல்போன்ஸ் பேசும்பொழுது, சுதந்தரப் போராட்டத்தில் கம்பளத்தார் பங்கு பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் குறிப்பிட்டார்!

''புனிதமான உணர்வுகளுடன் ஒரு மாபெரும் வீரனுக்கு விழா எடுக்கிறோம். தேசீயத்தையும் தியாகத்தையும் போற்றுகிறோம். அதைப் பார்க்கத்தான் இவ்வளவு பெரிய கூட்டம். அரசியல் சுதந்தரத்துக்கு முதல் அத்தியாயம் எழுதியவன் வீரபாண்டிய கட்டபொம்மன்.''

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு என்.எஸ்.வி. சித்தன்: ''இன்று சமுதாயம் ஏதோ ஒரு நிலைக்குப் போய்க்கொண்டிருக்கிறது. சுதந்திரத்திற்காக முதல் முழக்கம் செய்தவன் கட்டபொம்மன். அவனை வருங்காலச் சமுதாயம் என்றைக்கும் நினைத்துப் போற்ற வேண்டும். இந்தியப் பேரரசு அவனுக்கு நினைவுத் தபால் தலை வெளியிட வேண்டும் ''

நாடாளுமன்ற உறுப்பினர் திரு தனுஷ்கோடி ஆதித்தன்: ''வீரபாண்டிய கட்டபொம்மன் விழா இங்கே மிகப் பெரிய அளவிலே எடுக்கப்படுகிறது. இளைஞர்கள், தியாகத்தை எண்ணிப் பார்க்க வேண்டும்.''

எழுத்தாளர் திருமதி சிவசங்கரி: ''இந்த மாவட்டம் அருமையான மனிதர்களைத் தந்த மாவட்டம். என்னுடைய அம்மா திருநெல்வேலியைச் சேர்ந்தவர். அதனால், சோறூட்டும்பொழுது, எனக்குக் கட்டபொம்மன் கதையைச் சொல்வது வழக்கம். பள்ளியில் கட்டபொம்மன் கதையைப் பொம்மலாட்டமாகச் செய்திருக்கிறோம்.

''இந்தப் பக்கத்துப் பெண்கள் தங்கள் குழந்தைகளுக்கு வீரம் வரவேண்டும்என்பதற்காக, பாஞ்சாலங்குறிச்சி மண்ணைப் பாலுடன், பருப்புடன், சோறுடன் கலந்து கொடுக்கும் பழக்கம் உண்டென்று படித்திருக்கிறேன்.''

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ரெ. ஆறுமுகம், இ.ஆ.ப., அவர்களின் தலைமையுரையிலிருந்து: ''ஆண்டுதோறும் கட்டபொம்மனுக்கு ஈடு இணையற்ற முறையில் விழா எடுத்து வருகிறோம். திருச்செந்தூரிலிருந்து, ஊமைத்துரையின் தொண்டர் படையினர் ஜோதி கொண்டு வருகிறார்கள். நாட்டின் சுதந்தரப் போராட்ட வரலாற்றில் இம்மாவட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. கட்டபொம்மன், பாரதி, வாஞ்சி, வ.உ.சி. ஆகியவர்கள் இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.''

''பாஞ்சாலங்குறிச்சியில் வளர்ச்சி மன்றம் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளில் 8 வட்டாரங்களில் அமலாக்கப்படுகிறது. கட்டபொம்மன் சந்ததியினர் 200 பேருக்கு 600 ஏக்கர் நிலம் தலா 3 ஏக்கர் வீதம் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலத்தில் 8 துறைகளைக் கூட்டாகச் செயல்பட வைத்து, வேளாண்மைப் பணிகளை மேற்கொள்ளும் திட்டம் இன்று தொடங்குகிறது. இது ரூ. 16 இலட்சம் செலவில் ஓராண்டில் முடிக்கப்படும். அடுத்த ஆண்டு நீங்கள் வரும் பொழுது, வளங்கொழித்தநிலையைக் காண்பீர்கள். இதற்கான திட்டக் குறிப்பேட்டை மாண்புமிகு மத்தியத் தொழில் துறை இணையமைச்சர் திரு. மு. அருணாசலம் அவர்கள் வெளியிட, திரு. ஜி. கே. மூப்பனார் அவர்கள் பெற்றுக்கொள்வார்.''

முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் திரு எஸ். செல்லப்பாண்டியன்: ''கதிர் அறுப்புக் காலத்தில் கட்டபொம்மன் வாழ்க்கையைத் தெருக்கூத்தாக நடிப்பார்கள். வீரமும் அன்பும் பண்டைத் தமிழ் மக்களின் சிறப்புமிக்க குணங்களாக இருந்து வந்தன. இன்று வீரம், பேச்சில் மட்டும்இருக்கிறது. ஆனால் பணத்துக்கு அடிமையாகிவிடுகிறோம். தேர்தலில் பணத்தைக் கொடுத்து ஓட்டு வாங்கி விடலாம் என்று நினைக்கிறார்கள். இன்றைக்கு எதற்கெடுத்தாலும் பணம் என்ற நிலை இருக்கிறது. இது மாற வேண்டும்.''

சமுதாயநலக் கூடத்தைத் திறந்து வைத்தும், அரசு நலத் திட்டங்களின் கீழ் உதவிகள் வழங்கியும் மாண்புமிகு மத்தியத் தொழில் துறை இணையமைச்சர் திரு. மு. அருணாசலம் அவர்கள் விழாப் பேருரையாற்றுகையில் :

''நெல்லைச் சீமையில் பிறந்த பெருமையோடு இந்த விழாவில் கலந்து கொள்கிறேன். கட்டபொம்மன் மீது குற்றங்களாகக் கம்பெனியார் சாட்டியது ஸ்ரீவைகுண்டம் நெற்களஞ்சியம் கொள்ளையடிக்கப்பட்டதும், வரி கொடுக்க மறுத்ததும் இன்னும் இதுபோன்ற சில குறறச்சாட்டுகளும்; இதில் ஸ்ரீவைகுண்டம் நெற்களஞ்சியக் கொள்ளை, கட்டபொம்மனுக்குத் தெரியாமலே நடந்தது. அந்நியர்களுக்கு நான் வரி கொடுக்க வேண்டிய அவசியமில்லையென்று பதில் சொன்னான், அடுத்த குற்றச் சாட்டுக்கு.

வீரபாண்டிய கட்டபொம்மனின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஜி. கே. மூப்பனார் அவர்கள் விழா நிறைவுப் பேருரையாற்றுகையில்:

''வீரபாண்டிய கட்டபொம்மன் படத்திறப்பு நடத்தி வைத்ததில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இன்று இந்தியர்கள் தலை நிமிர்ந்து நிற்கிறோம். உலக அரங்கில் இந்தியாவின் சொல்லுக்கு மதிப்பும் கவுரமும் ஏற்பட்டிருக்கின்றன. இதற்கு அஸ்திவாரம் இட்டவர் தமிழகத்தைப் பொறுத்தவரை வீரபாண்டிய கட்டபொம்மன்.

''கட்டபொம்மன் காலத்துக்கலை, கலாசாரம் அவரோடு முடிந்துவிடக் கூடியதல்ல. இந்தியாவின் கலாசாரப் பெருமை தொடர்ந்து அழியாமல் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது. இதை நம் நினைவில் வைத்திருப்பது மட்டும் போதாது. போற்றுவதோடுநின்றுவிடக்கூடாது. கடைப்பிடிப்பதுதான் முக்கியம்.

''கட்டபொம்மன் வீரத்தில் மட்டுமல்ல, ஆன்மீகத்திலும் சிறந்தவன். திருச்செந்தூரில் முருகனுக்குப் பூசை முடிந்து மணியடித்த பிறகுதான் சாப்பிடும் வழக்கத்தைக் கொண்டிருந்தான். இத்தகைய கலாசாரத்தைப் பாதுகாப்பது, இந்தப் பகுதி மக்கள் நலவாழ்வு பெறுவதற்கு நல்ல முயற்சியாகும்.

''அரசின் திட்டங்கள் வெற்றி பெற மக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். அடுத்த ஆண்டு இங்கே புதுமையான சூழ்நிலை நிலவ வேண்டும்.''

விழா இறுதியில் செய்தி - மக்கள் தொடர்புத்துறைத் துணை இயக்குநர் திரு வெ. பரஞ்சோதி நன்றி நவின்றார். விழாவின் வெற்றிக்கு உதவிய எவரையும் விடாமல், அவர்தம் சீரிய பணியினை உரிய வார்த்தைகளால் பாராட்டியது பொருத்தமாக இருந்தது. இரவு, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் மெல்லிசை விருந்து மக்களுக்குத் தேனாய் இனித்தது.

இரண்டு நாள் விழாவும் எல்லாருடைய இதயத்திலும் பசுமையாக நிலைக்கப் பல்வேறு துறையினரும் இரவு பகலாக உழைத்தனர். குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ரெ. ஆறுமுகம், மாவட்ட வருவாய் அலுவலர், திரு பி. சௌந்தரராசன், மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு சம்சுதீன், உதவி மக்கள்தொடர்பு அலுவலர் திரு பஷீர் ஆகியோரின் பணி பாராட்டத்தக்கதாகும்.

## வாழ வைக்கும் உதவிகள்

மகிழ்ச்சிக்கும் மனநிறைவுக்கும் மட்டும்தானா விழா? இல்லை. வாழ வைப்பதற்கும்தான்.

கட்டபொம்மன் விழாவில் பல்வேறு நல வளர்ச்சிப் பணிகள்நிறைவேற்றி வைக்கப்பட்டன.

தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 49,000 செலவில் கட்டப்பட்ட சமுதாய நலக்கூடம் திறந்து வைக்கப்பட்டது. சென்ற ஆண்டு இதே விழாவில் அடிக்கல் நாட்டப்பட்டு, இந்த ஆண்டு விழாவில் திறந்து வைக்கப்பட்டது.

சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ்ப் பயிற்சி பெற்ற 15 பேருக்குத் தொழிற்கருவிப் பெட்டிகள் வழங்கப்பட்டன. இவை ஒவ்வொன்றும் ரூ. 500 மதிப்புள்ளவை.



விதவைகளுக்கு இலவசத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

ஊனமுற்றோர் மூவருக்கு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன.

விதவைகளின் மகள் திருமண நிதியுதவி ரூ. 1,000 வீதம் மூவர் பெற்றனர்.

ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவி ரூ. 1000 வீதம் இருவர் பெற்றனர்.

தையல் இயந்திரம் ஒன்றும், சலவைப் பெட்டிகள் இரண்டும் வழங்கப்பட்டன.

பாஞ்சாலங்குறிச்சி அருள்மிகு வீரசக்கதேவி ஆலய 32-ஆவது ஆண்டு விழா மற்றும் கட்டபொம்மன் நினைவு விழாவை முன்னிட்டு 14-5-1988 காலை மாபெரும் மாட்டு வண்டிப் பந்தயம் நடைபெற்றது.

பெரிய மாட்டு வண்டிகள் 16 கி.மீ. தூரம் ஓடவேண்டும். முதற் பரிசு ரூ. 2001. இரண்டாம் பரிசு ரூ. 1,501, மூன்றாம் பரிசு ரூபாய் 1,001.

சிறிய மாட்டு வண்டிகள் 9 கி.மீ. தூரம் ஓடவேண்டும். முதற் பரிசு ரூ. 1,001, இரண்டாம் பரிசு ரூ. 701, மூன்றாம் பரிசு ரூ. 401.

பெரிய மாட்டு வண்டிகள் - முதற் பரிசு திரு. டி. ராஜேந்திரசாமி, ஆதனூர்; இரண்டாம் பரிசு திரு கந்தசாமி நாயக்கர், சிங்கிலிபட்டி; மூன்றாம் பரிசு திரு இராமலிங்க ரெங்கசாமி, கல் வூரணி

சிறிய மாட்டு வண்டிகள் - முதற் பரிசு திரு. கருப்பசாமி நாயக்கர், கல்லுக்குழி; இரண்டாம் பரிசு திரு. விஜயகுமார், குளத்தூர்; மூன்றாவது பரிசு திரு சின்னசாமி நாயக்கர், தீத்தாம்பட்டி.

வீரபாண்டிய கட்டபொம்மன் வாரிசுகளான ஏழை எளியபெண்கள் 39 பேருக்கு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் செம்மறி ஆட்டுக் கடன் வழங்கப்பட்டது. 20 செம்மறி ஆடு, ஒரு கிடா வாங்க ரூ. 5,500, ஆடு பராமரிப்புக் கொட்டகைக்கு ரூ. 300 ஆடு பராமரிப்புப் பாத்திரங்களுக்கு ரூ. 200 ஆக மொத்தம் ரூ. 6,000 கடன். இந்தக் கடன் தொகையை ஓட்டப்பிடாரத்திலுள்ள பாண்டியன் கிராம வங்கி வழங்கியது. மொத்தம் ரூ. 2,34,000 கடன் அளிக்கப்பட்டது.

ஓட்டப்பிடாரம் வட்டம் மேல அரசடி கிராமத்தைச் சேர்ந்த கிராமக் காவலர் திரு பச்சைப் பெருமாள் பணியில் இறந்ததால், அவருக்குரிய குடும்பநல நிதி ரூ. 20,000 அவரது மனைவி திருமதி ஈஸ்வரியிடம் வழங்கப்பட்டது.

—நமது செய்தியாளர்

# சென்னை வானொலியில் முக்கிய நிகழ்ச்சிகள்

சென்னை-1- அலைவரிசைகளில் (416.7 மீ 720 கி.ஹெ., 60.98மீ 4920 கி.ஹெ. 41.90மீ 7160 கி.ஹெ.)

ஜூன் 1-முதல் 15 வரை ஒலி பரப்பாகும் நிகழ்ச்சிகளில் குறிப்பிடத்தக்க சில.

'நோய்நாடி நோய் முதல்நாடி' என்பது வள்ளுவம். அடிப்படைச் சுகாதாரம் பற்றிய கருத்துக்களை அறிந்துகொண்டால் அனைவரும் நலமோடு வாழ்தல் உறுதி. பூவிருந்தவல்லி பொதுச் சுகாதார நிறுவனத்தின் துணை இயக்குநர் டாக்டர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இதனை நேயர்களுக்கு 1.6.'88 புதன்கிழமை மாலை 6.05-க்கு 'மனைமங்கலம்' நிகழ்ச்சியில் விளக்குவார். அன்று காலை 5.55க்கு தொடரும் இருநாள்களின் அதே நேரத்திலும், திரு வி.வைகுந்த் அவர்கள் வழங்கும் அறநெறி, ஒலிபரப்பாகும்.

பௌத்த மதம் தழைத்தோங்க வைத்ததில் அன்று புத்த பிச்சுக்களுக்கு இணையாக, பிக்குணிகளும் விளங்கினர். 2.6.'88 வியாழக்கிழமை இரவு 8.45-க்கு இடம் பெறும் உரையரங்கில் 'பௌத்த பிக்குணிகளின் பாடல்கள்' என்ற தலைப்பில் திரு பி.எஸ்.மணி அவர்களது உரை இதனை அரண் செய்யும்.

ஐம்புலன்களில் கண்ணின் செயல்பாடு தலையாயது. முகத்திற்கு ஒளியூட்டுவதோடு வாழ்வுக்கும் அதுவே ஒளியூட்டுவது. அவ்வாறு சிறப்புப் பெறும் கண்ணின் பார்வையை வாழ்நாள் முழுவதும் மங்கச்செய்யாது பேணும் முறையினை கண்மருத்துவ நிபுணர் டாக்டர் ரவீந்திரனிடமிருந்து 3.6.'88 மாலை 6.05-க்கு நேயர்கள் செவிமடுக்கலாம். திரையுலகின் அஷ்டாவதானியான டாக்டர் பானுமதி ராமகிருஷ்ணா அவர்களின் 'நெஞ்சில் நிலைத்த' அனுபவங்களை அன்றிரவு 8.30-க்கு நேயர்களுடன் பகிர்ந்து கொள்வார். இரவு 10.00 மணிக்கு தென்மண்டல கர்நாடக அரங்கிசையில் ஆனையாம்பட்டி கணேசன் அவர்களின் ஜலதரங்க இசை ஒலிக்கும்.

உலகப்பொதுமறையான திருக்குறளின் அறிவுரைகள் எக்காலத்திற்கும் யாவருக்கும் பொருந்துவன. ''வள்ளுவர் செய் திருக்குறள்'' வரும் நூற்றாண்டிற்கு எவ்வகையில் பயன் விளக்கும் என்பதனை பேராசிரியர் த.பாண்டுரங்கன், திரு வி.இளங்கண்ணனார், திரு அரசுநம்பி ஆகியோர் பங்குபெறும் '21-நூற்றாண்டுக்கு வள்ளுவர் காட்டும் வழி' என்ற கருத்தரங்கத்தில் அறியலாம். 4.6.'88 இரவு 8.15க்கு 'சிந்தனை அரங்கத்தில்' இக்கருத்தரங்கம் இடம் பெறும்.

விடுமுறைக் காலத்தே வீணே பொழுதினைக் கழிக்க வேண்டுமென்பதில்லை. மனதுக்கு மகிழ்வூட்டும் பயனுள்ள பல செயல்களில் பள்ளி மாணவர்கள் அப்பொழுது தம்மை ஈடுபடுத்திக்கொள்ளலாம். பள்ளி விடுமுறையைச் செவ்வனே எவ்வாறு கழிக்கமுடியும் என்பதனை பெரம்பூர் டான்பாஸ்கோ பள்ளியின் முதல்வர் மறைத்தந்தை ஆர்துசாமி அவர்கள் 8.6.'88 பிற்பகல் 2.15க்கு விளக்குவார்.

## புதிய தொடர் நிகழ்ச்சி

**சென்னை வானொலியில் ஜூன் முதல் தேதியிலிருந்து நாள்தோறும் காலை 7.25க்கு 'இன்று ஒரு கனி' புதிய தொடர் துவங்குகிறது.**

மருத்துவத்துறையில் நிகழ்ந்து வரும் அரிய சாதனைகள் பற்பல. அறுவைசிகிச்சை முறையில் உடலின் நுண்ணிய உறுப்புகளுள் ஒன்றான சிறுநீரகத்தையும் சீராக்கலாம் என்பதை சிறுநீரக அறுவைசிகிச்சை இயல்பேராசிரியர் டாக்டர் ஏ. ராஜகோபாலன் அவர்கள் 9.6.'88 அன்று இரவு 9.30க்கு ஒலிபரப்பாகும் 'நலவாழ்வுச் சோலை'யில் நேயர்களுக்கு அறியத் தருகிறார். உயர்கல்வியை அனைவரும் பெறுவதற்கு வாய்ப்புக்கள் பல உருவாகி வருகின்றன. உயர்கல்வியுடன் தொழிலறிவையும் பெறுவது குறித்து டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத் தனி அலுவலர் டாக்டர் லலிதா காமேஸ்வரன், புதுவை மத்திய பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் கே. வேங்கடசுப்பிரமணியன் ஆகியோர் தரும் அறிவுரைகள் இடம் பெறும். 'கருத்துக்கோவை' நிகழ்ச்சி 11.6.'88 சனிக்கிழமை பிற்பகல் 2.15க்கு ஒலிபரப்பாகும். உயர் கல்வியைத் தொடர விரும்புவோருக்கு இந்நிகழ்ச்சி உதவுவதாய் அமையும்.

துருப்பிடிக்காதது என்பதால் தான் தங்கத்துக்கு மதிப்பு அதிகம் என்கிறார்கள் அறிவியலார். அதே தங்கம் துருப்பிடிக்க ஆரம்பித்தால் என்னசெய்ய முடியும்? தூக்கி எறிய வேண்டியதுதானே! துருப்பிடித்ததாக நினைத்து ஒதுக்கப்பட்டவரை, புடத்தில் இட்டுத் தூய்மைப்படுத்தினார் சுந்தரம். சொக்கத் தங்கம் என்று சொல்லப்பட்ட 'மக்கல்' மதிப்பிழந்ததில் என்ன வியப்பு? இந்தக் கருவில் உருவான ஒருமணி நேர நாடகம் 'தங்கம் துருப்பிடிக்கிறது' 12.6.'88 பிற்பகல் 3.30 மணிக்கு ஒலிபரப்பாகும். திருச்சிராப்பள்ளி, கோயமுத்தூர், பாண்டிச்சேரி, திருநெல்வேலி ஆகிய நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

## சென்னைவாழ் மக்களுக்கு...!

சென்னை மாநகரைத் தூய்மையாகப் பராமரிக்கும் இயக்கத்தில்—சமூக சேவை அமைப்புகள், தனியார் நிறுவனங்கள், பொது மக்கள் அதிக அளவில் பங்கேற்க வேண்டும். சென்னை மாநகரில் தூய்மையைப் பாதுகாக்கும் வகையில் பொதுமக்களிடம் ஓர் இயக்கமே உருவாக வேண்டும்.

சென்னை மாநகரில் மக்கள் குறைகளைக் கேட்டறிந்து, அவற்றை நீக்க உடனடி நடவடிக்கை எடுப்பதற்காக அந்தந்தப் பகுதிகளில் மாதம் இருமுறை பல்வேறு துறை அதிகாரிகள் ஒன்று கூடிப் பொது மக்களைச் சந்திக்கிறார்கள். பொது மக்கள் அச்சந்திப்பை நன்முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.


ஜி. வி. இராமகிருஷ்ணா, இ.ஆ.ப.,
(ஆளுநரின் ஆலோசகர்)

[13.5.88-ல் நாகேசுவரராவ் பூங்கா நிகழ்ச்சியில் பேசியது.]



ஆசிரியரும் வெளியிடுபவரும் :
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.





கொடைக்கானல் ஏரி

# தமிழரசு

11798


A-Lib




## பொன்விழாக் காணும் சென்னை வானொலி




அனைத்திந்திய வானொலியின் சென்னை நிலையம் 1938-ஆம் ஆண்டு முதல் 1954-ஆம் ஆண்டு வரை இந்தக் கட்டடத்திலேதான் இயங்கி வந்தது. எழும்பூரில் உள்ள, மார்ஷல் சாலையில் 15-ஆம் எண்ணில் அமைந்திருந்தது இது.



பொன்விழாக் காணும் சென்னை வானொலி நிலையம், காமராசர் சாலையில் உள்ள இந்த சொந்தக் கட்டடத்திலேதான் இப்போது இயங்கி வருகிறது.





# தமிழரசு


நீலகிரி மாவட்டத்தில் மேதகு ஆளுநர் — கிருபால்தாஸ் ஜான் ... 4
காவிரிநீர்— தெலுங்கு கங்கை.... தொழில் வளர்ச்சி மத்திய அரசுக்கு டாக்டர் சித்து வேண்டுகோள் ... 5
குடிநீர் வழங்கி விழிநீர் துடைப்போம் — நா. ஆதிமூலம் இ.ஆ.ப. ... 7
மனித குலத்துக்கே ஒரு சோதனை — அட்டைப்பட விளக்கம் ... 10
20 அம்சத் திட்டச் செயலாக்கத்தில் முதன்மைபெறும் கோவை மாவட்டம் — என். கோவிந்தன், இ.ஆ.ப. ... 11
சிதம்பரனார் மாவட்டம் — மு. பசீர் ... 15
பெரியார் மாவட்—ம் — மு.நா. கிருஷ்ணசாமி ... 17
கலை மறுமலர்ச்சிக்கு வானொலி — அந்நாள் ஆளுநர் லார்ட் எர்ஸ்கின் ... 19
வானொலியின் பயன் என்ன? — மூதறிஞர் ராஜாஜி ... 20
வானொலியின் பொன் விழாவும் தமிழ்நாடும் — சி. என். ராம்தாஸ், இ.ஆ.ப. ... 21
சகோதரப் பிணைப்பு — நா .கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப., ... 23
வானொலி புகைப்படத் தொகுப்பு 25— 30
வானொலிக் கலை — கோ. செல்வம் ... 31
பழைய நினைவுகள் — பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் ... 32
வானொலியின் இசைப்பணி — மீ.ப. சோமசுந்தரம் ... 33
செங்கற்பட்டு, பொன்னேரி இருளர் —நே.தேவசகாயம் ... 34
சித்தமருத்துவத்தில் ஊசி முறை — டாக்டர் பி.ஜே. தோட்டம் ... 38
ஒருமைப்பாடு உணர்வில் உருகிநின்ற கவியரசர் கண்ணதாசன் — புலவர் தமிழ்ப்பித்தன் ... 43
பொதுநலம் பேணிய பன்னீர்ச்செல்வம் — சுந்தர் ... 46
புகைக்காதீர்! உயிரைப் பகைக்காதீர்! — பி.எல். ராஜேந்திரன் ... 47
சமுதாயத் தலைவர் தியாகராயர் ... 50



**திருவள்ளுவர் ஆண்டு 2019**
**விபவ - ஆனி 2**
**மலர்: 18 16-6-1988 இதழ் : 24**



# நீலகிரி மாவட்டத்தில் மேதகு ஆளுநர்

தமிழகத்தின் தனிப்பெருமை வாயந்த நீலகிரி மாவட்டத்திற்கு மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி.அலெக்சாண்டர் அவர்கள் மே 15-ந்தேதி வருகை புரிந்தார். அரசு அதிகாரிகளும் பொதுமக்களும் ஆளுநர் அவர்களை ஆர்வத்துடன் வரவேற்றனர். மே 15முதல் 24 வரை நீலகிரி மாவட்டத்தில் ஆளுநர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

உதகையில் 18.5.88 அன்று நீலகிரி பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் 'நீலகிரியைப் பாதுகாப்போம்' என்ற ஓட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த ஓட்டத்தில் 2000க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் விளையாட்டு வீரர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர். இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் தொழிற்சாலையின் நுழைவு வாயிலிலிருந்து புறப்பட்ட இந்த ஓட்டத்தை நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே.எஸ். ஸ்ரீபதி, தொடங்கி வைத்தார். இந்த ஓட்டத்தின் முடிவில் நடத்தப்பட்ட விழாவில் ஆளுநர் கலந்து கொண்டு உரையாற்றினார். ஆளுநர் தமது உரையில், ''நீலகிரி பாதுகாப்பு இயக்கம் இந்த ஓட்ட நிகழ்ச்சியை நடத்தி நீலகிரியைப் பாதுகாப்பதற்கு இம்மாவட்ட மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியதற்கு எனது பாராட்டுகள். நீலகிரியைப் பாதுகாக்க என்னால் ஆன எல்லாவற்றையும் செய்வேன்; சுற்றுப்புறச் சூழலை அழிவினின்றும் காப்பாற்றிச் சீர்செய்ய நாட்டின் எல்லா அடிப்படை வாய்ப்பும் உள்ளது. சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு பற்றிப் பொதுவாக மக்களுக்கு அறிவுறுத்துவதுடன் பள்ளிக்குழந்தைகளுக்கும் பாடத் திட்டத்தில் அது, ஒரு பாடமாகச் சேர்க்கப்பட வேண்டும். மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டப்பணிகளை மக்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும், மண் வளத்தைப் பாதுகாப்பது அவசியம் என்று குறிப்பிட்டார்.

மே 21ஆம் தேதியன்று மேதகு ஆளுநர் அவர்கள் ஊட்டி லவ்டேலில் உள்ள லாரன்ஸ் மேல்நிலைப் பள்ளியின் 130-வது ஆண்டு விழாவினைத் துவக்கி வைத்தார். அங்கு அவர் உரையாற்றும் போது, ''40 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா விடுதலை அடைந்தபோது இந்தியாவின் சுதந்திரம் நீடிக்குமா என்று சந்தேகப்பட்டனர். ஆனால் அவர்களது சந்தேகம் தவறானதென்று தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. கடந்த 40 ஆண்டுகளில் நமது நாடு முன்னணி ஜனநாயக நாடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது. இருப்பினும் இன்னும் சிலர் சாதி, மதம், இனம் காரணமாகச் சண்டை சச்சரவு ஏற்படுத்தி நாட்டைப் பிளவுபடுத்த முயற்சிப்பது வருத்தமளிக்கிறது. என்று'' குறிப்பிட்டதோடு, ''இந்த லாரன்ஸ்பள்ளி இந்திய ஒருமைப்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. இப்பள்ளி மாணவர்கள் நாட்டின் நல்ல எதிர்காலத்திற்கு உறுதியளிக்கும் உணர்வு கொள்ள வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

மே 22-ஆம் தேதியன்று உதகை அரசினர் தாவரயியல் பூங்காவில் நடைபெற்ற 93வது மலர்க்காட்சி நிறைவு விழாவில் கலந்துகொண்டு மேதகு அளுநர் அவர்கள் பரிசுகள் வழங்கினார்.

ஆளுநர் அவர்கள் நிறைவுவிழா உரையில், ''நீலகிரி பாதுகாப்பு இயக்க உறுப்பினர்கள் நீலகிரியைச் சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்வதில் தொடர்ந்து பாடுபட வேண்டும்; நீலகிரியின் எழிலுக்குப்பலவகைகளிலும் குந்தகம் ஏற்பட்டுள்ளது; ஒன்றுபட்ட முயற்சியின் மூலம் நீலகிரியைத் தொடர்ந்து அழிவினின்றும் காப்பாற்றமுடியும். நீலகிரியின் எல்லாத் திட்டங்களுக்கும் உதவும் வகையில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தைப் பலப்படுத்த' அரசு முயலும்!' உதகை நகரின் ஆரோக்கியம் குறித்து நாம் கவனம் செலுத்த வேண்டும்; சுற்றுலாப் பயணிகளும், மக்களும் நீலகிரியைச் சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

மறுநாள் ஆளுநர் அவர்கள் உதகை நகராட்சிக் குழுவினர் அளித்த வரவேற்புக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

''அடுத்த மூன்று ஆண்டுகளில் உதகை ஏரியைச் சுத்தப்படுத்திப் பராமரிக்கவும், அசுத்தமாவதைத் தவிர்க்கவும் ரூ. 3.5 கோடி அரசு செலவிடவுள்ளது' இங்குள்ள சாலைகளைப் பராமரிக்க மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியைத் தவிர வேறு சிறப்பு நிதிகளுக்கு வகை செய்ய ஆலோசிக்கப்பட்டு வருகிறது'' என்று குறிப்பிட்டார்.

மே 24ஆம் தேதி ஆளுநர் அவர்கள் உதகை கவர்னர் மாளிகையில் தமிழகப் பல்கலைக்கழகத் துணை வேந்தர்களின் ஒரு நாள் கூட்டத்தினையும் துவக்கி வைத்தார். இக்கூட்டத்தில் மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு ஏ. பத்மநாபன், தமிழக அரசின் கல்வித் துறைச் சிறப்பு ஆணையர் மற்றும் செயலர் திரு எச்.பி.என்.ஷெட்டி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இவ்வாறு, ஆளுநர் அவர்கள் இம், மலை மாவட்டத்தில் 10 நாட்கள் தங்கிப் பல்வேறு விழாக்களில் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன் உதகை மக்களுக்கு உற்சாகத்தை உருவாக்கினார் என்றால் அது மிகையாகாது.

**கிருபால்தாஸ் ஜான்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**உதகமண்டலம்**



# காவிரிநீர்-தெலுங்குகங்கை-தொழில் வளர்ச்சி

## மத்திய அரசுக்கு டாக்டர் சித்து வேண்டுகோள்

தென்மண்டல கவுன்சிலின் 20-வது கூட்டம் 6.6.'88 அன்று ஐதராபாத் நகரில் நடைபெற்றது. தமிழக அரசின் சார்பில் ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் எஸ்.எஸ்.சித்து அவர்கள் தமிழக அரசின் கருத்துக்களை எடுத்துரைத்தார்.

நாட்டின் சீர்குலைவுச் சக்திகளும் மதப்பழமைவாதிகளும் உருவாக்கிவரும் வன்முறைகள்-கலவரச்சூழ்நிலைகள் இவைபற்றி எடுத்துக்கூறி, இந்நிலவரத்தைச் சமாளிக்க மத்திய அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை வரவேற்பதாக டாக்டர் சித்து கூறினார். சீர்குலைவுச் சக்திகளை வலிமைமிக்க கரங்களினால் முறியடித்து ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றைக் கட்டிக்காத்திட வேண்டும் என்றும் நாட்டு ஒற்றுமைக்கு வலிமை ஏற்படுத்தும் அம்சங்களை வளர்த்து பலப்படுத்த வேண்டும் என்றும் டாக்டர் சித்து கூறினார்.



### சட்டம் ஒழுங்கு

குடியரசுத்தலைவர் ஆளுகைக்கீழ் உள்ள தமிழ் நாட்டில் கடந்த நான்கு மாதங்களாக சட்டம் ஒழுங்கு நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருவதையும், சில பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தத் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதையும் டாக்டர் சித்து குறிப்பிட்டு எடுத்துக்காட்டினார்.

## மின் வரி விதிப்பு —முழு விலக்கு

தமிழ்நாட்டின் தொழில் முன்னேற்றத்தின் அவசியத்தைக் கருதி மாநிலத்திலுள்ள தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில், சுயமாக ஏதேனும் ஒரு எரிபொருளைக் கொண்டு, மின் உற்பத்தி செய்யும் காகிதம், நெசவு மற்றும் இரசாயன ஆலைகளுக்கு, 1.4.1988ஆம் நாள் முதல், ஐந்து ஆண்டுகளுக்கு மின் வரி விதிப்பிலிருந்து முழு விலக்கு அளிக்க அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

## கம்ப்யூட்டர் முறையில் பாண்டிச்சேரியிலும் பயணச் சீட்டு

சாலை போக்குவரத்துக் கழகமான திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் புதுவை மாநிலத்தில், பாண்டிச்சேரி நகரில் பயணச்சீட்டு கம்ப்யூட்டர் முறையில் வழங்கும் முறையை 17.5.88ல் அறிமுகப்படுத்தியுள்ளது

வளர்ச்சிப்பணிகளில் முதலிடம் கொடுக்கப்பட வேண்டிய துறைகளையும் அத்துறையில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளையும் டாக்டர் சித்து எடுத்துக் கூறினார்.

### குடிநீர்

குடிநீர்ப் பற்றாக்குறை நிலவும் 135 வட்டாரங்கள் தொகுத்து எடுக்கப்பட்டு அங்கு நாலாயிரம் குழாய்க் கிணறுகள் தோண்டத் தீவிரத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதில் ஆயிரத்துத்தொளாயிரம் குழாய்க்கிணறுகள் தோண்டப்பட்டுவிட்டன. மீதி இரண்டாயிரத்து நூறு குழாய்க்கிணறுகள் அடுத்தமாத இறுதிக்குள் அமைக்கப்பட்டு விடும். கடந்த ஆண்டில் பற்றாக்குறைப் பகுதி முழுவதிலும் நாலாயிரம் குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டன. இவ்வாண்டு நான்கே மாதங்களில் நாலாயிரம் கிணறுகள் தோண்டப்பட்டன.

### நலிந்த ஆலைகளுக்கு மறுவாழ்வு

நலிந்த நிலையில் உள்ள ஆலைகள் 5 ஆயிரம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றை மீண்டும் செயல்படுத்த,பல்முனைத்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட ஆயிரம் ஆலைகளில் 800 ஆலைகள் தற்போது செயல்படத் தொடங்கியுள்ளன.

### பொது நிதி விநியோக முறை

குடும்பக்கார்டுதாரர்களுக்குப் பன்னிரண்டு கிலோ அரிசியும், இதர அத்தியாவசியப் பொருள்களும் வழங்கப்படுகின்றன. அண்மையில் மாநிலத்திற்கான அரிசி

ஒதுக்கீடு 40 ஆயிரம் டன்களாகக் குறைக்கப்பட்டு விட்டது. எனவே மாதத்துக்கு 80 ஆயிரம் டன் அரிசியைத் தமிழகத்துக்கு ஒதுக்க வேண்டும்.

**லஞ்ச ஊழல் ஒழிப்பு**

தீவிரமான விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு நடவடிக்கைகள் சோதனைகள் நடத்தப்பட்டன. தூய்மையும் திறமையும் வாய்ந்த நிர்வாகம் மக்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

பல்வேறு வறுமை ஒழிப்புத்திட்டங்களின் செயல் பாட்டுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.மேலும் இத்திட்டங்களின் பயன், ஏழை எளிய மக்களைச் சென்றடைவதை உறுதி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

**காவிரி நீர்ப் பிரச்சினை**

காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதியில் தன்னிச்சையாகக் கர்நாடகம் அணைகள் கட்டிவருவதால் தஞ்சைமாவட்டத்தின் விவசாயமும், பொருளாதாரமும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன என்பதை டாக்டர் சித்து விரிவாக எடுத்துக்காட்டினார். எனவே காவிரி பிரச்சினை தீர அதனை நடுவர்குழு தீர்ப்புக்கு விடவேண்டும் என்பதையும் இதில் மத்திய உள்துறை அமைச்சர் தலையிட வேண்டும் என்பதையும் டாக்டர் சித்து வலியுறுத்தினார்.

சென்னை துரித ரயில் போக்குவரத்துத் திட்டத்துக்கும், கரூர் திண்டுக்கல் அகல ரயில் பாதைக்கும் மத்திய அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று டாக்டர் சித்து கேட்டுக்கொண்டார்.

தெலுங்கு கங்கைத் திட்டத்திற்காகத் தமிழக அரசு இதுவரை 47 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது எனவும் மேலும் 30 கோடி ரூபாய் வழங்குவதற்கான நிலையில் உள்ளது எனவும் டாக்டர் சித்து கூறினார். வேலைகளின் முன்னேற்றம் பரிசீலிக்கப்பட்டபின் இத்தொகை வழங்கப்படும் .சென்னை நகரின் குடிநீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு மத்திய சுற்றுப்புறச் சூழலுக்கான அமைச்சர் கிருஷ்ணா தெலுங்கு கங்கைத் திட்டத்துக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று டாக்டர் சித்து கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாட்டில் மத்திய அரசின் முதலீடு வெகுவாகக் குறைந்துவருகிறது. (1950ல் 8 சதவீதமாக இருந்த முதலீடு தற்போது 5 சதவீதமாகக் குறைந்து விட்டது. இதைச் சரிசெய்யப் பின்வரும் திட்டங்களை விரைவாகச் செயல்படுத்த வேண்டுகிறோம்.

1. உதகையில் கலர்பிலிம் தொழிற்சாலை அமைக்க இந்துஸ்தான் போட்டோபிலிம் பாக்டரிக்கு அனுமதி கொடுக்கவேண்டும்.

2. நெய்வேலி முதல் மற்றும் இரண்டாவது சுரங்கங்களில் கூடுதல் மின்உற்பத்திக்கு வகை செய்தல் வேண்டும்.

3. நெய்வேலியில் மூன்றாவது சுரங்கம் அமைக்கப் பட வேண்டும்.

4. நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் அணு மின்நிலையம் அமைக்க வேண்டும்.

5. எண்ணூரில் துணைத் துறைமுகம் அமைக்க வேண்டும்.

6. டிட்டானியம் ஜிர்கோனியம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை நீலகிரி மாவட்டத்தில் அமைக்க வேண்டும்.

7. நெய்வேலி நிலக்கரியைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை அரசுத் திட்டமாகச் செயல்படுத்தவேண்டும்.

இவ்வாறு டாக்டர் சித்து தமது உரையில் குறிப்பிட்டார்.



ஆதிதிராவிடர் நலத்துறையின் பணிகள் குறித்து ஆளுநரின் ஆலோசகர் திரு ஏ. பத்மநாபன் அவர்கள் 10.6.1988 அன்று மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர்களுடன் ஆய்வு நடத்தினார். 'ஆதிதிராவிடர்களின் நலனுக்குரிய நடவடிக்கைகளை விரைவாகவும் நல்ல முறையிலும் நிறைவேற்ற வேண்டுமென்ற ஆளுநரின் அறிவுரைகளைச் சுட்டிக் காட்டினார்.



# குடிநீர் வழங்கி

# விழிநீர் துடைப்போம்!



'நீரின்றி அமையாது உலகு' என்பது பொய்யா மொழிப் புலவர் திருவள்ளுவரின் திருவாக்கு. உள்ளத்தின் தூய்மை வாய்மையாலும் உடலின் தூய்மை நீராலும் அமைவது இயற்கையாகும். உணவுப் பொருள்களை உருவாக்கவும் அப்பொருள்களை அறுசுவை உணவாக்கவும், தானே சிறுபதம் உணவாகவும் அமைதல் தண்ணீரின் தன்மையாகும். அத்தகு தேவைப்படுகின்ற தண்ணீர் குறைகின்ற போது, எத்தனை இடர்ப்பாடுகள் என்பதை வான் பொய்த்து விடுகின்றபோது வறட்சியால் வாடுகின்ற நம் மக்கள் நன்கு உணர்வார்கள்.

'நோய் நாடி நோய் முதனாடி அது தவிர்க்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்' என்பதற்கு ஏற்ப என்றென்றும் நோய்வராவண்ணம் தடுக்கும் பொருட்டு, பாதுகாக்கப்பட்ட குடி

**நா. ஆதிமுலம், இ.ஆ.ப.,**
**நிர்வாக இயக்குநர்,**
**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**


நீரை மக்களுக்கு வழங்குவது மிகவும் தேவைப்பட்ட ஒன்றாகும் என அரசு கருதி 1971ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் என்ற அமைப்பினை உருவாக்கியது: அந்த அமைப்பு கடந்த 17 ஆண்டுகளாய் ஆல் போல் தழைத்து அருகு போல் வேரூன்றி, தமிழக மக்களின் உயிர்நாடியாய்ப் பரிமளித்துக் கொண்டு இருக்கின்றது. இவ்வாரியம் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கிராமங்கள் மற்றும் நகரங்களில் வாழ்கின்ற மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குகின்ற திட்டப்பணிகளையும், வடிகால் வசதிகளையும் விரைந்து நிறைவேற்றுவதற்காக, நல்ல பல திட்டங்களை வகுத்துத் தொய்வின்றிச் செயல்படுத்திக் கொண்டு வருகின்றது.

1981-இல் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கின்படி மொத்தம் 483 இலட்சம் மக்கள் தொகையில் 324 இலட்சம் பேர் ஊரகப் பகுதிகளில் 64,083 குடியிருப்புகளில் வாழ்ந்து வருகிறார்கள் என அறிய முடிகிறது. 1985-ல் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் 20,642 குடியிருப்புகளுக்குத் தூய்மையான, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 27,356 குடியிருப்புகளில் குடிநீர்த் திட்டங்கள் பகுதியாக நிறைவேற்றப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 16,085 குடியிருப்புகளுக்கு 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் குடிநீர் வசதி வழங்கும் பணி, செயல்பாட்டில் உள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலமாக அனைவரும் வியந்து பாராட்டுகின்ற வகையில் அரும்பெரும் சாதனைகளை நிகழ்த்தியுள்ளது.

5வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 25.97 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 3,465 குடியிருப்புகளில் வாழ்கின்ற மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

6வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 130.42 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 17,177 குடியிருப்புகளில் வாழ்கின்ற மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.



7வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 250 கோடி செலவில் 16,085 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி வழங்கத் திட்டமிடப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1988 மார்ச் முடிய ரூ.155 கோடி செலவில் 9,839 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டு இருக்கிறது. மீதமுள்ள குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்குகின்ற திட்டப் பணிகள் விரைவாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

8-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 315 கோடி செலவில் பகுதியாகக் குடிநீர் வழங்கப்பட 27,356 குடியிருப்புகளுக்கு முழுமையான அளவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டு அது செயல்படுத்தப்பட இருக்கின்றது.

இதுவரை தமிழ்நாட்டில் 1,10,219 கையிறைப்பான்களும், 20,441 மின் இறைப்பான்களும் அமைக்கப்பட்டுச் செயல்பாட்டில் உள்ளன. இவ்வாறு அமைக்கப்பட்டு இருக்கிற கையிறைப்பான்களும், மின் இறைப்பான்களும் மாவட்டங்களிலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையின்கீழ் இயங்குகின்ற பராமரிப்புத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் அனைத்தும் அரசின் மானிய உதவியினால் செயலாக்கப்பட்டதாகும். மாநில அரசு, குறைந்த பட்சத் தேவைத் திட்டத்தின் கீழ் 5வது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் ரூ. 18.30 கோடி, 6வது ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில் ரூ. 152.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 7வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ.150 கோடி செலவழித்துள்ளது. 8வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 200 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய உள்ளது.

ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் அவசியத்தையும், அதை விரைவுடன் செயல்படுத்த வேண்டிய இன்றியமையாமையையும் கருத்தில் கொண்டு மத்திய அரசின் விரைவுபடுத்திய ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 5வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 8.25 கோடியும் 6வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 44.81 கோடியும் மாநில அரசுக்கு மத்திய அரசு மானியமாக வழங்கியுள்ளது. 7வது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் மத்திய அரசு இதுவரை ரூ. 54.71 கோடி வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள இரண்டு ஆண்டுகளுக்கு ரூ. 45.29 கோடி வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

8வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் மத்திய அரசு விரைவு படுத்திய ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 10,000 குடியிருப்புகளுக்கு ரூ.115 கோடி செலவில் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சமூக நலத்துறையின் நிதிஉதவியுடன் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள 1,114 பழங்குடியினர் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1978-79 முதல் செயலாக்கப்பட்டு வருகின்றன. பிப்ரவரி 1988 வரை 1,102 குடியிருப்புகளுக்கு ரூ. 2.23 கோடி செலவில் குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்பட்டுச் செயலில் உள்ளன. எஞ்சியுள்ள 12 குடியிருப்புகளில் குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் விரைவில் முடிவடைந்து அனைத்துக் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கப்பட்டு விடும்.

'ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புத் திட்டம்' என்னும் தனிப்பெரும் திட்டத்தின் மூலம், ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க மாநில அரசும், மத்திய அரசும் தனிக் கவனம் செலுத்தி ,தனி நிதி ஒதுக்கீடு செய்து வருகின்றன.

இத்திட்டத்தின் மூலம் 6-வது மற்றும் 7-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இதுவரை 3696 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு ரூ. 35.16 கோடி செலவில் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள குடியிருப்புகளில் இவ்வாண்டு முடிவிற்குள் குடிநீர் வசதி அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களல்லாமல் 'மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்' என்னும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### ஊரக குடிநீர்த் திட்டத்துக்கு ஐரோப்பிய பொருளாதாரக் குழு உதவி

கோவை, மற்றும் பெரியார் மாவட்டங்களில் சில பகுதிகளில் சுமார் 726 குடியிருப்புகளில் குடிநீரில் அதிகமாக'புளோரைடு' கலந்திருப்பதால் எலும்பு மற்றும் பற் சிதைவுகள் ஏற்படுகின்றன.இதைத் தடுக்கும் பொருட்டு ரூ. 15 கோடி நிதி உதவியுடன் ஐரோப்பிய பொருளாதார குழுமத்தின் உதவியுடன், பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 1988ஆம் ஆண்டு மார்ச் முடிய ரூ. 10 கோடியே 71 இலட்சத்து 45 ஆயிரம் செலவில் 219 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் பொருட்டு, திட்டப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் முடிவடையும் போது சுமார் 4 இலட்சம் மக்கள் பயனடைவர்.

ஊரக குடியிருப்புகளில் வாழும் மக்களின் நலன் கருதித் தனிக் கவனம் செலுத்தி, பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கிவரும் குடிநீர் வடிகால் வாரியம் மக்கள் நெருக்கமாக வாழும் மாநகராட்சிகள், நகராட்சிகள் போன்றவற்றிற்கும் குடிநீர் வழங்கத் தனிக் கவனம் செலுத்தி, திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி வருகின்றன. தமிழ்நாட்டில் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) 2 மாநகராட்சிகள், 98 நகராட்சிகள், 8 நகராட்சிகள் நகரியங்கள், 17 பேரூராட்சி நகரியங்கள், 628 பேரூராட்சிகள் உட்பட மொத்தம் 753 நகரங்கள் உள்ளன. இவற்றின் மொத்த மக்கட் தொகை 1981ஆம் ஆண்டுக் கணக்கீட்டின்படி 1.65 கோடி ஆகும்.





சென்னைக் குடிநீர் நிலைமையை ஆய்வு செய்ய சோழவரம், புழல் ஏரிகளில் நீர் இருப்பு நிலவரத்தை ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி. ராமகிருஷ்ணா 11.6.88 அன்று சென்று பார்வையிட்டார்.

தற்போது நகர்ப்புறக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 2 மாநகராட்சிகள், 93 நகராட்சிகள், 5 நகராட்சி நகரியங்கள்,9பேரூராட்சி நகரியங்கள், 196 பேரூராட்சிகளுக்கும் சேர்த்து 305 நகரங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் பயனில் உள்ளன. இத்திட்டங்களினால் 116 இலட்சம் மக்கள் பயன் பெறுகின்றனர்

இவ்வாண்டில் மேலும் 53 நகராட்சிகள், 1 நகராட்சி நகரியம், 3 பேரூராட்சி நகரியங்கள், 102 பேரூராட்சிகள் உட்பட மொத்தம் 109 நகரங்களின் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டங்களினால் 13 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பயனடைவர். மேலும் 43 குடிநீர் மேம்பாட்டுத்திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன.

கடந்த 6வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் திட்டங்களுக்காக ரூ. 85.75 கோடி செலவு செய்யப்பட்டது. 7வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், மேற்படி திட்டங்களுக்காக இதுவரை ரூ. 64.89 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

8வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், மேற்படி திட்டங்களுக்காக ரூ 210 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் நகரக் குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்களுக்கு ரூ. 21.61 கோடி உத்தேசிக்கப்பட்டு இதுவரை ரூ. 24.3 கோடி செலவிடப்பட்டுள்ளது.

மேலும் உலக வங்கிக் கடனுதவியுடன் தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், மதுரை, சேலம் நகரங்களுக்குக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள், 75 சிறிய நடுத்தர நகரங்களுக்குப் புதிய குடிநீர் வழங்கும் திட்டங்கள், மற்றும் 14 நகரங்களுக்குக் குறைந்த செலவிலான சுகாதார துப்புரவுத் திட்டங்கள் ஆகியவற்றைச் செயல்படுத்தத் தமிழக அரசு அங்கீகாரம் அளித்து, அதன் மூலம் 740 ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை சுமார் ரூ. 150 கோடி ஆகும். இதில், நகரங்களுக்குக் குடிநீர் வசதி செய்யவும் சுகாதார, துப்புரவு வசதி அமைக்கவும் ஆகும் செலவு ரூ. 135.28 கோடியாகும். ஊரகக் குடியிருப்புப்பகுதிகளுக்குக் குடிநீர் வசதி செய்வதற்கு ஆகும் செலவு ரூ. 14.14 கோடியாகும். இத்திட்டத்தினால் பயன் பெறவிருக்கும் மொத்த மக்கட்தொகை 38.90 இலட்சமாகும்.

இத்திட்டத்திற்கான செயற்காலம் 5 ஆண்டுகளாகும். பணிகள் ஏப்ரல் 1986ல் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இத் திட்டங்களுக்கான நில ஆர்ஜிதம் மற்றும் தளவாடப் பொருட்கள் வாங்குதல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பு நிதி ஆண்டில் 20 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்காகக் குடிநீர்த் திட்டம் பயனுக்குக் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் 19 நகரங்களுக்கான குடிநீர் முன்னோடித் திட்டம் செயலாக்கப்பட்டுப் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் சுமார் 1.74 இலட்சம் மக்கள் பயன் அடைந்துள்ளனர். அடுத்த நிதி ஆண்டில் அதாவது 1988-89ல் 2.6 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 19 குடிநீர்த் திட்டங்கள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளன.

நடப்பு நிதி ஆண்டில் சுமார் ரூ. 31.57 கோடி உலக வங்கித் திட்டங்களுக்காகச் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது வரை ரூ.23 கோடி செலவிடப்பட்டுள்ளது. உலக வங்கிக் கடனுதவியுடன் கூடிய அனைத்துப் பணிகளையும் 1991ஆம் ஆண்டு மார்ச்சுக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

உப்பு நீரைக் குடிநீராக மாற்றும் கருவிகள் இந்த ஆண்டு மத்திய அரசின் உதவியுடன் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் சுமார் 50 இடங்களில் நிறுவப்பட உள்ளன. நடப்பு ஆண்டில்,வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கும் நோக்கத்துடன் ஏப்ரல் முதல் ஜூலை மாத இறுதிக்குள் ரூ. 10 கோடி மதிப்பீட்டில் 4000 ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணி, போர்க்கால அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக ஏப்ரல் மாதத்தில் 685 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டமாக மே மாதத்தில் மட்டும் 915 ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணி முடியும் தறுவாயில் உள்ளது. மீதமுள்ளவை ஜூலை மாத இறுதிக்குள் முடிக்கப்படும்.

மாநில, மைய அரசுகளின் உதவி இந்தப் பணிகளுக்கு மனமார்ந்த ஒத்துழைப்பைத் தந்து, திட்டங்களின் பயன்களால் சிறப்படையுமாறு அனைவரையும் அன்போடு வாரியத்தின் சார்பில். வேண்டிக் கொள்கிறேன்.

(வானொலி உரை -1-6-88)

# மனித குலத்துக்கே ஒரு சோதனை

வன வளங்களும், மலை வளங்களும் அழிக்கப்பட்டதால் இன்று மனித குலத்துக்கே சோதனை ஏற்பட்டுள்ளது. நில அரிப்பு, நிலச்சரிவு, பருவமழை தவறியும் தாமதித்தும் பெய்வது, வெப்பம் அதிகரிப்பு, தூய்மையான காற்றுமண்டலம் குறைந்து வருவது போன்ற ஆபத்துக்களால் மனிதனுடைய எதிர்காலமே கேள்விக்குறி ஆகி வருகிறது. சுற்றுப்புறச் சூழல் தூய்மை கெடாமல் பாதுகாக்கப்படவேண்டிய அவசியத்தை வற்புறுத்தி உலகெங்கும் பல்வேறு இயக்கங்கள் நடத்தப்படுகின்றன. பல்வேறு நாடுகளின் அரசுகளும், உலக அமைப்புக்களும் சுற்றுப்புறச் சூழலின் தூய்மை பாதுகாக்கப்பட வேண்டியதன் இன்றியமையாத் தன்மையை வலியுறுத்தி வருகின்றன.

காட்டுப் பகுதிகளில் நதிகளின் ஓட்டத்தைத் தடுத்து பிரம்மாண்டமான அணைகள் கட்டுவதாலும் மலைப்பகுதிகளில் இயற்கை வளத்தை அழித்துத் தொழிற்சாலைகள் அமைப்பதாலும், பல்வேறு மலைவாசஸ்தலங்களில் இயற்கைச் சூழ்நிலை கெடும் அளவு மக்கள் குடியேற்றம் மிகுந்து வருவதாலும் இயற்கைச் சமநிலை கெட்டு வருகிறது. பருவ மழை பொய்த்துப் போவதற்கும், வறட்சிப் பகுதிகள் அதிகரித்து வருவதற்கும் காடுகள் அழிக்கப்படுவதே காரணம் ஆகும்.

குறிப்பாக உதகமண்டலம் பகுதி உலகிலேயே மிகச் சிறந்த மலை வாசஸ்தலங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. ஆனால் தற்போது பருவ மழை தொடர்ந்து பொய்த்துப் போனதன் காரணமாக நீலகிரி மலை பொலிவிழந்து வருகிறது.

அண்மையில் உதகையில் நடந்த நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் இன்றைய உதகையின் நிலையைக் கண்டு தாம் அடைந்த வேதனையை வெளியிட்டுள்ளார். பல்வேறு அமைப்புக்களின் உதவியுடன் உதகைக்கு பழைய பொலிவை ஊட்டிட நடவடிக்கை எடுப்பது பற்றியும் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

மலைப் பகுதிகளின் இயற்கை வளம், மலைப்பகுதிகளின் பறவை இனங்கள், மிருகங்கள், பூக்கள், செடி கொடிகள் இவற்றைக் காப்பாற்ற வேண்டும். நாகரீக வளர்ச்சியின் பெயரால் மலைப்பகுதிகள் இழந்தது அதிகம். பெற்றது குறைவு. இந்தச் சீரழிவு தடுக்கப்பட வேண்டும் என்கிற ஏக்கத்தை அட்டையில் உள்ள சிறுவனின் கண்கள் பிரதிபலிக்கவில்லையா?(நீலகிரி மலையின் பழங்குடிகளில் ஒன்றான தொதுவர் இனச் சிறுவன்)

மாநில அளவிலான பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் விழா 29.5 88 அன்று காமராஜர் மாவட்டத்தைச் சேர்ந்த இராஜபாளையத்தில் நடைபெற்றது. தமிழறிஞர்களும் அரசு உயர் அதிகாரிகளும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.




## பார்த்தோம் படித்தோம்

15.5.88 இதழில் வேதாரணியம் உப்புச் சத்தியாக்கிரகப் புனிதப் பயண வண்ணப்படங்களுடன் கட்டுரைகளும் மிகவும் சிறப்பாக இருந்தன. தமிழகத்தின் சாதனையினைக் கண்டு வியக்கிறேன்.

—எஸ்.எஸ்.வாசன்,
தென்எலப்பாக்கம்,
வடஆர்க்காடு மாவட்டம்

வரலாறு படைத்த விழாக்களின் வண்ணப்படங்கள் கண்ணைப் பறிப்பதுடன், சுதந்திர எண்ணத்தையும் கிளறிவிட்டது. சுதந்திரப் பயிரைக் கருகவிடாமல் காத்துக் கடமையாற்றிய கண்ணியமிக்க தலைவர்களின் வீரவரலாறுகள், மறந்து, மறைந்து வரும் இந்நாளில், இளம் தலைமுறையினரின் மன எழுச்சியைத் தட்டி எழுப்பும் வகையில் தேசியமணம் வீசும் சிறப்பான இதழாகத் 'தமிழரசு' திகழ்ந்தது.

ஆர்.அத்தியப்பன்,
மூணுசாவடி
சேலம்மாவட்டம்.

மாவீரன் செண்பகராமனின் வாழ்க்கை வரலாறு இந்தியத் திருநாட்டுக்கே பெருமை சேர்க்க வல்லதாகும்.

பி.ஆர்.சித்தா மற்றும்
பி.ரமேஷ்,
வந்தவாசி,
வட ஆர்க்காடு மாவட்டம்.

''வீரவரலாறு படைத்த செண்பகராமன்'' சிறப்புக் கட்டுரையைப் படித்தேன். மிக அருமையான தொகுப்பு. இன்றைய இளந்தலைமுறையினர் அவசியம் படிக்க வேண்டிய கட்டுரை. ஆசிரியர் ஜே.வி.சாமி அவர்களுக்கும், கட்டுரை வெளியிட்ட ''தமிழரசு''க்கும் எனது நன்றியைக் கூறுவதில் பெருமையடைகிறேன். படித்துப் பத்திரப் படுத்தவேண்டிய இதழ்.

ரகமி,
சென்னை-5.

'மாணவர் பக்கத்'தில் வெளிவரும் அறிவுச்சுடர் பகுதி எமக்கு மிகப் பயனுள்ளதாக அமைந்தது.

தி.சுரேந்திரன்
செ.அக்ரகாரம்,
செங்கை மாவட்டம்.



# 20 அம்சத் திட்டச் செயலாக்கத்தில் முதன்மை பெறும் கோவை மாவட்டம்

20 அம்சத் திட்டத்தின் அனைத்து அம்சங்களிலும் 100 சதவீதமும் அதற்கு மேலும் செயல்படுத்தி 1985-86-ஆம் ஆண்டில் ரூ. 7.5 லட்சமும், 1986-87-ஆம் ஆண்டில் ரூ.5 இலட்சமும் ரொக்கப்பரிசு பெற்றுக் கோவை மாவட்டம் முதன்மை வகிக்கின்றது.

ஏழைகளை வறுமைக் கோட்டிலிருந்து மீட்டு, அவர் தம் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கான உன்னதத் திட்டம் தான் 20 அம்சத் திட்டம். வறுமையை ஒழித்து, உற்பத்தியைப் பெருக்கி, வருமான வேறுபாட்டைக் குறைத்து சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வினை நீக்கி, வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த இத்திட்டம் பெரிதும் துணை புரிந்து வருகின்றது.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

20 அம்சத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் இம்மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளாக வெற்றிகரமாகச் செயலாக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், ஊரகப் பகுதிகளிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ள ஏழை எளிய மக்களின் பொருளாதாரத்தினை உயர்த்துவதேயாகும்.

1985-86-ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குறியீடு 9175 ஆக இருந்த போதிலும், 9936 பேர்களுக்கு மானியத்தோடு கடன் வழங்கப்பட்டுள்ளது. இது 110 சதவீதச் சாதனையாகும்.

1986-87இல் 13,324 பேர்களுக்கு உதவி வழங்கிடக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் 13,815 பேர்களுக்குக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இது 105 சதவீதச் சாதனை ஆகும்.

**என். கோவிந்தன், இ.ஆ.ப.,**
**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**கோவை.**

1987-88இல் 12,434 பேர்களுக்குக் கடன் வழங்குவது குறியீடு; ஆனால் 13,096 பேர்களுக்குக் கடன் வழங்கி 108 சதவீதம் சாதனை புரியப்பட்டுள்ளது.

### நிலச் சீர்திருத்தம் மற்றும் உபரி நில விநியோகம்

நிலச் சீர்திருத்தத்தின் கீழ் உபரி நிலத்தை விநியோகித்தல் 20 அம்சத் திட்டத்தில் ஒரு முக்கியமான அம்சமாகும்.

இந்த அம்சத்தில் 1985-86-ஆம் ஆண்டில் 103 சதவீதமும், 1986-87-இல் 101 சதவீதமும் 1987-88-இல் 170 சதவீதமும் இம்மாவட்டம் சாதனை புரிந்துள்ளது.

### கொத்தடிமை ஒழிப்பு

ஊரகப் பகுதிகளிலுள்ள கொத்தடிமைகளை நீக்கி அவர்களுக்குத் தக்க வேலை வாய்ப்புகளை 1985-86-ஆம் ஆண்டு முதல், வழங்கிச் சாதனை புரியப்பட்டு வருகிறது.

### தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்

ஊரகப் பகுதிகளிலுள்ள வேலையற்ற நபர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தருவதோடு, பள்ளிக் கட்டடங்கள், சாலைகள் போன்ற தேசிய மற்றும் சமுதாயச் சொத்துக்களை ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

1985-86-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் குறியீடான 15,44,000 மனித சக்திக்குப் பதிலாக 20,38,000 மனித சக்தி பயன்படுத்தப்பட்டது.

1986-87இல், குறியீடான 14,25,500 மனித சக்தியினை விஞ்சி 15,87,000 மனித சக்தி பயன்படுத்தப்பட்டது.

1987-88இல் குறியீடான 14,63,000 மனித சக்திக்கும் மேலாக 18,03,000 மனித சக்தி உருவாக்கப்பட்டது.

இத்திட்டத்தில் இம்மாவட்டம் கடந்த 3 ஆண்டுகளாக 100 சத

அன்னூர் வட்டாரத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடனுதவி பெற்று வாடகை சைக்கிள் கடை நடத்தும் வேலுசாமி.



விதத்திற்கும் மேலாக மனித சக்தியை உருவாக்கி முனைப்போடு செயல்பட்டு வருகின்றது.

**ஊரக நிலமற்றோர்க்கு வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் ஊரகப் பகுதிகளிலுள்ள நிலமற்றோர்க்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பினை வழங்கி ஊரகப் பகுதிகளில் வேலை வாய்ப்பு விரிவு படுத்தப்பட்டு வருகின்றது.

இம்மாவட்டத்தில் 1985-86-ஆம் ஆண்டில் குறியீடான 17.66 இலட்சம் மனித சக்தியினை விஞ்சி 20.16 இலட்சம் மனித சக்தி பயன்படுத்தப்பட்டு 114 சதவீதச் சாதனை எய்தப்பட்டது.

1986-87இல் 843 இலட்சம் மனித சக்திக் குறியீட்டினை விஞ்சி 1048 இலட்சம் மனித சக்தி பயன்படுத்தப்பட்டு 124 சதவீதம் சாதனை அடையப்பட்டது.

1987-88இல் குறியீடான 12,23,200 மனித நாட்களுக்குப் பதிலாக 12,84,100 மனித நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளாக இம்மாவட்டம் குறியீட்டினை விஞ்சிச் சாதனை பெற்று நிற்கின்றது.


**குடிநீர் விநியோகம்**

அனைத்துக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குவதில் இம்மாவட்டம் மிகக் கவனமாகச் செயல்பட்டு வருகின்றது. தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் வாழும் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதிலும் இம்மாவட்டம் சிறப்புக் கவனம் செலுத்தி, குடிநீர் வழங்கும் பணியைச் செம்மையாக நிறைவேற்றி வருகின்றது.

இத்திட்டத்தில் 1985-86-ஆம் ஆண்டில் 14 கிராமங்களிலும் 1986-87-இல் 100 கிராமங்களிலும் 1987-88-இல் 80 கிராமங்களிலும் ஆக குறியீட்டுக்கேற்ப 100 சதவீதமும் சாதனை புரிந்து இத்திட்டத்தினைக் கடந்த 3 ஆண்டுகளாகத் தொடர்ந்து வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகின்றது.

**பொதுச் சுகாதாரம்**

இத்திட்டத்தின் கீழ், ஆரம்பச் சுகாதார நிலையங்களை மேம்படுத்தித் தொத்து வியாதிகளைக் கட்டுப்படுத்தி, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குத் தேவையான சுகாதார வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. ஊனமுற்றோர்களுக்கு



**தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் துடியலூரில் உருவாக்கப்பட்டுள்ள சமுதாய நலக் கூடம்.**

மறுவாழ்வும் வழங்கப்பட்டு வருகின்றது.

1987-88-ஆம் ஆண்டில் 58,200 குழந்தைகளுக்குப் பாதுகாப்பளிக்கப்பட வேண்டும் என்ற குறியீட்டினை விஞ்சி 65,082 குழந்தைகளுக்குப் பாதுகாப்பளிக்கப்பட்டு 112 சதவீதம் சாதனை எய்தப்பட்டுள்ளது.

குறியீடான 58,200க்கும் மேலாக 66,737 குழந்தைகளுக்குப் போலியோ தடுப்பு ஊசி போடப்பட்டு,115 சதவீதம் சாதனை அடையப்பட்டுள்ளது.

58,200 என்ற குறியீட்டினை விஞ்சி 58,730 பேர்களுக்கு பி.சி.ஜி. ஊசி போடப்பட்டு 101 சதவீதம் சாதனை எயதப்பட்டது.

**குடும்ப நலத் திட்டம்**

மக்கள் தொகையினைக் கட்டுப்படுத்தி வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் இத்திட்டம் இம்மாவட்டத்தில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

1985-86-ஆம் ஆண்டில் குறியீடான 35,300ஐ விஞ்சி 37,012 பேர்களுக்குக் குடும்ப நலச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

1986-87இல் 38,223 பேர்களுக்குக் குடும்ப நலச் சிகிச்சை வழங்கப்பட வேண்டும் என்ற குறியீட்டினுக்கு எதிராக 38,623 பேர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

1987-88இல் 110 சதவீதம் சாதனை எய்தப்பட்டு 42,171 பேர்களுக்குக் குடும்ப நலச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

1987-88 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் கோவை மாவட்டம் தமிழ்நாட்டிலேயே முதல் இடத்தினைப் பெற்று நிற்பது சிறப்புக்குரிய சாதனையாகும்.

**கல்வியை மேம்படுத்துதல்**

கல்வித் தரத்தினை மேம்படுத்தப் பள்ளிகளில் வயது வந்த குழந்தைகளைச் சேர்ப்பதில் இம்மாவட்டம் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

1985-86-ஆம் ஆண்டில் 10,800 குழந்தைகளைச் சேர்க்க வேண்டும் என்ற குறியீட்டினை விஞ்சி 16,077 பேர்களைச் சேர்த்து,149 சதவீதம் சாதனை புரிந்துள்ளது.

1986-87இல் குறியீடான 10,800ஐ விஞ்சி 20,633 சாதனை படைத்து 191 சதவீதம் வெற்றி பெற்றது.

1987-88இல் குறியீடான 10,800 க்குப் பதிலாக 10,832 சாதனை செய்து 100 சதவீதம் செயல்படுத்தப்பட்டது.



**ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு உதவி**

தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ்,வறுமை ஒழிப்புத் திட்டம் இம்மாவட்டத்தில் வெற்றிகரமாகவும் வேகமாகவும் செயல்படுத்தப்பட்டுச் சிறப்பாகச் சாதனை எய்தப்பட்டுள்ளது.

1985-86-ஆம் ஆண்டில் 8104 பேர்களுக்கு உதவி வழங்கப்பட வேண்டும் என்ற குறியீட்டினை விஞ்சி, 43,313 பேர்களுக்கு உதவிகள் வழங்கி 534 சதவீதம் சாதனை எய்தப்பட்டது.

1986-87இல் 5475 பேர்களுக்குப் பதிலாக 7882 பேர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு, 144 சதவீதம் சாதனை புரியப்பட்டது.

1987-88இல் 5199 பேர்களுக்கும் மேலாக 8205 பேர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு 150 சதவீதம் சாதனை அடையப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆண்டுகளாக இத்திட்டத்தில் இம்மாவட்டம் நூற்றுக்கு மேல் சாதனை புரிந்து வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**வீட்டு வசதி**

இத்திட்டத்தின் மூலம் ஊரகப் பகுதிகளில் வாழும் ஏழை எளியோர்களுக்கும் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்கும் வீட்டு வசதி வழங்கப்பட்டு வருகின்றது.

**தொண்டாமுத்தூரில் கடனுதவி பெற்று மாவு அரைக்கும் இயந்திரம் வாங்கி, தொழில் நடத்தும் மயிலாத்தாள்**



1985-86-ஆம் ஆண்டில் 6500 பேர்களுக்கு வீடுகள் கட்ட இடம் வழங்கப்பட வேண்டும் என்ற குறியீட்டினை விஞ்சி 7165 பேர்களுக்கு வீடுகள்கட்ட இடம் வழங்கப்பட்டு, 110 சதவீதம் சாதனை எய்தப்பட்டுள்ளது.

1986-87இல் 6000 பேர்களுக்கு மேலாக 7185 பேர்களுக்கு வீடுகள் கட்ட இடம் வழங்கப்பட்டு 120 சதவீதம் சாதனை அடையப்பட்டது.

1987-88-ஆம் ஆண்டில் 6000 என்ற குறியீட்டிற்கு எதிராக 8522 பேர்களுக்கு வீடுகள் கட்ட இடம் வழங்கப்பட்டு 142 சதவீதம் சாதனை அடையப்பட்டது.

வீடுகள் கட்டுவதற்கு வழங்கப்படும் உதவி 1985-86-ஆம் ஆண்டில் 1823 பேர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற குறியீட்டினை விஞ்சி 2138 பேர்களுக்கு வழங்கப்பட்டு,117 சதவீதம் சாதனை எய்தப்பட்டது.

1986-87இல் 500 பேர்களுக்குப் பதிலாக 2406 பேர்களுக்கு உதவி வழங்கப்பட்டு, 481 சதவீதம் சாதனை அடையப்பட்டது.

1987-88இல் 800 பேர்களுக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்பதற்கு எதிராக 1040 பேர்களுக்கு வழங்கப்பட்டு 130 சதவீதம் சாதனை செய்யப்பட்டுள்ளது.

குடிசை வாழ் மக்களுக்கு வீட்டு வசதி உதவி செய்யப்பட வேண்டும் என்ற திட்டத்தின் கீழ் 1985-86-ஆம் ஆண்டில் 5680 பேர்களுக்கு உதவி வழங்க வேண்டும் என்ற குறியீட்டின்படி 5680 பேர்களுக்கு உதவி வழங்கி 100 சதவீதம் சாதனை எய்தப்பட்டது.

1986-87இல் 4303 என்ற குறியீட்டினை விஞ்சி 15,390 பேர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு 358 சதவீதம் சாதனை அடையப்பட்டது.

1987-88இல் 2995 பேர்களுக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்ற குறியீட்டினுக்கு எதிராக 4435 பேர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு 148 சதவீதம் சாதனை செய்யப்பட்டுள்ளது.

வீட்டு வசதிக்கான உதவிகள் வழங்குவதில் இம்மாவட்டம் கடந்த 3 ஆண்டுகளாக முனைப்போடு பணியாற்றி நூறு சதவீதத்திற்கும் மேலாகச் சாதனை படைத்து நிற்கின்றது.

**வனங்கள்**

வன மேம்பாட்டிற்காக அதிக் அளவில் மரங்களை வளர்ப்பதில் இம்மாவட்டம் கடந்த 3 ஆண்டுகளாகச் சாதனை படைத்து வருகின்றது.

1985-86 - ஆம் ஆண்டில் 28,30,000 மரங்கள் நடப்பட வேண்டும் என்ற குறியீட்டினை விஞ்சி 45,96,000 மரங்கள் நடப்பட்டு 161 சதவீதம் சாதனை செய்யப்பட்டது.

1986-87இல் 23,77,000 மரங்கள் நடப்பட வேண்டும் என்ற குறியீட்டிற்கு எதிராக 62,36,000 மரங்கள் நடப்பட்டு 262 சதவீதம் சாதனை புரியப்பட்டது.

1987-88-இல் 54,29,000-க்கும் மேலாக 76,89,000 மரங்கள் நடப்பட்டு 142 சதவீதம் சாதனை எய்தப்பட்டுள்ளது.


மரங்களை வளர்த்து வன வளத்தினை மேம்படுத்துவதில் இம்மாவட்டம் கடந்த 3 ஆண்டுகளாக நூறு சதவீதத்திற்கும் மேலாகச் சாதனை படைத்து வருகின்றது.

**கிராமங்களுக்கு மின் வசதி**

இத்திட்டத்தின் கீழ் விவசாய பம்புசெட்டுகளுக்கு மின் வசதி அளிப்பதிலும் இம்மாவட்டம் கடந்த 3 ஆண்டுகளாகச் சாதனை புரிந்து வருகின்றது.

1985-86-ஆம் ஆண்டில் குறியீடான 1703ஐ விஞ்சி 1725 பம்பு செட்டுகளுக்கு மின் வசதி வழங்கி 101 சதவீதம் சாதனையும், 1986-87-இல் 2126-க்கும் பதிலாக 2227 சாதனை புரிந்து 105 சதவீதமும், 1987-88-இல் 1732 என்ற குறியீட்டிற்கு எதிராக 3730 சாதனை செய்து 215 சதவீதமும் சாதனை புரிந்துள்ளது.

இம்மாவட்டம் கடந்த மூன்று ஆண்டுகளாக வறட்சியின் பிடியில் சிக்கியிருந்த போதிலும்கூட 20 அம்சத் திட்டத்தினைச் செயல்படுத்துவதில் இம்மாவட்டம் நூற்றுக்கு நூறு சதவீதமும் அதற்கு மேலும் சாதனை படைத்துச் சிறப்புக்குரிய மாவட்டமாகத் திகழ்ந்து வருகின்றது. மேன்மேலும் வெற்றிகளைக் குவிக்க - இம்மாவட்டத்தில் அரசின் திட்டங்கள் முனைப்போடு செயல்பட - நட்வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.




# உங்கள் வளர்ச்சிக்கு எங்கள் பாதுகாப்பான திட்டங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான சிறந்த பல சேமிப்புத் திட்டங்களை வகுத்துள்ளது.

இன்றே வருவீர்—உங்கள் வாழ்க்கை வளம்பெற செய்திடுவீர்.

உங்கள் சேமிப்பிற்கு $\frac{1}{4}$% கூடுதல் வட்டி உண்டு.

- சேமிப்புத் திட்டம்
- நிரந்தர வைப்புத் திட்டம்.
- தொடர் வைப்புத் திட்டம்.
- ரொக்க சான்றிதழ்.
- சிறப்பு வைப்பீட்டுத் திட்டம்.

TNSC BANK

தமிழ்நாடு மாநிலத்
தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001.

*TNSC வங்கி—வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*


# சிதம்பரனார் மாவட்டம்



## பொருளாதாரத்துக்கு உதவும் இறால் மீன்!

இந்தியா 85,843 டன் கடல் பொருட்களை 1986-87-ஆம் நிதி யாண்டில், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து 460 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை ஈட்டியுள்ளது. இவ்வாறு ஏற்றுமதி செய்யப்பட்ட பல்வேறு கடல் பொருட்களில் 57விழுக்காடு இறால் ஆகும். இதனால் கிடைத்த அந்நியச் செலாவணி 377 கோடி ரூபாய். அதாவது மொத்த ஏற்றுமதியில் 12 விழுக்காடு. தமிழகத்தி லிருந்து 5,749 டன் இறால்கள் ஏற்றுமதி செய்யப்பெற்று 47 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி ஈட்டியுள்ளது.

கடல் பொருள் ஏற்றுமதியினால் அந்நியச் செலாவணி ஆண்டுக் காண்டு உயர்ந்து வந்த போதிலும், சமீப காலத்தில் கடல் பொருள் உற்பத்தியில் வரவேற்கத் தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை. இறால் உற்பத்தியினைப் பெருக்க, இதுவரையில் பயன்படுத்தப்படாம லிருந்த உவர் நீர் பரப்பினைப் பயனுக்குக் கொண்டு வரவேண்டும்.

இந்தியாவில் கிழக்கு, மேற்குக் கடற்கரையோரங்களில் ஏறத்தாழ 1.9 மில்லியன் எக்டேர் பரப்பு இறால் வளர்ப்பிற்கு உகந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இறால் வளர்ப்பிற்கு உகந்த இடத்தில் சுமார் 43,000 எக்டேர் மட்டுமே இறால் வளர்ப்பிற்குப் பயன்படுத் தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் 0,000 எக்டேர் நிலம், இறால் வளர்ப்பிற்கு ஏற்றதாக இருப்பி னும் 15,000 எக்டேர் மட்டுமே, உடனடி முன்னேற்றத்திற்கு உகந்த தாக உள்ளது எனக் கணக்கிடப்பட் டுள்ளது.

வ.உ. சிதம்பரனார் மாவட்டத் தில் சுமார் 250 எக்டேர் உவர் நீர்ப்பரப்பு, இறால் வளர்ப்பிற்கு உகந்தது எனக் கணக்கிடப்பட்டுள் ளது. மேலும் வைப்பார், வேப்ப லோடை, தருவைக்குளம், தூத்துக் குடி, பழைய காயல், புன்னக்காயல், ஆறுமுகநேரி, திருச்செந்தூர் ஆகிய இடங்களில் உள்ள உவர் நீர்ப் பகுதிகளிலும், உப்பளங்களைச் சார்ந்துள்ள இடங்களிலும் இறால் வளர்ப்பினைச் செய்ய முடியும்.

இறால் வளர்ப்பு ஒரு இலாபகர மான தொழில். இந்தத் தொழிலைக் கடல் நீரை விட அதிக உப்புத் தன்மை உடைய நீரிலும் கூட வெற்றிகரமாகச் செய்ய முடியும் என்பதை ஒரு தனிப்பட்ட முத லீட்டாளர் முதல் முதலாக இம் மாவட்டத்தில் நிரூபித்துக் காட்டி யுள்ளார். அவர் காட்டிய வழி யினைப் பிறரும் தொடர்ந்து, கடற் கரையோரமாக இறால் வளர்ப் பினை வெற்றிகரமாகச் செய்யலாம்.

இறால் பண்ணைகளைக் கடலுக்கு அல்லது நதி முகத்துவாரத்துக்கு அருகில் அமைப்பதன் மூலம் அதற்குத் தேவையான நீரைக் கடலிலிருந்து அல்லது நதி முகத்துவாரத்திலிருந்து நீர் இறைப்பான் (பம்ப் செட்) மூலம் கொண்டு செல்லலாம். கடற்கரை யோரங்களில் இறால் பண்ணை களை, சுயவேலைவாய்ப்புத் திட்டங் களின் கீழ் (உதாரணமாக IRDP, ERRP, DRDA) ஏற்படுத்துவதன் மூலம் ஆயிரக்கணக்கான மக்கள் பயனடைவர். இறால் பண்ணை அமைப்பதற்கு முதலீடு சற்று அதிக மாகத் தேவைப்படுவதால் ஏற்று மதியின் மூலம் நாட்டின் பொருளா தாரத்தைப் பெருக்க ஓரளவு வசதி படைத்தவர்கள் இறால் பண்ணைகள் அமைக்க முன் வருதல் மிகவும் அவசியம்.

**மு. பசீர்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சிதம்பரனார் மாவட்டம்.**

தற்பொழுது அரசு கடற் கரையோரமாக உள்ள புறம்போக்கு நிலங்களை இறால் வளர்ப்புக்காக, மீனவ கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குகிறது. இவ்வாறு ஒதுக்கப் பட்ட, தாழ்ந்த பகுதிகள் மழைக் காலத்தில் நீரால் நிரப்பப்படுகின் றன. இக்குளங்கள் கடலோடு நேரடியாகத் தொடர்பு பெற்றி ருப்பதால் இறால் குஞ்சுகளும் மற்ற மீன் குஞ்சுகளும் இந்தக் குளங்களில் இருப்பு செய்யப்படுகின்றன. இருப்பு செய்யப்பட்ட குஞ்சுகள் 5-6 மாதத் திற்கு வளர்க்கப்பட்டு, பின், பிடிக் கப்படுகின்றன. இவ்வாறு வளர்க் கும் குளங்களில் கிடைக்கும் மீனின் அளவைக் கணிக்க முடிவதில்லை.

இந்தக் குளங்களில் அறிவியல் சாகுபடி முறையினைக் கடைப் பிடித்து, நன்கு கட்டப்பட்ட குளங்கள், தேவைப்பட்ட இருப்பு, நல்ல நிர்வாகம் இவற்றின் மூலம் உயர்ந்த உற்பத்தியினை, குறைந்த காலத்தில் பெற முடியும். இதன் மூலம் அதிக ஊதியம் கிடைக்கும். இந்த வருமானம் மழைக்காலங் களில் குறிப்பாக மீனவர்கள் கட லுக்கு மீன் பிடிக்கச் செல்ல முடி யாத காலங்களில் கிடைப்பதால் அவர்களின் வாழ்க்கை நலனை உயர்த்த மிகவும் பயன்படும்.

இறால் வளர்ப்பு தற்போது பெரும்பாலும் உவர் நீர்ப் பரப்பு களுக்கு அருகில் உள்ள நிலங்களில் அமைக்கப்பட்ட குளங்களில்தான் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இறால் மற்றும், பிற மீன் களின் வளர்ப்புக்கு இதுவரை பயன் படுத்தப்படாத நம் உவர் நீர்ப் பரப்புகளில், புதிய வளர்ப்பு முறை களைக் கையாண்டு, இறால், மீன் போன்ற உயிரினங்களை வளர்ப் போமானால், இவற்றின் உற்பத்தி

மேலும் பன்மடங்கு பெருக வாய்ப்புள்ளது.

இறால் வளர்ப்பு தற்போது பெரும்பாலும் உவர் நீர்ப்பரப்புகளுக்கு அருகில் உள்ள நிலங்களில் அமைக்கப்பட்ட குளங்களில் தான் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இறால் மற்றும், பிற மீன்களின் வளர்ப்புக்கு இதுவரை பயன்படுத்தப்படாத நம் உவர் நீர்ப் பரப்புகளில், புதிய வளர்ப்பு முறைகளைக் கையாண்டு, இறால், மீன் போன்ற உயிரினங்களை வளர்ப்போமானால், இவற்றின் உற்பத்தி மேலும் பன்மடங்கு பெருக வாய்ப்புள்ளது.

கலப்பின மீன்வளர்ப்பில் வரி இறால், மற்றும் வெள்ளை இறால்களை எக்டேருக்கு 2,00,000 என்ற எண்ணிக்கையிலும், 1:1 என்ற விகிதத்திலும் இருப்புச் செய்வதோடு மட்டுமன்றி, இவற்றோடு பால்மீன், மணலை, மற்றும் செத்த கெண்டை எக்டேருக்கு 5,000 கிலோ என்ற அளவிலும், 2:2:1 என்ற விகிதத்திலும் இருப்புச் செய்து வளர்ப்போமேயானால் எக்டேருக்கு ஆண்டொன்றுக்கு 1,200 கிலோ இறாலையும், 4,000 கிலோ மீனையும் உற்பத்தி செய்ய வாய்ப்புள்ளது. மாமிசப் பட்சணிகளைக் கலப்பின வளர்ப்பில் பயன்படுத்தும்போது, கொடுவா, மண்ணா, சீனக்கோலா போன்ற மீன்களைச் சமபங்காகவும், எக்டேருக்கு 10,000 என்ற எண்ணிக்கையிலும் இருப்புச் செய்து, ஆண்டிற்கு 3,000 கிலோவிற்கு மேலாக உற்பத்தி செய்ய முடியும்.

உவர்நீர்ப் பரப்புகளிலும் அமைக்கப்படுகின்ற வலை அடைப்புகள் 2500 மீ. (50 மீ x 50மீ), 5000 மீ, (100 மீ x 50 மீ) மேலும் 10,000 மீ. போன்ற அளவுகளைக் கொண்டிருக்கலாம். இத்தகைய அடைப்புகள், பெரும்பாலும் 1 மி.மீ. நைலான் வலைத் துண்டுகளால் அமைக்கப்படுகின்றன. இவ்வடைப்புகளுக்கு ஆதாரக் கால்களாக 4 மீ. நீளத்தையும், 10 செ. மீ. அகலத்தையும், 5 செ.மீ. பருமனையும் உடைய பனங்கட்டைகள் பெரிதும் பயன்படுகின்றன. ஆழமற்ற உவர் நீர்ப் பரப்புகளின் கரையோரங்களிலும், அவற்றின் ஆழத்தைப் பொறுத்தும், நீரின் தன்மையைப் பொறுத்தும், அரைவட்ட வடிவமாகவோ, மூன்று பக்கங்கள் கொண்ட பகுதிகளாகவோ வலை அடைப்புகளை அமைத்தும் இறால்களை வளர்க்கலாம். ஒரு எக்டேர் வளர்ப்புக் குளம் அமைத்து, இறால் மற்றும் மீன் வளர்ப்பை மேற்கொள்ள ஏறத்தாழ ரு 60,000 செலவாகும். ஆனால் வலை அடைப்புகள் அமைத்து இவ்வளர்ப்பை மேற்கொள்ளும் பட்சத்தில் ஆகும் செலவு ரூபாய் 40,000க்கும் குறைவே. மேலும் வலை அடைப்புகளில் பராமரிப்புச் செலவும் மிக மிகக் குறைவே. எனவே, வலை அடைப்புகளில் இறால் - மீன் வளர்ப்பை மேற்கொள்வது இலாபகரமானதே.

இறால் வளர்ப்பில் கடல் பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணைக்குழு தனது தொழில்நுட்ப உதவிகளையும் மற்றும் பொருளாதார உதவிகளையும் வழங்கி, இறால்



உற்பத்தியினைப் பெருக்குவதற்குக் கீழ்க்கண்ட பல வகைகளைக் கையாளுகின்றன:

புதிய இறால் பண்ணைகள் அமைத்தல்.

இறால் குஞ்சு பொரிப்பகம் அமைத்தல்.

இறால் குஞ்சு சேமிப்பு வங்கி அமைத்தல்.

இறால் உணவுப் பொருள்களை மானிய விலையில் வழங்குதல்.

கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணைக்குழுவின் திட்டங்கள் அனைத்தும் வங்கிக்கடன் வசதியுடன் இணைக்கப்பட்டிருப்பதனால், வங்கிகள் இறால் பண்ணை அமைக்கத் தேவையான கடன் வசதியை அளிப்பதன் மூலமும், இறால் வளர்ப்போர் மானியத்தையும், தொழில்நுட்ப உதவியையும் பெறுவதன்மூலமும் இந்தமாவட்டத்தில் இறால் உற்பத்தியினை மிகவும் அதிகமாகப் பெருக்கலாம்.

நமது நாட்டில் மீன் உற்பத்தியை அதிகரிக்க ஏற்ற உவர்நீர்ப்பரப்புகள் மிகுந்திருந்தும், இவற்றின் பெரும் பகுதி இன்னும் பயன்படுத்தாத நிலையிலேயே இருந்து வருகின்றது. இதைக் கருத்தில் கொண்டு நாம், நவீன உவர்நீர் வளர்ப்பு முறைகளைக் கையாண்டு, மீன் உற்பத்தியைப் பெருக்கி, அந்நியச் செலாவணியை அதிகரிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

## கலையும் வாழ்க்கையும்

கலைகளை உணர்ந்து ரசிக்க முடியாத வாழ்க்கையானது, வன்முறையும் சச்சரவும் நிரம்பிய வாழ்க்கையாகச் சீரழிவுக்குத் திரும்பி விடும். இத்தகைய போக்கையும் சம்பவங்களையும் தடுக்க வேண்டும்.

—மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர்

திரு ஆர். வெங்கட்ராமன்

[10-5-88ல் கலாட்சேத்திராவில் நடைபெற்ற விழாவில்.]

## பள்ளியும் ஆசிரியர்களும்

ஒருவர் குறுகிய காலத்தில் பணம் திரட்ட வேண்டுமானால் புதிதாகப் பள்ளியோ, கல்லூரியோ ஆரம்பித்து விடும் நிலை இருக்கிறது. இது தவறு. கல்வியின் உண்மையான நோக்கங்களைச் செயல்படுத்தும் விதமாகக் கல்வி நிறுவனங்கள் அமைய வேண்டும். பள்ளி ஆசிரியர்கள் தியாக மனப்பான்மையுடன் செயல்பட வேண்டும்.

—மேதகு தமிழக ஆளுநர்

திரு பி.சி. அலெக்சாண்டர்

[10-5-88ல் ஸ்ரீசங்கரா சீனியர் செகண்டரி பள்ளி விழா.]



# பெரியார் மாவட்டம்

## நலிவடைந்த சிறுதொழில் மேம்பாட்டுத் திட்டப் பணிகள்



நலிவடைந்த சிறுதொழில் நிறுவனங்களுக்குப் புத்துயிரூட்டும் திட்டத்தின்கீழ் மாவட்ட அளவிலான குழு,பெரியார் மாவட்டத் தொழில் மையப் பொது மேலாளர் தலைமையில் இயங்கி வருகிறது. அக்குழு உறுப்பினர்கள்:

1. முன்னோடி வங்கியின் பிரதிநிதி.

2. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் பிரதிநிதி.

3. சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் பிரதிநிதி.

4. மனுதாரர் கடன் பெற விரும்பும் வங்கியிலிருந்து — ஒரு பிரதிநிதி.

நலிவடைந்த மற்றும் நலிவடைந்து கொண்டுள்ள நிறுவனங்களை இனங்காணும் நோக்கோடு, இவ்வலுவலகத்திலிருந்து நிரந்தரச் சிறுதொழில் பதிவுச்சான்றிதழ் பெற்றுள்ள அனைத்துச் சிறுதொழில் நிறுவனங்களுக்கும் ஒரு படிவம் அனுப்பி வைக்கப்பட்டு, அதனைப் பூர்த்தி செய்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அவ்வகையில் இவ்வலுவலகத்தில் 562 படிவங்கள் பூர்த்தி செய்து பெறப்பட்டுள்ளன. இவற்றில் முதல் கட்டமாக 50 நிறுவனங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். அவற்றிடமிருந்து சிறுதொழில் நிறுவனங்களுக்குப் புத்துயிரூட்டும் திட்டத்தின் கீழ், பரிசீலனை செய்யத் தேவையான சில விவரங்கள் கோரப்பட்டுள்ளன. இவ்விவரங்கள் நேரில் பெற்று வருமாறு இவ்வலுவலகக் களப் பணியாளர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். இவ்விவரங்கள் பெறப்பட்ட பின், அந்த நபர்களை மாவட்ட அளவிலான குழுக்கூட்டத்திற்கு அழைத்து, கூட்டத்தில் அவர்கள் இத்திட்டத்தின் கீழ் கடனுதவி பெறத் தகுதியுடையவர்களா என்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

ஆ. நா. [illegible],
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
பெரியார் மாவட்டம்.

நலிவடைந்த சிறுதொழில் நிறுவனங்கள் தொடர்பாகத் தத்தம் வங்கிகளில் உள்ள நலிவுற்ற நிறுவனங்களின் பட்டியலையும், அவை சம்பந்தப்பட்ட பிற விவரங்களையும் சம்பந்தப்பட்ட மாவட்டத் தொழில் மையப் பொது மேலாளர்களுக்கும், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கும் அனுப்பக் கோரி வங்கிகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியுள்ளது. இதனடிப்படையில், தங்களின்கீழ் உள்ள வங்கிக் கிளைகளிலிருந்து விவரங்கள் சேகரித்து இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். சில வங்கிகள் தங்கள் வங்கிகளிலுள்ள நலிவுற்ற நிறுவனங்களின் பட்டியலை அனுப்பி உள்ளன. ஆனால் அவற்றில் நலிவுற்ற நிறுவனங்களின் பெயர்களைத் தவிர வேறு விவரங்கள் எதுவும் இல்லை. எனவே முழு விவரங்களுடன் பட்டியலை அனுப்பி வைக்குமாறு அவ்வங்கிகள் கோரப்பட்டுள்ளன. மேலும் இவ்வலுவலகத்திலுள்ள களப்பணியாளர்கள் அவ்வங்கிகளை நேரில் சந்தித்து

விவரங்கள் சேகரித்து வருமாறு வேண்டப்பட்டுள்ளனர். அவ்வாறு வங்கிகளிலிருந்தும் இவ்வலுவலகக் களப்பணியாளர்களாலும் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மாவட்ட அளவிலான குழுக் கூட்டத்திற்கு நலிவுற்ற நிறுவனங்களும், அவர்கள் கடன் பெற விரும்பும் வங்கியினரும் அழைக்கப்பட்டு, கடனுதவி வழங்குவது குறித்துப் பரிசீலிக்கப்பட்டன.

மேலும் இது குறித்து இவ்வலுவலகத்திலிருந்து தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தினரை நேரில் சந்தித்து அவர்கள் வசமுள்ள நலிவுற்ற சிறுதொழில் நிறுவனங்கள் பட்டியல் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். அவர்களும் 3 நிறுவனங்கள் குறித்த பட்டியலை அனுப்பியுள்ளனர். அவையும் மாவட்ட அளவிலான குழுக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டன. மாவட்ட அளவிலான குழுக் கூட்டம், நலிவுற்ற சிறுதொழில் நிறுவனத்திற்குப் புத்துயிரூட்டத் தேவைப்படும் கடன் தொகை, அதில் வங்கியினர் வழங்க வேண்டிய கடன் தொகை எவ்வளவு, மனுதாரர் கொண்டு வரவேண்டிய விளிம்புத் தொகை எவ்வளவு, மாவட்டத் தொழில் மையம் வழங்க வேண்டிய விளிம்புத்தொகை எவ்வளவு என்ற விவரங்கள் பரிசீலித்து முடிவெடுக்கப்படுகின்றன.

பெரியார் மாவட்டத்தில், 5 மாவட்ட அளவிலான குழுக் கூட்டங்களில் 47 மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றில் 5 நிறுவனங்களின் மனுக்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ், கடனுதவி பெறத் தகுதியுள்ளவையாகக் கருதப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவற்றிற்கு மொத்தம் ரூ. 1,09,000 தற்காலிக (ஒப்பளிப்பு) அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த 5 மனுக்களில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திலிருந்து வரப்பெற்ற 3 மனுக்களும் உள்ளன.

இந்த 5 மனுக்கள் குறித்த விவரங்கள் இணைக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட நிதி நிறுவனங்களிலிருந்து அங்கீகார ஆணை பெறப்பட்டவுடன் ஈரோடு மாவட்டத் தொழில் மையம், விளிம்புத் தொகையாகிய ரூ. 1,09,000-ஐ வெளிப்படுத்தத் தயாராக உள்ளது. இந்த 5 நிறுவனங்களுக்கு வழங்கப்பட உள்ள கடன் தொகையின் மொத்த அளவு ரூ. 4,32,000 ஆகும். இவ்வலுவலகத்திற்கென இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகையாகிய ரூ. 2,00,000இல் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள ரூ. 1,09,000 போக மீதமுள்ள ரூ. 91,000 ஒப்பளிப்பு செய்யப்பட்டு விட்டது.

வங்கிகளிலிருந்து பெறப்பட்ட சிறுதொழில் நிறுவனங்கள் (நலிவுற்ற) பட்டியலிலிருந்து 7 நிறுவனங்கள் தகுதியுடையவையாக இவ்வலுவலகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவை இனி வரும் மாவட்டக் குழுக் கூட்டங்களில் வைத்துப் பரிசீலிக்கப்படும்.

## ஊரக வளர்ச்சி முகமையின் சாதனை



ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1987-88ஆம் ஆண்டிற்கு மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 224.048 இலட்சம் ஆகும். இதில் மார்ச் '88 முடிய 240.61 இலட்சம் மானியமாகச் செலவிடப்பட்டு 107 சாதனை எய்தப்பட்டுள்ளது. பொருளியல் குறியீடு 12,102 ஆகும். இதில் பழைய பயன்தாரர்கள் குறியீடு 8,431. புதிய பயன்தாரர்கள் குறியீடு 3,671 ஆகும். மார்ச்'88 முடிய 13,095 நபர்கள் பயனடைந்துள்ளார்கள். 108% சாதனை எய்தப்பட்டுள்ளது. பயனடைந்தவர்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 5,709 நபர்களும் 4,995 பெண்களும் ஆவர்.

மாபெரும் திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்தில் 1987-88 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட 58.65 இலட்சரூபாயில் 37 இலட்சம் மானியமாகச் செலவிடப்பட்டு 2,037 நபர்கள் பயனடைந்துள்ளார்கள். இதில் 634 நபர்கள் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினரானவார்கள்.

### கிராம மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்

1987-88ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கு 190 குழுக்களும் செயல்படுத்தப்பட்டு, ரூ. 51.70 இலட்சம் மானியமாகச் செலவிடப்பட்டு, 2,930 பெண்கள் பயனடைந்து வருகிறார்கள்.

### தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்

1987-88ஆம் ஆண்டின் ஒதுக்கீடு ரூ. 269.7135 இலட்சம். இதில் மார்ச் '88 முடிய 265.188 இலட்சமாகும். 98% சாதனை எய்தப்பட்டுள்ளது. பொருளியல் குறியீடு 1839. 100% சாதனை எய்தப்பட்டுள்ளது. மனித சக்தி நாள் குறியீடு 14.19 இலட்சம். இதில் மார்ச் '88 முடிய 14.301 (101%) சாதனை எய்தப்பட்டுள்ளது.


### ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்

1987-88ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு 171.510 இலட்சத்தில் மார்ச் '88 முடிய 172.422 இலட்சம் செலவிடப்பட்டு, 100% சாதனை எய்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 1048 தொகுப்பு வீடுகள் 341 ஊரகக் கழிவறைகள் 120 கசிவு நீர்க்குட்டைகள் மற்றும் 57 ஊரக இணைப்புச் சாலை வேலைகள் ஆக மொத்தம் 1,466 வேலைகள் எடுக்கப்பட்டு, 1,048 தொகுப்பு வீடுகள், 34 ஊரகக் கழிவறைகள், 20 கசிவு நீர்க்குட்டைகள் மற்றும் 7 ஊரக இணைப்புச் சாலைகள் ஆக மொத்தம் 1,416 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. சமூகக் காடுகள் 448 எக்டேரில் நாற்றுகள் நடப்பட்டுள்ளன.


### ட்ரைசம்

1987-88ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தின் குறியீடு 700 நபர்கள். அதில் 476 நபர்கள் பயிற்சி முடித்துள்ளார்கள். மேலும் 300 நபர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.





## கலை மறுமலர்ச்சிக்கு வானொலி



சென்னை வானொலி நிலையம் தொடங்கப்பட்ட 1938-ஆம் ஆண்டு சென்னை மாகாண கவர்னராக இருந்தவர் லார்ட் எர்ஸ்கின்.

சென்னை வானொலி நிலையம் தொடங்கப்பட்டபோது லார்ட் எர்ஸ்கின் உதகமண்டலத்தில் இருந்தார். அவருடைய பேச்சு உதகமண்டலத்திலிருந்து டெலிபோன் மூலமாக சென்னையில் பதிவு செய்யப்பட்டு, பிறகு சென்னையிலிருந்து வானொலி மூலமாக ஒலிபரப்பப்பட்டது.

லார்ட் எர்ஸ்கின் தமது உரையில் 'சென்னை வானொலி நிலையம் தென்இந்தியா முழுவதற்கும் பயன் பெறுவதற்காக மத்திய அரசால் அமைக்கப்பட்டது', என்பதைக் குறிப்பிட்டுக் கூறினார்.

''வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்பதற்காக ரேடியோ பெட்டிகளை வாங்கிக்கேட்க வசதி படைத்தவர்களால் மட்டுமே முடியும். இந்த நிலையில் அவ்வாறு ரேடியோ பெட்டிகளை வாங்கக் கூடியவர்கள் தங்களுடைய சுற்றத்தார், நண்பர்கள் மட்டுமின்றி வசதியற்ற மற்றவர்களும் வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்க அனுமதிக்க வேண்டும்'' என்று லார்ட் எர்ஸ்கின் கேட்டுக் கொண்டார்.

''தென்னிந்தியக் கலைகளின் மறுமலர்ச்சிக்கு வானொலி நிலையத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தற்போது வானொலி நிலையத்தை நடத்துவதற்குப் பெரும் பொருள் செலவாகிறது. மத்திய அரசு இந்த நிலையத்தை நிறுவுவதற்காகச் செலவை ஏற்றுள்ளது. சென்னை மாகாண அரசு கிராமப்புறங்களில் ரேடியோ பெட்டிகளை வாங்கி வைக்க முன் வந்துள்ளது. பல நகராட்சிகளும் ரேடியோ பெட்டிகளை வாங்கிட முன் வந்துள்ளன. ரேடியோ பெட்டிகளுக்கான லைசன்ஸ் தொகையைக் கொண்டுதான் வானொலி நிலையங்களுக்கான செலவைச் சரிக்கட்ட வேண்டும். பம்பாய் மாகாணத்தில் 17 ஆயிரம் ரேடியோ பெட்டிகள் இருக்கின்றன. அவற்றின் மூலம் வருகின்ற வருவாய், பம்பாய் வானொலி நிலையத்தின் ஆண்டுச் செலவில் பாதிக்குக்கூடப் போதுமானதாக இல்லை.

### அந்நாள் ஆளுநர் லார்ட் எர்ஸ்கின் ஆற்றிய உரை

''நமது சென்னை மாகாணத்தில் வாங்கப்பட்டுள்ள ரேடியோ லைசன்ஸ்கள் 3 ஆயிரம் தான். இதிலிருந்து இன்னும் நாம் இத்துறையில் எவ்வளவு முன்னேற வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். எனவே மக்கள் அதிகமாக ரேடியோ பெட்டிகளை வாங்க வேண்டும். தனித்தனியாக வாங்க முடியாதவர்கள் கூட்டாக ஒன்றுசேர்ந்து, பொதுவாகப் பயன்படுத்திக்கொள்ள ரேடியோ பெட்டிகளை வாங்கலாம். வசதிபடைத்தவர்கள், பொதுநிறுவனங்கள் ரேடியோ பெட்டிகளை வாங்கி, அதில் ஒலிபெருக்கி வைத்து நிகழ்ச்சிகளை அனைவரும் கேட்குமாறு செய்யவேண்டும். இந்த வானொலி நிலையத்தின் ஒலிபரப்பு பல்லாயிரம் மக்களுக்கு நல்ல கருத்துக்களையும் இனிய பொழுதுபோக்கையும் வழங்கும் என்று நம்புகின்றேன்''—இவ்வாறு லார்ட் எர்ஸ்கின் தமது உரையில் கூறினார்.



# வானொலியின் பயன் என்ன?

## 1938-ஆம் ஆண்டு சென்னை வானொலி நிலையத்தில் ராஜாஜி ஆற்றிய உரை

முதறிஞர் ராஜாஜி அவர்கள் சென்னை வானொலியின் நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

''நான் பேசுவது உங்களுக்கெல்லாம் கேட்கிறதா?' நான்தான் ராஜகோபாலாச்சாரி பேசுகிறேன்'' என்று கூறிவிட்டு, ராஜாஜி தமது உரையைத் தொடர்ந்தார்.

'வானொலி என்றால் என்ன?' என்பதை தமக்கேயுரிய ஆற்றலுடன் ராஜாஜி விளக்கிக் கூறினார். ''நாம் பேசுகிற, பாடுகிற ஒலியை வாங்கி அதனைப் பெரிதுபடுத்தி ஒலிமண்டலத்தில் கொண்டுபோய்ச் சேர்த்து அங்கிருந்து ரேடியோ பெட்டி மூலம் நாம் அதே பேச்சை அல்லது பாடலைக் கேட்க வைப்பது தான் வானொலி'' என்று அவர் விளக்கினார்.

''இந்த நவீன விஞ்ஞான சாதனம் ஆகிய வானொலி நல்ல கருத்துக்களைப் பரப்பிட வேண்டும். பயனுள்ள கருத்துக்களைப் பரப்பிட வேண்டும்'' என்று ராஜாஜி கேட்டுக் கொண்டார்.

''வானொலியின் வாயிலாக எவ்வளவு நற்கருத்துக்களைப் பரப்பினாலும் அதனைக் கேட்கிறவர்களுடைய மூளை நல்ல விதமாக இயங்கி

**இன்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன் அதாவது 16.6.1938 அன்று சென்னை வானொலி நிலையம் தனது பணியைத் தொடங்கியது. தமிழ்நாடு, கேரளத்தின் ஒருபகுதி கர்நாடகத்தின் ஒருபகுதி, ஆந்திர மாநிலம் இவையனைத்தும் அடங்கியதாக அன்றைய சென்னை ராஜதானி விளங்கியது. அன்றைய சென்னை ராஜதானிக்கு ஆட்சித் தலைவராக இருந்தவர் பிரதமர் என்று அழைக்கப்பட்டார். அப்போதைய சென்னை மாகாணப் பிரதமராக இருந்தவர் முதறிஞர் ராஜாஜி.**

னால்தான் பயன்பெறமுடியும்.

''கணவன்மார்களே! குடிக்காதீர்கள்! குடித்துவிட்டு மனைவிமார்களை அடிக்காதீர்கள்.

'மனைவிமார்களே! உழைத்துக் களைத்து வீடு திரும்பும் கணவன்மார்களுக்கு உங்கள் வீடுகளை மகிழ்ச்சிகரமாக வைத்திருங்கள். அதுவேண்டும் இதுவேண்டும் என்று நச்சரிக்காதீர்கள்!''

''மாணவர்களே! மாணவியர்களே நன்றாக உழைத்திடுங்கள். அனைவருடனும் சகஜமாகப் பழகுங்கள்.

''இப்படியெல்லாம் வானொலி போதித்தாலும் அதைக் கேட்கிறவர்களுடைய தன்மையைப் பொறுத்துத்தான் இந்த நீதிகள் செயல்வடிவம் பெறும்'' என்று ராஜாஜி தமது பேச்சில் குறிப்பிட்டார்.

ராஜாஜி மேலும் கூறியதாவது:

''வானொலி ஒலிபரப்பு சென்னைக்குப் புதியதல்ல. சென்னை மாநகராட்சி சென்னைக்கு மட்டும் ஒரு ஒலிபரப்பு நிலையம் நடத்தி அதில் இசை நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியது. ஆனால் இந்த வானொலி மாகாண முழுவதற்கும் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும். வெளிமாநிலங்கள், வெளிநாடுகள் இவற்றிலிருந்து கூட நிகழ்ச்சிகளைக் கொடுக்கும். தற்போது தமிழ், தெலுங்கு, ஆங்கிலத்தில் நிகழ்ச்சிகள் அளிக்கப்படுகின்றன. நாளடைவில் கிராமங்களை உயர்த்தும் தரமான நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படும்'' என்று ராஜாஜி கூறினார்.

''வசதியுள்ள தனி நபர்கள் ரேடியோ பெட்டியை வாங்கிவைத்து மற்றவர்களும் நிகழ்ச்சிகளைக் கேட்குமாறு செய்ய வேண்டும். இந்த நவீன சாதனத்தை அறிவுடனும், நல்லமுறையிலும் மக்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்'' என்று ராஜாஜி தமது உரையில் கேட்டுக் கொண்டார்.



இடமிருந்து வலம் எஸ்.என். மூர்த்தி (நிகழ்ச்சி உதவியாளர்), விக்டர் பரஞ்சோதி (நிலைய இயக்குநர்), ராஜாஜி (சென்னை மாகாண பிரதமர்) சர் ஆண்ட்ரு க்ளோ (வைஸ்ராய் நிர்வாகக் குழு) உறுப்பினர்



# வானொலியின் பொன் விழாவும் தமிழ்நாடும்

சென்னை வானொலி நிலையம் 16.6.1988இல் தனது பொன்விழாவைக் கொண்டாடுகிறது. தமிழ்நாட்டிலுள்ள நம் அனைவருக்கும் இது பெருமை தருவதாகும்.

தமிழ்நாட்டில் தொலைக்காட்சி படிப்படியே மகத்தான வளர்ச்சி பெற்று வந்தபோதிலும், சாதாரண மக்களிடையே வானொலிதான் இன்னமும் செல்வாக்குள்ளதாகத் திகழ்கிறது. 1.5.1988 நிலவரப்படி தமிழ்நாட்டில் வானொலியின் வியாபகம் இடப்பரப்பைப் பொறுத்தவரையில் 96 சதவிகிதமாகவும், மக்கள் தொகையைப் பொறுத்தவரையில் 97 சதவிகிதமாகவும் இருக்கிறது. இவை அனைத்திந்திய அளவில் முறையே 82.9 சதவிகிதமும், 94.5 சதவிகிதமும் ஆகும். ஏழாவது திட்ட இறுதியில், அதாவது 31.3.1990இல், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் வானொலியின் வியாபகம் இட அளவில் 99 சதவிகிதமாகவும், மக்கள்தொகை அளவில் 99 சதவிகிதமாகவும் இருக்கும். அனைத்திந்திய அளவில் இவை முறையே 91 சதவிகிதமாகவும், 97.50 சதவிகிதமாகவும் இருக்கும். மக்கள்தொகைப் பெருக்கத்தால் விளையும் பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியுள்ள-வளரும் ஒரு நாட்டில் இது மகத்தானதொரு சாதனையாகும்.

நாடு சுதந்திரம் பெற்றபோது, 15.8.1947இல், இந்தியாவில் டில்லி, பம்பாய், கல்கத்தா, லக்னோ ஆகிய இடங்களிலும், தமிழ்நாட்டில் சென்னை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலும் ஆக மொத்தம் ஆறு வானொலி நிலையங்கள்தான் இருந்தன. தமிழ்நாடு எழுத்தறிவு மிக்க மாநிலம் எனலாம். 1981 மக்கள் தொகைக் கணக்குப்படி, இந்தியாவில் எழுதப்படிக்கத் தெரிந்தவர் சதவிகிதம் 36.23; மாநிலங்களில் 70.42 சதவிகிதம்பெற்றுக் கேரளம் முன்னணியில் உள்ளது. அதற்கு அடுத்தபடியாக 47.18 சதவிகிதம் பெற்று மகாராஷ்டிரம் இருக்கிறது. தமிழ்நாட்டின் சதவிகிதம் 46.76. கல்வித்துறையில் அரசு மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக, 1981க்கும் 1988க்கும் இடையே இது மேலும் உயர்ந்திருப்பது திண்ணம். வானொலி கல்வியறிவும் சிறந்தபொழுது போக்கு நிகழ்ச்சிகளும் வழங்குவதில் அதிக அளவு மக்களுக்குப் பயன்பட்டு வருவதை இந்தப் புள்ளி விவரங்களே பறைசாற்றும்.



**சி. என். ராம்தாஸ், இ.ஆ.ப.,**
**சிறப்பு ஆணையர், செயலர்,**
**செய்தி-சுற்றுலாத்துறை,**
**தமிழ்நாடு அரசு.**

வளர்ச்சியடையாத ஒரு சமுதாயத்தில் நவீனமயமாக்குவதற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் செய்தித்தொடர்பு முக்கியப் பணியாற்றுகிறது. பெருந்தொகையான மக்கள் படிப்பறிவு இல்லாதவர்களாக இருக்கும்போது, எழுத்துச் சாதனங்களைவிட, ஒலிபரப்புச் சாதனங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுவது கண்கூடு. வானொலி ஆரம்பத்திலிருந்தே இந்தப் பொறுப்பை உணர்ந்து, மக்களுக்கு பொதுவான நிகழ்ச்சிகளையும், உழவர்கள், மகளிர், மாணவர், ஆசிரியர், தொழிலாளர் போன்றோருக்குக் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளையும் தயாரித்து வழங்கி வந்துள்ளது.

வானொலி சரியான நேரத்தில் நேரடியாக மக்களுக்குச் செய்திகளைச் சொல்கிறது. புதிய வழிமுறைகளில் செயல்பட ஆற்றுப்படுத்துகிறது. அரசு விவசாய உற்பத்தியைப் பெருக்கக் குரல் கொடுத்தபோது, வானொலி அதற்குக் கைகொடுத்து உதவியது. புதிய உத்திகள், இயந்திரங்கள் பற்றி உழவர்களுக்கு எடுத்துரைத்தது. பண்ணைப் பள்ளிகள், வல்லுநர்களை உழவர்களின் கழனிகளுக்கு அழைத்துச் சென்றன. கடந்த 50 ஆண்டுகளில், விவசாயச் செய்திகளைத் தெரிந்து கொள்ள விவசாயப் பெருமக்கள் வானொலிப் பெட்டியை உற்ற நண்பனாகக் கருதிப் பயன் பெற்று வந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் விவசாய உற்பத்தியும் உற்பத்தித்திறனும் அதிகரிப்பதற்கு ஊக்குவிப்புச் சக்தியாக வானொலி பயன்பட்டிருப்பது குறித்து அது பெருமைப் படலாம். விவசாயி, முன்னேற்றம் பெறும் வகையில் அவரது விவசாய முறைகளை வானொலி மாற்றியமைத்துள்ளது. ADT 27 ரகம் வானொலியில் பெற்ற விளம்பரம் காரணமாக, அதற்கு ''ரேடியோ அரிசி'' என்றே பெயர் வந்துவிட்டது. டிரான்சிஸ்டர் வந்தது, மக்கள் வானொலி கேட்கும் வழக்கத்தில் ஒரு புரட்சியையே ஏற்படுத்திவிட்டது.

பண்ணை இல்ல ஒலிபரப்புகள் அதிகரித்து, அதன் பலனாக விவசாயிகளுக்கு உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள், நவீன உழவுக் கருவிகள், உழவு முறைகள், தரமான வித்துக்கள், மற்ற சுவையான செய்திகள் ஒலிபரப்பப்பட்டன. செய்திகளைத் தெரிந்து கொண்டால் மட்டும் போதாது. விவசாயிகள், தாங்கள் பெற்ற அறிவை வயல்களில் பயன்படுத்த வேண்டும். அதற்காக அவர்களிடமிருந்து கேள்விகள், ஐயங்கள் ஆகியவற்றைப் பெற்று, நிபுணர்களிடமிருந்து அவைகளுக்குத் தக்க பதில்களைப் பெற்று ஒலிபரப்பியது வானொலி.

சிறந்த சாதனை புரிந்துள்ள விவசாயிகளைப் பேட்டி கண்டு, அவர்கள் எந்த முறைகளைக் கையாண்டனர் எப்படி உரம் போட்டு, எப்படிப் பயிர்ப் பாதுகாப்பு செய்தனர் என்பன போன்ற விவரங்களை மற்றவர்கள் தெரிந்துகொள்ள உதவியதோடு, விவாதங்களுக்கும் ஏற்பாடு செய்தது; செய்து வருகிறது வானொலி. சுத்தம், சுகாதாரம் பற்றியும் மக்கள் தெரிந்து பின்பற்ற உதவுகிறது.

குடும்பநலத் திட்டத்தை எடுத்துச்சொல்லி மக்களின் ஆதரவைத் திரட்டுவதில் வானொலி மகத்தான பணியாற்றுகிறது. தாய்-சேய் நலம், தடுப்பூசி, குடும்பக் கட்டுப்பாடு



மூதறிஞர் ராஜாஜி அவர்கள் 1964ஆம் ஆண்டில் வானொலியில் உரையாற்ற வந்தபோது

ஆகியவற்றை வெற்றிகரமாக மக்களின் உள்ளங்களில் பதியச் செய்துள்ளது. வானொலியின் கல்வி ஒலிபரப்புகளும் சமுதாயத்திற்குச் சிறந்த முறையில் உதவி வருகின்றன.

மாநில அரசின் நலவளர்ச்சித் திட்டங்களைப் பற்றிய விவரங்கள் பொது மக்களைச் சென்றடைவதில் வானொலியின் உதவி குறிப்பிடத்தக்கதாகும். அறிவியல் நிகழ்ச்சிகளைப் பொறுத்தும் சென்னை வானொலியின் சேவை சிறப்பானது காலநிலை அறிக்கைகளை, முக்கியமாகப் புயல்போன்ற சமயங்களில் சிறப்பாக அறிவித்து அரும் பணியாற்றி வருகிறது.

விளையாட்டுகளைப் பற்றித் தமிழில் நேர்முக வர்ணனை செய்து வரலாறு படைத்திருக்கிறது சென்னை வானொலி. 1973-74 கிரிக்கெட் பருவத்தில் இது ஆரம்பமானது. சிறப்பாக நேர்முக வர்ணனை செய்யும் 10-12 பேர் தேசிய அளவில் கிடைத்திருக்கிறார்கள். பல்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகளை மக்கள் விரும்பிக் கேட்கும் வகையில் தமிழில் நேர்முக வர்ணனை செய்வதை இப்பொழுது சென்னை வானொலி தனது நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாகவே ஆக்கிக் கொண்டுவிட்டது.

இப்பொழுது தமிழ்நாட்டில் சென்னை, திருச்சிராப்பள்ளி, கோவை, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் ஆகிய ஆறு இடங்களில் வானொலி நிலையங்கள் இருக்கின்றன. ஏழாவது திட்டக் காலத்தில் (1985-90) உதகமண்டலம், கொடைக்கானல், தூத்துக்குடி ஆகிய மூன்று இடங்களில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவை எல்லாமே 1990 இறுதி வாக்கில் முடிந்துவிடும். அத்துடன், இந்தக் காலத்தில் சென்னை, திருச்சி வானொலி நிலையங்களிலும் கூடுதல் வசதிகள் பல செய்யப்படும்.

சென்னையிலிருந்து தேசிய ஒலிபரப்புக்கு வசதியாக நிலையம் கட்டுவதற்கு கிண்டியில் 11.68 ஏக்கர் நிலப்பரப்பை 1990க்கு மேலும் குத்தகைக்குத் தருமாறு வானொலியினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அதற்கான அனுமதி வழங்கத் தமிழக அரசு சம்மதித்துள்ளது. இது ஒரு தேசியத் திட்டமாக இருப்பதே அதற்குக் காரணம். மத்திய-மாநில உறவுகள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இது சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

அண்மையில் புதுடில்லியில் 25.5.88இல் நடந்த அனைத்திந்திய மாநிலச் செய்தித்துறை அமைச்சர்கள் மாநாட்டில் ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் எஸ்.எஸ்.சித்து அவர்கள் தமிழ்நாடு அரசின் சார்பில் பின்வரும் கருத்துக்களை வலியுறுத்திப் பேசினார்.

(1) திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தின் ஒலிபரப்பு பலப்படுத்தப்பட்டுள்ள போதிலும், அதன் நிகழ்ச்சிகளை தர்மபுரி மாவட்டத்திலும், வட ஆர்க்காடு மாவட்டத்தின் சில பகுதிகளிலும் சரியாகக் கேட்க முடிவதில்லை. எனவே, தர்மபுரி, வட ஆர்க்காடு ,சேலம் மாவட்ட மக்களுக்குப் பயன்படும் வகையில் சேலத்தில் தனியே ஒரு வானொலி நிலையத்தை நிறுவலாம்.

(2) பம்பாய், கல்கத்தா, டில்லி போன்ற பெருநகரங்களில் இளங்கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் ''யுவவாணி'' நிகழ்ச்சிகளுக்குத் தனி ஒலிபரப்பு இருக்கிறது. தமிழ்நாட்டிலும் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, கூடிய விரைவில் இதைச் செய்து தர வேண்டும்.

(3) திருநெல்வேலி, மதுரை, கோவை நிலையங்களில் விவித பாரதி, வர்த்தக ஒலிபரப்பைத் தொடங்குவது சிறப்பாக இருக்கும். அந்த மாவட்டங்களில் இதற்கான வர்த்தகச் சூழ்நிலைகள் இருக்கின்றன. சென்னை, திருச்சி நிலையங்களிலிருந்து ஒலிபரப்பாகும் விவித பாரதி வர்த்தக ஒலிபரப்பு இந்த வகையில் சிறப்பாகப் பயன்பட முடியாது. தமிழ்நாட்டின் இந்த நியாயமான கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் என்று நான் நம்புகிறேன்.

இருக்கின்ற, ஏற்படப்போகின்ற, எல்லா வானொலி நிலையங்களின் ஒலிபரப்பு ,மேலும் நன்கு கேட்கக் கூடியதாகவும், அதிகச் சுற்றளவுக்கு எட்டக்கூடியதாகவும் இந்திய அரசு எடுக்கும் முயற்சிகளுக்குத் தமிழக மக்கள் நன்றி செலுத்துவார்கள்.

அரசின் நடவடிக்கைகளை, முக்கியமாக ஊரக வளர்ச்சி, பொது விநியோகம், குடிநீர், பெரிய, நடுத்தர, சிறு தொழில்துறை முயற்சிகளை வானொலியில் சொல்வது பற்றி ஒரு வார்த்தை; வளர்ந்து வரும் சமுதாயத்தின் ஒலிபரப்பு மாற்றத்தையும் நவீனப் படுத்துவதையும் வேகப்படுத்துவதோடு, நாட்டின் புனர் நிர்மாணத்துக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். புதிய சிந்தனைகளையும் உருவகங்களையும் உள்ளடக்கி இத்தகைய நிகழ்ச்சிகளைக் கொடுத்தால் மக்களுக்குப் பெரும் பயன்கிட்டும் என்பதில் ஐயமில்லை.



# சகோதரப் பிணைப்பு

நா. கிருஷ்ணபாரதி இ.ஆ.ப.,
இணைச் செயலர்-இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்பு,
தமிழ்நாடு அரசு.

ஜனநாயகத்தின் தூண்களாகவும், அரசுக்கும் மக்களுக்கும் பாலமாகவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் அரசு எடுக்கும் முயற்சிகளை மக்களுக்கு விளக்கிச் சொல்வதற்கும், அவற்றின் வெற்றிக்கு அவர்களது ஒத்துழைப்பைப் பெற்றுத்தருவதற்கும் கருவிகளாகவும் இன்று இயங்குபவை தகவல் அறிவிப்புச் சாதனங்களாகிய பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, சினிமா ஆகியவைகளாகும்.

இந்தியாவில் மத்திய அரசிலும் மாநில அரசுகளிலும் செய்தித்துறைகள் இயங்குகின்றன. சர்வாதிகார நாடுகளில் செய்தித்துறைகள் சர்க்காருக்காகச் செயல்படுவன. இந்தியா போன்ற மக்களாட்சி நாடுகளில் மக்களுக்காகச் செயல்படுவன. இந்தக் குறிக்கோள் மத்திய-மாநில அரசு நிறுவனங்களுக்கு ஒன்றாக இருப்பதால் அவை ஒன்றுக்கொன்று இணக்கமாக, நெருக்கமாக, ஒத்துழைப்பாகச் செயல்பட்டால், மக்களுக்குச் சிறந்த சேவையினைச் செய்ய முடியும். இதனை தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு அரசின் செய்தி-மக்கள் தொடர்புத்துறையும், மத்திய அரசின் செய்தி-ஒலிபரப்புத்துறையின் எல்லாப்பிரிவு அலுவலகங்களும் இயன்ற அளவு பயன்மிக்க வழிகளில் வெற்றிகரமாக நிறைவேற்றி வருகின்றன என்பதில் சிறிதும் ஐயமில்லை. குறிப்பாக, மாநில அரசின் செய்தித்துறைக்கும், மத்தியச் செய்தி-ஒலிபரப்புத்துறையின் ஓர் அங்கமான வானொலிக்கும் இடையே நல்லுறவும், நெருக்கமான பிணைப்பும் மிகவும் போற்றத்தக்க வகையில் உள்ளன.

தமிழ்நாடு அரசு தனது செய்தித்துறையின் மூலமும், பிற துறைகளின் செய்தி அறிவிப்புச் சாதனங்கள் மூலமும், மாவட்டங்களில் ஆட்சித்தலைவர்கள், மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூலமும் செய்தி-வெளியீடுகள், அறிக்கைகள் முதலியவற்றை வெளியிடுகிறது. வானொலி இவற்றை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு, மக்களுக்கு நன்கு சேவை செய்கிறது.

அமைச்சர்கள், அரசு உயர் அலுவலர்கள், வெளிநாடுகளிலிருந்து வரும் விருந்தினர் போன்றோருக்குப் பத்திரிகையாளர் கூட்டங்களை மாநிலச் செய்தித்துறை ஏற்பாடு செய்கிறது. இவற்றில் வானொலி பங்குகொண்டு, தகவல்களை உடனுக்குடன் அறிவித்து உதவுகிறது. மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஆகியோர் ஏற்பாடு செய்யும் செய்தியாளர் கூட்டங்களுக்கும் இந்த மாதிரியான ஒத்துழைப்பு வானொலியிலிருந்து கிடைக்கிறது.

சில நேரங்களில் மாநில அரசின் முடிவுகள், அல்லது அறிவிப்புகள் செய்திக் குறிப்பாக அச்சு வடிவில் தரப்படுவதற்கு நேரம் இருக்காது. வேலை நிறுத்தங்கள், மழை-புயல், தலைவர்களின் மறைவு போன்ற சந்தர்ப்பங்களில் இப்படி நேரிடலாம். அந்தச் சமயங்களில் வானொலி எடுத்துக்கொள்ளும் கடமைப் பொறுப்பும், செயல்பாடும் மிகவும் போற்றத்தக்கவை.

மாநிலத்தின் நிகழ்ச்சிகளைச் சொல்லும் செய்திகளுக்கு மட்டுமல்லாது, வளர்ச்சிப் பணிகளை விவரிக்கும் தகவல்களுக்கும் வானொலி முக்கியத்துவம் தந்து வருவதையும், இதில் மாநில அரசின் செய்தித்துறையின் ஒத்துழைப்பை அது முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதையும் இங்கே குறிப்பிட வேண்டும். ''மாவட்டச் செய்தி மடல்'' போன்ற பகுதிகளுக்கு, தலைமைச் செயலகத்திலிருந்து செய்தித்துறை வெளியிடும் செய்திக் குறிப்புகளும், மாவட்டங்களில் மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் வெளியிடும் செய்திக் குறிப்புகளும் பேருதவியாக இருக்கின்றன.



''வளரும் தமிழகம்'' என்ற உரை வரிசையில், ஒவ்வொரு துறையின் வளர்ச்சி பற்றியும் அவ்வத்துறை அமைச்சர் வானொலியில் உரை நிகழ்த்தும் ஏற்பாடு அண்மைக் காலம் வரை இருந்து வந்தது. இதற்கு, அவ்வத்துறையுடன் செய்தித்துறை தொடர்புகொண்டு, உரை தயாரிக்கப்படவும், பிறகு அது வானொலியில் பதிவு செய்யப்பட்டு ஒலிபரப்பப்பட வானொலியுடன் ஒருங்கிணைப்புப் பணியினைச் செம்மையுறச் செய்யவும் செய்தித்துறை சீரிய பணியாற்றியுள்ளது. இந்த உரைகளைத் தமிழ்நாடு செய்தித்துறை தனது மாதம் இருமுறை வெளியீடான ''தமிழரசு'' இதழில் வெளியிடவும், பிறகு அதனைத் தனி நூலாக அச்சிட்டு மக்களுக்கு வழங்கவும் ஏற்பாடு செய்தமை அனைவரும் அறிந்ததே.

வானொலி வேண்டும் போதெல்லாம் சென்னையில் தலைமையிடத்திலும் சரி, மாவட்டங்களில் மக்கள் தொடர்பு அலுவலகங்களிலும் சரி தகவல்களைத் திரட்டிக்கொடுத்து வருகிறோம். அது மட்டுமல்லாமல், வானொலி அலுவலர்கள் சிறப்பு நிகழ்ச்சிகள் அல்லது கருத்தரங்குகள், அலுவலர், அலுவல் சார்பற்றவர் பேட்டிகள் போன்றவற்றுக்கு ஏற்பாடு செய்து உதவுவதையும், இயன்ற இடங்களில் வாகனவசதி செய்து கொடுப்பதையும் கடமையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறோம். அதுபோலவே, மாநில அரசு அல்லது செய்தித்துறை ஏற்பாடு செய்யும் விழாக்களைப் பதிவு செய்து ஒலிபரப்புவதில் வானொலியின் சீரிய ஒத்துழைப்பு எங்களுக்குக் கிடைத்து வருகிறது. குறிப்பாக, மாநிலத்தில், ஒரு சமயத்தில் ஒரு மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்து அதில் சிறப்பாகவும் தீவிரமாகவும் பல் முனை வளர்ச்சிப்பணி விளக்க இயக்கம் நடத்தும்போது,வானொலி நல்ல முறையில் ஒத்துழைப்பு நல்குகிறது.

வானொலியின் சார்பாக ''வானொலி'' எனும் இதழ் வெளிவந்தபோது, அதில் விஞ்ஞானச் செய்திகள், இலக்கியக்குறிப்புகள் போன்றவற்றைத் ''தமிழரசு'' இதழில் எடுத்தாண்டிருக்கிறோம். இப்பொழுது ''வானொலி'' நின்றுவிட்ட நிலையில், சென்னை

வானொலி இயக்குநர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, வானொலியின் முக்கிய நிகழ்ச்சிகளைத் ''தமிழரசு'' இதழில் வெளியிட்டு வருகிறோம்.

வேளாண்மை வளர்ச்சியில் வீடும் வயலும், பண்ணைச் செய்தி, விவசாயிகளின் பேட்டி ஆகியவையும், குடும்பநலச் செய்திகள், பேட்டிகள், மகளிர் நிகழ்ச்சிகள் போன்றவையும், மாவட்டச்செய்தி மடல், சட்டமன்ற நிகழ்ச்சிகள் தொகுப்பு போன்றவையும் மாநில-மத்திய அரசு இணைந்த செயல்பாட்டுக்கும், அரசு-மக்கள் ஒத்துழைப்புக்கும் மகத்தான வெற்றிச் சின்னங்களாகும். சென்னை வானொலி பொன்விழா கொண்டாடும் இந்தத் தருணத்தில் அது தனது இந்தச் சாதனைகள் பற்றி நியாயமாகப் பெருமைப்பட்டுக் கொள்ளமுடியும்.


இவ்விது சகோதர அமைப்பான வானொலியின் செயல் திறன் சிறப்பதற்கு, தமிழ்நாடு அரசு செய்தித்துறை எப்பொழுதும் தனது ஒத்துழைப்பையும் கூட்டுறவையும் சிறந்த முறையில் அளித்துவருகிறது. புதிய நிலையங்கள் தொடங்க நிலங்களைக் கையகப்படுத்தித் தருதல், அரசின் துறைகளுக்கு இடையே இணக்கத்தையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்தல், வானொலி நிகழ்ச்சித் திட்டங்களுக்குச் செய்திகளும் திட்டங்கள் பற்றிய தகவல்களும் திரட்டித்தருதல், வானொலி அலுவலர்கள் நிகழ்ச்சிப் பதிவுகளுக்குத் தக்க ஏற்பாடு செய்தல் போன்ற காரியங்களைக் கடமைப்பற்றுடன் நிறைவேற்றி வருகிறது. எதிர்காலத்திலும் இந்த வகையில் தமிழ்நாடு அரசு செய்தித்துறை மேலும் வீறுடனும் ஆர்வத்துடனும் செயல்படும். மக்களின் சேவை என்ற ஒரே உன்னத இலட்சியத்தில் ஒன்றுபட்டுச் சகோதரப் பிணைப்புடன் செயல்படும் இந்த இரு அமைப்புகளின் செயல்திறனால், தமிழக மக்களுக்கு மேலும் பல நல் வாய்ப்புகளும், புதிய பல நிகழ்ச்சிகளும் கிடைக்கும் என்று உறுதியாக நம்பலாம்.

1-5-'88— (ஞாயிறு)
சென்னை-1
(416.7 மீ. 720 கி.ஹெ.)

காலை :
8.30— அரங்கிசை—
ஜி.என். பாலசுப்பிரமணியம்— பாட்டு

10.00— பௌத்தம் போற்றிய பெண் தெய்வங்கள்— டாக்டர் அரங்கராமலிங்கம்-பேச்சு.

2-5-'88 (திங்கள்)
சென்னை-1.



# வானொலி உரையில் வடித்தெடுத்த வரிகள்

ஒரு நாட்டின் உயர்வு அதனுடைய மொழியின் வளர்ச்சியைப் பொறுத்ததாகும். மேல்நாட்டிலே சாதாரண மக்களும், இங்கு கற்று அறிந்த சிலர் பெற்றிருப்பதை விட, சில விஷயங்களைப் பற்றி அதிகமான அறிவு பெற்றிருக்கிறார்கள். இதற்குக் காரணம் அவர்கள் மொழிவளர்ச்சியே ஆகும். மொழிவளர்ச்சி இருக்கும் நாடுகளில் மக்களின் வாழ்க்கைத்தரமும், காரியங்கள் செய்யும் ஆற்றலும் உயர்ந்ததாகவே இருக்கும். ஒரு நாடு ஆற்றலுடனும் மிகுந்த சக்தியுடனும் விளங்க வேண்டுமானால், சிலபேர்கள் மாத்திரம் அறிவும் ஆற்றலும் உடையவர்களாக இருந்தால் மட்டும் போதாது. சாதாரண மக்களுடைய அறிவின் நிலையும் உயர வேண்டும்.

**டி. எஸ். அவினாசிலிங்கம்**
**சென்னை சர்க்கார் கல்வி மந்திரி**
*7.1.1948*

சத்தியம் என்ற கருத்தைக் குறிக்கத் தமிழிலே மூன்று சொற்கள் உள்ளன; உண்மை, வாய்மை, மெய்மை.

உண்மை மனத்தைப் பற்றியது; வாய்மை வாக்கைப்பற்றியது; மெய்மை செயலைப் பற்றியது. இந்த மூன்றும் சேர்ந்த திரிகரண சுத்தியைத்தான் காந்தியடிகள் சத்தியம் என்றார்.

**ஓமந்தூர் பி. ராமசாமி ரெட்டியார்**
**சென்னை பிரதமர்**
*2.10.1948*

எல்லோருக்கும் இந்நாடு என்ற அடிப்படையில், வகுக்கப்பட்டிருக்கும் 'புதிய அரசியலை சமூக நீதிக்காகவும் சமதர்மத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்வது முற்றிலும் சாத்தியமே. எக்காலத்திலும் அமைதியைக் கடைப்பிடிப்போர் என்ற உறுதி ஒன்றுதான் அதற்கு வேண்டும்.

**பெருந்தலைவர் காமராஜ்**
*19.10.1949*

எவ்வளவு மலர்கள் நம் கண்ணுக்குப் படாமல் நாட்டில் மலர்ந்து மறைகின்றன. உலகில் பெறவேண்டிய புகழ்மலர்களை அடைய முடியாமல் மறைத்துக் கொண்டிருக்கும் அறிஞர்களை இது நினைவுறுத்துகிறது அல்லவா?

**டி. ஏ. மதுரம்**
*29.5.1951*

ஜனநாயகம், ஜனங்களின் ஆட்சி என்றால் என்ன அர்த்தம்? ஒவ்வொரு மனிதனும் முணுமுணுத்துக் கொண்டே இருப்பது என்று அர்த்தம் அல்ல. ஒவ்வொரு மனிதனும் தேசமே தன்னுடையது என்றே உணர்ச்சி கொள்ள வேண்டும். சமூகப்பிரக்ஞையுடனேயே எந்த விஷயத்தையும் ஆராயவேண்டும். ''நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை'' என்றே திடநம்பிக்கையுடன் செயல்புரிய வேண்டும்.

**தி. ஜ. ரங்கநாதன்**
*2.11.1949*



## இசை நிகழ்ச்சிகள்



எம்.எம். தண்டபாணி தேசிகர்



எம்.எஸ். சுப்புலட்சுமி



சீர்காழி கோவிந்தராஜன்


தமிழ் எழுத்தாளர் பெருமன்றம்























பெண் மனம் (வானொலி நாடகம்)
பங்கு பெற்றோர்: பிரண்ட் ராமசாமி, சிவாஜிகணேசன், டி.பி. முத்துலட்சுமி, பி.கே. சரஸ்வதி, ஜி. சகுந்தலா (1952)



# வானொலிக் கலை



**கோ. செல்வம்**
**நிலைய இயக்குநர்,**
**அகில இந்திய வானொலி,**
**சென்னை.**

**வா**னொலி என்பது 'வந்ததெல்லாம் கொள்ளும் ஒரு மகராஜன் கப்பல்'. எல்லா வகைப்பொருள்களையும் இந்த மகராஜன் கப்பல் கொள்ளும். இது எல்லா வகையான மக்களுக்குமான ஒரு தகவல் சாதனம்.

இளைஞர் கையில் 'காமெண்டரிக்' காகக் காதுகளின் அருகில் கொணரப்படுகிறது. நரிக்குறவர் கைகளில் ஒரு திரைப்பாடலுக்காக டிரான்சிஸ்டர் வடிவில் தொங்குகிறது. பழுத்த கிழங்களுக்காக 'கதா காலட்சேபம்' தருகின்றது. யாவர்க்கும் 'அறிவுரை' அளிக்கின்றது. குழந்தைகளுக்காக சின்னக் கதைகளையும் சிறப்புச் செய்திகளையும் தருகின்றது. நாத உபாசகர்களுக்கு "நாத தனுமனிசம்" தருகின்றது. நாடகப் பிரியர்களுக்கு நாடகங்களையும் கதைகளையும் தருகின்றது. நாட்டு நடப்பு சொல்லும் செய்திக் கருவியாக உள்ளது. புதுவகை ரக வித்துக்களைப் பற்றிப் பண்ணை இல்ல ஒலிபரப்புக்களில் புதிய செய்திகள் தந்து வயல்வெளிகளில் பசுமைப் புரட்சி செய்ய உதவுகின்றது. தாயின் மடியில் தவழும் பிள்ளைக் கனியமுது முதல் மூன்றுகால் கொண்டு நடக்கும் முதியோர் வரை இவ் வானொலி திருப்திப்படுத்த முனைகின்றது.

வானொலி, குடும்ப நண்பன். அதனை விருந்தாளி என்றும் சொல்லலாம். நீங்கள் போடும் ஒருவேளை விருந்தினைக் களிக்கவரும் உங்கள் விருந்தாளி என்ன செய்கிறார்? உங்கள் வீட்டுக் கூடத்தில் உட்கார்ந்து வீட்டு எஜமானர் முதல் வேலையாள் வரை எல்லோரையும் ஏற்றபடி திருப்திப் படுத்த எல்லாம் பேசுவதுபோல உங்கள் வீட்டுக் கூடத்தில் ஒரு மூலையில் உங்களுடன் இருந்தபடி உங்களை இசையால், பேச்சால், உபன்யாசத்தால், உரைச் சித்திரத்தால், நாடகத்தால் ஒரு சினிமாப் பாட்டால், வினாடி வினாவால் மகிழவைக்கும் ஒரு விருந்தாளி இந்த வானொலி.

இவ்வாறு ஒரு குடும்பத்திற்கு நல்ல நண்பனாக - நல்லாசானாக அமைந்து விடுகிறது வானொலி. வானொலியின் வாடிக்கையாளர்களின் எல்லை பரந்துபட்டது. அவர்களைப் பற்றி அறிவது முக்கியம். அவர்களைக் கூடியவரை நெருக்கமாகவே அறிந்திருக்கவேண்டும். அப்போதுதான் அவர்களது தேவை என்ன என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். சில ஒலிபரப்புகள் அவர்களுக்கு எட்டுகின்றனவா, தேவையா என்று அறியாமலேயே அந்த ஒலி அலைகள் காற்றில் வீணாய்க் கரைந்து கொண்டிருக்கின்றன. நாம் சொல்வதைக் கேட்பதற்காக நேயர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று பல சமயம் தப்பாய்க் கணித்துவிடுவதுண்டு. நேயர்களின் 'விருப்பு வெறுப்பு'ப் போக்குகள், அறியும் ஆர்வம், அறிவாற்றல் நிலை, புரிந்துகொள்ளும் மனப்பக்குவம்-இவற்றை அறியாவிடில் ஒலிபரப்பு ஒரு தோல்வியே.

வானொலி நேயர்கள் 'ஆர்வம்' உள்ளவர்கள் என்பது உண்மையானாலும் அவர்கள் வானொலி நிகழ்ச்சிகளை எப்போதும் முழுக் கவனத்துடன் செவிமடுத்துச் சிந்திக்கிறார்கள் என்று முடிவு செய்துவிட முடியாது. அவர்கள் திறந்த மனத்துடன் கேட்கிறார்கள் என்றும் நாம் சொல்லிவிட முடியாது. சோம்பல் என்பது அவர்களுக்கும் உரியது, எனவே வானொலியைக் கேட்கும்போதெல்லாம் கூர்ந்து கேட்டுவிடுவார்கள் என்றோ, கேட்டுப்புரிந்துகொள்கிறார்கள் என்றோ சொல்ல முடியாது. அவர்கள் பொதுவாக ஆர்வம் காட்டுவதில் சிக்கனவாதிகள். அவர்களை எவ்வாறு கேட்க வைப்பது? அவர்களது அறிவு உணர்வுப் பொறிகள் விறுவிறுப்பானவற்றை நாடுபவை. ஆனால் அவர்கள் பொறுமைசாலிகள் என்றும் சொல்லிவிடமுடியாது. ஆனால் சொல்வதைச் 'சுருக்கமாய்ச் சொல்லித் தொலையுங்கள்' என்று கூறுவார்கள். அவர்களுக்குப் பழக்கப்பட்ட மொழியில் பேசினால்தான் செல்லுபடியாகும். அவர்கள் மொழி வல்லவர்களாகவோ பண்டிதர்களோ அல்லர். எனவே அவர்களிடைப் 'பேசுமொழி' ஒன்று வேண்டும். அப்போதுதான் நாம் பேசுவது செல்லுபடியாகும்.

அவர்களுக்கு எதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அக்கறை இருக்கிறது என்றால், முதலில் அவர்களுடைய வீட்டு விவகாரம் பற்றியே அறிய ஆசைப் படுவார்கள். பிறகு அடுத்தவீடு, பிறகு தெரு.

அடுத்து, நிகழ்ச்சிகளைக் கேட்கிற மக்களின் மனோநிலை முக்கியம். அமெரிக்காவில் மூன்று மாத காலமாய் ஒரு குறிப்பிட்ட பகுதியில் புதுமுறை விவசாயம் பற்றி வலியுறுத்தி வந்தும் அவர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. ஆனால் கென்னடி சுட்டுக் கொல்லப் பட்டபோது, முதல் தடவை அச் செய்தியை வானொலியில் கேட்டவுடனேயே ஊர் மக்கள் ஒன்றுகூடி அந்த நகரத் தூதுவர்க்குக் 'கண்டனத் தீர்மானம்' நிறைவேற்றி அடுத்த நிமிடமே அனுப்பியும் வைத்தனர்.

இதே போலத்தான் குடும்பநலம் பற்றியும் நம் நாட்டில் இந்தப் பிரச்சாரம் வானொலி வாயிலாகத் தேவை என்பதால், வெகுவாக வானொலி பயன்படுத்தப்பட்டது. பெருந்தலைவர்களின் செய்திகள், குடும்ப நலம் ஏற்றோரின் நேர்முகம் மற்றும் அதன் அவசியம் பற்றிக் கூறும் கதைகள், சித்திரங்கள், நாடகங்கள், மருத்துவ நிபுணர்கள், பொருளாதார நிபுணர்கள் தந்த பேச்சுக்கள், வானொலி வாயிலாகக் கேட்கின்ற மக்களுக்கு ஒரு நம்பிக்கையைத் தந்தன. எனவே, குடும்ப நலனைப்பொறுத்தவரை, வானொலியின் பங்கு நம் நாட்டில் மகத்தானது. ஒரு மாபெரும்-கல்வியை-இயக்கத்தை -சமுதாய உணர்வை ஏற்படுத்தியுள்ளது. பிறப்பு விகிதம் நம் நாட்டில் குறைய ஒரு வாய்ப்பையும் வானொலி ஏற்படுத்தியது.


ஒலிபரப்பும் அலுவலர் இரண்டு விதப் பணிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. 1. அவர் நல்ல படிப்பாளராக இருக்க வேண்டும். 2. அவர், விஷயமும், விவகாரமும், நேக்குப் போக்கும் தெரிந்திருக்க வேண்டும். இதற்கு மேலாக பரந்த மனப்பாங்கு உள்ளவரே ஒலிபரப்புத் துறையில் ஈடுகொடுக்க முடியும். உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், அவர் கற்ற அறிஞர்களிடம் தொடர்பு கொண்டு அப்பெருமக்களின் செய்திகளைக் கல்லாமாந்தர்க்கு நகாசு செய்துதரவேண்டும். கற்ற விஞ்ஞானியிடம் நேர்முகம் காண அந்த விஞ்ஞானத்தைப் பற்றிக் கொஞ்சமாவது தெரிந்திருக்க வேண்டும். இலக்கிய கர்த்தாவிடம் பேசி ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய அவர் சிறிதாவது இலக்கியம் படித்திருக்க வேண்டும். இப்படியே மருத்துவம் முதலான எல்லாத் துறைகளிலும் கற்ற அறிஞர்கள், பாமர மக்களைப் பற்றி எண்ணுவதில்லை. எனவே பாமர மக்களுக்கேற்ற மொழியில் பயின்ற பேரறிஞர்களின் விஷயங்களை இந்த வானொலி வழங்கிடல் வேண்டும். இப்படி இருதரப்பாருக்கும் ஓர் இணைப்பாக விளங்குவதே வானொலி.

### வானொலி மொழி

வானொலியில் பேச நேரிடை மொழியைப் பயன்படுத்துங்கள்; எதிர்மறை மொழிகளைப் பயன்படுத்தாதீர்கள். அணியான சொற்களைப் பெய்து, எதுகை மோனைகளில் எண்ணத்தைச் செலுத்தாமல் இயல்பான, எளிமையான மொழியில் பேசுங்கள்; வானொலிப் பேச்சுக்கள் சுருக்கமாகவும், விறுவிறுப்பாகவும் அமைதல் வேண்டும். நீண்ட சொற்றொடர்கள் கூடாது. கேட்பவர்களின் 'கவன ஆர்வம்' மிகக் குறுகியது. அவர்களது கவனத்தை உங்கள் நீண்ட சொற்றொடர்கள் அயரவைத்துவிடும். சலசலத்து ஓடும் சிற்றோடையில் ஒரு மலர் அந்த ஓடையின் வேகத்தோடு செல்வது போன்றது வானொலிப் பேச்சு. காட்டாற்று வெள்ளத்துப் பூவைப் பின் தொடர முடியாது. சிற்றோடையின் மலரை கரையோடு, நிதானமாகக் கவனித்து நடக்கலாம். மலரின் ஓட்டத்தை, நடையை, அழகிய சுழற்சியைத் துய்க்கலாம். காட்டாற்று மலர் கண்ணில்படும், வேகத்தால் மறையும், அதுபோல் வானொலிப் பேச்சு. குறுகிய சுருக்கமான பேச்சுக்கும், பேச்சில் அமைந்துள்ள செய்தியும் முக்கியம்.

வானொலிப் பேச்சைக் கேட்பதற்கும், நூல் படிப்பதற்கும் வேறுபாடு உண்டு. வானொலிப் பேச்சை நிதானமாய் மனத்தில் பதியவைக்கலாம்; மறுபடி கேட்க இயலாது; புத்தகத்தை வேகமாகப் படித்தாலும் திரும்ப முன்னர் படித்ததை நினைவில் கொணரப் புரட்டிப் பார்க்கலாம். வானொலி அப்படி அல்ல; வேகத்தில் சொன்னால் கேட்பவர் விட்டது, விட்டதுதான்! மறுபடி கேட்க இயலாது.

இப்போதெல்லாம் குறுகிய பேச்சுக்கே இடம்; அதாவது மூன்று அல்லது ஐந்து மணித்துளிகளுக்குள் அமைந்தாக வேண்டும். உங்களது சிறிய நேரத்துப் பேச்சில் ஏராளமான செய்திகளை நுழைக்காதீர்கள்; ஒரே பேச்சில் எண்ணற்ற கருத்துக்களை இழையோடவிடாதீர்கள்; ஒரே பேச்சில் கணக்கற்ற உண்மைகளை உரைக்காதீர்கள்! ஒரே பேச்சில் கணக்குவழக்கின்றிப் புள்ளி விவரங்களைப் புகுத்தாதீர்கள். பத்து லட்சத்து நாற்பதாயிரத்து முன்னூற்று முப்பத்து நான்கு



என்று கூறாதீர்கள். கிட்டத்தட்ட பத்து லட்சம் என்று பகருங்கள். அப்படிச் சொன்னால்தான் கேட்பவரின் நெஞ்சில் அந்தப் புள்ளி விவரம் பதியும்.

ஓர் எழுத்தாளருக்கோ அல்லது பேச்சாளருக்கோ மிகவும் சிரமமான வேலை என்பது, வானொலிக்காக உட்கார்ந்து எழுதுவதுதான். பேச்சாளருக்கு எப்படி ஓர் inspiration என்ற உந்துதல் வரவேண்டுமோ அதுபோல் எழுத்தாளருக்கும் ஓர் 'இன்சிபிரேஷன்' வேண்டும். எங்கிருந்தாவது, எப்படியாவது, அது வந்தால்தான் எதிரில் எழுதுவதற்காக வைத்துள்ள வெள்ளைத் தாளில் கறுப்பு எழுத்துக்கள் விழும். வானொலிக்கான பேச்சு அமைப்பது என்றால், எப்படித் தொடங்குவது என்ற 'இன்சிபிரேஷன்' வருவதற்குக் கூடுதல் நேரம் ஆகலாம். 'வானொலிப் பேச்சு' என்றுதான் நாங்கள் பெருவாரியாக அழைப்போம். வானொலி உரை என்றோ வானொலிச் சொற்பொழிவு என்றோ அதிகமாய்ச் சொல்லமாட்டோம். பேசுவதற்கும் உரைப்பதற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. பேசும்போது உங்கள் எதிரில் ஒருவர் அல்லது இருவர் இருப்பர். அவர்களுக்காக நீங்கள் பேசுகிறீர்கள். ஓரிருவரை உங்களால் 'இனம்' ( Identity ) கண்டு கொள்ள முடிவதால் அந்த ஓரிருவருடன் நெருக்கம் கொண்டு நேரிடைப் பேச்சுப் பேச முடியும்; உரை என்றால் யாருக்கோ அது அமைகின்றது. உங்கள் உரையைச் செவிமடுப்பவர்களில் ஒருவரைக் கூட உங்களுக்குத் தெரியாது. இனம் கண்டு கொள்ள முடியாது. ஆகவே எதையோ வானொலிப் பேச்சுக்காக எழுதிக் கொண்டு, நிலையம் சென்று, அறையில் படித்துவிட்டு வருவது ஒலிபரப்பு அல்ல; ஒலி செய்தீர்கள்! ஒலி பரப்பவில்லை. ஒலிபரப்பு என்றால், ஒலியுடன் உங்கள் கருத்துப் பரவி, கேட்பவரின் நெஞ்சில் சென்று நிற்பது. அதுவே ஒலிபரப்பு. எழுதிவைத்ததைப் படிப்பது செயற்கை. எழுதிவைத்ததைச் சொல்வது இயற்கை. முன்புசொன்னதுபோல், பார்க்காது, பரிச்சயமில்லாத ஒரு நேயருடன் பேசுவது இயல்பாக இருக்க வேண்டும்.

### எழுதிவைத்த பேச்சை எவ்வாறு சொல்வது அல்லது பேசுவது?

அது ஒரு கலை. உங்கள் பேச்சுப் பாணி, உரைநடைப் பாணி என்ன என்பதைச் சிந்தித்து வைத்துக் கொள்ளுங்கள். அந்தப் பாணியை மனத்தில் நிலைநிறுத்தி, உங்கள் வானொலிப் பேச்சை, உங்கள் நண்பர்களிடம், வேண்டியவர்களிடம், தெரிந்தவர்களிடம் தெரிந்த ஒன்றைச் சொல்வதைப் போலும் பேசுங்கள். பேச்சினைக் கேட்கும் தெரியாதவர்கள் கூட, இப்போது உங்களுக்குத் தெரிந்தவர்களாகி விடுவர். ஒரு நாடக நடிகர், தான் ஏற்ற நாடகக் கதாபாத்திரத்துடன் எவ்வாறு ஒன்றி, லயித்து அந்தப் பாத்திரமாகவே மாறி நடித்து நாடகம் பார்ப்பவரை நம்பவைக்கிறாரோ அதேபோல் நீங்களும் உங்கள் நடையில் நீங்கள் தயாரித்த பேச்சை, உங்களைப்போல் நடித்துப் பேசுங்கள்.

ஒரு பேச்சின் முடிவில் நாம் இதுவரை என்ன சொன்னோம் என்பதைச் சுருக்கிச் சொல்வது நல்லது.



# பழைய நினைவுகள்

பேராசிரியர்
அ. ச. ஞானசம்பந்தன்

**1956** ஆகஸ்ட் மாத முதல் 1959 ஆகஸ்ட் வரை நாடகத் தயாரிப்பாளனாகச் சென்னை வானொலியில் பணியாற்ற நேர்ந்தது. நாடகத் துறையில் தலைசிறந்து விளங்கிய டி.கே.எஸ். சகோதரர்கள், திரு எஸ்.வி. சகஸ்ரநாமத்தின் சேவா ஸ்டேஜ் குழுவினர் ஆகியவர்களைக் கொண்டு ''தெள்ளாற்று நந்தி'' ''பாஞ்சாலி சபதம்'' முதலிய நாடகங்களைத் தயாரிக்க முடிந்தது. சிலப்பதிகாரம் ஒலிபரப்பில் இடம் பெற்றது. அவரவர்கள் துறையில் முடிசூடா மன்னர்களாக விளங்கிய திரு டி.கே.சண்முகம், திரு டி. கே. பகவதி, திரு எஸ்.வி. சகஸ்ரநாமம் ஆகிய பெருமக்கள் செவிப்புலன் ஒன்றையே கொண்டு பயன்தரும் வானொலியில், நடிக்க வருகையில் தந்த ஒத்துழைப்பு இந்நாளில் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்றாகும்.


டி.கே. சண்முகம்

எந்தத் தேவைக்கும், எந்தச் சூழ்நிலைக்கும் இசையமைத்துத் தரவேண்டும் என்று கேட்டவுடன் அன்புடன் அதனை அமைத்துத் தந்த திரு டி. ஆர். பாப்பா, திரு எஸ்.ராஜம் போன்றோர் உதவி மறக்கற்பாலதன்று. எத்தனையோ மறக்கமுடியாத நிகழ்ச்சிகளில் ஒன்றை மட்டும் நினைவுகூர்கிறேன்

அரைமணி நேர நாடகம் ஒன்று. திரு டி.கே. சண்முகமும், திருமதி திரௌபதியும் நடித்துக் கொண்டிருக்கின்றனர். ஓர் இடத்தில் குழந்தை வீறிட்டு அழ வேண்டும். உடனே கணவன் (சண்முகம்), மனைவியை (திரௌபதி) பொறுப்பில்லாமல் குடும்பம் நடத்துவதாக ஏசவேண்டும். அதிர்ஷ்டவசமாக இந்தச் சிறப்பு ஒலிகளை (குழந்தை அழுகுரல், விலங்குகளின் ஒலிகள் முதலானவை) பதிவு செய்துள்ள தட்டை ஒலிபரப்ப வேண்டிய அறிவிப்பாளர் அந்த நேரம் வந்தவுடன் இரண்டாவது பதிவுக்குப் (2nd Cut) பதிலாக, மூன்றாவது பதிவை (3rd Cut) ஒலிபரப்பிவிட்டார்.

குழந்தை அழுவதற்குப்பதிலாக நாய் ஒன்று உச்சஸ்தாயியில் குரைக்கத் தொடங்கி விட்டது. என்ன செய்வதென்று அறியாமல் திகைத்துப்போய் திரு. சண்முகத்தின் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தேன். பிறவிக் கலைஞராகிய அந்தப் பெருமகனார் கொஞ்சங்கூடப் பதறாமல், அலட்டிக் கொள்ளாமல், 'ஏண்டி, வாழுகிற வீட்டில் இப்படி நாயைக் கொண்டு வந்து வளர்க்க வேண்டாம் என்று எத்தனைமுறை நான் சொல்வது? குழந்தை அழும் சப்தத்தைக்கூட இந்த நாயின் குரைப்பு அடக்கிவிட்டது பார்த்தாயா?'' என்று தாமே ஒரு வசனத்தை விநாடி நேரத்தில் பேசித் தீர்த்தார். நாடகாசிரியர் கருதக்கூட இல்லாத இந்த உரையாடலுக்குத்தான் பல பாராட்டுக் கடிதங்கள் வந்தன.

ஒரு மாபெரும் தவற்றை-நாங்கள் மூவர் மட்டுமே அறிந்த இந்தத் தவற்றை-ஒரு பிறவிக் கலைஞன் சிறந்த பகுதியாக தம் அறிவாற்றலால் மாற்றி அமைத்துச் சிறப்பாக்கினார்.

### மேடைப் பேச்சு

மலர்கொண்டு மாலை தொடுத்தலிலே கைத்திறன் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் கைத்திறன் காட்டி, காகிதப்பூமாலை தொடுத்தால், பயன் என்ன? மாலைக்கு முதற்பொருள் மணமுள்ள மலர். அதுபோல, பேச்சுக்கு முதற் பொருள் சுவையும் பயனுமுள்ள கருத்துக்கள். மாற்றான் தோட்டத்திலே பூத்திடும் மல்லிகைக்கு மணம் உண்டல்லவா? ரசிக்கத்தானே செய்வோம்? அதுபோலவே பேசுபவரின் கருத்து பயன்தருவதாயின் கேட்பவரின் கூட்டுறவு எத்தன்மையதாக இருப்பினும் அவர்கள் ஏற்றுக்கொள்வர். எனவே மேடைப்பேச்சுக்கு கருத்துக்களைச் சேகரிப்பது, சிந்தனையில் விளையும் படிச் செய்வது மிக முக்கியம்.

—அறிஞர் அண்ணா
31.12.1947

### ஒலிச்சித்திரம்

'ஒலிச்சித்திரம்' என்ற தலைப்பில், வானொலியில் திரைப்பட உரையாடல் 1960ஆம் ஆண்டிலிருந்து மாதத்திற்கு ஒரு முறை ஞாயிற்றுக் கிழமையில் ஒலிபரப்பப்பட்டு வந்தது. 1977ஆம் ஆண்டு இறுதியில் இந் நிகழ்ச்சி நிறுத்தப் பட்டுவிட்டது. தற்போது ஏப்ரல் (1988) முதல், மீண்டும் ஒலிச் சித்திரம் வானொலியில் இடம் பெற்று வருகிறது. முன்பு ஒரு மணி நேரம் ஒலிபரப்பாகிய இந்த நிகழ்ச்சி, தற்போது அரை மணி அளவில், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை 5வது ஞாயிற்றுக் கிழமையில் விவிதபாரதியில் ஒலி பரப்பாகிறது.



# வானொலியின் இசைப்பணி

இந்த மாதம் சென்னை வானொலி நிலையம் தலது ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது. இதையொட்டிப் பலரும் இந்த ஐம்பதாண்டுகளில் வானொலி செய்துள்ள பணியை மதிப்பிடுகிறார்கள்.

ரேடியோ நிலையத்தோடு 1940-ஆம் ஆண்டிலிருந்து, இதனுடைய நிகழ்ச்சித் துறையிலே பல வெவ்வேறு பதவிகளை வகித்து, அதன் பணிகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டவன் என்ற முறையிலே, ஒரே ஒரு கருத்தை மட்டும் இந்தக் கட்டுரையிலே அடிக்கோடிட்டுக் காட்ட நினைக்கிறேன்.

கடந்த 50 ஆண்டுகளில் வானொலியானது பற்பல துறைகளிலே பற்பல தொண்டுகளைச் செய்து வந்துள்ள போதிலும், அதனுடைய பணிகளிலெல்லாம் மிகவும் விரிவானதும், அகன்று பரந்ததுமான பெரிய பணி அதனுடைய இசைப் பணி என்றே வற்புறுத்த வேண்டும்!

என்னுடைய சிறு வயதிலே ஒரு ராஜரத்தினம் பிள்ளையின் மேளத்தையோ ஒரு அரியக்குடியின் பாட்டையோ கேட்கவேண்டுமென்றால், பல மைல்கள் பயணம் சென்று ஏதாவது ஒரு கலியாண வீட்டிலோ, மிகப் பெரிய கோவிலின் திருவிழாவிலோ தான் கேட்கமுடியும். கூட்டங்களில் முண்டியும், மோதியும் நீண்ட தூரம் நடந்தும், பல வேதனைகளைத் தாண்டியும், அவதிப்பட்டுக்கொண்டு இந்த இசை இன்பத்தைப் பருக வேண்டும். ஆனால் ரேடியோ வந்த பிறகு அப்படியில்லை.

வீட்டிலே, நம்முடைய அறையிலே உட்கார்ந்து, வசதியாக, மிகவும் சௌகரியமாக எந்த இடைஞ்சலும் இல்லாமல் பெரிய பெரிய கலைஞர்களின் இசையைக் கேட்கலாம். சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டும், ஏன் கட்டிலிலே படுத்துக் கொண்டும் மிக மிகப் பெரிய இசை விற்பன்னரின் சங்கீதத்தை நம் நண்பர்களுடனும், நமது குடும்பத்தினருடனும் சேர்ந்து கேட்டு அனுபவிக்கலாம்.

ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவழித்து நடத்த வேண்டிய பெரிய பெரிய கச்சேரிகள் எல்லாம் ஒரு சிறிய ரேடியோ பெட்டிக்குள்ளிருந்து வந்து விடுகிறது. இந்த ஜனநாயகத்தை எப்படிப் புகழ்வது!

அது மட்டுமல்ல. பொது மக்களில் பலருக்கும் ஆர்வம் ஊட்டுகிற முறையிலே, பலருக்கும் பிடித்தமாக இருக்க வேண்டும் என்ற முறையிலே, இசை நிகழ்ச்சிகளின் நேரமும் நிகழ்ச்சிநிரலும் வானொலி அமைப்பாளர்களால் திட்டமிடப்படுகிறது.

எனவே பொதுமக்களுக்கும் இசைக்கும் முன்னைவிட இப்போது மேலும் நேரான தொடர்பு வளர்ந்துள்ளது. இசைக்கலைஞர்களும் தங்களுடைய மனத்திலே தங்கள் இசையைக் கேட்கும் மக்களை நினைவு படுத்திக்கொண்டு தங்கள் நிகழ்ச்சியை வழங்குகிறார்கள். தங்கள் பாட்டை ஒலிபரப்புகிறார்கள்.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் வானொலியின் வாயிலாக இசைக் கலையானது தமிழ் மக்களிடையே விரிந்துபரவி ஒரு நாடளாவிய சேவையைச் செய்திருக்கிறது. இதனால் செம்மைசால் இசையான சாஸ்திரீய சங்கீதத்தோடு கூடவே, மெல்லிசையும் ரேடியோவினால் நன்கு வளர்க்கப்பட்டுள்ளது என்று சொல்ல வேண்டும்.


**மீ.ப. சோமசுந்தரம் (சோமு)**
**முன்னாள் தென்மண்டல உரைச் சித்திரத் தயாரிப்பாளர்,**
**சென்னை வானொலி நிலையம்**


எத்தனையோ பல துறைகளில் மக்களுக்கு ஜனநாயக சேவையைச் செய்து வந்துள்ள வானொலி, இசைத் துறையிலே மிகவும் பரவலாக, மக்களை நோக்கி இறங்கி வந்து மக்களுக்காக ஒரு மாபெரும் இசைத்தொண்டைக்கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து செய்து வந்துள்ள காரணத்தால், நமது நாட்டில் இசைக் கலையை வழங்குகிற இசைக் கலைஞர்களின் எண்ணிக்கையும், இசையை அனுபவிக்கும் ரசிகர்களின் எண்ணிக்கையும் நன்கு அதிகரித்திருப்பதோடு, மக்களுக்காக ஏற்பட்டதே கலை என்ற உணர்வும் கலையுலகிலே நன்றாக நிலை பெற்றிருக்கிறது! இது வானொலி செய்துள்ள ஒரு பெரிய தொண்டாகும்.

இவனது துரும்புதான் இரும்பையே வளைத்தது
இந்தியக் கண்டத்தில் இலைமலர் கனிந்தது
பாரதம் மட்டுமா பவித்திரம் பெற்றது!
அடிமை நாடனைத்துமே ஆனந்தம் கொண்டது!
ஆப்பிரிக் காவிலும் ஆசிய மண்ணிலும்
சீறவே தெரியாத சிறியதோர் நாட்டிலும்
விடுதலைக்கொடி இன்று விண்முட்டப் பறப்பது
எங்கள் காந்தியின் எழுச்சியால் வந்தது

**—கவியரசு கண்ணதாசன்**
**7.2.1977**



நாழிகை யொன்றினில் நஞ்சடிமைத்துயர்
நைந்து மடிந்துவிட
நாள்மலர் போல் வரும் நல்ல சுதந்திரம்
நம்மவர் சொந்தமடா
கூழினை யென்றின் கெஞ்சிடு மாந்தரின்
கூக்குரல் கேட்டிடுமோ!

வறுமையுறுந்தொழிலாளரும் ஏழையும்
வாழ்வுற வேண்டுமடா
வாழிய அன்னவர் சங்க முயர்ந்துமே
வாழிய வாழியவே
வாழிய அன்னவர் வாழ்வை உயர்த்திடும்
வண்மை சுதந்திரமே

**—தமிழ்ஒளி**
**கவியரங்கம்**
**15.8.1948**



# செங்கற்பட்டு, பொன்னேரி இருளர்




டாக்டர் கே. தேவசகாயம்
**காப்பாட்சியர், மானிடவியல்,**
**அரசு அருங்காட்சியகம், சென்னை.**


தமிழ்நாட்டில், செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட 'ஆர்க்காடு, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், நீலகிரி ஆகிய மாவட்டங்களிலும், கர்நாடகாவில் மைசூர், பெங்களூர் பகுதிகளிலும், கேரளாவின் பாலக்காட்டுப் பகுதிகளிலும், ஓரிலட்சத்திற்கும் மேற்பட்ட இருளர் அல்லது இருளிகாஸ் ( Iruligas ) எனப்படும் பழங்குடிகள் காடுகளில் வேட்டையாடியும், காட்டில் உணவைச் சேகரித்தும் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். தமிழகக் கிராமத்தவரைப் போன்ற தோற்றத்தை உடைய இவர்கள் சுருட்டைமயிர், எடுப்பான தாடை, அகன்ற மூக்கு, கரிய தோல் அமைப்பு ஆகிய வடிவமைப்பைக் கொண்டவராவர். இவர்கள் ஆந்திரத்து ஏனாதிகளை ( Yenadis ) ஒத்துள்ளனர். இவர்களின் மொழி, திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாகத் தெரிகிறது.

சென்னையை ஒட்டியுள்ள செங்கற்பட்டு மாவட்டத்தில் குறிப்பாக பொன்னேரி வட்டத்தில், மீஞ்சூர், ஆரணி, மல்லியன் குப்பம், மாதவரம், தச்சூர் ஆகிய கிராமங்களிலும், துரைநல்லூர், அகரம், பொன்னேரி ஆகிய பகுதிகளிலுள்ள இருளர் காலனிகளிலும் சுமார் 270 குடும்பங்களாக இருளர் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் 17 இருளர், அரசு வேலையைச் செய்து வருகின்றனர். ஏனைய யாவரும் கூலி வேலை செய்து, மாதம் ரூபாய் 150 பெற்று வருவதாகத் தெரிகிறது.

குறிப்பாக, பொன்னேரி வட்டம் சென்னை நகருக்கு மிக அருகில் அமைந்துள்ளதால், நகர்ப்புற பழக்க வழக்கத்தால், இவர்களைச் சற்று நாகரிகமேறிய இருளர் என்று வர்ணித்தால் மிகையாகாது. மேலும் பொன்னேரிப் பகுதியில் முற்காலத்திலிருந்தே சிறிய காடுகள் யாவும் அழிந்ததன் விளைவாக, நாளடைவில் காட்டுப் பகுதிகளை விட்டு, காட்டைச் சார்ந்துள்ள பல சிறு கிராமப்பகுதிகளில், ஆங்கிலேயர் ஆட்சியின்போது இவ்விருளர் குடி புகுந்து வாழத் தொடங்கியதாகக் கூறப்படுகிறது. ஆகவே, கிராமப் பகுதிகளில் மற்றும் கிராமத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் இவர்கள் வாழ்ந்து வருவதால் நாளடைவில் இவர்களும் கிராமத்தவர்களின் பழக்கவழக்கங்களில் ஒத்தவராயினர்.

கிராமத்தவர் பேசும் தமிழ் மொழி தழுவிய திராவிட மொழியையே இவர்களும் பேசுகின்றனர். மேலும் தங்கள் இனத்துக்குள் பெண் எடுத்தலும், பெண் கொடுத்தலும் வழக்கத்திலிருப்பதால் தங்கள் அருகில் உள்ளவர்களைவிட, தங்களைச் சற்று மேம்பட்டவராக இவர்கள் கருதுகின்றனர். மேலும் மற்றவர்களின் எளிய குடும்பப் பணிகளைச் செய்ய இவர்கள் இடமளிப்பதில்லை. இருளர்களாகவே, சுதந்திரமாக இருப்பதே அவர்கள் வாழ்வின் இலட்சியம், இன்பம் என்று கருதுகின்றனர். ஆகவே தங்களுக்கென்று படிப்பை எளிதில் ஏற்க இவர்கள் முற்படுவதில்லை. கிராமத்தவர்கள் பொதுவாக நெல் விளைவிப்பவர் என்று அழைக்கப்படுகின்றனர் இவர்களை

வில்லியர்கள் அல்லது தேன் சேகரிப்பவர் மற்றும் வேடுவர் என்று மற்றவர்கள் அழைக்க விரும்புகின்றனர்.

அடுத்ததாக, கிராமத்தவரின் மதக்கோட்பாட்டிலிருந்து இருளர் சற்று வேறுபட்டுள்ளனர். கிராமத்தார் பல தெய்வங்களை வழிபடும் போது, இருளர் ஒருமுகமாக பெண் தெய்வமாகிய கன்னியமாரைத் தான் (Kanniamar) பூசிப்பர். தொத்து வியாதிகளிடமிருந்து விடுபெற இத் தெய்வத்தைவேண்டுவர். இவர்களது பாடல்கள் யாவும் கன்னியர்மார் தெய்வத்தையே வணங்குவதாக இருக்கும். மேலும் இவர்கள் தெய்வமேற்றத்திலும், குறி சொல்லுதலிலும் வல்லவர். ஒரு இருளனை தெய்வமேறினால் அவனது மனைவி குறியை விளக்கிச் சொல்லும் பணியில் ஈடுபடுகிறாள். இவ்விதப் பழக்கம் ஏனைய கிராமப் பெண்டிரிடம் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னையை அடுத்து 35 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளதே பொன்னேரி ஊராகும். இவ்வூரின் ஒரு ஓரத்தில் அமைந்துள்ளதே பொன்னேரி இருளர் காலனியாகும். சுமார் எட்டு வருடங்களுக்கு முன்பு புளிக்கரட்டுக்குச் செல்லும் சாலையின் அருகிலே ஐம்பதுக்கு மேற்பட்ட குடும்பங்களைக் கொண்ட இவ்விருளர் காலனி அமைக்கப்பட்டது. இக் காலனியின் இருவீதிகளின் இருபுறமும் தென்னை மரக்கூரை வீடுகளும், கல் வீடுகளுமாகக் காட்சியளிக்கின்றன. லாம்ப் கூட்டுறவுச் சங்கத்தின் உதவியால் இப்பட்டா நிலங்களில் இவ் வீடுகள் கட்டப்பட்டதாகத் தெரியவருகிறது. இங்கு வாழும் இருளர், நெல்லை அவித்து, ஆலையில் அரிசியாக்கி இதற்கென்று கூலிப்பெற்று வாழ்கின்றனர். சிலர் கூரை வீடுகள் கட்டுதலில் ஈடுபடுகின்றனர். காலையில் எட்டுமணி போல் காட்டுப்பாக்கம், மற்றும் கழனி வயல் பக்கமாகச் சென்று பாம்பு, கீரிப்பிள்ளை, எலி, காட்டுப் பூனை, உடும்பு ஆகிய விலங்குகளைப் பிடித்து அடித்துச் சுட்டுச் சாப்பிடுகின்றனர். தூண்டிலில் மீன் பிடிக்கின்றனர்.

பொன்னேரியிலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளதே தச்சூர் இருளர் குடியிருப்பாகும். ஆறு குடிசைவீடுகள் கொண்ட இவ்வாழ்விடம் தச்சூர் கூட்டுரோடு அருகில் அமைந்துள்ளது. அருகிலே ஒரு சிறிய குளம். கடந்த பத்து ஆண்டுகளாக இவர்கள் இவ்விடத்தில் தங்கி, குளத்தில் மீனைப் பிடித்தும், வயல்களில் எலி, பாம்புகளைப் பிடித்தும் வாழ்வதாகத் தெரியவருகிறது.

சென்னையிலிருந்து நெல்லூர் நெடுஞ்சாலையில் சுமார் ஐம்பது கிலோமீட்டர் தொலைவில், சாலையைச் சற்று ஒட்டி அமைந்துள்ளதே துரைநல்லூர் இருளர் காலனியாகும். அடக்கமாக அமைக்கப்பட்டுள்ள மண் மற்றும் குடிசைவீடுகளில் ஐம்பது இருளர் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். சில வீடுகளுக்குப் பட்டா உண்டு. 1942ஆம் ஆண்டுக்கு முன்பு, திருவொற்றியூர் பெரம்பூர், சித்தளப்பாக்கம், கீழானூர், ஒதிக்காடு ஆகிய வசதி குறைந்த பகுதிகளிலிருந்து இருளர் இரண்டு ஏக்கர் பயிரிடும் நிலமும் மூன்று சென்ட் வீட்டுமனையும் பெற்று, தங்கள் வாழ்க்கையை இங்கு ஆரம்பித்தனர். இவ்விருளர் யாவரும் ஒன்று சேர்ந்து பணம் போட்டு, நெல், கேழ்வரகு, பச்சைப்பயிர் ஆகியவைகளைவிளைவிக்கின்றனர். நிலங்களில் ஏர் உழுதல், விதை விதைத்தல், களை எடுத்தல் ஆகிய பணிகளுக்குக் கூலி பெறுகின்றனர். மழைக்காலங்களில் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். தவிர, எலி, மீன், பாம்பு, தவளை, நத்தை, நண்டு, ஈசல் ஆகியவைகளை உணவிற்காகப் பிடித்தலிலும் ஈடுபடுகின்றனர்.

1952ஆம் ஆண்டு, இவர்களின் குடிநீருக்காக — ஒரு பெரிய கிணறு அரசினால் வெட்டப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கு முன்பு குடிநீர் மேல் தேக்கத் தொட்டியும் அரசு அமைத்துள்ளது. 'ப' வடிவம் போன்று அமைந்துள்ள இந்தக் காலனியின் வீடுகளுக்கும் தெருவிற்கும் . மின்சார வசதி உண்டு. இது ஒரு சிறு காலனியாக இருப்பதால் தனிப்பட்ட முறையில் பள்ளி அமைக்கப்



துரைநல்லூர் இருளர்



படவில்லை. ஆயினும் ஒரு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளபுதுவாயல் கிராமத்துப் பள்ளிக்கோ அல்லது ஆரணியிலுள்ள பள்ளிக்கோ இருளர் பிள்ளைகள் 8-10 பிள்ளைகள் செல்லுகின்றனர். இவர்களிடம் நாட்டு வைத்தியம் நிலைத்துள்ளது. பாம்புக்கடி, தேள்கடி ஆகியவற்றிற்கு ஏற்ற மூலிகைகள் இவர்களிடம் உண்டு. மருத்துவமனைக்குச் செல்லவேண்டுமென்றால், பொன்னேரி அல்லது கவரப்பேட்டைக்குச் செல்லுதல் வேண்டும்.

திருமணமுறைகளில் கன்னிக் கோத்திரத்து இருளர் எப்பகுதியில் இருந்தாலும் சம்பந்தம் எடுக்கலாம் என்று தெரியவருகிறது. நிச்சயதார்த்தத்தில் தங்கம் அல்லது வெள்ளியில் செய்யப்பட்ட பொட்டுத்தாலியைக் கட்டுதல் பழக்கம். திருமணத்தில் மஞ்சள் கயிற்றில் தங்கப் பொட்டுக் கட்டுதல் உண்டு. முன்பு, மார்பிலும் மற்றும் கை அல்லது பாதத்தில் பச்சை குத்திக் கொள்வது உண்டு. அக்காலத்தில் சக்கிமுக்கிக்கற்களைத் தீஉண்டாக்க உபயோகித்ததாகத் தெரியவருகிறது. வருஷப் பிறப்பு, பொங்கல், விநாயகசதுர்த்தி, சரஸ்வதிபூசை, கார்த்திகைத்தீபம், மகாளய அமாவாசை, தீபாவளி ஆகிய பண்டிகைகளை இதர இந்துக்களைப் போல் இவர்களும் விமரிசையாகக் கொண்டாடி வருகிறார்கள்.



ஆகரம் இருளர்

இப்பகுதி இருளர், பாம்பு பிடிக்கும் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினராக இல்லை. இவர்கள் ஆடு, வாத்து, கோழி ஆகியவை வளர்க்கின்றனர். இவர்கள் தங்கள் குடியிருப்புப் பகுதியிலுள்ள புளியமரத்தில் கிடைக்கும் புளியைச் சமையலுக்கு உபயோகிப்பர். விற்பது இல்லை. இறந்தவர்களைப் புதைக்கும் பழக்கம் இவர்களிடம் உண்டு.


தச்சூரிலிருந்து ஆரணி நெடுஞ்சாலையில் பத்து கிலோ மீட்டர் தொலைவில் நெடுஞ்சாலை ஓரமாக அமைந்துள்ள அதுவும் இருளர் காலனியில் சுமார் 40 மண் வீடுகள் காணப்படுகின்றன. பட்டா இல்லாத புறம்போக்கு நிலங்களில் சுமார் 30 ஆண்டுகளாக இவர்கள் வாழ்ந்து வருவதாகத் தெரியவருகிறது. பயிர்த்தொழில், களை எடுத்தல், மரம் வெட்டுதல், எலி, பாம்பு பிடித்தலில் ஈடுபடுகின்றனர். இவர்களின் உணவு அரிசியும், கேழ்வரகுமாகும். இங்கு உள்ள தனியார் (Miblow) பள்ளியில் 60க்கு மேற்பட்ட இருளர் குழந்தைகள் படிப்பதாகத் தெரிகிறது. இந்த நிறுவனத்தார் இலவச வைத்தியம், தையல் பயிற்சி போன்றவைகளுக்கு உதவி செய்து வருகின்றனர்.

கடந்த ஆண்டில் செங்கற்பட்டு மாவட்டம், பொன்னேரி வட்டத்தில், பொன்னேரி, துரைநல்லூர், தச்சூர், அகரம் ஆகிய இருளர் குடியிருப்பிடங்களைக் காணவும் அவர்களிடமிருந்து மறைந்துவரும், பத்து கைவினைப் பொருள்களான களைக்கொத்தி, மீன்தூண்டில், அரிவாள், மீன்வலை, எலிவலை, எலி பிடிக்க உதவும் தடி, டோல் மத்தளம் ஆகியவைகளைப் பெறவும், ஆய்வு செய்யவும் தக்க வாய்ப்புக் கிடைத்தது. இருளர்களின் இக் கைவினைப்பொருள்களில் மிகவும் முக்கியமானது 'டோல்' வாத்தியமே ஆகும். 'டோல்' தோல் வாத்தியம். பொதுவாக பழங்குடிகளிடம் அதிக அளவில் காணப்படுகிறது. இந்த வாத்தியம் பனை அல்லது மரத்தின் தண்டின் உட்பாகம் குடையப்பட்டு, சுரண்டப்பட்டு, திறந்துள்ள இருபுறமும் மாட்டின் தோலில் மூடப்பட்டு, கயிற்றினால் இறுகக்கட்டப்படுகிறது. இது சுமாராக 18 முதல் 20 அங்குலம் நீளமும் 12 அங்குலம் விட்டமும் கொண்டதாகும். இந்தத் தோல் வாத்தியம் திருமண வைபவங்களிலும், தேர்த்திருவிழா மற்றும் ஊர்வலங்களிலும் உபயோகிக்கப்படுகிறது. பொன்னேரி நகரின் இருளர் குடியிருப்பில் ஒரு இருளரின் குடும்பத்தில் இவ்விதமான பனை மரத்தண்டில் குடையப்பட்டுகுழாய் போன்ற வடிவத்தைக் கொண்ட 'டோல்' வாத்தியம் காணப்பட்டது. இரு வாயும் தோலினால் மூடப்படாத நிலையில் முற்றுப்பெறாத நிலையில் அது காணப்பட்டது.

ஆனால், துரைநல்லூர் இருளர் குடியிருப்பில் வரும் ஒரு இருளரின் வீட்டில் முற்றிலும் மாறுபட்ட 'டோல்' வாத்தியம் காணப்பட்டது. பொதுவாக டோல் வாத்தியம் மரத்

தண்டிலிருந்து செய்யப்படுகிறது. ஆனால் இங்கு மரத்தண்டிற்குப் பதிலாக மண் பானையிலான பீப்பாய் போன்ற உருவம் உபயோகிக்கப்பட்டுள்ளது. திறந்த இருபுறமும் மாட்டின் தோலினால் இறுக்கப்பட்டுள்ளது. வலதுவாய்ப் பகுதியை ஒரு சிறிய கட்டையாலும் இடது வாய்ப் பகுதியை இடது கைவிரலினாலும் தட்டி, இசை உண்டாக்கப்படுகிறது. ஆகவே, பொனனேரி இருளர் குடியிருப்பில் பனைமரத் தண்டிலிருந்து செய்யப்பட்ட டோல் வாத்தியமும், துரைநல்லூர் இருளர் குடியிருப்பிலிருந்த பானையினால் செய்யப்பட்ட டோல் வாத்தியமும், டோல் வாத்திய வளர்ச்சிக் கட்டங்களை உணர்த்தும் சிறந்த உதாரணங்களாகும்.

துரைநல்லூர் இருளர், தங்கள் அருகிலுள்ள குயவர்களை அணுகி தங்களின் விருப்பத்திற்கும், அளவிற்கும் ஏற்றபடி களிமண்ணில் பீப்பாய் உருவத்தில் வடிக்கச் செய்து அதை டோலாக மாற்றியிருப்பது மிகவும் சிறப்பானதும் விந்தையானதுமே ஆகும். ஆனால் வளர்ச்சிக் கட்டத்தைப் பார்ப்போமானால், அக்காலத்தில் வெட்டப்பட்ட அல்லது விழுந்த மரத்தண்டு, உட்குடையப்பட்டு ஒருதரப்பட்ட உருவத்தில் இவ்வாத்தியம் செய்யப்பட்டு வந்தது.




காலப்போக்கில் களிமண் பாண்ட வளர்ச்சியில், சமையலுக்கும், தண்ணீர் சேகரிக்கவும் வைத்திருந்த மண்பாண்டங்களின் வாய்ப்பகுதி கோவா, ஆந்திரம், ஒரிஸ்ஸா ஆகிய மாநிலங்களின் கிராமப் பகுதிகளில் தோலினால் மூடப்பட்டு கும்மேரா, கும்மேட்டு ( Ghumera , Ghumat ) போன்ற ஒருவாய் வாத்தியங்களை (Monofacial) உருவாக்க முடிந்தது. இவையே வளர்ச்சியின் பாதையில், ஒரு வாய்க்குப் பதிலாக இரு வாய் கொண்டதாக வடிக்கப்பட்டு (Bifacial) இருபுறமும் தோலினால் மூடப்பட்டு துரைநல்லூர் இருளரிடம் காணப்பட்ட மண்பாண்ட டோல் வாத்தியமாக மாறியது. அதுவே இவ் இருளரின் கைவினைத்திறனையும், கலையின்பால் கொண்டுள்ள பற்றையும் நன்கு வெளிப்படுத்துகிறது. இதுவரை அருங்காட்சியகம் சேகரித்துள்ள 'டோல்' வாத்தியங்களில் இதுவே முதல் தடவையாகக் களிமண்ணினால் செய்து சுடப்பட்ட இருபுறமும் தோலினால் மூடப்பட்ட 'டோல்' வாத்தியமாகும்.

# சித்த மருத்துவத்தில் ஊசி முறை

ஊசி குத்தும் முறையானது ஆங்கிலேயர்களுக்கு மட்டும் சொந்தம் அல்ல. 5000 ஆண்டுகளுக்கு முன்பாகவே நம் சித்தர்கள் இந்த ஊசி குத்தும் முறையினைக் கையாண்டு வந்தனர்.

ஒரு நெல்லினை எடுத்து அதன் கூர்மையான முனையினைக் கொண்டு நோயாளியின் உடம்பில் 'கீறி', பிறகு பச்சை இலையினை அரைத்துக் கட்டுவார்கள். இந்த முறையினைக் 'கீறிக்கட்டல்' என்பார்கள்.

இந்த முறையும் நவீன மருத்துவரின் 'ஊசி' முறையும் ஒன்றுதான் எனக் கூறுவதில் தவறு இல்லை. ஏனெனில் இரண்டு முறையிலும் மருந்தினை உடலின் தசையுடன் கலப்பதே நோக்கம் ஆகும்.

'கீறிக்கட்டல்' முறையில் நெல்லினால் தோலினைக் கீறும்போது இரத்தம் வெளிப்படுகிறது. பிறகு அதன் மேல் மூலிகைச் சாற்றை வைத்துக் கட்டும்போது, அந்த மூலிகைச்சாறு தசையினுள் நன்றாகப் பாய்கிறது. நவீன ஊசிமுறையிலும் ஊசியினைப் பயன்படுத்தி மருந்தினை உடலில் தசையினுள் செலுத்துகிறார்கள்.

கருவி வேறுபட்டாலும் கருத்து ஒன்றுதான் என்று நினைக்கும் போது வியப்பாக இருக்கிறது அல்லவா?

நவீன மருத்துவத்தில் மருந்தினை நேர்முகமாக இரத்தத்தில் செலுத்தும் முறையினை ''இன்டிராவீனஸ் இஞ்சக்ஷன்'' என்பார்கள். இதனை ஒட்டி நம் மருத்துவத்தில் குடோரி ஒன்றல் என்பார்கள். இம்முறைப்படி நரம்பினை 'குடோரிகொண்டு' கொத்தி, பச்சிலைச் சாற்றினை வைத்துக் கட்டுவதே ஆகும். இம்முறையினால் மருந்தானது நேர்முகமாய் இரத்தத்தில் செலுத்தப்படுகிறது. ஏனெனில் நரம்புகளில் எப்போதும் இரத்த ஓட்டம் இருந்து கொண்டிருக்கிறது. இதனால் மூலிகைச் சாறும் இரத்தமும் ஒன்றோடு ஒன்று கலந்து உடம்பில் பாயும். இதற்குக் 'கொத்திக்கட்டல்' என்று பெயர்.

இதற்கு ஆதாரங்கள், அகத்தியர் நயனவிதி -800, நாகமுனி நயனவிதி —200, அகத்தியர் ரணவி, சீவரச அமிர்தம், தேரையர் வெண்பா, தேரையர் மகாகரிசிலை ஆகியவற்றைக் கூறலாம்.

மேலும், குடோரி ஒன்றலுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அகத்தியர் நயனவிதியிலிருந்து ஒரு பாடல்:

'' புருவத்தின் மைய மீது
பொருதிடும் பெருநரம்பின்
மருவிய குடோரி யிட்டு
வடிநீர், இரத்தம் போக்கி''

பிறகு உப்புப்பொடி இலைச்சாறும் வைத்துத்தேய்ப்பார்கள். மற்றொரு உதாரணம்: 'கிரிகைநூல்' என்ற ஓலைச்சுவடியிலிருந்து எடுக்கப்பட்டது.

''உச்சியின் நடுப்பாகம் தன்னில்
மெச்சிய நெல்கொண் டதனைக்
கீறிப் பொச்சிய சாணகம்....''

இது கீறிக்கட்டல் முறைக்கு நல்லதொரு சான்றாக விளங்குகிறது.



மாணவர் பக்கம்



## பொறியியல் மாணவர்களின் போற்றத்தகும் பணிகள்

வட ஆர்க்காடு மாவட்டம், வடவாமந்தல் கிராமத்திலுள்ள அருள்மிகு மீனாட்சியம்மன் பொறியியல் கல்லூரியின் நாட்டுநலப்பணித் திட்டத்தைச் சார்ந்த 50 மாணவர்கள், செவிலிமேடு கிராமத்தில் கிராமப் புனரமைப்பு முகாம் ஒன்றினை, 10 நாட்கள் நடத்தி, பல்வேறு சமூகநலப் பணிகளைச் சிறந்த முறையில் நிறைவேற்றி மக்களின் பாராட்டைப் பெற்றனர்.

செவிலிமேடு கிராமத்திலிருந்து வயல்வெளிக்குச் செல்லும் ½ கி.மீ. தூரமுள்ள கழிவு நீர்க்கால்வாயைப் புதிதாக வெட்டி ஆழப்படுத்தினார்கள்.

ஈஸ்வரன் கோயில் உட்புறம், வெளிப்புறம் உள்ள முட்கள், புதர்கள் ஆகியவற்றை அப்புறப்படுத்தி, பாதை அழகாகவும் வசதியாகவும் விளங்கச் செய்தார்கள்.

கிராமத் தெருக்களைத் தூய்மைப்படுத்தினார்கள்.

ஈஸ்வரன் கோயிலருகில் உள்ள குளத்திற்குப் பாதையமைத்து, குளத்தைத் தூய்மை செய்தார்கள்.

ஊரிலிருந்து வயல்களுக்குச் செல்லும் மண்சாலைகளைச் சீரமைத்தார்கள்.

ஊர் நடுவில் உள்ள தொடக்கப் பள்ளியின் சுற்றுப்புறத்தைத் தூய்மை செய்தார்கள்.

காஞ்சிபுரத்திலிருந்து பல்மருத்துவர் டாக்டர் ஆர்.சுகுமார் அவர்களை அழைத்துச் சென்று, கிராம மக்களுக்கும் பள்ளிக் குழந்தைகளுக்கும் பல் பரிசோதனை, பாதுகாப்பு, அறிவுரை ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்தார்கள்.

பள்ளிச் சிறார்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கினார்கள்.

கிராம மக்களுக்குச் சுத்தம், சுகாதாரம் குடும்பநலம் பற்றி விளக்கிச் சொன்னார்கள். மருத்துவப் பரிசோதனையும் சிகிச்சையும் அளிக்கப்பட்டன.

உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு இலவசப் பாடவகுப்புகள் நடத்தினார்கள்.

அறிவு வளர்ச்சிக்கான விஞ்ஞான மருத்துவப் படங்கள் போட்டுக் காட்டினார்கள்.

26.3.1988 அன்று திட்ட நிறைவு விழா, கல்லூரி முதல்வர் பேராசிரியர் எஸ்.எஸ். இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. காஞ்சி நகர மன்றத் தலைவர் திரு எஸ்.இராசமாணிக்கம், செவிலிமேடு ஊராட்சிமன்றத் தலைவர் திரு எஸ்.எம். ஏழுமலை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.


சிறந்த சமூக சேவைக்கான பரிசுகள் மு. இராசமுருகன், அ. விஜய், அனந்தரங்கன் ஆகிய மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த முகாமுக்குப் பேராசிரியர்கள் முருகன், தனஞ்செழியன் ஆகியோர் திட்ட அலுவலர்களாகவும், மு.இராசமுருகன் மாணவர் குழுத் தலைவராகவும் செயல்பட்டனர்.

## நாலும் இரண்டும்

நாலும் இரண்டும் என்ன?
நன்றாய் எண்ணிச் சொல்லு!
ஆறு என்றே சொன்னால்
அதுதான் தப்பு, நில்லு!

நாலு வரியைக் கொண்டே
நல்ல கருத்தைக் கூறும்
நாலடி யாரெனும் நூலே
நாலு என்பர் தம்பி!



இரண்டு வரியில் உலகில்
இனிது வாழும் அறிவை
சுரந்து வழங்கும் குறளே
இரண்டு என்பர் தம்பி!

ஆலும் வேலும் பல்லை
அழகாய்க் காக்கும், அதுபோல்
நாலும் இரண்டும் வாழ்வில்
நலமே வழங்கும் தம்பி!

—கலைப்பொழிலன்

“நாக்குப் பூச்சிகளை ஒழிக்க எல்லா வழிகளையும் பார்த்துட்டேன். கடைசியிலே எங்க கால்நடை மருத்துவர் கொடுத்த பன்மின்த்* தான் பலிச்சுது...பால் நஷ்டம் தராமலே!”




தன்னிகரற்ற
பன்மின்த்*
(மொரண்ட்டெல் ஸ்ட்ரேட்)

நாக்குப் பூச்சிகளை அழிக்கிறது, பாலைக் காப்பாற்றுகிறது.

''பாழும் நாக்குப் பூச்சிகளால்—அம்மம்ம, நான் பட்டபாடு: பலவீனம் பசியிராது, கறந்த பாலும் குறைவு. பிறகு, எங்க கால்நடை மருத்துவர் தந்த பன்மின்த் தான் பலிச்சுது—அதுவும் ஒரே ஒரு டோஸ்லே!''

பால் இழப்பே இல்லை.

''அருமையான சேதி—எங்க மாதிரி எல்லாக் கறவைகளுக்கும், சினைப் பிராணிகளுக்கும் கூட பத்திரமான மருந்து பன்மின்த். மற்ற மருந்துகளைப் போல் இல்லாமல், பன்மின்த் உபயோகித்த பிராணிகளின் பால், மனிதருக்குக் கெடுதலே இல்லை—நூற்றுக்கு 100 பத்திரமானது.''

சினைக் காலத்தில் எந்த சமயத்திலும் தீங்கற்றது.

''என் தங்கச்சி—பிள்ளைத் தாய்ச்சி—அவளுக்கு ஒத்துக்குமான்னு கவலைப்பட்டேன். ஆனால் பன்மின்த் சினைக் காலம் முழுக்க எந்தக் கெடுதலும் செய்யலை, ஏன், பலவீனக் காலங்களிலே கூட பாதிக்கலை. பக்க விளைவுகளே கிடையாது. குணமானதும் ஆறுதலான சுகம்!''

வசதி மிக்கதும் கூட.

''சாப்பிட வெகு இலகு பன்மின்த். கண்டிவிடுங்க ஒரு குளிகை (எங்க மாதிரி பெரிய பசு எருமைகளுக்கு இரண்டு), உடம்பு சுகமாயிடுது! ஆடு, கன்று மாதிரி சின்னப் பிராணிகளுக்கு மாத்திரையா வருது. சாப்பிடத் தயாரான கரைசலாகவும் கிடைக்குது. வேறென்ன வேணும் நம்மவர்களுக்கு!''

பால் இழப்பே இராது
பன்மின்த்*
விளைவை ஈடு செய்வது

கால்நடை மருத்துவரிடம் பெறுவீர் சிறந்த மருந்து.

பன்மின்த்*
புழுக்களைக் கொல்லும்! ஆரோக்கியத்தை வெல்லும்!

LINTAS BMT 2217 TM

*யூ.எஸ்.ஏ. ஃபைஸர் இன்க்.நிறுவன டிரேடு மார்க்.

pfizer

மேலும் விவரமறிய, எழுதுவீர் இம் முகவரிக்கு:
ஃபைஸர் லிட்., பி.ஒ. பாக்ஸ் நம்பர் 11602, பம்பாய் 400 021.


மின்துறை ஆராய்ச்சிக்கு உதவும்

# சென்னை மின்கோபுரச் சோதனை நிலையம்



தொழில்மயமாக்குதல், வேளாண்மை உற்பத்தியை அதிகரித்தல், ஊரகப் பகுதியை மின்மயமாக்குதல் போன்ற ஐந்தாண்டுத் திட்டங்களின் இலக்குகளை அடைய மின்சாரத்தைப் பிற இடங்களுக்குக் கொண்டு சென்று விநியோகிக்கும் பணி முக்கிய பங்காற்றுகிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போது 30,000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கினை எட்ட 65,000 கி.மீ.க்கும் மேலான சர்க்கியூட்டுகளையும், 12 லட்சம் டன் எடையுள்ள மின்சாரம் அனுப்பும் கம்பிகளையும் நிர்மாணிக்க வேண்டும். இதற்காகச் சுமார் ரூ.1200 கோடி செலவாகும்.

விஞ்ஞானத் தொழிலியல் ஆய்வுக் கழகத்தின் கீழ் செயல்படும் 'கட்டமைப்புப் பொறியியல் ஆய்வுமையம்' மின் கோபுரங்களை (டவர்கள்) வடிவமைக்கும் ஆய்வில் ஈடுபட்டுள்ளது. இம்மையம் உருவாக்கியுள்ள மாதிரிகள் பலவற்றை இத்தகைய மின் கோபுரங்களைத் தயாரிப்பவர்கள் சிறப்பாகப் பயன்படுத்தி வருகின்றனர். இந்த மாதிரிகளின் உதவியால் மின்கோபுரங்களின் மொத்த எடையை 10 சதவீதமாகக் குறைத்துவிடலாம். முழுமையான மின்கோபுர ஆய்வுகளில் இருந்து தகவல்கள் கிடைத்தால் இவற்றை இன்னும் மேம்படுத்த முடியும்.

கட்டுமானப் பணிகளின் தேவைக்காக முழுமையான மின் கோபுர ஆய்வுகளை அத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களே மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, கட்டமைப்புப் பொறியியல் ஆய்வு மையம் ஆராய்ச்சி வளர்ச்சிப் பணிகளுக்கு ஏற்றதொரு நவீன (மின்கோபுர) ஆய்வு வசதி ஒன்றை வடிவமைத்துள்ளது.


இந்த நவீன ஆய்வுக்கு முக்கியத் தேவை, கடின பாறைப்பரப்பில் குறைந்தது இரண்டு புறங்களிலாவது, செங்குத்தாயுள்ள குன்றுப் பகுதியாகும். அப்போதுதான் மின் கோபுரத்தைத் தரையில் வலுவாக ஊன்றச்செய்து தேவையான உயரத்தில் மின் அழுத்தங்களைப் பாய்ச்சலாம். ஏற்றதொரு இடம் வேண்டி மிக்க அலைச்சலுக்குப் பின்னர் பல்லாவரத்தில் உள்ள கல்லுடைக்கும் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. சென்னை விமான நிலையத்திற்கருகில் தேசிய நெடுஞ்சாலையின் ஓரத்தில் முழு அளவிலான மின் கோபுர ஆய்வு வசதி தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மின்கடத்திகளின் எடை, காற்று அழுத்தம், மின்கோபுரத்தின் எடை மற்றும் உடைந்த கம்பிகளின் சமனிடப்படாத விசைகள்தாம் மின்சாரத்தைக் கொண்டு செல்லும் கம்பிக் கோபுரத்தில் செயல்படும் முக்கிய அழுத்தங்கள். இந்த அழுத்தங்கள் பரிசோதனைக் கோபுரத்தின் மீது செலுத்தப்படும். இந்த அழுத்தங்கள் மின்கோபுரத்தின் மீது செங்குத்தாகவும், படுக்கையாகவும் மின்கடத்தி முனைகளைக்கொண்டு தொங்கும் நிலையில் இருக்கும். ஒரு பரிசோதனை நிலையத்தின் முக்கியத் தேவை மிகச் சரியான அளவில் தேவையான திசைகளில் மின் அழுத்தங்களைச் செலுத்தி, கட்டுப்படுத்தி அளவிடுவதே ஆகும்.

செங்குத்து அழுத்தமும், படுக்கை அழுத்தமும் ஒன்றாக்கப்பட்டு பரிசோதனைக் கோபுரத்தில் செலுத்தப்படுகிறது. ஒவ்வொரு முனையிலிருந்தும் விசைமுறை மாற்றமைவுக் கருவி மூலம் வலுவான பாதுகாக்கப்பட்ட மின்னழுத்தச் செல்களின் உதவியால் இவை ஒன்

றாக்கப்படுகின்றன. இந்த அழுத்தங்கள் பகிர்வுக்கட்டுப்படுத்தப்பட்ட நீரமுக்கு உந்திகளிடையே செலுத்தப்படுகின்றன. மின்னழுத்தச் செல்லும்விசை முறை மாற்றமைவுக் கருவிகளும் இணைக்கப்பட்ட விசைகளும் மின்கம்பிகள், கப்பிகள், இதற்காகவே வடிவமைக்கப்பட்ட எஃகுத்தகடுகள் 'டி' வடிவக் கொண்டிகள் மூலம் உந்திகளுடன் இணைக்கப்படுகின்றன.

பரிசோதனை முறை முழுவதும் தானியங்கி முறையாகவே இருக்கும். பரிசோதனையைக் கண்காணிக்க



மத்திய கட்டுப்பாட்டு ஆலோசனை அமைப்புடன் பல இணைப்புகள் கொண்ட கட்டுப்பாட்டு அறை உள்ளது. ஒவ்வொரு புள்ளியிலும் செலுத்தப்படும் மின் அழுத்தம் மற்றும் அதன் திசையைக் கட்டுப்பாட்டு அறையிலிருந்து மாற்றியமைக்க முடியும். மின்கோபுரத்தில் ஒரே சமயத்தில் எல்லாப்புள்ளிகளிலிருந்தும் மின் அழுத்தத்தைச் செலுத்தலாம். மின் அழுத்தமும் அதனுடைய கோண வேறுபாடும் வரைபடத்தில் தொடர்ந்து பதிவு செய்யப்படுகிறது. இந்தப் பதிவுகள் மூலம் குறிப்பிட்ட அளவினால் மின்னழுத்தக் கோபுரங்கள் உள்ளனவா என்று அறிந்து கொள்ளலாம்.

அளவுக்கு அதிகமாக மின்னழுத்தங்களைச் செலுத்துவதைத் தடுக்கும் வசதிகளும் இதில் உள்ளன. மின்னழுத்தத்தால் ஏற்படும் பாதிப்புகளும், குறைகளும் பரிசோதனை நடக்கும்போதே கணிப்பொறிமூலம் பகுத்தாய்வு செய்யப்படும். பரிசோதனையின் பல்வேறு நிலைகளிலும் மின்கோபுரத்தின் நிலைமை குறித்து அறிய வீடியோ பதிவு வசதியும் ஏற்படுத்தத் திட்டமுள்ளது.

முழு அளவிலான பரிசோதனைத் திட்டங்களில் ஏற்படும் அதிக அளவிலான அழுத்தங்களும் தாங்கும் வல்லமை கொண்ட உத்திகள் காங்கிரீட் பரப்பில் வலுவாக ஊன்றப்படவேண்டும். இவை 'ராம் நிலையங்கள்' என்றழைக்கப்படும். இந்த ஆய்வு முறையில் குறுக்கீடாய் அமைந்த ராம் நிலையம், நீட்டுப் போக்காய் அமைந்த ராம் நிலையம், செங்குத்தாய் அமைந்த ராம் நிலையம் என்ற மூன்று முக்கிய ராம் நிலையங்கள் உள்ளன. பாறைப் பரப்பின் கீழே சோதனைத் தளம் எனப்படும் இடத்தில், சோதனை மின்கோபுரங்கள் வைக்கப்படுகின்றன. சோதனைத் தளத்தின்மீது தரை நிலை நிறுத்திகள் இதற்காக நிர்மாணிக்கப்படுகின்றன.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கணிசமான உதவி பெற்று இந்தச் சோதனை வசதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பணியை மாந்தன் குடியேற்றத்திற்கான ஐக்கிய நாடுகள் மையம் ஏற்றுள்ளது.

கட்டமைப்புப் பொறியியல் ஆய்வு மையம் ஏற்படுத்தியுள்ள இந்த மின்கோபுரச் சோதனை ஆராய்ச்சி நிலையம் கிழக்கத்திய நாடுகளில் மிக நுட்பமானது. சர்வதேசப் போட்டித் தன்மையுடைய உற்பத்தித்துறைகளில் நாம் ஈடுபட முடியும் என்பதற்கு இது சான்று பகர்கிறது. மின்சாரம் அனுப்பும் கோபுரங்கள் உள்ளிட்ட பிற கோபுர வடிவ அமைப்புகளின் வடிவமைப்பு மற்றும் பிரச்சினைகளைக் கையாள உதவும் இந்த நவீன சோதனை மையத்தை ஏற்படுத்தியமைக்கு இந்தியா பெருமிதம் கொள்ளலாம்.

**— பத்திரிகைத் தகவல் அலுவலகம்**



# ஒருமைப்பாட்டு உணர்வில் உருகிநின்ற கவியரசர் கண்ணதாசன்


**கவியரசர் கண்ணதாசனின் விசாலமான தேசியப் பார்வை குறித்துத் தமிழில் வெளிவரும் முதல் கட்டுரை இது எனலாம். கவியரசரின் தேசிய உள்ளத்தின் மாண்பினைத்தான் இந்த எழுத்தோவியம் என்ன அற்புதமாகச் சித்திரிக்கிறது! பலமுறை படித்துப் பத்திரப்படுத்த வேண்டிய கட்டுரை.**

கவியரசர் கண்ணதாசன் எழுத்தாளராக, தமது இலக்கிய வாழ்க்கையைத் தொடக்கம்செய்த போதிலும் அரசியலில் ஈடுபட்டு, அரசியல் வாதி என்னும் பெயரைத் தேடிக்கொண்டார். வாழ்நாளின் இறுதி வரை அவர் அரசியல்வாதியாகவே விளங்கினார். தொடக்கக் காலத்தில் இருந்த முனைப்பு அவரிடம் இறுதிக் காலத்தில் இல்லாமல் இருந்திருக்கலாம். என்றாலும் அவர் ஓர் அரசியல் வாதி என்பதில் இருவேறு கருத்துக்கள் கிடையாது.

1961ல் அண்ணாவுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு அவரைவிட்டுப் பிரிந்த ஈ.வி.கே சம்பத் அவர்களின் அணியில் கவியரசர் இணைந்தார். நாளடைவில் தேசிய நீரோட்டத்தில் கலந்தார்.

ஒரு காலத்தில் பிரிவினை வாதி என்ற பெயரைப் பெற்ற கண்ணதாசன் பின்னாளில் ஒருமைப்பாட்டிலே நம்பிக்கை கொண்டு உளப்பூர்வமாக அதனை வலியுறுத்த முனைந்தார். அது குறித்துக் கவிதைகள் யாத்தார்; கட்டுரைகள் தீட்டினார்; திரைப்பாடல்களையும் உருவாக்கினார்.

பல்வேறு விஷயங்களில் மகாகவி பாரதியின் சிந்தனைகளையும் சொற்றொடர்களையும் தமது கவிதைகள், பாடல்கள் ஆகியவற்றில் எடுத்தாண்ட கண்ணதாசன் ஒருமைப்பாட்டுத் தத்துவத்தில் மட்டும் நெடுங்காலம் பாரதியிடமிருந்து விலகியிருந்தார். 1961க்குப் பின்னர் ஒருமைப்பாட்டு உணர்விலும் பாரதியின் அடிச்சுவட்டைப் பின்பற்றத்தொடங்கினார்.



பிரிவினை என்னும் குறுகிய பாதையை விட்டு வெளியே வந்தவுடன் நாட்டுவிடுதலையைப் பாராட்டிப் பாடல் எழுத வாய்ப்புப் பெற்றார். 1961ல் 'தூய உள்ளம்' என்னும் திரைப் படத்தில் சுதந்திரத்திருநாளைப் போற்றிக் கவியரசர் எழுதிய பாடலின் பல்லவி வருமாறு:

தேசமெங்கும் விடுதலை விழா-வீரத்
திருவிளங்கும் வெற்றித் திருவிழா.

நாட்டுப் பற்று என்ற பரந்த மாளிகைக்குக் கண்ணதாசன் வந்ததை எண்ணி ஆயிரக் கணக்கான மக்கள்

## புலவர் தமிழ்ப்பித்தன்

அகமகிழ்ந்தனர். ஒவ்வொரு சுதந்திரத் திருநாளன்று நடைபெறும் ஊர்வலங்களிலும் பொதுக் கூட்டங்களிலும் 'தேசமெங்கும் விடுதலை விழா' ஒலித்துவந்தது.

பாடலைத் தொடர்ந்து கவியரங்குகளிலும் பத்திரிகைகளிலும் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தத் தொடங்கினார்.

அந்த நாளில் பாரதி இந்திய மக்களின் ஒருமைப்பாட்டை வலியுறுத்துவதற்காக,

செப்புமொழி பதினெட்டுடையாள்-எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்

என்று பாடினார்.

அதே கருத்தை எடுத்துக் கொண்டு கண்ணதாசன் ஒருமைப்பாட்டை வலியுறுத்தினார்; அந்தக் கவிதையின் ஒரு பகுதி இதோ;

பாரதம் எனும்பூச் செண்டில்
பதினான்கு மலர்கள் உண்டு
நீரதில் தேனை மாந்தும்
நிகரிலா மனித வண்டு
வேரதன் ஒருமைப் பாடு
மெல்லிய தனிப்பண் பாடு
ஊரெலாம் உறவென் றெண்ணி
உயர்குடி நமவர் நாடு.



இந்தியத் திருநாடு 14 மொழிகளைத் தேசியமொழி க அறிவித்துச் செயலாற்றும் அற்புதத்தை இந்தக் தையிலே எடுத்துச் சொன்னார் கண்ணதாசன்.

நமது நாட்டில் 'வேற்றுமையில் ஒற்றுமை' என்ற துவம் பலராலும் எடுத்துச் சொல்லப்படுவதுண்டு. வேறு கலாச்சாரம், பல்வேறு மொழிகள் கொண்ட லங்கள் இணைந்து ஒரு நாடாக மிளிர்வதைத் 'வேற்றுமையில் ஒற்றுமை' என்று சிறப்பித்துப் வார்கள். இதனை எடுத்துரைக்கும் விதத்தில் ணதாசன் எழுதிய கவிதை வருமாறு:

அந்தியில் செம்மை காட்டும்
ஆயினும் நீலம் காட்டும்
சந்தியில் வெண்மை காட்டும்
தடமழை பொழிந்த பின்னர்
சிந்திய வண்ணம் ஏழில்
வானவிற் சிறப்புக் காட்டும்
இந்தியப் பரந்த வானம்
இத்தனை எழிலும் காட்டும்

பிரிவினில் உறவு என்றும்
பேதத்தில் ஒருமை என்றும்
கருவினில் ஒன்று என்றும்
காட்சிதான் வேறாம் என்றும்
ஒருபெரும் நாட்டின் கூறே
ஒன்பதின் மேலாம் என்றும்
திருவுலாம் பரத நாட்டை
செப்புவர் உலக மாந்தர்.

சரித்திர காலந் தொட்டு
சமயத்தால் ஒருமை கண்டும்
விரித்ததோர் தத்து வத்தின்
விதையெலாம் ஒன்றே என்றும்
பிரித்திட முடியா தாகப்
பிறந்ததோர் பரத நாட்டைத்
திரித்தனர்; பிளந்து வைத்தோர்
தீமைக்கே விதைவி தைத்தார்.

இனியொரு பிரிவு மில்லை
இழிநிலைப் பிழையு மில்லை
தனியொரு நாடே எங்கள்
தாயகம் என்று வாழ்வோம்
இனமொரு இனமே என்றும்
இயல்பொரு இயல்பே என்றும்
மனமொரு மனமே என்றும்
வாழ்க்கையைத் தொடரு வோமே.

964ஆம் ஆண்டில் வாரப் பத்திரிகை ஒன்றின் ளி மலரில் **'தேசம் ஒன்று: தேசியம் ஒன்று'** என்ற ப்பில் எழுதிய கவிதையில் ஒருமைப்பாட்டின் உயர்வை மிக அழகாக - வழக்குரைஞரின் வாதத் திறமையுடன் சித்திரித்தார் கண்ணதாசன். அந்தக் கவிதையின் ஒரு பகுதி வருமாறு;

கூரிய இமயப் பனிவரை தொட்டு
குமரி வரைக்கும் கூறுகூ றாக
பகிர்ந்து பார்த்தாலும் பண்பா டொன்றே!
தடங்கைக் கனிக்குச் சாட்சிகள் வேண்டாம்
தேசம் ஒன்று தேசியம் ஒன்று.
. . .    . . .    . . .    . . .
தாய்பதி னான்கு பிள்ளைகள் பெற்றாள்
வாய்பதி னான்கு மனத்தால் ஒன்று
மனத்தின் பின்னே வாயெனல் அறிந்தோம்
இனத்தின் பின்னே மொழியெனக் காண்பர்
விண்மீன் குலத்தில் வேற்றுமை வந்தால்
வீரபா ரதத்திலும் வேற்றுமை தோன்றும்
நான்
பாட்டால் அளந்தது படியள வாகும்
பாரத ஒருமை கடலள வாகும்.

**'எனது பாரத தேசம்'** என்ற தலைப்பில் எழுதிய கவிதையில் ஒருமைப்பாட்டு உணர்வு பொங்கித் ததும்பி வருவதைக் காணலாம்.

இமயமுடி மீதேறி காஷ்மீரில் இறங்குவேன்
இயற்கையை ரசித்திருப்பேன்

எனத் தொடங்கி,

ஒரு மரப்பறவைகள் ஓர்நாட்டு மாந்தர்கள்
ஒருளம் கொள்ள வைப்பேன்
உளறுவார் குழறுவார் பிரிவினை பேசுவார்
ஓடநான் கவிதை சொல்வேன்

திருநாட்டு வாழ்விலே செம்மையும் பொதுமையும்
சேரநான் பாடு படுவேன்
திக்கெட்டும் என்நாடு நேர்மைக்குத் தாயென்று
செப்புமா றரசு செய்வேன்

வருநாட்கள் யாவையும் வளமான நாட்களாய்
மலர்கின்ற காலம் வருமே
மலர்கோடி தோன்றுமோர் மணமேவு சோலையாக
வாழ்க பாரத தேசமே

இந்தியத் திருநாடு அந்நிய வெள்ளையரின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு இருபத்தைந்தாண்டுகள் எய்திய போது (1972ல்) அந்நாளை நாடு கொண்டாடியது. அப்போது கவியரசர் கண்ணதாசனின் சிந்தை, சிறப்பான கவிதைக் கனி ஒன்றை உதிர்த்தது. அதன் ஒருபகுதி இதோ:

கணக்கிலா மொழிகள் ஜாதி
கவறாடும் சிறியோர் கூட்டம்



பிணக்குகள் இருந்த வேனும்
பிரிவிலும் உறவை வைத்தோம்
மணக்குமோர் மலர்மா லைக்குள்
மலர்பல வடிக்கும் வாசம்
கணக்கிலே புதுமை காட்டும்
கணிதத்தை இங்கே பெற்றோம்!

இத்தனை நாட்கள் இந்த
இளையதோர் பார தத்தை
சத்திய நெறியை வாழ்க்கை
சமதர்ம முறையை எல்லாம்
பத்திர மாகக் காத்த
பண்பினை இனியும் கொள்ளல்
தத்தம துரிமை என்று
தாயக மனிதர் கொள்க!

சீனநாடு இந்தியா மீது 1965ல் போர் தொடுத்த போது கவியரசரின் உள்ளம் கொதித்தது. பல கவிதைகளை வடித்தது. **'சபதம்'** என்ற தலைப்பில் வெடித்து வெளிவந்த கவிதையின் சில துளிகள் இதோ;

எதிர்வரும் பகையை ஏறிட்டு நோக்கி
கொதிநெருப் பள்ளிக் கொட்டா திருந்தால்
விழிக ளிரண்டும் வீழ்க நிலத்தே

தாய் மகன் தாரம் தாம்தம தென்று
சேய்உற வெண்ணி தேசம் மறந்தால்
இதயம் நெருப்பில் எரிக விழுந்தே

கங்கையிற் குளிக்கக் கருதிடும் சீனர்
மங்கைய ராயினும் மணந்தவ ராயினும்
கருதாத வர்தலை காலாற் சிதைக்க!

சீனப்படை எடுப்பின் காரணமாக, வடக்கு தெற்கு எனப் பேசப்பட்டு வந்த பேதமெல்லாம் ஒழிந்து இந்திய நாடே ஒற்றுமை உணர்வில் உருகித் தவித்தது. அந்நியரை விரட்டுவதற்கு ஆர்வம் காட்டியது. அக்காட்சியைக் கண்ட கவியரசரின் உள்ளம் களிப்பில் மூழ்கியது. நிந்தாஸ்துதி முறையில் சீனத்தைப் போற்றிக் கவிதை தீட்டினார்; அதில் சில பகுதி:

தம்மிடையே சண்டையிட்டு
தலைகுனிந்த இந்தியரை
இம்மெனுமுன் சேர்த்து வைத்த சீனமே-நீ
ஈந்ததுதான் இன்று வந்த ஞானமே

வடதிசைக்கும் தென்திசைக்கும்
வழக்கிருப்பதையறிந்து
ஒருதிசையாய் ஆக்கி வைத்த சீனமே -இது
உன்கருணை யாலெழுந்த ஞானமே

பிரிநதுசெல்லப் பாடுவோரும்
பேச்சுமூச் சில்லாமலின்று
அருகில்நின்று முழங்குகின்ற ஞானமே-தந்த
அன்புக்கெங்கள் நன்றிகொள்க சீனமே

சீனப்படையெடுப்பின் கொடுமையைக் கவிதையில் தீட்டிப் பார்த்ததுடன் கவியரசரின் மனம் அமைதி அடையவில்லை. நாட்டு மக்களுக்கு அதனைக் காட்சியாக்கி-அவர்களின் உள்ளத்தில் தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை விதைக்க விரும்பினார். அதனால் சீனப் படையெடுப்பை அடித்தளமாக வைத்து ஒரு கதையை உருவாக்கி, **'இரத்தத் திலகம்'** என்ற தலைப்பில் திரைப் படமாக உலாவரச்செய்து நாட்டு மக்களுக்கு நல் விருந்து நல்கினார். அந்தப் படத்தில் படைவீரன் ஒருவன் போருக்குப் புறப்படும் கட்டத்திற்குக் கவியரசர் எழுதிய பாடல் இலக்கியச் செறிவு வாய்ந்தது. அது இது:

புத்தன் வந்த திசையிலே போர்
புனித காந்தி மண்ணிலே போர்

## ராஜ்கபூர் மறைவு



புகழ்பெற்ற இந்தியத் திரைப் பட இயக்குநரும் நடிகருமான ராஜ் கபூர் 2.6.88 அன்று தமது 64வது வயதில் மறைவெய்தினார்.

ஸ்டுடியோ பயிற்சியாளராகத் தனது வாழ்க்கையைத் தொடங்கிய ராஜ்கபூர், பின்பு நடிகராகவும், இயக்குநராகவும் விளங்கி வெற்றிச் சரிதம் படைத்தார். அயல்நாடுகளில்-குறிப்பாக சோவியத் நாட்டில் நமது இந்திய நாட்டுத் திரைப்படங்களுக்கு இனிய வரவேற்பை ஏற்படுத்திய பெருமை அவருக்கு உண்டு.

இந்திய அரசின் தாதாசாகிப் பால்கே விருதினை இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களிடமிருந்து 2.5.'88 அன்று பெறும்போது, ராஜ்கபூர் உடல்நலக் குறைவுக்கு ஆளானார். தொடர்ந்து அவரது நிலை கவலைக்கிடமாகியது. சிகிச்சை பலனளிக்காமல் 2.6.'88 அன்று உயிர் துறந்தார். அவரது மறைவினால் இந்தியத் திரைப்பட உலகம் மாபெரும் தொழில் நுட்பக் கலைஞரை இழந்து தவிக்கிறது.

சத்தியத்தின் நிழலிலே போர்
தர்மத்தாயின் மடியிலே போர்.

பரத நாட்டுத் திருமகனே வா
பச்சை ரத்தத் திலகமிட்டு வா
பொருது வெங்களத்தை நோக்கி வா
பொன்னளந்த மண்ணளக்க வா

மக்களுக்குப் புத்திசொல்லி வா
மனைவி கண்ணில் முத்தமிட்டு வா
பெற்றவர்க்குத் தாள் வணங்கி வா
பேரெடுக்க போர்முடிக்க வா.

மறுபடியும் வீழ்வதில்லை வா
மரணமேனும் பெறுவதென்று வா
பருவநெஞ்சை முன்நிமிர்த்தி வா
பகைவனுக்கு ஓர் உயிர்தான் வா

படைவீரன் ஒருவனின் கதையை -ரஷ்யக் கதையை அடிப்படையாக வைத்து 'தாயே உனக்காக' என்ற தலைப்பில் திரைப்படமாக (1965-ல்) வெளியிட்டார். படை வீரனின் உணர்வையும் அவனது தாயின் உணர்வையும் மையமாக வைத்து 'கருநீல மலைமீது தாயிருந்தாள்' என்ற பல்லவியுடன் எழுதிய பாடலின் ஒரு பகுதியில் நாட்டுப் பற்றை விருந்தாக்கினார். அந்தப் பாடலின் சில வரிகள் வருமாறு.

பாலூட்டும் போதிலவள் நினைத்தாளா-பிள்ளை
பாரதம் காக்குமென்று வளர்த்தாளா
தாலாட்டுப் பாட்டிலதை இசைத்தாளா-பிள்ளை
தாய்நாடு காக்குமென்று படித்தாளா.

—தொடரும்

# பொதுநலம் பேணிய பன்னீர்ச்செல்வம்

தஞ்சை மாவட்டத்தில் பெரும் பண்ணையூரில் கத்தோலிக்க கிறிஸ்தவ குடும்பத்தில் 1.6.1888ஆம் ஆண்டில் பன்னீர்ச்செல்வம் பிறந்தார்.

திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற அவர், லண்டனுக்குச் சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்றார். லண்டனில் கிரேஸ் இன்னில் வழக்குரைஞர் தொழிலில் ஈடுபட்டார்.

இந்தியாவுக்குத் திரும்பிவந்து, வழக்குரைஞர் தொழிலை மேற்கொண்டார். தஞ்சை மாவட்டத்தில் அரசு வழக்குரைஞர் பணியை ஏற்றார். நீதிக் கட்சியில் அங்கம் வகித்தார்.

1918 முதல் 1920 வரை தஞ்சை நகரவைத் தலைவராகப் பணியாற்றினார்.

1922 முதல் 1924 வரை தஞ்சை மாவட்ட செகண்டரிக் கல்விக்குழு, மாவட்டக் கல்விக்குழு ஆகியவற்றின் தலைவராகப் பணியாற்றினார்.

1924 முதல் 1930 வரை அப்போதிருந்த தஞ்சை ஜில்லா போர்டுத் தலைவராகத் தொடர்ச்சியாக மும்முறை தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1930 முதல் அவர் அன்றைய சென்னை மாகாண சட்டசபையில் உறுப்பினராக இருந்தார்.

1935 முதல் 1937 வரை சென்னை அரசின் உள்நாட்டு அமைச்சராகப் பணியாற்றிவந்தார். அக்காலத்தில் தமிழ்நாடு, ஆந்திரம் கேரளத்தின் ஒருபகுதி கர்நாடகத்தின் ஒரு பகுதி அனைத்தும்சேர்ந்து சென்னை மாகாணமாக இருந்தது.

1931ல் இலண்டனில் நடைபெற்ற இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொண்டார்.

சென்னை மாகாண அரசின் உள்நாட்டு மந்திரியாக அவரிருந்த காலத்தில் அவரது நிர்வாகத் திறமை பலராலும் போற்றப்பட்டது.

இலண்டனில் உள்ள இந்திய மந்திரியின் ஆலோசகராக அவரை 1940 ஜனவரியில் அரசு நியமித்தது.

பிப்ரவரி இறுதியில் சென்னையை விட்டு விமானத்தில் புறப்பட்ட

**சிறந்த நிர்வாகியும் புகழ்பெற்ற வழக்குரைஞருமான சர் ஏ. டி. பன்னீர்ச் செல்வம் அவர்களின் நூற்றாண்டை ஒட்டி இக்கட்டுரை இடம் பெறுகிறது.**

பன்னீர்ச்செல்வம், கராச்சிக்குச் சென்று அங்கிருந்து ஹனிபால் என்ற விமானத்தின் மூலம் மார்ச் 2ஆம் நாள் காலை 5.45 மணிக்கு லண்டன் நோக்கிச் சென்றார். ஜிவானி என்னும் நகரை பகல் 11.25க்கு அடைந்த அந்த விமானம் ஷார்ஜாவுக்குப் புறப்பட்டது. பிற்பகல் 2.38மணி அளவில் அது வழியில்

ஓமான்கடலில் விழுந்துவிட்டது. பன்னீர்ச்செல்வமும் அந்த விமானத்தில் சென்ற ஏனைய (8) பயணிகளும் என்ன ஆயினர் என்பதே தெரியாத சூழ்நிலை.

விமானங்கள் இரண்டு, ஹனிபாலைத் தேடக் கிளம்பின. முயற்சி பயனளிக்கவில்லை. ஹனிபால் விமானம் கடலில் வீழ்ந்துவிட்டது என்றும், பன்னீர்ச்செல்வம் உட்பட அதில் பயணம் செய்த அனைவரும் மரணமுற்றிருக்கக் கூடும் என்றும் அறிவிக்கப்பட்டது.

பன்னீர்ச்செல்வத்தின் மரணம் குறித்துச் சென்னை அரசு ஓர் அறிக்கையை வெளியிட்டது. அது வருமாறு:



''1940 மார்ச் 1ஆம் தேதி ஹனிபால் என்ற இம்பீரியல் விமானத்திற்கு ஏற்பட்ட விபத்தில் சர் ஏ.டி. பன்னீர்ச்செல்வம் அவர்கள் உயிரிழந்திருக்கவேண்டும் என கவர்னர் கருதுகிறார். இதற்காக அவர் வருந்துகிறார்.

''வருந்தத்தக்க இந்த விபத்தினால் அனுபவமும் நம்பிக்கையுமுள்ள ஒரு நிர்வாகியை இந்திய மக்கள் இழந்துவிட்டார்கள்.

''இவ்வளவு உபயோகமுள்ள ஒருவருடைய ஆயுள் இவ்வளவு சீக்கிரத்தில் கத்தரிக்கப்பட்டுவிட்டதற்கு, தான் அடையும் வருத்தத்தில் பொதுமக்களும் பங்கெடுத்துக் கொள்வார்களென்று நம்புகிறார்.''

பன்னீர்ச்செல்வத்தின் மறைவு குறித்துத் தந்தை பெரியார் விடுத்த அறிக்கையின் ஒரு பகுதி வருமாறு;

''என் மனைவி முடிவெய்திய போதும் நான் சிறிதும் மனம் கலங்கவில்லை. ஒரு பொட்டுக் கண்ணீர் வடிக்கவில்லை. என் தாயார் இறந்தபோதும் இயற்கைதானே, 95 வயதுக்கு மேலும் மக்கள் வாழவில்லையே என்று கருதலாமா, இது பேராசை அல்லவா என்று கருதினேன். 10 வயதிலேயே லண்டனுக்கு அனுப்பிப் படிக்க வைத்த ஒரே அண்ணன் மகன் -படித்துவிட்டு இந்தியா வந்து சேர்ந்து 20 வயதில் இறந்து போனதற்காகவும் பதறவில்லை; சிதறவில்லை.

''காரணம் முன் சொல்லப்பட்ட மனைவி, தாயார், குழந்தை ஆகியவர்கள் மறைவு என் தனிப்பட்ட சுகதுக்கத்தைப் பொறுத்தது. தன்னலம் மறையும்போது அவர்களது மறைவின் நினைவும் மறந்து போகும். பன்னீர்ச்செல்வத்தின் மறைவு பொது நலத்தைப் பொறுத்தது. தமிழர்களின் நிலையைப் பொறுத்தது.

''காலம் சென்ற பன்னீர்ச்செல்வமே! காலம் சென்று விட்டாயா, நிஜமாகவா, கனவா? தமிழர் சாந்தி பெறுவாராக!''

பன்னீர்ச் செல்வம் மறைந்தாலும் அவரது தொண்டும் பெருமையும் நாட்டு மக்களின் நெஞ்சங்களில் நீங்காது இடம் பெறுவது உறுதி.

— சுந்தர்



# புகைக்காதீர் உயிரைப் பகைக்காதீர்!

**புகைபிடிக்கும் தீய பழக்கத்திற்கெதிராக உலகு தழுவிய இயக்கம் நடந்து வருகிறது. பல நாடுகள்—முன்னேறிய நாடுகள் புகைபிடிக்கும் பழக்கத்தைக் குறைக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. அமெரிக்கா போன்ற நாடுகளில் புகை பிடிப்போர் எண்ணிக்கை குறைந்து வருவதாகக் கணக்கிட்டுள்ளனர்.**

**சென்னையிலும் புகைபிடிக்கும் பழக்கத்துக்கு எதிரான இயக்கம் தொடங்கப்பட்டிருக்கிறது.**

**நமது ஆரோக்கியத்திற்கு அச்சாணி போன்ற இந்த இயக்கத்தைப் பற்றிய விவரங்கள்:**

புகை பிடிப்பவர்கள் என்றும் இளமையாக இருப்பார்கள். ஏன் தெரியுமா? மூப்படைகிறவரை அவர்கள் உயிரோடு இருப்பதில்லை.

புகை பிடிக்கிறவர்கள் வீட்டுக்குத் திருடன் வருவதில்லை. ஏன் தெரியுமா? புகைபிடிக்கிறவர்கள், இதய நோய் ஏற்பட்டு இருமிக்கொண்டே இருப்பார்கள். அந்த சப்தம் கேட்பதால் எல்லோரும் விழித்துக்கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது என்று கருதித் திருடன் வர அஞ்சுவான்!

தொடர்ந்து புகை பிடிக்கிறவனை நாய் கடிக்காது. ஏன் தெரியுமா? தொடர்ந்து புகை பிடிப்பவன் விரைவிலேயே நரம்புத் தளர்ச்சிக்கு ஆளாகி, நிமிர்ந்து நடக்கவும் முடியாமல் தடியூன்றி நடக்க வேண்டியதாகிவிடும். கையில் தடியோடு இருப்பவனை நாய்கள் நெருங்குவதில்லை!

—ஆங்கிலத்தில் இப்படியொரு வேடிக்கைக் கதை சொல்லப்படுவது உண்டு. புகை பிடிக்கும் பழக்கம் எவ்வளவு கொடியது என்பதை இதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.


அண்மைக்காலமாக இந்தியாவெங்கும் 'புகை' எதிர்ப்பு இயக்கம் பரவலாக உருவாகி வருவதைப் பார்க்கிறோம். சென்னை மாநகரிலும் அப்படியோர் இயக்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த அமைப்பின் கூட்டமொன்று சென்னை சாஸ்திரி ஹாலில் 3-6-88 அன்று மாலை நடந்தது.

இந்த அமைப்பின் முதல் கூட்டம் கடந்த ஏப்ரல் 7-ஆம் தேதி நடைபெற்றிருக்கிறது. 'புகை பிடிப்பதை சமூகவியல் மூலமும் மனவியல் மூலமும் தடுப்பது எப்படி?' என்ற கருத்தரங்கமாக நடத்தப் பெற்ற அதில் - மருத்துவத்துறை, அறுவைச் சிகிச்சைத் துறை, மனநோய்த் துறை நிபுணர்கள், மூத்த வழக்கறிஞரான (Senior Advocate) திரு யு. என். ஆர். ராவ் போன்ற பலரும் பங்கேற்றிருக்கிறார்கள்.

## தனியே ஓர் இயக்கம்


அந்தக் கருத்தரங்கின் முடிவில்-'புகைபிடிப்பதை எதிர்த்து ஏன் நாம் ஒரு தனி இயக்கமே துவக்கக் கூடாது?' என்றோர் கேள்வி பிறந்திருக்கிறது. அந்த வினாவைத் தொடுத்த திரு. யு. என். ஆர். ராவையே தலைவராகக் கொண்டு- இந்திய மருத்துவ சங்கத் தலைவரும் நுரையீரல் மருத்துவப் பேராசிரியருமான டாக்டர் செ. தெ. தெய்வநாயகம், அறுவை மருத்துவ சங்கத் தலைவர் டாக்டர் என். ரங்கபாஷ்யம், பிரபல மருத்துவ நிபுணர் டாக்டர் திரு என். மாத்ருபூதம் ஆகியோர் ஒருங்கிணைந்து அப்போதே தோற்றுவிக்கப்பட்டது தான் இந்த 'புகை எதிர்ப்பு முன்னணி' என்கிற இயக்கம்.

இந்த அமைப்பின் சாஸ்திரி ஹால் கூட்டத்தில் திரு. யு. என். ஆர். ராவ், டாக்டர் திரு. செ. தெ. தெய்வநாயகம், டாக்டர் திரு. மாத்ருபூதம் மற்றும் பலரும் கலந்து




**ஐரோப்பிய நாடுகளிலேயே பிரிட்டனில்தான் நுரையீரல், மார்புப் புற்று நோய் கண்டவர்கள் அதிகமிருக்கிறார்கள். இதனால்—புகைவண்டி, பேருந்து போன்ற போக்குவரத்து வாகனங்கள்—உணவு விடுதி, திரையரங்கு போன்ற பொது இடங்களில் புகை பிடிப்பதைத் தடைசெய்து அடுத்த ஆண்டில் ஒரு சட்டமே அமல்படுத்தப் படவிருக்கிறது. ஐரோப்பிய நாடுகளின் புற்றுநோய் ஒழிப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் மைக்கேல் ரிஷோனியர் இதைத் தெரிவித்திருக்கிறார்.**

## விளம்பரத்திற்கு விளம்பரம்!




மகாராட்டிர அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை, உயிராபத்தை விளைவிக்கும் சிகரெட் கம்பெனிகளின் கவர்ச்சிகரமான விளம்பரத்தைத் தகர்க்கும் விதத்தில் எதிர் விளம்பரமே வெளியிட்டு வருகிறது.

இந்தியாவில் உள்ள பிரபல சிகரெட் கம்பெனி ஒன்று - ஓர் இளம் ஜோடியின் படத்தைப் போட்டு 'உனக்கு நானும் எனக்கு நீயும் பொருத்தமான ஜோடி' (made for each other)என்ற வாசகத்தோடு விளம்பரம் போடுகிறதல்லவா? அதை எதிர்த்து, மகாராட்டிர அரசு வெளியிட்டுள்ள மக்கள் நல் வாழ்வுத்துறை விளம்பரப் படம்தான் இங்கே நீங்கள் பார்ப்பது. அதே வாசகங்களின் கீழ், சிகரெட் பெட்டியும், அதனால் உயிருக்கு ஆபத்தை உண்டாக்குவதைச் சித்திரிக்கும் மண்டையோடும், புற்றுநோய் வரும் என்பதை உணர்த்த ஒரு நண்டும் அந்த விளம்பரத்தில் போடப்பட்டிருப்பதைப் பாருங்கள்.

கொண்டனர். அதற்கு வருகை தந்தோர் கூட்டம் விரல் விட்டு எண்ணி விடலாம்போல் மிகவும் குறைவாக இருந்தது. இது பற்றிக் கூட்ட அமைப்பாளர் ஒருவரிடம் கேட்டோம்:

'போதுமான விளம்பரம் இதற்கு இல்லையோ?'

'இதென்ன அரசியல் கூட்டமா, விளம்பரப்படுத்த? பேப்பரிலெல்லாம் போட்டோம்; அவ்வளவு தான். இத்தகைய கூட்டங்களைக் கேட்க நம்ப ஜனங்க திரண்டு வர இன்னும் கொஞ்சம் நாளாகணும் சார்!'

—டாக்டர்களெல்லாம், புகைப்பதால் உண்டாகும் தீமைகளைப் பற்றி ஆங்கிலத்தில் விவரித்துப் பேசலானார்கள். பார்வையாளர் பலருக்கும் அது புரிந்ததாகத் தெரியவில்லை; சில பார்வையாளர்களே தாமாக எழுந்துபோய் அதுபற்றி அழகு தமிழில் பேசினார்கள். பார்வையாளரிடமிருந்து ஆவேசமான கேள்விகளும் கேட்கப்பட்டன.

### வேண்டுகோள் மூன்று

புகை பிடிக்கிறவர்கள் அதை எப்படி ஆரம்பிக்கிறார்கள் என்பது பற்றி மூன்று காரணங்களைக் கூறி விளக்கினார் டாக்டர் என். மாத்ருபூதம்.

1. மற்றவர்கள் பிடிக்கும்போது நாமும் ஏன் புகை பிடிக்கக்கூடாது என்ற நினைப்பு.

2. அதை நாமும் தான் செய்து பார்ப்போமே என்ற எண்ணம்.

3. கவலை, அச்சம் ஆகியவற்றை இதன் மூலம் மறந்து விடலாம் என்கிற நம்பிக்கை.

—இது மட்டுமல்ல; கடைசியாக அவர் மூன்று வேண்டுகோள்களையும் புகை பிடிப்போருக்கு வைத்தார்.

1. பெற்றோர் முன்னால் புகை பிடிக்காதீர்கள்.

2. குழந்தைகளுக்கு முன்னால் புகை பிடிக்காதீர்கள்.

3. பொது இடங்களில் புகை பிடிக்காதீர்கள்.

''அமெரிக்க நாட்டில் 90 சதவிகிதம் பேர் புகை பிடிப்பதால் ஏற்படும் நுரையீரல் கோளாறினாலேயே இறப்பதாக முப்பதாண்டுக்கால ஆராய்ச்சிக்குப் பின் அந்நாட்டின் தலைமை மருத்துவ அதிகாரியே (Surgeon general) தெரிவித்திருக்கிறார். புகைப்பவரின் இரத்த நாளங்கள் கடினப்படுகின்றன. இதனால் இதயம் மட்டும் அல்ல: மூளையும் தாக்கப்படும். பேச்சின்மையும் உண்டாகிவிடும். தொழிற்சாலைகளில் - குறிப்பாக பருத்தி-பஞ்சு ஆலை, உமி, நெல், கோதுமை ஆலைகளில் பணிபுரிவோர் புகை பிடிக்கும் பழக்கம் உடையவர்களாக இருந்தால் அவர்களுக்கு மிகவிரைவிலேயே நுரையீரல் அழற்சி, புற்றுநோய், மார்புச் சளி ஆகியவை ஏற்பட்டுவிடும்..'' என்றெல்லாம் விரிவாகப் பேசினார். நுரையீரல் மருத்துவப்பேராசிரியரான டாக்டர் திரு. செ. நெ. தெய்வநாயகம்.

### விபரீதத்தின் விளக்கம்

புகை பிடிப்பதென்பது, முக்கியமாக நுரையீரல் தொடர்புடையது என்பதால், அதனால் ஏற்படும் விளைவுகள்பற்றி அவரைத் தனியே சந்தித்துப் பேசினோம். அப்போது அவர் தெரிவித்த ஆய்வுரீதியான கருத்துகள் வருமாறு:

நம் உடலில் உள்ள எல்லா உறுப்புகளுமே புகையிலை காரணமாகப் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. புகைபிடிப்பவர் இழுக்கிற ஒருவாய் புகையில் நான்காயிரம் வேதுப் பொருள்கள் (Chemical compounds) உள்ளன. அதில் நிகோடின், பென்சீன், சல்பர் மானாக்சைடு, பொலோனியம் போன்ற - புற்றுநோய் பரப்புவதற்கான கொடிய நச்சுப் பொருட்களும் அடங்கியிருக்கின்றன. சிகரெட் அல்லது சுருட்டு- பீடி ஆகியவற்றின் நுனியில் உள்ள நெருப்பில் மட்டும் 800 டிகிரி செல்சியஸ் வெப்பம் உற்பத்தியாகிறது. இதனாலெல்லாம் அதில் உண்டாகும் தார்போன்ற உருகும் பொருட்களையும் புகை பிடிப்போர் உட்கொள்ளுகின்றனர். நம்முடைய நுரையீரலில் 3 மில்லியன் சிற்றலைகள் உள்ளன. மிக மெல்லிய ஜவ்வான அவைகளும், மடிபோன்ற சிலியாவும் புகை பிடிப்பதால் அழியத் தொடங்கும். இதன் காரணமாக நுரையீரலின் சக்தி குறைந்துவிடும். மார்புச் சளி, நுரையீரல்[அழிவு என்ற எம்பஸீமா, நுரையீரல் புற்று ஆகியவை உண்டாகும். இரைப்பை, குடல், கணையச் சுரப்பி இவைகளிலும் புற்று வரும். புகையிலை மெல்லும் வழக்கம் உள்ளவர்கள் உணவுக் குழல் புற்றுக்கு ஆளாகக் கூடும்.

புகை பிடிப்போருக்கு - இதயம் வேகமாகத்தூண்டப்படுதல், இரத்த அழுத்தம், இரத்தத்தில் கொழுப்பு அதிகரித்தல், சிறுநீர்ப்பை புற்று, ஆகியவை சாதாரணமாகவே ஏற்பட்டுவிடும். இப்படிப்பட்டவர்களுக்கு இதயத் தாக்கு மிக இளமையில் உண்டாகக் கூடும். இதய நோய் காரணமாகப் பொது மருத்துவ மனைக்கு வருவோரில் பெரும்பாலோர் முப்பது வயதுக்குட்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். அளவுக்கு அதிகமாகத் தொடர்ந்து புகை பிடிப்பவர்களுக்கு அங்கம் அழுகி விடவும் கூடும் (Gengrene) இதன் காரணமாக அந்த அங்கத்தையே துண்டிக்கும்படியும் ஆகிவிடும்.

''நீண்டகாலமாகப் புகைபிடிக்கிறேன்; இப்போது முதல் அதை நிறுத்திவிட்டால் பயனுண்டா?'' என்று சிலர் கேட்கிறார்கள். நிச்சயமாகப் பலன் உண்டு. அப்படி கைவிடுபவர்களுக்கு, அடுத்த சில ஆண்டுகளிலேயே நுரையீரல்-இதய நலம், குருதியோட்டம் ஆகியவை சீரடைய ஆரம்பிக்கும். மூச்சுத் திறன் மேம்படும். நெஞ்சு வலி பறந்துபோகும். நல்ல பசி ஏற்படும். இரைப்பை புத்துயிர் பெறும்.

### இளமையில் இறப்பு

புகைபிடிப்பதால் புத்துணர்ச்சி உண்டாகும் என்று சிலர் கருதுகிறார்கள்; இருக்கலாம். ஆனால் அதன் காரணமாக இளமையிலேயே அல்லவா சாவு சம்பவித்துவிடுகிறது!

புகைபிடிப்போர்க்கு ஏற்படும் நுரையீரல் அழற்சி (Emphysema) காரணமாக - தலை வாருதல், சவரம் பண்ணிக் கொள்ளுதல், குளித்தல் போன்ற எளிதான காரியங்கள்கூட மிகச் சிரமமாகத் தோன்றும். காரணம் - நுரையீரல் பழுதாகி, பிராணவாயு குருதியில் சேராமல் போய்விடும்.

—இந்த அரிய செய்திகளையெல்லாம் நமக்குத் தெரிவித்த டாக்டர் செ. நெ. தெய்வநாயகம் ''இந்த இயக்கத்தை வலுப்பெறச் செய்ய மத்திய அரசு உதவி வருகிறது; மாநில அரசும் உதவுவதாக உறுதியளித்திருக்கிறது'' என்றார் பெருமிதத்தோடு.

—பி. எல். ராஜேந்திரன்

---

தமிழ்நாடு அரசு 1976-ல் ஒரு அரசாணை வெளியிட்டது. அதன்படி எந்த ஒரு மருத்துவமனைக்குள்ளும் டாக்டரோ, நோயாளியோ யாரானாலும் சரி; புகைபிடிக்கக் கூடாது. மருத்துவமனை வளைவுக்குள் உள்ள கடைகளில் பீடி, சிகரெட், சுருட்டு, புகையிலை போன்ற பொருட்கள் விற்கப் படக்கூடாது.



---

இந்தியத் தலைமைப் பதிவாளர் கொடுத்த புள்ளிவிவரத்தின்படி, 1980ல் ஏற்பட்ட இறப்புக்களுக்கான முக்கிய மூலகாரணங்கள் விவரம் வருமாறு :

20.9 சதவிகிதம் மார்புச் சளி, நுரையீரல் அழற்சி, ஆஸ்த்துமா.

20 சதவிகிதம் மூப்பு.

13.6 சதவிகிதம் குழந்தைகளுக்கு உண்டான பேதி, சளி.

9·3 சதவிகிதம் இரைப்பை, குடல் தொடர்பான நோய்கள்.

8.6 சதவிகிதம் குருதியோட்ட இடர்ப்பாடு, இதயநோய்.

—புகை பிடித்தலின் காரணமாக அதற்குப் பிந்திய ஆண்டுகளில் இந்த சதவிகிதம் அதிகரித்திருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.


---

### பக்கத்திலே நீயிருந்தால்...

புகை பிடிப்பவர்கள், புகையைக் கக்கிவிடுகிறார்கள்; அருகில் இருப்பவர்கள் அதை சுவாசிக்கிறார்கள். ஆகவே, புகைபிடிப்போரைவிட, அவர்கள் பக்கத்திலிருப்பவர்களே (Passive Smoking) அதிகம் பாதிக்கப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

புகைபிடிப்போரின் அருகிலேயே பெரிதும் இருப்பவர்களைப் பரிசோதித்தபோது—புகைபிடிப்பவர்களைவிட, அருகிலிருப்பவர்களுக்கு பென்ஸீன், நைட்ரோஜன், சல்பர் மானாக்ஸைடு ஆகியவை அதிகமிருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளதாம். ஆகவே, புகைபிடிப்போருக்கு மட்டுமின்றி, புகைபிடிப்போர் அருகிலேயே எப்போதும் இருப்பவர்களுக்கும் கூட நுரையீரல் புற்று, இதய அழற்சி, நடுக்காதில் சீழ், நெஞ்சு வலி (Angina) ஆகியவை ஏற்படக்கூடும். மார்புச் சளி, நிமோனியா காய்ச்சல் போன்றவைகளும் உண்டாகும் என்று மருத்துவ மேதைகள் எச்சரிக்கிறார்கள்.

---



புகை பிடித்தல் காரணமாக இரத்தத்தில் அதிக அளவில் கொலஸ்ட்ரால் இருப்பது போன்ற காரணங்களால் இரத்தக்குழாயின் உட்புறத்தில் செதில் தடிப்பு (Atherosclerosis) ஏற்படும். இதனால் இரத்த ஓட்டம் பாதிக்கப் பட்டு, இரத்தம் கட்டிவிடும். அதன்பின் இதயத்தாக்குதல் உண்டாகி, உயிர் ஆபத்தும் ஏற்பட்டுவிடும்!

# சமுதாயத் தலைவர் தியாகராயர்



வெள்ளுடை வேந்தர் சர்.பிட்டி தியாகராயரின் 137-வது பிறந்த நாள் விழா சேலம் விஜயராகவாச்சாரியார் மன்றத்தில் 3.6.1988 அன்று சிறப்புற நடைபெற்றது.

விழா தொடங்குவதற்கு முன்னர் கலைமாமணி கவிஞர் சுப்பு ஆறுமுகம் குழுவினர் வில்லுப் பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்று செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் இணை இயக்குநர் திரு வி.டி.வீரப்பன் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:—

"சில காலமாக மாநில அளவிலான விழாக்களை மாவட்டத்தலை நகர்களில் அரசு நடத்தி வருகிறது. தியாகராயரது முன்னோர் தோல் தொழிலில் ஈடுபட்டு இருந்தாலும் அவர் கைத்தறித்தொழிலில்தான் அதிகம் நாட்டம் செலுத்தினார். 11 ஆண்டுகளாக வர்த்தகசபைத் தலைவராக இருந்தார். தொழில் கல்விக்கு மூலகாரணமாக விளங்கினார். ஏறத்தாழ ரூ.1கோடி மூலதனமாக வைத்து அன்று தொழில் நடத்தி வந்தார். பிற்பட்ட சமுதாய மக்களுக்கு அதிக அளவில் உதவிகள் பல புரிந்துள்ளார்."

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு எம்.எப்.பாருக்கி அவர்கள் தியாகராயர் திருவுருவப்படத்தைத் திறந்து வைததார்.

பின்னர் விழாச் சிறப்புரை நிகழ்ச்சி நடைபெற்றது. திரு பி. எஸ்.பெருமாள் அவர்கள் உரையாற்றுகையில் கூறியதாவது:—

திரு மனம்சேர சந்திரகாசன் அவர்கள் உரையாற்றுகையில் கூறியதாவது:— "தியாகராயர் அப்பர் அடிகளாகத் திகழ்ந்து வாழ்ந்துள்ளார்கள். சுயநலமில்லாதவர்களாக வாழ்ந்துள்ளார்கள். விருந்தோம்பலை அவரிடம் இருந்து பிரிக்க முடியாத அளவிற்கு வாழ்ந்து காட்டியுள்ளார்கள்."

திரு கே. ஆர். ஜி. நாகப்பன் அவர்கள் பேசுகையில் கூறியதாவது: "என்னுடைய கணிப்பிலே சமூகத் தலைவர் அல்ல—சமுதாயத் தலைவர் ஆவார் தியாகராயர். பிற்பட்டோர் நலனுக்கு அடிக்கல் நாட்டியவர் தியாகராயர். சிறந்த சிந்தனையாளர்.

திரு டி. எஸ். சாம்பமூர்த்தி அவர்கள் பேசுகையில் கூறியதாவது:— "வள்ளுவர் கூறிய இலக்கணப்படி வாழ்ந்து காட்டிய தியாகராயர் அவர்களின் கொள்கைகளைப் பரப்ப வேண்டும். சென்னை, கோயம்புத்தூர் போன்ற இடங்களில் அவருக்குச் சிலை வைக்க வேண்டும்."

திருமதி கௌசல்யா கிருஷ்ணன் பேசுகையில் கூறியதாவது:— "பல்வேறு பிரிவினர் இன்று உயர் பதவிகளில் பணி ஆற்றி வருவதற்கு தியாகராயர் அவர்கள் இட்ட வித்துதான் காரணம்-தியாகராயர் வித்திட்ட விதையும் விதைத்த நிலமும் மிகச் சிறந்தது".

வழக்கறிஞர் பழனிச்சாமி அவர்கள் உரையாற்றுகையில், கூறியதாவது:-"தியாகராயர், வாழ்க்கையில் எப்படி வாழ வேண்டும் என்று வாழ்ந்து காட்டியமைக்காக மதிக்கப்படுகின்றார்" என்று கூறினார்.

திரு சாக்ரடீஸ் அவர்கள் உரையாற்றுகையில்;

பிற்காலச் சந்ததியினருக்காக நாம் தியாகராயர் பெருமைபற்றிக் கூற வேண்டும். இன்றுபல உயர் பதவிகளில் பிற்பட்டோர் இருப்பதற்குத் தியாகராயர்தான் காரணம்" என்றார்.

விழாவிற்குத் தலைமை தாங்கியும், சர்.பிட்டி.தியாகராயரின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்தும், நல்வுற்றோருக்கு நல உதவிகள் வழங்கியும் சேலம் மாவட்டஆட்சித்தலைவர் அவர்கள் விழாச் சிறப்புரையாற்றுகையில் கூறியதாவது:

"சமுதாயத்திற்குப் பாடுபட்ட தலைவர்கட்கு விழா எடுப்பதன் மூலம், அவர்கள் ஆற்றிய தொண்டுகளை நாம் தெரிந்துகொள்ள முடிகிறது. அன்றைய தினம் வசதி படைத்த தலைவர்கள் சமுதாய மக்களுக்குத் தொண்டாற்றி உள்ளார்கள். அவர்களில் தியாகராயரும் ஒருவர். அவரை நாம் மறக்க முடியாது."

விழா இறுதியில்,சேலம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு மு.கிருஷ்ணன் நன்றி கூறினார்.

— நமது செய்தியாளர்



இயற்றுபவரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.




உதகை தாவரயியல் பூ